சமூகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர்

அன்னிதாமசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

சமூகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர்

அன்னிதாமசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப்
பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Camūkattilum ilakkiyattilum ūṉamuṟṟōr
Author	:	Dr. Annie Thomas Professor International Institute of Tamil Studies C.I.T. Campus, Chennai - 600 113.
Publisher ©	:	International Institute of Tamil Studies IInd Main Road, C.I.T. Campus Chennai - 600 113. Ph: 22542992
Publication No.	:	522
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2004
Paper Used	:	18.6 Kg. TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	10 points
No. of Pages	:	vi + 282
No. of Copies	:	1200
Price	:	Rs. 80/- (Rupees Eighty only)
Printing	:	Powerman Printers Coral Merchant Street Mannady, Chennai - 1
Subject	:	Handicapped in Tamil Literature & Society

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

அணிந்துரை

சமூகத்தைப் பாதிக்கின்ற காரணிகள் பல. ஒரு சமூகம் மேம்பாடு உடையதாக விளங்கவேண்டுமெனில் அச்சமூகம், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் பெரிதும் இல்லாததாக இருக்க வேண்டும். தனி மனித வாழ்விலும், கூட்டுவாழ்விலும் ஏற்படும் பிரச்சினைகள் உடலளவிலும்,உள்ளத்தளவிலும், இரண்டு நிலைகளிலும் அமைவதுண்டு.

மனிதனின் உருவமைப்பு ஒரு சமூகத்தில் அவன் தனித்தும், பிற மக்களோடும் தொடர்புகொள்ளும் நிலையிலும் இணக்கமான சூழலை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது. இத்தகு உருவமைப்பு எல்லோருக்கும் முழுமைபெற்றதாக அமையவில்லை. இவ்வுலகில் உறுப்புக் குறையுடனும், சிதைவுடனும் மனிதர்கள் வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய குறைபாடுகள் இயற்கையின் நியதியாகவோ செயற்கையாகவோ அமைந்துவிடுகின்றன. எவ்வாறு ஏற்பட்டாலும் இக்குறையும், சிதைவும் அவற்றை உடையவர்க்கு மட்டுமன்றி அவரோடு தொடர்பு உடையவர்களுக்கும் பெரும் மனச்சிதைவை ஏற்படுத்திவிடுவதை நாம் காணமுடிகிறது.

இத்தகு சமுதாயக் கட்டமைப்பைச் சீரழிக்கக்கூடிய இந்நிலையைத்தான் சமூக நோயியல் என்று அறிஞர்கள் இனம் கண்டு அறிந்து கூறியிருக்கின்றனர்.எனவே ஊனமுற்றோர்க்குச் சமூகத்தில் அளிக்கப்படவேண்டிய மதிப்பும் பாதுகாப்பும், மறு வாழ்வும் தேவையானவையாகும். எனவே ஊனமுற்றோரின் நலனுக்காகப் பல்வேறு சட்டப் பாதுகாப்பு நடவடிக்கைகள் இப்போது தேவைப்படுகின்றன.

இந்நிலையில் நம்முடைய பண்டை இலக்கியங்களில் உடல் ஊனமுற்றோர் பற்றிய செய்திகள் எவ்வகையில் அமைந்துள்ளன என்பதைத் தொகுத்துக்காணும் முயற்சி தேவையான ஒன்றாக அமைந்துவிட்டது. இத்தரவுகளைத் தொகுத்துக்காணும் நிலையில் அக்காலங்களில் அவர்களுக்கு இருந்த சமூக மதிப்பு, அவர்களுடைய வாழ்க்கை அமைப்பு முறை ஆகியவற்றை நாம் தெரிந்துகொள்ள முடிகிறது.

இவ்வகையில் முனைவர் அன்னி தாமசு அவர்களின் திட்டப்பணியாகச் சமூகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர் என்ற இப்பணி நிறைவுசெய்யப்பட்டு அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பே தமிழ் இலக்கியத்தில் ஊனமுற்றோர் என்ற திட்டப்பணி முன்பே முடித்து அளிக்கப்பட்டு அது 2002இல் நூலாக வெளிவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து அதன் தொடர் பணியாகச் 'சமூகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர்' என்ற தலைப்பில் அளிக்கப்பட்ட இத்திட்டப்பணி இப்போது நூல் வடிவில் வெளிவருகிறது.

சங்க காலம் முதல் பெரியபுராணம் வரையிலான இலக்கியப் பெருங்கடலில் காணப்படும் ஊனமுற்றோர் பற்றிய தரவுகள் இந்நூலில் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன. இது ஊனமுற்றோர் பற்றி மேல் ஆய்வு செய்வோர்க்கும், அவர்கள் பற்றிய மேம்பாட்டுச் சிந்தனைக்கும் பயனுடையதாக அமையும். இலக்கிய ஆய்வாளர்களுக்கும் சமூகவியல் சிந்தனையாளர்களுக்கும் இந்நூல் ஒரு தரவுப் பெட்டகமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் **திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,** அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் **திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

ஒளி அச்சுக்கோப்பு செய்த திரு. ஸ். கோபிநாத்துக்கும், அழகுற அச்சிட்டுத்தந்த பவர்மேன் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை
4-10-2004

இயக்குநர்

முன்னுரை

சமூகவியல் கல்வியில் உட்படும் ஒரு துறையான சமூக நோயியல் என்பதில் (Social Pathology) சமூகத்தின் இயல்பான செயற் பாட்டையும் வளர்ச்சியையும் பாதிக்கின்ற கூறுகள் பல அணுகப் பெறுகின்றன. அவற்றுள் ஒரு நோய் நிலையாக 'ஊனம்' அமைகின்றது. உடல், உள ஊனத்தால் பாதிப்புற்ற சமுதாய உறுப்பினரின் நிலைமையும், அதனை நேர்செய்யக் கையாளும் வழிமுறைகளும், அத்தகையோரின் வாழ்வியலின் படிநிலைகளும் மேம்பாட்டு முயற்சிகளும் தனி முதன்மை பெறுகின்றன.

இலக்கியங்களும் ஊனமுற்றோர் பற்றிய சிந்தனைகளை வழங்குகின்றன. '**தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர்**' (2002) என்ற நூல் ஏற்கெனவே வெளிவந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக இந்நூல் அமைகின்றது. சமூகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர் குறித்தமையும் தகவல்கள் இங்கே திரட்டியளிக்கப் பெறுகின்றன. இவற்றுள் சில கருத்தரங்கக் கட்டுரைகளாகும்.

சமுதாயத்தின் குழுமனத்தைப் பாதித்த பல பிரச்சினைகளில் ஊனமும் ஒன்று. அன்றும் இன்றும் இது தொடர்கிறது. 'ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்கின்றோம் ஒரு சொல் கேளீர்' எனப் பாரதியும் குரல் கொடுப்பார் (பாரதியார் கவிதைகள், அருணா பதிப்பகம், 1971, ப. 82). தமிழரால் மனிதாபி மானத்தோடு அணுகப்பட்டதாக இப்பொருண்மை அமைகின்றது.

இத்தகையோருக்கான நலத்திட்டங்களும் மறுவாழ்வு அமைப்புகளும் இன்று உருவாகியுள்ளன. சட்டப் பாதுகாப்பும் வழங்கப்படுகின்றது. இவ்வளர்ச்சி வரவேற்புக்குரியதாகும். தமிழ்ச் சமுதாயம் இவர்கள்பால் கொண்ட அணுகுமுறையை அறிய இந்நூல் ஓரளவு துணை செய்யும்.

இந்நூல் வெளியீட்டுக்கு அனுமதி அளித்த பதிப்புக் குழுவுக்கும், கருத்துத் தெரிவித்த வல்லுநர் பேராசிரியர் முனைவர் தி. இராசகோபாலன் அவர்கட்கும், நூல் வெளிவர முயற்சிகள் மேற்கொண்ட நிறுவன இயக்குநர் முனைவர் **சா. கிருட்டினமூர்த்தி** அவர்கட்கும் நன்றி.

அன்னிதாமசு

உள்ளே

சமூக நோயியல்	1
ஊன நிலை	24
இலக்கியத்தில் ஊன வருகை	34
ஊனப் பாத்திரங்கள்	41
அறநூல்களில் ஊனர்/ம்	49
சிதடு	63
முடம்	79
மாவும் உறுப்பில் பிண்டமும்	92
மருள்	97
பால் மருள்	106
ஊனக் குறியீடு	118
ஊனத்தில் நோயும் முதுமையும்	129
தண்டனையாக ஊனம்	135
ஊனமும் தானமும்	143
ஊன நலத்திட்டம்	150
பயன் நூல்கள்/கட்டுரைகள்	155
இணைப்பு : தரவுக் களன்	157

சமூக நோயியல்

சமூகம் என்பது, குழுவாகவும் கூட்டமாகவும் வாழும் மக்கட் தொகுதியாகும். மக்கள், தம் நலத்திற்காகவும், தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், குறைகளைப் போக்கிக் கொள்ளவும், தற்பாதுகாப்புக்காகவும், தம் இன வளர்ச்சி மற்றும் பெருக்கத்திற் காகவும் கூடி வாழ்கின்றனர். இவ்வாறு, ஒருவரோடொருவர், ஒருவரோடு பலர், பலரோடு பலர் எனத் தம்முள் தொடர்பும் உறவும் பரிமாற்றமும் கொள்ளும்போது அம்மக்கட் கூட்டம், சமூகம் எனும் பெயரையும் பகுப்பையும் கொள்கின்றது. பெரும்பாலும் மொழி, இடம் எனும் உள், வெளி எல்லைகளும், அறவியல், அரசியல், பொருளியல், சமயவியல் எனும் புலப்பாடுகளும் கொண்டதாக இம் மக்கட் சமூகம் அமையும். அது தன்னிறைவுக் காகவும், வல்லமை வெளிப்படுத்தவும் இத்தகு பிற சமூகத்துடன்/ சமூகங்களுடன் இணைந்தும், எதிர்த்தும் செயற்படும். அப்போது, மேற்குறித்த எல்லை நீங்குதலும், புலப்பாடுகளின் தனித்தன்மை, பிற கருத்தேற்றலுக்கு இடந்தருதலும் என விரிவும் பரப்பும் ஏற்படக் கூடும். தனித்தன்மைகள் எத்துணை இருப்பினும் அடிப்படையான பொதுமை, பலவகையான மக்கட் சமூகங்களை, ஒரு பார்வையில், ஒரே சமூகமாகக் காண முயலக் களன் வழங்கும். அவ்வாறு பொதுமைப்படுத்திய நோக்கு, சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகளை வழங்கும்.

சமூகவியலின் பல துறைகளுள் சமூகநலம் (social welfare), சமூகச் சேவை (social work) ஆகியவற்றின் இடமும் பங்கும் (role) மிக முக்கியமானவை. மருத்துவம், தனி மனிதனின் உடல் நலம் பேணல், நோய் நீக்கல், சுத்தமான - சுகாதாரமான உடலியல் வாழ் நெறிகளை முன்னிறுத்துதல் என்பனவற்றைக் கவனிக்கின்றது. அதுபோலச் சமூக மருத்துவமும் சமூகத்திலுள்ள சிதைவுகளை இனங்கண்டு, அவற்றைத் தடுக்கவும் தீர்க்கவும் (prevention and cure) வழிமுறைகளை வகுத்து, சட்டங்கள் வழியும், போதனை முறையிலும், பதிவு வழங்கியும் வற்புறுத்தி வலியுறுத்தியும் செயல்படுகின்றது.

சமூகநோயை இனங்காணல் அல்லது அறுதியிடல் (pathology and diagnosis) அடிப்படையாக ஒரு தளத்தைக்

கொள்கிறது. எதுவெல்லாம் அல்லது எவையெவையெல்லாம் மனிதன் சமூகமாகச் செயற்படற்குத் தடையாக, இடைஞ்சலாக, இடையூறாக அமைகின்றன என்பது அது. இவை சமூகத்தைப் பாதிக்கின்றன. சமூகச் செயற்பாட்டில் இடையீடு ஏற்படுத்து கின்றன. கூடைப்பழத்தில் அழுகல் போலச் சிதைவு ஏற்படுத்து கின்றன. வாகனப் பழுது போல் சிக்கல் தோற்றுவிக்கின்றன. மனிதன் தனியாளாயினும் சமூகம் வலைப்பின்னலாகத் தொடர்பும் தொடர்ச்சியும் கொள்வதால், ஓர் இழையிலுள்ள தேய்மானமும் தளர்ச்சியும், முழுவலிமையில் தொய்வும் நெருடலும் ஏற்படுத்துகின்றன. நிறைவுடைய சமுதாய நலநிலை இதனால் நீங்கிப் போகின்றது.

சமூகத்தைப் பல்வகையிலும் பல்நிலையிலும் பாதிக்கின்ற பொருண்மைகள் சமூகநோயியல் (social pathology) என்பதில் சமூகவியலாளரால் அணுகித் தொகுக்கப்படுகின்றன. சமூக அமைப்புச் சீரழிதலாக (social disorganisation) இவை எடுத்து மொழியப்படுகின்றன. ஒழுக்கம், அண்டை அயலாருடன் சுமுகமான உறவு, குடும்ப ஒருமைப்பாடு, முறையான பாலுறவு, தொழில் ஈடுபாடு, பொறுப்புகளைக் கையாளுதல், பணி நாட்டம், சிக்கனம், சமநிலை, சொத்து ஆளுகை போன்ற ஒருங்கிணைந்த குடியிருப்புக்கான குறிக்கோள்நிலைகளில் ஏற்படும் எந்தப் பிழையும் பிறழ்வும் - மாறான செயற்பாடுகளும் சமூகக் கட்டமைப்பைக் குலைக்கின்றன. இதனால் சமூக முன்னேற்றம் தடைப்படுகிறது; சீரான சமூக வளர்ச்சி நிகழ்வதில்லை; சமூகத்தின் சமன் நிலை (equilibrium) கெடுகிறது; சமூகம் அழிவுக்கு நேராகத் திரும்புகிறது; சமூக உறுப்பினரின் அடிப்படை ஆசைகள், தேவைகள் நிறைவேறா நிலை ஏற்படுகிறது. பொது நல மேம்பாடு உடைகிறது. குறிக்கோள் பாங்கு கொள்ளும், ஒவ்வொரு தனிமனிதனின் பங்கும், பொறுப்பும், தகுதியும் கலைப்புறுகின்றன. அமைதியான, நிதானமான நிறையுடைய வாழ்வு அசைகின்றது. மனிதனுக்கும் மனிதனுக்கும் குழுவுக்கும் குழுவுக்குமிடையே சுமுகநிலை அழிந்து, சமூக மதிப்புகள் இழந்து போகின்றன.

உயிரும் உயிர்ப்புமுடைய உயிரியாக மனிதன் அமைவது போலவே சமூகமும் உயிர்ப்பும் செயற்பாடுமுடைய தொகுப்பு உயிரியாக அமைகின்றது. அதனால், மாறாமை என்பதன்றி, மாற்றம் ஏற்படவே செய்கின்றது. இந்த மாற்றம் (social change), சமூக அமைப்பில் (social organisation) ஏற்றம், வளர்ச்சி என்ற பான்மையில் பொருந்துவது நேர்நிலையாக (positive) அமையும்; மாறாத தன்மைவரின் சமூக அமைப்புச் சீரழிதலாகிவிடும். சமூக

அமைப்புப் பாதுகாப்பிற்குப் பண்பாடு ஒரு முக்கியக் காரணம். பிற, புற ஊடுருவல்கள் காரணமாக, சமூக அமைப்பு தளர்ந்து சிதையலாம். நாகரிகமும், அறிவியலும் வளர்ந்து புதிய பரிமாணங்களை ஏற்கும்போது, மனிதரை மனிதரோடு சார்ந்தும் நெருங்கியும் பிணைந்திருந்த பிணைப்புகள் நெகிழ்ந்து, ஒருங்கிணைப்பு மறைந்து - மன ஒருமையோ சிந்தனை ஒருமையோ அற்ற உதிரியாக மக்கள் மாறுகின்றனர். பக்க விளைவுகளாக ஏற்படும் தீமைகள் தலைதூக்கி வளர்ந்து, நல் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. இது எதிர்நிலையாக (negative) அமையும்.

பொருட்கள், தொழில்நுட்பம், நம்பிக்கைகள் எனும் மூன்று தளங்களைக் கருவியாகக் கொண்டு இயங்கும் பண்பாட்டுப் புலம், புதிய சேர்க்கைகளை ஏற்றல், தடுத்தல், மறுத்தல் என மாற்றத்துக்கு உள்ளாகின்றது. கண்டுபிடிப்புகளும் கடன் வாங்குதலும் ஊடாகப் புதிய பண்பாட்டு நுழைவுகள் ஏற்படுகின்றன. பொருட்கள், தொழில்நுட்பம் எனும் துறைகளில் இவை பொதுவாக, எளிதாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. நம்பிக்கை தொடர்பானதில் அவ்வளவு எளிதாக ஏற்பு அமைவதில்லை. எனினும் இளைய சமுதாயத்தின் புதுமை நாட்டம் காரணமாக அவரிடம் இவை ஏற்கப்பட்டு, தலைமுறை இடைவெளியை உருவாக்கி, சமூகச் செயற்பாட்டில் குந்தகம் விளைவிக்கின்றன.

சமூக மாற்றத்துக்கு நேராகச் செல்லும் பண்பாட்டுப் புதுமைகளை ஏற்பதில் அமையும் இரண்டு முக்கியக் கூறுகள் கௌரவம், மரபு என்பனவாம். புதுமை ஆக்கம், மேல்நிலையாக்கம் என்பன குடும்ப - சமுதாய கௌரவத்திற்கு ஏற்றம் தருவதாகக் கொண்டு அமைதல் ஒரு நிலை. மரபு சார்ந்து, மரபு மீறாது பண்பாட்டுப் பழமையும் தொன்மையும் காக்கப்பட வேண்டும் என்று கருதுதல் பிறிதொருநிலை. வேறுபட்ட இவ்விரு பார்வையின் காரணமாக, கண்டுபிடிப்புகளைக் கையாள்வதில் வேற்றுமை அமையும். இச்சூழலில் சமூக அமைப்புச் சீரழிவுக்கு இடம் ஏற்படும் சமூகச் சிக்கல்களாக (social problems) அவை அணுகத் தக்கன. சமூகக் கட்டுப்பாடுகளின் (social control) செவ்விய செயற்பாடு இங்கு இழக்கப்படுகிறது. கட்டமைப்பு சிதறுகிறது.

சமூகச் சிக்கல்களை இனம் காணல், அவற்றிற்கான காரணத்தைக் கண்டறிதல், அதன் ஆழ அகலங்களை அடையாளங்கண்டு சுட்டுதல், ஒவ்வொன்றன் உட்கூறுகளையும் உட்படும் பல அடுக்குகளையும் வகுத்தல், அதில் சிக்கும் நபர்களின் சமூகப் பாங்கையும், மன நிலையையும் பகுத்தறிதல், விடுபடும்

வழிகளைத் தெரிதல், தீர்வுகளை முன்னிறுத்தல் எனப் பன்முக நோக்கில் இக்களம் அணுகப்படல் வேண்டும். ஒவ்வொரு சிக்கலையும் தனிப்படுத்திப் பார்ப்பதுடன் நின்றுவிடாது, பிற சிக்கல்களுடனும் பிற சமூகக் கூறுகளுடனும் இணைத்தும் - ஒத்தும் - உறழ்ந்தும் பார்க்கும் போது நோய் நீக்குதலுக்கு நேரான வழிமுறைகள் புலப்படும். இதை அறிவியல் முறையிலன்றி வாழ்வியல் நோக்கிலேயே அணுகக்கூடும். ஏனெனில் ஓர் இடத்தில் நாட்டில் ஒரு காலகட்டத்தில் சிக்கலாக அமைவது, இன்னோரிடத்தில் மற்றொரு காலத்தில் அவ்வாறு அமையாதும் - கருதப்படாதும் இருக்கலாம்.

சமூக நலத்தைப் பாதிக்கின்ற எந்தச் சமூகச் சிக்கலும் சமூக நோயாக அமைகின்றது. விழிப்புணர்வு ஊட்டுதல் வழி, பாதிக்கப்பெற்ற நபரை சமூக நல ஊழியர் சிக்கலிலிருந்து புறம்பே கொணர முடியும். உடலியல் - உளவியல் அடிப்படையில் (bio-psychological) சிக்கலை அணுகுவதால், கால்வழியாக (heriditary) பகரப்படும் நோய் நிலை மற்றும் சிதைவுகளை உணர முடியும். சில குறிப்பிட்ட மக்களினங்கள் திருட்டு, கொலை போன்றவற்றில் ஈடுபடல்; சில குறிப்பிட்ட கால்வழியினரில் குடி, போதை, தற்கொலை, மனநோய் போன்றன அமைதல் என்பன இனங்காட்டப் பெற்றுள்ளன. இயற்கை வளம் குன்றிய நிலப் பகுதியினராகவும், நாகரிக வளர்ச்சி குன்றியவராகவுமமையும் சில மக்கட் கூட்டம், பல வகையில் பின் தங்கி அமைவதும், குற்றம், கல்லாமை, மணமுறிவு, மன-உடல் வளர்ச்சியின்மை என்பன அவரிடம் அமைவதும் இச்சிதைவு நிலையாகும். பண்பாட்டுச் செழுமை இல்லாத மக்களிடம் மணவுறவுப் பிறழ்வுகள், குடும்ப அமைப்பில் செவ்வியின்மை போன்று சமூக அமைப்புச் சிதைவுகள் காணப்படலாம். நாகரிகத்தால் ஏற்படும் புறவளர்ச்சியும் பண்பாட்டால் ஏற்படும் அகவளர்ச்சியும் ஒருங்கிணைந்து செல்லாது முரணியமையும் போது பண்பாட்டிடைவெளி (cultural lag) அமைந்து, கூட்டுக் குடும்பம் போன்ற பழைய சமூக அமைப்புகள் நொறுங்குதலும் இங்கு இணைத்துச் சிந்தித்தற் குரியது. மக்கட் குடியேற்றம் பண்பாட்டுக் கலப்புக்கு இடன ளிப்பதும், குடியேறிய சிறுபான்மையினர் தனித் தொகுப்பாக அமைவதும், புறக்கணிக்கப்படுவதும், ஒதுக்க-ஒடுக்கப்படுவதும், இனவெறியும் சிக்கலாகின்றன. இவ்வாறு தனி மனிதச் சிதைவும் சமூகச் சிதைவும் ஒன்றிலொன்று பின்னிப் பிணைந்து அமைகின்றன.

தனி மனிதனின் ஒழுக்கம், செயற்பாடு, சமூக அங்கீகாரத் திற்கு மாறாக அமையும் போது சிக்கலின் ஓர் அடுக்கு வெளிப் படுகிறது. ஒருவரிடமோ ஒரு சிலரிடமோ இந்நிலை அமையும் போது - பெரும் பாதிப்பேதும் சமுதாயத்திற்கு இல்லாவிட்டால் - கண்டு கொள்ளப்படாது, விட்டுவிடப்படுகிறது. ஆனால் பலரிடம் பரவலாக அமைந்து பிறரைப் பாதித்து, இடையூறாகி, சுமுகமான சமுதாயச் செயற்பாட்டிற்குக் குந்தகமாகும்போது, தடுக்கும் தவிர்க்கும் - சரிசெய்யும் முறைகள் கண்டறியப்பட வேண்டியனவா கின்றன. மென்மையான கடிந்து கொள்ளுதல் அல்லது தீவிர எதிர்ப்பு மூலம் நிலைமை மேலும் மோசமாகாமல் தடுக்க முயற்சி மேற்கொள்ளப்படுவதுண்டு. எளிய சமுதாயங்களில், இதனால் நிலைமை சீரடையக் கூடும். பன்முகக் கட்டமைப்புடைய சமூகத்தில் (complex society) இம்முயற்சி வெற்றிபெறாதும் போகலாம். தனிமைப்படுதல் (alienation) தன்னுள் ஒடுங்குதல், தன்னை மறத்தல், தன்நிலை இழத்தல் என - திருந்தாத தனிமனிதர் - தன்னழிவுக்கு நேராகச் செல்லலும், தற்கொலையில் முடிதலும் உண்டு. உள நோயாளி (psychoses) ஆக மாறிவிடும் இந்நிலைக்கு, சமூக அரவணைப்பின்மையும், சமூக ஒப்புதல் பெறமுடியாமையும் காரணமாகிவிடுகின்றன.

சமூக மாற்றத்தை ஐந்து அடிப்படையில் அணுகுவதுண்டு. உளவியல், உயிரியல், உடலியல், தொழில் நுட்பவியல், பண் பாட்டியல் என்பன அவை. இத்தகு மாற்றங்கள், தனித்தோ ஒரு சில இணைந்தோ சமூக முறைமையில் (Social order) மிகுந்த இடையூறு வழங்கி, தொல்லைப்படுத்தும்போது புதிய சூழலுக்கு ஒத்துச் செல்ல முடியாத நிலை உருவாகி, சமூகச் சிதைவாக வெளிப்படுகின்றன. சமயம் பற்றிய கருத்தாக்கத்திலிருந்து விலகி, வழுகிச் செல்லுதல்; குடும்ப அமைப்புக் குறித்து மாற்று எண்ணம் கொள்ளல்; ஆட்சியில் மைய அரசுக்கு முதன்மை வழங்குதல்; அறவியல், ஒழுக்கவியல் சிந்தனைகளைத் தளர்த்துதல் என இயங்கு சமூகத்தின் சில முதன்மையான தளங்களில் சரிவு அமைகிறது. ஆதி மனிதனின் முதற் பாவத்திலிருந்தே இத்தொய்வு தொடங்கிவிட்டது என்று (சமயச் சார்பில்) கருதுவதுண்டு. அன்றியும் குற்றம், ஒழுக்கமின்மை, ஊழல், வேலையில்லாத் திண்டாட்டம், மணமுறிவு போன்றன சமயக்கட்டுப்பாடு நெகிழ்ந்ததால் ஏற்பட்டதாகவும் கருதுவது காணப்படுகிறது.

பொருளாதார, அடித்தளத்தில் பொதுவுடைமைச் சமூகம் முழுமையாக உலகளாவிய நிலையில் நிறுவப்படாமையே

சிதைவுக்குக் காரணம் என்ற கருத்து ஒருபால் அமையும். உடலடிப் படையிலும் உள அடிப்படையிலும் வாழ்வதற்குப் பொருத்த மற்ற-தகுதியற்ற உயிரிகளைச் சமூகத்திலிருந்து நீக்காமையே-அறவே ஒழிக்காமையேதாம் சிதைவுக்குக் களன் எனல் மறுபால் அமையும். இவற்றைச் சரிசெய்தால் சமுதாயம் மறுமலர்ச்சி பெற்று புத்துயிராகும் என இவ்வடிப்படையில் கருத்து உருவாகும்; நடைமுறைக்கு உகந்ததாக இப்பாங்கு அமையவில்லை.

போலச் செய்தல், எதிர்த்தல், போட்டி மனப்பான்மை, ஒத்தொழுகுதல், கருத்துப் பரிமாற்றம் போன்ற சமூகச் செயற்பாடுகள் உளவியல் சார்புடையவை. நெருங்கியும் அண்மியும் வாழும் மக்கட் கூட்டம் ஒத்த கருத்தும் சுமுகமான கருத்துப் பரிமாற்றமும் கொள்ளமுடியாது முரணும் போது சிக்கல் ஏற்படத்தான் செய்கின்றது.

சாதியுணர்வு, தீண்டாமை என்பன மக்களிடையே கூடிவாழ முடியாதவளவு இடைவெளியை ஏற்படுத்துவது சமூகப் பண்பாட்டுச் சிக்கலாகின்றது. தொழில்மயமாதல், நகரமயமாதல் போன்றவற்றால் உருவாகும் சேரிகள், குடியிருப்புப் பிரச்சினைகள் சமூகச் சிதைவை ஏற்படுத்துகின்றன. முன்னேற்றமடையாத பின் தங்கிய சமூகத்தினரும், வேறுபட்ட சமூகங்களிடையே சமூக மதிப்பீடு பற்றிய கருத்து வேறுபாடுகளும் கூட இந்நிலையில் கருதுதற்குரியன.

இயற்கை சார்ந்த, இடம் சார்ந்த கூறுகளாக நில அதிர்ச்சி, பெருமழை, மழை இன்மை, நில வளமும் கனிமப் பொருட்களும் போன்றன அமைந்து அழிவு, பஞ்சம், பட்டினி, வறுமை போன்ற சூழல்களை ஏற்படுத்தும்போது உருவாகும் சிக்கல்களும் தனியாகக் கருதத்தக்கன.

உயிரியல் அடிப்படையில் மக்கள் இனங்களின் கலப்பு, குறைவுடைய அல்லது தகுதியற்ற மக்களிடையேயான மணம், மக்கட் தொகைப் பெருக்கம், வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் என்பன சிக்கல் ஏற்படுத்தும் களங்களாகும். சூழலியல் அடிப்படையில், குடியிருப்புகளும் அவற்றின் அண்டையயல் பகுதிகளும் கருதப்படுகின்றன. தொழிற்சாலை, வணிக வளாகங்களுள்ள பகுதியில்தான் குழந்தைக் குற்றவாளிகள் மிகுதியாகவுள்ளனர் என்பது ஓராய்வு முடிபாகும்.

சமூக மதிப்புகள் குறைவதே போர், குற்றங்கள், புரட்சி, தற்கொலைகள், மனநோய் முதலியவற்றிற்கு அடிப்படைக் காரணம்

எனச் சோராக்கின் (Sorokin) கூறுகிறார். கலை, அறிவியல், தத்துவம், சமயம், சட்டம், அரசியல், பொருளியல், குடும்பம் என்ற பல தளங்களிலும் மதிப்பீடுகள் சிதைவடைந்துள்ளன. சரியான திட்டமிடுதல் இன்மை, ஏனோதானோ என்ற போக்கு, பங்குக் குழப்பம் (confusion of roles), அதாவது யார் எதைச் செய்ய வேண்டுமென்ற தெளிவு இன்மை ஆகியன இங்குக் கருதத்தக்கன. குழந்தைகள் குடும்பத்தால் வளர்க்கப்பட்டுப் பண்பாட்டுக் கல்விப் போதனை பெறல், அரசு சட்டத்தையும் நீதியையும் கவனித்தல் போன்றவை முழுமையாகப் பின்பற்றப்படாதது செயற்பாட்டளவில் சிக்கலே தருகின்றன. அரசியல் அடிமை நிலையும், நாட்டின் முழுமையான சுயமான வளர்ச்சிக்குக் குந்தகமாகி, சார்ந்து நிற்றலை உருவாக்கி வறுமை, கல்லாமை ஆகியனவற்றை மக்கட் தொகுதியினருக்கு ஆக்குகிறது.

இந்திய நாட்டில் இத்தகு பல்வகையான குறைவும் சிதைவும் உள்ளமையைச் சமூகநோயியலார் உணர்த்துகின்றனர். வறுமை, வேலையின்மை, மக்கட் பெருக்கம், குறைவான வாழ்க்கைத் தரம், கல்லாமை என்பன இங்கு அமைய பிரிட்டிஷ் ஆட்சி காரணம். நகர்மயமாதலே குழந்தைக் குற்றவாளிகள், குடி, சூது, பரத்தமை ஆகியவற்றிற்குக் காரணம். கூட்டுக்குடும்பச் சிதைவு, பிச்சைக்காரர் என்பன தொழில்மயமாதலால் ஏற்பட்டன. சாதிச் சண்டை, மொழியுணர்வு, இடவுணர்வு போன்றன விடுதலைக்குப் பின் ஏற்பட்ட சமூக அமைப்பின் விளைவுகளாகும்; குறைவில்லாத சமூகம் காண்பது அரிது. சமூகம் பழைமையாக அமைதற்கேற்ப அதன் சிதைவுகளும் முற்காலம் முதல் உள்ளனவாம். ஒரு சிக்கலிலிருந்து பல சிக்கல் பிறப்பதும் உண்டு. சான்றாக, வறுமை காரணமாகக் குற்றம், கல்லாமை, மக்கட் பெருக்கம் என்பன அமைகின்றன. மாணவர், தொழிலாளர் வேலைநிறுத்தம், மிகப்பலவான கட்சிகளின் பெருக்கம், ஊழல், உணவுப் பொருள் பற்றாக்குறை, சத்துணவுக் குறைபாடு என்பனவும் இந்நாடு சமுதாயச் சிதைவுக்குட்பட்டதையே தருகின்றன. குழந்தைக் கல்வி, வேளாண்மை வளர்ச்சி - தொழில் வளர்ச்சித் திட்டங்கள் போன்ற பல இச்சிதைவு நீக்க உத்தியாகப் பிரச்சாரம் செய்யப்படுகின்றன.

கற்றோர் - கல்லாதோர், செல்வந்தர் - ஏழை என்பன போன்ற வகுப்பினரிடையே அமையும் சமூக இடைவெளி மிகுந்து கொண்டு வருவதும் சீர்செய்யப்பட வேண்டியதாகும். கல்வி, கற்றோரைக் கல்லாதோரிடமிருந்து அகற்சிப்படுத்துகிறது. மொழி இன இட உணர்வுகள் இந்தியா என்ற ஒருமைப்பாட்டைக்

குலைக்கின்றன. சமூகக் கடமையுணர்ச்சி குறைகின்றது. சமூகத்தை ஒன்றாகப் பிணைத்த பழைய மதிப்பீடுகள் சரிகின்றன. சமூகப் பொறுப்புணர்ச்சியை உருவாக்கும் புதிய திட்டங்களும் காணப்பட வில்லை. எங்கும் புதிய புதிய சிதைவுகள்தான் தோன்றி மிகுந்து கொண்டு வருகின்றன. சட்டவிரோத நடவடிக்கைகள், பணி நிறுத்தம், பொதுச் சொத்துக்களைப் பற்றிய மதிப்பின்மை. பொது வாழ்க்கையில் ஊழல், குழுக்களிடையே போராட்டங்களும் குழப்பமும் என இவை பல்குகின்றன.

சமூக நலத்தைக் கெடுக்கும் நோயாக அமையும் இவை பலவும் தனித்து நிற்காது ஒன்றிலொன்று பின்னியும் பிணைந்தும், ஒன்றிலிருந்து ஒன்று தோன்றியும் வளர்ந்தும் அமைவது உண்டு.

தனிமனிதன், குடும்பம், சமூகம் என மூன்று தளங்களில் சிதைவுகளை அணுகலாம். உடல்நோய், உளநோய் என்பன தனிமனிதன் எனும் தளத்தில் பொருந்துகின்றன. குடும்பத் தளத்தில், திருமணம் தொடர்பானவை, மணம் பெறாக் குமரநிலை, மூப்பு என்பன இணைகின்றன. இவற்றுள் திருமணம் என்பதில் மணமுறிவு, பிரிவு, கைவிடுதல், பூசல், விதவை, ஆதரவற்ற குழந்தை போன்ற உட்பகுப்புகள் அமையும். சமூகத் தளத்தில் குற்றம் என்பதும், குழுப்பூசல், சமூக வகுப்பு (class), சமூக அடுக்கு (stratification) என்பனவும் வருகின்றன. குற்றம் என்பதன் வகைகள் மிகப்பலவாம். அவற்றைக் களைந்தெறியும் முயற்சியில் எடுக்கும் நடவடிக்கைகளான தடுப்பு, தண்டனை, சட்டம் போன்றனவும், தொடர்குற்றம் (recidivism), தண்டனை முடிந்த பின்னான மறு வாழ்வு, குழந்தைக் குற்றவாளிகள் என்பனவும்கூடக் கருதப்படலாம். சமூக நோய் நீக்கும் வழிகளாக மருத்துவம், சமூக சேவை, நலத் திட்டம், விழிப்புணர்வு, சட்டம் போன்றன அமையும். இதனைக் கீழ்வரும் வரைபடம் தரும்.


சமூக நோயியல்
தளம்
தனி மனிதன்
குடும்பம்
சமூகம்
நோய்
ஊனம்
மணம்
குமர நிலை
முதுமை
குற்றம்
குழுப் பூசல்
சமூக வகுப்பு
சமூக அடுக்கு
வகை
உடல் நோய்
உளநோய்
தற்கொலை
வலிப்பு
அறிவுக்குறை
முறிவு
பிரிவு
கைவிடல்
பூசல்
விதவை
ஆதரவற்ற குழந்தை
தொடர்குற்றம்;
குழந்தைக் குற்றவாளி
நலம்
மருத்துவம்
சேவை - விழிப்புணர்வு - சட்டம் - திட்டம்

நோயாக, பிணியாக அமையும் உடல்நலக் குறைவு, ஒரு மனிதனை, பிறரைச் சார்ந்து நிற்கும் நிலைக்குத் தள்ளுகிறது. சுய இச்சை, சுய சம்பாத்யம் என்பன இயலாததாகின்றன; அல்லது குறைகின்றன. இதனால் பொருளாதாரப் பின் தங்குதல் - பின்னடைவு ஏற்படுகிறது. குடும்பத் தலைவனாக இருந்தால், முழுக் குடும்பத்தின் வாழ்க்கை நீரோட்டம் தடுமாறுகிறது. மருத்துவச் செலவினம் பளுவாகின்றது; வருவாய்க் குறைவு என்பதுடன் கடன் தொல்லை-வறுமை என்பதும் ஏற்படுகிறது. தந்தையாக இருந்து ஆற்ற வேண்டிய பல சமூகக் கடமைகளைச் செய்ய முடியாத நிலை நோயுறலால் ஏற்படும்போது இன்னும் நிலைமை சிக்கலாகின்றது. நோயாளி மனமடிவுடையவராகிறார். எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை, தன்னம்பிக்கை வீழ்ச்சி, குறிக்கோள் நாட்டம் இழப்பு, துணிவும் உற்சாகமும் ஊக்கமும் இல்லாதாகுதல், தன்னிரக்கம் எனப் படிப்படியாக ஏற்படும் பல அக, புறத் தடங்கல்கள் பிரச்சினையைப் பெரிதாக்குகின்றன.

ஏற்கெனவே ஏழையாக, வறியவராக அமைபவருக்கு நோய்வரின், நிலைமை இன்னும் மோசமடைகிறது. நோய்நிலை காரணமாக, மணமுறிவு, பிரிவு, குழந்தைக் குற்றவாளி, குற்றம் போன்ற பிற சமூகச் சிதைவுகளுக்கும் இட்டுச் செல்லப்படுவது உண்டு. குழந்தைப்பருவத்திலும் முதுமைப் பருவத்திலுமுள்ள நோய்நிலை வேறுவிதமான பாதிப்பைப் புலப்படுத்தக்கூடும். குழவி இறப்பு, இயல்பான குழந்தைப் பருவ நிலை இன்மை, வளர்ச்சி குன்றல், ஊனமுறல், இயல்பான கல்வி பெறமுடியாமை எனச் சிக்கல் பல்கும். சத்துணவும் சுகாதாரமான சூழலும் காணப்படாததால் மூப்பில் காசம், நிமோனியா போன்றவற்றால் இறப்பு விகிதம் அதிகரிப்பதும் உண்டு. தொழிலாளர், விபத்துக் காரணமாக நோயுறல், பணிப்பளுவினால் இதய நோயாளியாதல் போன்ற சூழல்களும் கருதப்படவேண்டும்.

இந்தியாவில், காசம், புற்றுநோய், சர்க்கரை நோய், தொழுநோய், மலேரியா, பால்வினை நோய்கள், எய்ட்ஸ், மனநோய் எனப் பலவற்றின் பாதிப்பு அமைவதுடன், இதனால் ஏற்படும் வாழ்வியல் தடம் மாறலும் இறப்பு விகிதமும் அதிகமாக அமைகின்றன. அம்மை ஒழிக்கப்பட்டது போலவும், இளம் பிள்ளைவாதம் தடுக்கப்பட்டுவரல் போலவும், காமாலை, வயிற்றுப் போக்கு, தொண்டையடைப்பான், நச்சுக் காய்ச்சல் (typhoid) போன்ற பல நோய்களுக்கு மருத்துவம் உள்ளமை போலவுமான நிலை, பரவலாக வளரும் போது, சமூகப் பிரச்சினையான இந்நோய்நிலை என்பதன் அழுத்தம் குறைய வாய்ப்புண்டு.

'மருத்துவக் காப்பீடு', 'இலவச மருத்துவம்', 'வருமுன் காப்போம்' போன்ற திட்டங்களும் இன்று இதனை முன்னிறுத்துகின்றன.

உடல் நோய் போலவே உள நோயும் சமூக நோயியல் நோக்கில் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. உளநலமுடைய மனிதரே முழு மனிதராக முழு ஆற்றலினராகச் செயற்பட்டு மனிதவளத்தை முழுமையாகப் பயன்கொள்ளத்தக்கவராக முடியும். சிந்தனைத் திறன் ஒரு நாட்டின் சொத்து. மனப் பிறழ்ச்சி ஏற்படாது தடுத்தலும் - பாதுகாத்தலும், ஏற்பட்டவரைச் சீராக்குதலுமாகிய இரு பார்வையும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. தொழில் மயமாதல், குடியேற்றம் ஆகியன காரணமாகப் புதிய சூழலால் வரக்கூடிய மனப் பாதிப்பு ஏற்படாவண்ணம் சரிப்படுத்தல் (adjust), பக்குவப்படல் என்பன தேவையாகும். சமூகநல ஊழியரின் சமூக சேவை இங்கு இன்றியமையாததாகிறது.

அமைதியும், அன்பும், இணக்கமும், நிறைவுமுடைய மனித உறவுகளை வளர்த்து மேம்படுத்தல்; மனிதர்க்கும் குழுக்களுக்கும் இடையே பகைமை, அழுத்தம் (tension), கவலை போன்றவற்றைக் குறைத்தல், எல்லா மக்களிடமும் மனநலம் - உள சுகாதாரம் சிறப்புறச் செய்தல்; பெரியவரிடமும் சிறுவரிடமும் காணப்படக் கூடிய நரம்பு நோய் (neuroses), மன நோய் (psychoses), வலிப்பு, பண்பு - ஒழுக்கக் குறைபாடுகள், நிலவுகின்ற சமுதாய ஒழுகலாறு களோடு ஒத்துப் போகாமை - ஆகியவற்றைத் தடுத்தலும் குணப் படுத்தலும் என்பன மன நல சேவை என்பதில் உட்படும். மனத்தால் உடல் நலமும், உடல் நிலையால் மனநலமும் பாதிப்புறுவதால் இரண்டனையும் இணைத்து நோக்குதலும் தேவையாகும். உள உடல் நோய்கள் (psycho somatic diseases); உணர்வுக் குழப்பங்கள் (emotional disorders); கவலை, அச்சம், அழுத்தம், சலிப்பு, சோர்வு போன்றனவும் கவனிக்கப்பட வேண்டியனவாகும். வெற்றி பெற வேண்டும் என்ற மிகுந்த ஆர்வத்துடன், தோற்றுவிடுவோமோ என்ற அச்சமும் ஏற்படுவதால் சிலர் கற்பனை நோய்களையும், நோய்க் குறிகளையும் வெளிப்படுத்துவதுண்டு. பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கவும், தவிர்க்கவும், தப்பிக்கவும் பலவிதமான நோய்க் குறிகளைக் கொள்வதுண்டு. தற்கொலை, தற்கொலை முயற்சி, அடிக்கடி விபத்துக்குள்ளாதல், பலவகையான ஒவ்வாமைகள், உயரழுத்தம், தலைவலி, முதுகுவலி, குடற்புண், மயக்கம் போன்ற பல இத்தகைய நிலையினவாகலாம்.

தலையில் ஏற்பட்ட அடி, சில நச்சுப் பொருட்கள் (toxin), நுண்கிருமிகள், தொற்று நோய்கள் போன்றவற்றால் மட்டுமன்றி

கவலைகளினாலும் மனபேதலிப்பு, மனத் தடுமாற்றம் ஏற்பட்டு 'பயித்திய' நிலையைத் தரலாம். மரபும் (heridity), வாழ்வுச் சூழல் பாதிப்பும் (environment) ஆகிய இரு அடிப்படையிலும் மன நோய் தோன்றலாம்.

மருந்துகள், மின் அதிர்வுகள், உளவியல் ஆலோசனைகள் எனப் பலமுறையில் உள நோயாளிகளுக்கு மருத்துவம் செய்யப்படுகிறது. உள் நோயாளியாகவும், புற நோயாளியாகவும் அவரவர் நோயின் தன்மைக்கேற்ப அமைக்கப்படுகின்றனர். குற்றச் சாய்வுடைய, தீவிர, தீராத மன நோயாளிகள் பாதுகாப்பறைகளில் தனித்தனியாக வைக்கப்படுவர். ஆபத்தில்லா, மித நோயாளிகள் தற்காலிகமாக வெளியே கொணரப்படுதல் (parole), புறத்தே தங்குதல் (boarding out) என்பனவற்றிற்கு அனுமதிக்கப்படுகின்றனர். புறநோயாளிகளுக்கு மனநோய் மருத்துவ நிலையங்கள் (psychiatric clinics) உதவுகின்றன. வருமுன் காத்தல் என்பதற்கும், மீண்டும் வராமை என்பதற்கும், நலமுற்றோர் மறுவாழ்வு என்பதற்கும் சமூக ஊழியரும், சேவை நிலையங்களும் உதவிக்கரம் நீட்டுகின்றன.

வலிப்பு, அறிவுக் குறைபாடு, தற்கொலை என்ற மூன்று நிலைகளும் மனநோய் என்பதன் கீழ் உட்பட்டுக் கருதற்குரியன வாகும். வலிப்பு (காக்காய் வலிப்பு) உளநோயுடன் சார்த்தி நோக்கப்படுதல் இக்காலத்தில் தான். வலிப்பு ஏற்படும் போது, மயக்கம், வாயில் நுரை, கை கால் இழுத்து இழுத்து அமைதல் என்பன தீவிரமான நோய் நிலையாகும். வலிப்பின் மூலக் காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் நரம்பியல் நோயாகக் கருதப்படுகிறது. மரபு நோயாயமைவதும் உண்டு. கவலை, உணர்ச்சி வயப்படுதல், பிறக்கும் போது ஏற்பட்ட காயம் போன்ற பாதிப்பு, தலையில் ஏற்பட்ட அடி, பல்முளைப்பில் உருவான சிக்கல், கடின நோய் நிலை, சத்துணவுக் குறைவு, குடி போன்ற பல சூழல்கள் இப்பாதிப்பைத் தரலாம். வயது வந்தவர்க்கு இந்நோய் ஏற்படல் என்பதைவிடக் குழவிப்பருவத்திலேயே தோன்றித் தொடர்வது என்பதே பெரும்பான்மை. இறப்பு, தற்கொலைச் சாய்வு என்பன வலிப்புடையவரிடம் மிகுந்து காணப்படுகிறது. வேலையின்மை, பிறரைச் சார்ந்து நிற்கும் கட்டாயம், குற்றம், தீமை, ஒழுக்கமில்லா வாழ்வு என்பன இத்தகையோரிடம் அமைவது சமூகநோய் நிலை ஏற்படுத்தும். வேறு வாழ்க்கை வழியின்மையால் பரத்தமையில் சென்றிறும் பாங்கு உண்டு.

அறிவுக் குறைவுடையோராக அமையும் மனிதரில் மூன்று நிலை காணப்படுகிறது. முட்டாள் (moron) 8 முதல் 10 அல்லது 12

வயதறிவுடனும்; மூடன் (imbecile) மூன்று முதல் ஏழு வயதறிவுடனும்; பேதை (idiot) இரு வயதுக் குழந்தையின் அறிவுடனும் அமைகின்றனர். பள்ளிப் பருவத்தில், மற்ற குழந்தைகளுடன் ஒத்த அறிதிறனும் விளையாட்டுத் திறனும் இன்மையால், பிரச்சினைக் குரியவராகின்றனர்; பணித் தளத்திலும் விபத்துக்காளாதல், பிறருடன் ஒத்துழைக்க இயலாமை போன்ற பாங்குகள் உருவாகின்றன. குற்றவாளி, பரத்தமை, சுரண்டலுக்கு ஆளாதல், பாலுணர்வுக் கட்டுப்பாடின்மை, அதனால் ஆடவன் பாலியல் வன்முறையில் ஈடுபடலும், பெண் வரன்முறையில்லாக் குழந்தைப்பேற்றிற்கு ஆட்படலும் எனப் பல சமூக நோய்நிலை ஏற்படுகின்றன. குழந்தைப் பருவத்திலிருந்தே இத்தகு அறிவுக் குறைவுடையவர்க்குக் கல்வியும் பயிற்சியும் அளிப்பது சமூக சேவை நிறுவனங்களின் பணியாகும். இவர்களைத் தனிப்படுத்திப் பாதுகாத்தலும், இவர்கட்கு இவரைப் போன்ற அறிவுக் குறைவுடைய குழந்தைகளே பிறக்கக் கூடும் என்பதால் குழந்தைப் பேற்றுக் கட்டுப்பாடு செய்தலும் ஏற்க வேண்டிய சில வழிகளாகும்.

உளப்பிறழ்ச்சியே தற்கொலைக்கு நேராக ஒரு மனிதனை இட்டுச் செல்கிறது என்ற கோட்பாடு உளவியல், சமூகவியல் ஆகிய இரு துறைகளிலும் அமைகின்றது. எதிர்காலம் பற்றிய அச்சம், தன்னம்பிக்கைக் குறைபாடு என்பன தற்கொலை எனும் தன்நிலைச் சிதைவுக்கு (personal disorganisation) இட்டுச் செல்கின்றன. சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஒட்ட ஒழுகுதல் இவர்களால் இயலாமல் போகிறது. எனவே பிரச்சினையொன்றிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழியாகத் தற்கொலை கையாளப்படுகிறது (escape mechanism). அச்சம், கவலை, தன்னிரக்கம், தன்மதிப்புக் குறைவு, தாழ்வு மனப்பான்மை, வெறுப்பு, பகைமை, குற்றவுணர்வு போன்றவற்றால் ஏற்படும் மன அழுத்தம், குழப்பம், சலிப்பு என்பன தூண்டுதலாகின்றன. தனிமைப்படுலே இவர்களைத் தற்கொலைக்கு நேராக விரைவுபடுத்துகிறது. எனவே சமூகப் பிணைப்புடன், உறவுப் பிணிப்புடன், குழுவுணர்வுடன் இருக்கும் நிலை புரக்கப்பட்டால் தற்கொலை விகிதம் குறையும். இழப்பும் தற்கொலைக்குக் காரணமாகும். மிக்க அன்புக்குரியவரின் இறப்பு, கௌரவம் இழக்கப்படுதல், பணம் இன்மை, உடல் - உள நலக்கேடு, தேர்வில் தோல்வி, காதல் தோல்வி, வேறு ஏமாற்றங்கள், தொழிலில் நஷ்டம் எனப் பல்வகை இழப்புகளும், ஈடு செய்யப்பட முடியா நிலையில், தற்கொலையைத் தீர்வாக்கிக் கொள்ளுதல் உண்டு; அவசர முடிவாக்கிக் கொள்ளுதல் உண்டு. தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுத் தப்பித்தோர், தம்மை ஓர் உட்குரல் அவ்வாறு

தூண்டியதாகக் கூறியுள்ளனர். தவறிழைத்தவர் மற்றொருவரிருக்க அவரைத் தடுக்கவோ தண்டிக்கவோ இயலாத சூழலில், பழிவாங்குதல் தம் மீதே திரும்பித் தற்கொலையில் முடிவதாகத் திறனாய்ந்துள்ளனர். குடும்பத்தில் சண்டை-சச்சரவு, சொத்துத் தகராறு, வறுமை, மணப்பேதலிப்பு, சமயப்பலி, அரசியல் தீக்குளிப்பு எனப் பிறவும் காரணங்களாகக் கண்டறியப்படுகின்றன. சட்டங்கள் தற்கொலையைத் தடுக்க ஏற்பட்டுள்ளபோதும், தற்கொலை முயற்சியினர் தண்டிக்கப்படுகின்றபோதும் இச்சமூக நோய் தொடரவே செய்கின்றது. தம்மை அழித்தல் கூடாது எனச் சமயங்கள் பிரச்சாரம் செய்வது தற்கொலை விகிதத்தைக் குறைத்தது என்பதற்கில்லை. ஆலோசனை மையங்கள் (counseling centres) தொலைபேசி மூலமான நேர்த் தொடர்பு வழி (hot-line) தற்கொலை மனப்பான்மையினருக்குத் துணிவும் மனத்திடமும் ஏற்படுமாறு கருத்து வழங்கி உதவத் தயாராகியுள்ளது.

மேலுள்ளவாறு கண்ட பல உடல் உள நோய்நிலை தனிமனிதச் சிதைவாகின்றது. இதன் மற்றொரு வகையான ஊனம், அடுத்த இயலில் காணப்படுகின்றது. தொடர்ந்து, குடும்பச் சிதைவு பற்றிய கருத்தாக்கங்கள் எடுத்து மொழியப்படுகின்றன.

சமூக அடிப்படை அமைப்புகளுள் ஒன்று குடும்பம்; இன்றியமையா நிறுவனமான குடும்ப அமைப்பிலும் குடும்ப உறவுகளிலும் விரிசலும் நிலைமாற்றமும் ஏற்பட்டுப் பிரச்சினைகள் எழும் பாங்கு, சமூக நிலைபேற்றைக் கெடுக்கின்றது. தனி மனிதனாகப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் சமூகத்தினனாக வளரத் தொடங்கும் களம், குடும்பம் தான். அக்குடும்பம் ஒழுங்கானதாக, செவ்வியுடையதாக அமையும்போது வளரும் உறுப்பினரும் முழுமையுடன் உருவாகின்றனர். செவ்வி குலையும் போது புதுஉறுப்பினரின் வளர்ச்சியும் குறைபாடுடையதாகிறது. குடும்பச் சிதைவு தனிமனிதச் சிதைவுக்கு இட்டுச் செல்கிறது எனவும் மறுதலையாக, தனிமனிதக் குறைபாடு குடும்பச் சிதைவுக்கு வழி வகுக்கிறது என்வும் கருத முடிகிறது. அன்பான பெற்றோர், அனுசரணையான குழந்தைகள், அவர்களை இணைக்கும் அன்புப்பிணைப்பும் உறவுத் தொடர்பும்- என்பன இல்லாதபோது முரட்டாட்டமான, அடங்காத சிறுவர் காணப்படுகின்றனர்; ஒத்துப் போக முடியாதபடி, சிடுசிடுப்புடையவராக, பகைமையும் வெறுப்புமுள்ளவராகவும் அமைகின்றனர். சமுதாயத்தின் எதிர்பார்ப்புகள் இவர்களிடம் நிறைவேறாமல் போகின்றன. இணக்கமான ஒரு சமுதாயநிலை கெட்டுவிடுகிறது. குழந்தை வளரும் குடும்பச் சூழல் சமூக நலனுக்கு எவ்வளவு முக்கியம்

என்பது இதனால் புலப்படுகிறது. குடும்பத்தின் வழிகாட்டுதல் பிழைபடும்போதுதான், குற்றச் சாய்வுடைய இளைஞர் உருவாகின்றனர். எதிர்வரும் பிரச்சினைகளை சந்திக்கும் துணிவற்ற கோழை மனிதர் உருவாகின்றனர்; பண்பாட்டு மரபுகளிலிருந்து பிறழ்ந்து செல்லும் பெண்டிர் உருவாகின்றனர். இவ்வாறு பல்வகையான சமூக இழிவுகளும், குடும்பக் களன் சரியாக அமையாததால் ஏற்படுகின்றன.

குடும்ப நிலையாமை என்பதும் ஒரு சமூகச் சிதைவாகும். பழம் பண்பாட்டு மரபின் கூட்டுக்குடும்ப நிலை, கூட்டுறவு மனப்பான்மையுடன் ஒரு தலைமையின் கீழியங்கும் பல நபர்களைக் கொண்டு, குடும்ப பொருளாதாரத்தால் பிரச்சினைகள் வரும்போது ஒருவரையொருவர் தாங்கி, ஒருங்கிணைப்புடன் செயல்பட்டது. சமுதாயத்தில் ஏற்பட்ட பிற பல்வகை மாற்றங்களால் கூட்டுக் குடும்ப அமைப்பு கட்டவிழ்ந்து தனிக்குடும்பம், சிறு குடும்பம் என உருவாகி உறவுக்குடும்பம் அல்லது அயலகக் குடும்பம் ஆகியவற்றினிடையே கூட ஒப்புரவும் ஒட்டுறவும் இன்றி அளவில் மட்டுமன்றி மனத்திலும் சுருங்கிவிட்டது. தான்-தன் சுகம் என்றும், பிறரைப் பற்றியோ அயலகத்தாரைப் பற்றியோ கவலைப்படாதும், தன்னிச்சையாகவும் செயல்படும் தனிக் குடும்பம், சேவை மனப் பான்மையும், உலகம் தழுவிய அன்பும், உயிரிரக்கமும், தியாக மன நிலையுமுடைய ச்முதாய உறுப்பினர்களை உருவாக்கத் தவறி விடுகிறது. தன்னல நோக்கே முன்னின்று, ஊழலும், சுரண்டலும், தன் முனைப்பும் - ஆணவமும், பிறரைப் புறந்தள்ளி மிதித்து முன்னேறும் உத்வேகமும் உள்ள சமுதாயக் கூட்டத்தை உருவாக்கி விடுகிறது. இதனால் சமுதாயச் சமன்நிலை (equilibrium) பாதிக்கப் படுகிறது. ஒருமுகப்பட்ட குறிக்கோள்களும், நோக்கங்களும், விருப்பங்களும் கொண்டு செயற்பட்ட குழுமனப்பான்மை இங்கு கைவிடப்படுகிறது.

குடும்பம் ஏற்பட அடித்தளமாக அமையும் திருமணம் வெற்றியடையும்போது குடும்பம் நிம்மதியுடையதாக நிலை பெறுகிறது. மணவாழ்வின் தோல்வி குடும்பத்தைச் சிதறடிக்கிறது; குடும்பம் நொறுங்குகிறது. ஆண் தலைமை/கணவன் தலைமை யுடனமையும் இயல்பான இந்தியக் குடும்பம், அவனது சில செயற் பாடுகளால் அச்சாணியிழந்த வண்டியாகக் குடை சாய்கிறது. மண முறிவு, கை விடுதல், விலகி வாழ்தல், இறப்பு எனப் பல நிலைமைகள் உள. இன்றைய நிலையில், மேற்படிச் சூழல்கள் பொருளாதாரப் பாதிப்பு ஏற்படுத்தாத அளவு குடும்பத் தலைவியர் பணிநிலை அமையலாம். எனினும் இங்கும், மனைவி பிரிந்த/

விலகிய நிலையிலும், பெற்றோர் இருவராலன்றி, ஒருவரால் வளர்க்கப்படும் குழந்தை/கள் முழுமையான சமுதாய உறுப்பினராக வளர்வதில்லை எனச் சமூகவியலாளர் கருதுகின்றனர். கணவனால் கைவிடப்பட்ட மனைவி, தனக்கும் பிறருக்கும் பாரமாகி, குழந்தைகளைப் பராமரிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு, அவர்கட்குத் தேவையான கல்வி, மனநலம் கொடுக்கவியலாத நிலைக்கு ஆளாகியமையக் கூடும்.

பிரிந்த குடும்பம் போலவே நிம்மதியில்லாத குடும்பமும் சிதைவுற்றதாகவே கருத வேண்டியுள்ளது. குடிகாரனாகவோ சூதாடியாகவோ அமையும் கணவனால் பூசல் ஏற்பட்டு குடும்ப நிம்மதி கெடுகிறது. சோம்பேறியான, பணிபுரியாத கணவனாலும் இந்நிலைமையே ஏற்படுகிறது. மனைவியையும் குழந்தைகளையும் அடித்தல் போன்ற வன்முறையும், தீச்சொல் கூறல் எனும் ஒவ்வாச் சூழலும் விளைவாகி, நல்ல சமுதாய உறுப்பினர் உருவாதல் எனும் விளைச்சலைப் பாதிக்கின்றன. அறிவியலின் புதிய புதிய கண்டுபிடிப்புகளால், மனிதனின் தேவைகள் கூடுவதும், ஆசைகள் பெருகுவதும் குடும்பப் பொருளாதாரத்தில் ஓட்டைகள் ஏற்படுத்திக் குடும்பத் தோணியை மூழ்கடிக்கின்றன. புதுமை மோகம், நவமான கவர்ச்சிகள் - ஈர்ப்புகள் - ஈடுபாடுகள் என்பனவும் சோதனையாகி, தடம்மாறிச் செல்லும் நிலைமைகளை உருவாக்கி, கணவன் - மனைவியரிடையே உறவுச் சிக்கலை உண்டாக்கி விடுகின்றன. ஒருமுகச் சிந்தனை இன்மையாலும், மதிப்பீடுகள் பற்றிய கருத்துவேறுபாட்டாலும், சகிப்புத் தன்மை குறைவதாலும் கணவன் மனைவி முரண்பட்டுப் பிரிகின்றனர். பெற்றோர் ஏற்பாடு செய்த மணவாழ்விலும், காதல் மணவாழ்விலும் கூட இக்குடும்பச் சிதைவு நிலைகள் காணப்படவே செய்கின்றன. ஏழ்மை, தொழிற் பின்னடைவு, கணவனை எதிர்பாரா மனைவியின் பொருளாதார சுதந்திரமும் தன்னிறைவும், வேலையில் சிக்கல், வெவ்வேறுபட்ட குடும்பப் பண்பாட்டுப் பின்புலங்கள், வயது வேறுபாடு, உடல் நலங்குன்றல், புற உறவினர் தலையீடு எனப் பல தளங்கள் குறிப்பிடத்தக்கன. குடும்பக் கட்டுக் குலைவுக்குக் காரணமாக அமையும் இவை மொத்தத்தில் பண்புச் சிதைவையும் ஏற்படுத்துகின்றன. குடும்ப ஆலோசனை மன்றங்கள் ஓரளவு சிதைவைத் தவிர்க்கும் நடைமுறைகளை மேற்கொள்ளச் செய்வதுண்டு.

குடும்பம், திருமணம் என்ற நிலையங்கள் (institutions) வெற்றி பெறாதபோது, ஆதரவற்ற குழந்தைகள், பராமரிக்கப்படாத

மூத்தோர் ஆகியோர் ஏற்படுவது காணப்படுகிறது. கூட்டுக் குடும்பத்தில், பெற்றோர்-மக்கள் இல்லாத நிலையிலும் பிற உறவினரால் இவர்கள் புரந்து பாதுகாக்கப்படும் நிலை காணப்பட்டது. தனிப்பட்ட காரணங்களாலும் வரதட்சணை போன்ற சமூகக் காரணங்களாலும் திருமணமாகாது பலர் குமர நிலையிலமையும்போது தனித்து தன்னிறைவுடன் வாழ்தல், தம்மைத் தாமே புரத்தல் என்பன அமையாதபோது, பிற குடும்ப-சமூக உறுப்பினருக்குப் பாரமாக அமைகின்றனர். உலக நடைமுறைகளோடு ஒத்து, ஒட்டி ஒழுக முடியாத நிலையில் தனிமைப்படுதலும் ஒதுக்கப்படுதலும் உண்டு. விதவை, நோயாளி, ஊனர் போல இவரும் புறந்தள்ளப்பட்டு சமுதாய ஒழுக்கிலிருந்து அந்நியப்பட்டுவிடுகின்றனர்.

விதவையாக அமைபவருக்கு இருவகையான பாதிப்புகள் உள. ஒன்று பொருளாதாரத் தன்னிறைவின்மை; மற்றொன்று சமூக அந்தஸ்தும், கௌரவமும் மறுக்கப்படுதல். இன்றைய சூழலில் இப்பாங்குகள் மாற்றம் கண்டுள்ளன. பொருளாதாரக் கீழ்த்தட்டு மக்களாகவும், சமூக நிலையில் அடித்தட்டு இனமாகவும் அமைபவரில் இப்பாதிப்பு இன்றும் தொடர்ந்தாலும், மேநிலையாக்கம் பெற்றவரிடமும், மேட்டுக்குடியினரிடமும் இப்பாங்கு அவ்வாறே அமையவில்லை.

ஆதரவற்ற குழந்தைகளுக்காகவும் முதியவருக்காகவும் உள்ள பாதுகாப்பு இல்லங்கள், அவர்க்காகத் தனியாரும் அரசும் நடத்தும் நிறுவனங்கள் ஆகியன பல்கி, உதவித் தொகையும் மூத்தோர்க்கான உதவித் தொகையும் அளிக்கப்பட்டுவரும் நிலையிலும், இப்பிரச்சினை முழுமையாக ஒய்ந்தது என்பதற் கில்லை. குடும்பங்களே சமுதாய உறுப்பினரின் வளர் களனாக அமைவதைச் சமுதாயமும் அரசும் எதிர்பார்க்கின்றன. எல்லாக் குழந்தைகளும் எல்லா மூத்தோரும் சமுதாயத்தின்-அரசின் பொறுப்பில் ஏற்கப்படுதல் இந்நாட்டில் இன்னும் இல்லை. எனவே குடும்பத்தின் முக்கியத்துவம் தொடர்ந்து ஏற்கப்படுகிறது.

சமூக நலனைக் கெடுக்கும் மற்றொரு முக்கிய கூறு 'குற்றம்'. சட்டத்துக்கு விரோதமானதனைத்தும் குற்றமாம். உரிமை மீறல்களும் (civil), கொடுமையான செயல்களும் (criminal), பிழைகளும் (vices) குற்றம் என்பதில் அடங்கும். தனிமனித நலத்துக்கும் சமூக நலத்துக்கும் எதிராக ஒருவரோ சிலரோ, குழுவோ எழும்போது குற்றம் விளைந்து சமூக நலம் பாதிக்கப்படுவதால் சமூக நோயாகின்றது. நோய்நாடி அதன் முதல் நாடி அதன் வாய்

நாடி என்பது போல, இக்குற்றம் எதனால் எங்கு எப்படி வருகிறது எனக் கண்டு கடிதலும், மாற்றுதலும், நோய் நீக்கற்கு உதவும். பெரியவரும் (adults) சிறுவரும் குற்றம் இழைக்கலாம் (juvenile delinquents); வயது நிலைக்கேற்ப இவரது குற்றச் செயல் வெவ்வேறு வகையில் அணுகப்படுகின்றது. ஆண்குற்றவாளி-பெண் குற்றவாளி எனப் பாலடிப்படையில் வேறுபடுத்திக் காண்பதும் உண்டு. திட்டமிட்ட குற்றம், சந்தர்ப்பத்தில் விளைந்த குற்றம் எனவும் பிரித்துக் காண முடியும். வெள்ளுடைக் குற்றங்கள் (while collar criminal) தனி நிலையின. பரம்பரைத் தொடர்புடன் குற்றச் சாய்வு கொள்வது (heriditary) ஒருபால் என்றால், சூழ்நிலையின் உந்துதலால் குற்றம் இழைக்கும் நபரும் மறுபால் அமைகின்றனர். சமூக நலனுக்கு ஆபத்தாக, அபாயமாக அமையும் இத்தகையவர் தனிமனிதச் சுதந்திரத்திற்கும் அறைகூவல் விடுப்போராகின்றனர். அரசியல் ஊழல், சமூக விரோத சக்திகளின் சுரண்டல், சமூக அமைப்பையும் சமூக அமைதியையும் கெடுக்கும் தவறான செயல்கள் என அனைத்தும் குற்றமாகி சமூக நோயியலில் கருதப்படுகின்றன.

குழந்தைக் குற்றவாளி, முதிர்ச்சியுள்ள மனிதக் குற்றவாளியிடமிருந்து வேறுபடுத்திப் பார்க்கப்பெறுகிறான். தண்டிக்கப்படுதல் என்பதை விட திருத்துதல், சீர்ப்படுத்துதல், மறுவாழ்வளித்தல் என்பன, இத்தகு இளங்குற்றவாளிகளின் வழக்கைக் கையாளும் நீதி மன்றங்களால் செய்யப்படுகின்றன.

கொடூரமான குற்றங்களாக கொலை, பாலியல் வன்முறை, குத்து-வெட்டு, கொள்ளை, ஆள்-வாகனம் கடத்தல் போன்றன அமைகின்றன. குற்றம் இழைப்பதையே தொழிலாகக் கொள்ளும் திருடர்கள், ஜேப்படித்தல், பூட்டிய வீட்டில் கொள்ளையிடல், கடைப் பொருட்களை அபேஸ் செய்தல், வங்கிக் காசோலைகளில் தில்லுமுல்லு செய்தல், பாலியல் குற்றமிழைத்தல், சூது விளையாட்டுகள் நடத்தல் எனப் பலவாகும். சட்டத்தின் கைகளில் பிடிபடாமல் தப்பித்துக் கொள்ளும் 'தொழில் நுட்பம்' தெரிந்தவர்களாக இவர்கள் அமைகின்றனர். அமைப்புச் சார்ந்த குற்றமாக (organized crime) சாராயம் காய்ச்சுதலும் விற்றலும், போதை மருந்து கடத்தல், சூதுக் கழகங்கள்-பரத்தமை இல்லங்கள் நடத்துதல், மஞ்சள் பத்திரிகை நடத்துதல் போன்றன உள. சாலை விதிகளை மீறல், பாலில் தண்ணீர் போல பல நுகர்பொருட்களில் கலப்படம் செய்து விற்றல், கள்ளப் பணம், கருப்புச் சந்தை, கள்ள நோட்டடித்தல், எத்து, ஏமாற்று, லஞ்சம், பொய் வாக்குறுதிகள்,

அடித்து நொறுக்குதல்-தீ வைத்தல் - பொதுப் பொருட்களை நாசம் செய்தல் போன்ற வன்முறை-தீவிரவாதச் செயல்கள் எனப் பலவாகக் குற்றங்கள் பெருகி அமைகின்றன.

மதிப்புக்குரியவராக, உயர்ந்த பதவி வகிப்பவராக அமைபவர், தம் தொழில் வாழ்வில், பணித்தளத்தில் வழமைக்கு மாறாக ஈடுபடும் காரியங்களும், செய்யும் செயல்களும் 'வெள்ளுடைக் குற்றமாக' வகுக்கப்பெறுகின்றன. சான்றாக மருத்துவத் துறையில் கூடுதல் கட்டணம் வசூலிக்கும் மருத்துவர், நோயாளிக்காக ஆயுள் காப்பீட்டுத் துறையிடம் அபரிமிதமான தொகையைக் கோரிப்பெற வழிவகுக்கும் நிலை என்பன; சட்டத் துறையில் பணம் கையாடல், பொய்ச் சாட்சி ஏற்படுத்தல் போன்றன; நிருவாகத்தில், அதிகாரத்தையும் பதவியையும் தன் சுயலாபத்திற்காகத் தவறாகப் பயன்படுத்துதல் - போன்று பல உள. குழுவினராகச் செய்யும் வேலை நிறுத்தம், சாலை மறியல், கலகம், கட்டாயக் கடையடைப்பு - என்பன பல போதும் குற்றமாகவும், சில போது கட்சிகள், அரசியலமைப்புகள், சங்கம், தொழிற்சங்கம் போன்றன, எதிர்ப்புத் தெரிவிக்கும்/அனுதாபம் தெரிவிக்கும் முகமாக நடத்தும்போது குற்ற நிலை நீக்கியும் அணுகப்படலாம். எவ்வாறாயினும் இவை சமூகத்தை - தனிமனிதனைப் பாதிக்கவே செய்கின்றன.

பெண்களை விட ஆண்கள் மிகுதியாகக் குற்றத்தில் ஈடுபடுகின்றனர். அதிலும் விடலைப்பருவத்தினர், இளைஞர், நடுவயதுக்கு முந்தியோர் மிகுதியாக ஆட்படுகின்றனர். கிராமங்களைவிட நகரத்தினரும், மேட்டுக் குடியினரை விட சாதாரண மக்கள், சேரி வாழ்வினர் என்போரும் குற்றச் சார்பு கொள்கின்றனர். நல்ல மனநலமும் உடல் நலமும் உள்ளோரைவிட, இவற்றில் குறைபட்டவரே கூடுதல் குற்றச் சாய்வு காட்டுகின்றனர். இல்லச் சூழல் செவ்வியில்லாதவரும் பொருளாதாரப் பின்தாங்குதல் இல்லாதவரும் - குறிப்பாக வறுமை, ஏழ்மையிலிருப் போரும் குற்றம் செய்யத் துணிகின்றனர். மூட நம்பிக்கைகளும் குற்றத்தைத் தூண்டுவதுண்டு. புதிய குற்றவாளி ஏதேச்சையாகக் குற்றம் செய்கிறான். திட்டமிட்டுக் குற்றமிழைப்பவன் பெரும் பாலும் தொடர்ந்து - மீண்டும் மீண்டும் குற்றம் செய்பவனாக அமைகிறான். வளர்ப்பு சரியாக இல்லாததாலும், அநாதையாக, பராமரிப்போரில்லாதாராக, திக்கற்றவராக, கல்வியில்லாதவராக, பொருளாதாரப் பாதுகாப்பு இல்லாதாராக, பிற பெரிய குற்றவாளிகளால் தவறாகக் கையாளப்படுவராக அமைவதாலும்

சிறுவர், இளங் குற்றவாளியாக உருவாகின்றனர். அறியாமையாலும், தவறு என உணராததாலும், எதேச்சையாகவும் சிறுசிறு குற்றச் செயல்களில் உட்படுகின்றனர்.

குற்றங்கள் நிகழ்வதால்தான் சமுதாயத்தில் காவல் துறையும், வழக்குரைஞரும், நீதிமன்றங்களும், சிறைச் சாலையும், சிறை மீண்டோருக்கான மறுவாழ்வு நிறுவனங்களும் காணப்படுகின்றன; குற்றம் இல்லாவிட்டால் இத்தகு நிறுவனங்களோ, பாதுகாப்பு அமைப்புகளோ, சட்டங்களே, சட்டக் கல்லூரிகளோ தேவை யில்லாததாகிவிடும். எனினும், இவ்வளவு நிறுவனங்கள் அமைந்த போதும், சமுதாயத்தில் குற்றம் பெருகுவதற்கு, மக்களின்-சமுதாயத்தின் மனப்பான்மையே அடிப்படைக் காரணமாகின்றது. பல குற்றங்கள் வெளிப்படாது மறைந்தமைவதாலும், குற்றவாளி களும் பெரிய மனிதப் போர்வையில் சமூக மதிப்புடன் தொடர முடிவதாலும், குற்றம் செய்வது தவறு எனும் அறவுணர்வு பொது மக்களிடம் பதியாமல் போகிறது.

குற்றம் இழைப்பவன் சட்டத்தின் பிடியில் சிக்கினாலும் தண்டனை பெற்றாலும் பெறாவிட்டாலும், குற்றம் இழைக்கப் பட்டவனின் (victim) பாதிப்பு, பாதிப்பாகவே அமைகிறது. இந்நிலையில் ஒவ்வொரு மனிதனும், பாதிக்கப்பட்டவனாகவே அமைகிறான். நேரடியாகக் குற்றத்தால் பாதிக்கப்பட்டவன் தவிர குடிமக்கள் அனைவருமே பாதிப்பாளர் ஆகின்றனர். ஏனெனில் இவர்களது உழைப்பின் ஒரு பகுதியான வரிப்பணம் குற்றத் தடுப்புக்கும் நீதிக்கும் தண்டனைக்கும் பிறவற்றுக்குமான செலவினங்களுக்கும் திருப்பிவிடப்படுவதுடன், குற்றம் நிறைந்த சமூகத்தில் பாதுகாப்பின்றி எப்போது வேண்டுமானாலும் தமக்கெதிராகக் குற்றமிழைக்கப்படக்கூடும் என்ற பதட்டமான, சஞ்சலமான நிலையில் அமைகின்றனர். குற்றவாளியோடுள்ள இன, இட, உறவுத் தொடர்பு காரணமாகப் பிறரும் சந்தேகக் கண்ணோடு பார்க்கப்படுகின்றனர். சான்றாதாரம் அளித்தல், சாட்சி கூறுதல் போன்றவற்றால் குற்றவாளியின் பகைப்புக்கும் ஆளாகின்றனர். நிம்மதி கெடுகின்றது. அச்சம் நிறைந்த சூழ்நிலை தொடர்கிறது.

குடி, போதை மருந்து பயன்பாடு, பரத்தமை, சூதாட்டம் ஆகிய குற்றங்களும் பிற சிறு குற்றங்களான (minor vices) புகை பிடித்தல், பொடி போடுதல், புகையிலை மெல்லல் என்பனவும் தனிமனிதனின் உடலையும் - உள்ளத்தையும், குடும்பத்தின் நிம்மதியையும் பொருளாதாரத் தன்னிறைவையும், சுற்றுச் சூழலையும், பிறரையும், பொதுவாகச் சமூகத்தையும் பல்நிலையில்

பாதிக்கின்றன. வணிக ரீதியாகப் பரப்பப்பட்டு, பிரச்சாரமும் செய்யப்பட்டமையும் நிலையில் இவை நாட்டிற்கே கறையை உருவாக்குகின்றன. கள்ளச் சாராயம், விஷச் சாராயம் (spurious liquor), போதை மருந்து கடத்தல் (drug trafficing) சிவப்பு விளக்குப் பகுதிகளும் பெண் வணிகத்தில்/பாலியல் வணிகத்தில் ஈடுபடுதலும் ஒரு நாட்டின் நலனுக்கும் பெயருக்கும் நிரந்தரக் கேடு வருவிக்கின்றன. தீய பின் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு ஒவ்வொரு தனி மனிதனுக்கும், குறிப்பாக இவற்றில் ஈடுபட்டவருக்கும் ஏற்படுத்தப்படுதலே இக்குற்றங்களிலிருந்து சமுதாயத்தைக் காக்க, பாதுகாக்க முடியும். வலைப்பின்னலாகக் குற்றம், சமுதாயத்தை மூச்சுத் திணற வைத்துக் கொண்டிருக்கிறது.

குழு, குழுமம், கூட்டம், மக்கட் தொகுதி எனப் பல சிறுசிறு பகுப்புகளும், பிரிவுகளுமாகச் சேர்ந்து சமூகம் எனும் பெரும் தொகுப்பு அமைகின்றது. இவற்றிடையே இணக்கமும், நல்லுறவும், கூடிவாழும் மனப்பான்மையும், ஒப்புரவும் காணப்படுவது அமைதியான சமூகத்தை ஏற்படுத்தும். இவ்வாறன்றி போட்டியும் போராட்டமும் மோதலும் பூசலும் பகையும் காணப்படும்போது சமுதாயச் சீர்குலைவும் அமைதியின்மையும் ஏற்படவே செய்யும். மக்கட் தொகுதியினரிடையே பல்வகையான ஏற்றத் தாழ்வும், கருத்து வேறுபாடும், வித்தியாசமான பற்றுறுதிகளும், ஒன்றுடனொன்று சாராது அகன்று நிற்கும் கோட்பாடுகளும் காணப்படும் போது விரிசல் ஏற்பட்டு ஒட்டுறவும் ஒருங்கிணைந்து நிற்றலும் இல்லாதாகின்றன. சாதிமோதல், சமயப் பூசல், மொழிப் போராட்டம், இட எல்லைச் சிக்கல், வகுப்பு வாதம் - வர்க்கப் போராட்டம் என இது பன்முகம் கொண்டு பரக்கின்றது. ஒருங்கிணைந்த சமூக வளர்ச்சிக்கு இவை இடையூறாவதால் சமூக நோயியலில் கருதப்படுகின்றன.

யார் பெரியவர்/உயர்ந்தவர் யாருக்குத் தலைமை, எவரை எவர் அடிமைப்படுத்துவது - ஆள்வது - மேலாண்மை செய்வது என்ற நிலையில் மேல் - கீழ் அடுக்கு ஏற்படுகிறது. அறிவு, திறமை, வலிமை, செல்வம் போன்ற காரணங்களால் படிநிலை நிரந்தரப்படுகின்றது. நிலச்சுவான்தாருக்கும் குடியானவனுக்குமிடையே மோதல் ஏற்படுகிறது; ஏழைக்கும் பணக்காரனுக்குமிடையே போராட்டம் தோன்றுகிறது. ஆட்சியாளருக்கும் குடிமக்களுக்குமிடையே பூசல் உருவாகின்றது. சமயத் தலைமையை எதிர்த்துக் கேள்வி கேட்கும் நிலையும் காணப்படுகின்றது. கட்சிப் பூசலும் இன்றைய பரிமாணமாகும்; முதலாளி - தொழிலாளி

களிடையேயுள்ள போராட்டமும் தொழிற்புரட்சியைத் தொடர்ந்து இக்காலத்திலமைவதும் வெளிநாட்டாரின் ஆதிக்கம் காரணமாகவும், குடியேறுவோர் காரணமாகவும் அரசியல் போராட்டமும் பண்பாட்டுக் குழப்பங்களும் காலங்காலமாக ஏற்பட்டு வருகின்றன. புதிய சமயங்கள் புகுதல், மதமாற்றம் என்பனவும் மக்களிடையே பிரிவினையையும் பகைமையையும் குழு மோதல்களையும் உருவாக்குகின்றன. தலைமை வழிபாடும் (hero-worship) பல்வேறு தலைவரைச் சார்ந்த குழுக்களிடையே மோதலாகிப் பரிணமிக்கின்றன.

குழுப்போராட்டம் புரட்சியாகி நன்மை விளையும் போதும், சமுதாயத்தில் வளர்ச்சியும் மேம்பாடும் தோன்றும் போதும் சிலவேளை ஏற்கத்தக்கதாகவே அமைகின்றது. பல போதும் அழிவும் அகற்சியும் நல்லிணக்கக்கேடும் தீமையும் விளையும்போது கடிந்து நீக்கப்பட வேண்டியதாகின்றது. குழுப்போராட்டம் காரணமாகப் பல மனித உயிர்களும் பொதுப் பொருட்களும் அழிக்கப்படுகின்றன; மக்களிடையே பதட்டம் ஏற்படுகிறது; அமைதி கெடுகிறது; சமாதானம் இழக்கப்படுகிறது; முயற்சி வீணடிக்கப்படுகிறது.

எல்லோரும் சமம், எல்லாரும் ஓர் நிறை எனும் கோட்பாடு சமுதாயத்தில் மெய்ப்படாதபோது, மக்கள் வெவ்வேறு தகுதியும் பங்கும் உடையவராக அமையும்போது அவர்களுக்கிடையே தரவரிசையும் படி நிலையும் ஏற்படுகிறது (hierarchy; stratification). தனிமனிதரிடையே மட்டுமன்றி மக்கட் தொகுதியினரிடையும் இத்தகு வரிசை முறை அமைகின்றது. சமூக அடுக்குகள் இவ்வாறு இயல்பேயான போதும், சமுதாயத்தினரால் ஏற்கப்பட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டும் அமைந்த போதும், இவையும் சமுதாய நோயியலில் உட்படுகின்றன.

சமூக அடுக்கு, பெரும்பாலும் சாதி சார்ந்தும் (caste), சமூக வகுப்பு, பொருளாதார நிலை சார்ந்தும் அமைகின்றன (class). ஒன்றிலொன்று இணைந்து அமைவதால், அதாவது ஒரு சாதியினர் பணம், பதவி, கல்வி ஆகியன காரணமாகப் பல அடுக்கிலும் காணப்பட முடிவதால், இன்று சாதி மட்டுமே, மேல் கீழ் என நிர்ணயிக்கும் அளவுகோலாக நிலைக்கவில்லை. ஒரு பொருளாதார வகுப்பில் பல சாதி அடுக்கும், ஒரு சாதிப்பகுப்பில் பல பொருளாதார நிலையினரின் அடுக்குகளும் காணப்படலாம். ஒரு சாதியிலிருந்து இன்னொரு சாதிக்குக் கடக்க இயலாது; ஆயின் ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்புக்குக் கடந்து செல்லலாம் (mobility). ஏழை

உழைப்பால் பணக்காரனாகும் போது மேல்தட்டு வகுப்புக்குச் செல்வது சான்று; ஒரு குறிப்பிட்ட இனத்தினனோ-சாதி-கல்வி, பதவி, கௌரவம் என்பனவற்றில் உயர்ந்தாலும் இனஅடுக்கில் அதே இடத்தில் தொடர்கிறான். இத்தகு புதிய உறுப்பினனை ஏற்கெனவே மேல்தட்டில் அமைபவர் முழுமையாக ஏற்காதமையும் போது உரசல் அமையலாம். இதனை விரிந்த மனப்பான்மை காரணமாகச் சரிசெய்யலாம். குறுகிய மனப்பான்மை நீக்கல், நாட்டுணர்வும் தேசவுணர்வும் கொள்ளல், உயிரிரக்கம்-மானுட நேயம் கொள்ளுதல் என்பனவும் இன்றியமையாதனவாகும்.

இவ்வாறு, சமூக நலத்திற்கும் வளர்ச்சிக்கும் ஊறு விளைவிக்கின்ற பலவகையான பாதிப்புகளமைய, ஊனநிலை என்பதும் தனித்த வகையாக அமைதல் காண்டற்குரியது.

ஊனநிலை

சமூக நோயியலில், தனிமனிதச் சிதைவுகள் என்பதன் கீழ், முக்கியமாகக் கருதப்படும் உடல் உள நோய்களைப் போன்ற மற்றொரு சிக்கல் ஊனநிலையாகும். உடல் ஊனமும் உள ஊனமும் ஒரு மனிதனின் இயல்பான உட்புறச் செயற்பாடுகட்கு இடைஞ்சலாக, இடையூறாக அமைவதால் தனி மனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும் இடறலாகின்றன. இவை தடுக்கப்படுதல், தவிர்க்கப்படுதல் அல்லது நீக்கப்படுதல் என்பது சமூகத்திற்கு ஒரு பெருஞ்சுமையான பணியாகும். இத்தகையோர் சமூகத்தோடு ஒத்தொழுக முயலுதலும் - முடிதலும், இயலாதமைவதும் காணப்படலாம். இவர்க்காக அரசும், நிருவாகமும், சமூகமும் பொருளும் நேரமும் ஒதுக்கி பலவகையான சேவை, திட்டங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டும் நிலைமையை முழுமையாகச் சரிசெய்யவியலாத பாங்கு அமைவது சிக்கலை மேலும் நீட்டிக்கின்றது. குழவிப்பருவ ஊனம், சமூக உறுப்பினராக வளர்தல் (socialisation), கல்விப்பேறு ஆகிய தளங்களிலும்; வாலிப-இடைவயது ஊனம் வேலைவாய்ப்பு, பணிபுரிதல், ஊதியமீட்டுதல் ஆகிய தளங்களிலும், பின்பருவ- மூப்பின் ஊனம் பாதுகாப்பு, உடல்நலம் ஆகிய தளங்களிலும் வெவ்வேறுபட்ட பிரச்சினை களை முன் வைக்கின்றன. வேண்டாதாராகவும், விரும்பாதாராகவு மன்றி இவரையும் சமுதாயச் செயற்பாட்டின் இன்றியமையா இயக்க உறுப்பினராக ஆக்கி, மாற்றி, உருப்பெறச் செய்வது பிற அங்கத்தினரின் வாழ்வியல் கடமையாகும். அவர்க்கு ஏற்ற கல்வி, பணி, வாழ்முறை, பாதுகாப்பு என்பன வழங்கி உதவிக்கரம் நீட்டுவது ஒருபால் காணப்படினும், ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி, பிற 'முழு' உறுப்பினரோடு - சமுதாயப் பொது நீரோட்டத்தோடு- தம்மை இரண்டற இணைத்துக் கொள்ளத் தக்கதான வழிவிடுதல் - நெறி காட்டுதல் இன்றியமையாததாகிறது. அகற்றி வைத்து ஆதரிப்பதைவிட இணைத்துக் கொண்டு செயற்படுவது, அத்தகையோரின் உள, சமூக நலனையும் மேம்படுத்துவது கண்கூடு. மிகு ஊன நிலையில் இவ்வாய்ப்பு அத்துணை எளிதல்லாதபோதும் மித ஊனநிலையில் இப்பாங்கு இயல்வதாகும். பிறப்பிலிருந்தே ஊனமுடையவரின் வளர்ப்பும் மனப்பாங்கும் போலன்றி,

விபத்து-நோய் போன்றவற்றால் இடையில் - இள/நடு வயதில் ஊனம் ஏற்பட்டவரின் செயலும் மனநிலையும் வேறுபடலாம். நம்பிக்கையின்மை, தன்னிரக்கம் போன்றன இவர் ஆளுமையைச் சிதைக்கலாம். இந்நிலை தனியாகக் கையாளப்பட வேண்டியதாகும்.

ஊன நிலையைத் தனிமனித ஊனம், சமூகப் பார்வையில் ஊனம் என இரண்டாகப் பகுக்கலாம். உள, உடல் ஊனப் பாங்குகள் தனிமனித ஊனம் என்பதில் உட்படும். சமூக பொருளாதார அரசியல் சார்பில், இயல்பான சமூக உறுப்பினராக வாழும் தகுதியும் திறனும் அற்றோர் சமூகப் பார்வையில் ஊனமுற்றோராகின்றனர். அநாதை, பிச்சைக்காரர், வேலையற்றோர், கல்வியறிவு பெறாதோர், வறுமைக் கோட்டுக்குக் கீழான ஏழைகள், ஒதுக்கப்பட்ட இனத்தினர் - கீழ் சாதியினர், சிறையிலிருந்து தண்டனை முடிந்து புறம் போந்தோர், மணமாகாது குழந்தைகளை யுடைய தாய்மார், பிற்படுத்தப்பட்ட சமூகத்துப் பெண்கள், கைவிடப்பட்டோர் ஆகிய பலரும் சமுதாயத்துக்கும் அரசுக்கும் பளுவாக, தேவையில்லாத சுமையாக அமைகின்றமையால் சமூகப் பார்வையில் ஊனராகின்றனர். இவர்கள் தனித்து நிற்கவோ, தம்மைப் புரக்கவோ முடியாதவர்களாகி அரசின் பொருளாதாரப் பின் தாங்குதலையும் சமூகத்தின் உதவிக் கரத்தையும் எதிர்பார்த்து, அதனைச் சார்ந்து, அதனையே ஊன்றுகோலாகக் கொண்டு அமைகின்றனர். சமுதாயத்தினரோடு இவர்களால் இரண்டறக் கலக்க முடிவதில்லை; பொதுவான சமுதாயம் இவர்களை இருகரம் நீட்டி ஏற்றுக் கொள்வதில்லை; ஒதுக்கி, விலக்கியே வைக்கிறது.

உடல் ஊனத்தில், பொதுவான உடற்குறைபாடுகளுடன், குருடு (சிதடு), நொண்டி, ஊமை, செவிடு, நோய் காரணமான ஊனம், முதுமையால் ஊனம் போன்றன அமைந்து பல்கும்.

உள ஊனத்தில் அறிவுக் குறைபாட்டு நிலைகளும் பயித்தியமாக அமையும் மிகுநிலையும் உட்படும். பின்வரும் வரைபடம் இதனை விளக்கும்.

- ஊனநிலை
  - தனிமனிதன்
    - உடல்
      - குருடு
      - நொண்டி
      - ஊமும் செவிடும்
      - நோய் ஊனம்
      - மூப்பு ஊனம்
    - உளம்
      - அறிவுக்குறை
      - பயித்தியம்
  - சமூகம்
    - அநாதை
    - கைவிடப்பட்டோர்
    - பிச்சைக்காரர்
    - ஏழை
    - வேலை இல்லார்
    - கல்லாதோர்
    - சிறை மீண்டோர்
    - மணமாகாத் தாயர்
    - பிற்பட்ட சமூகப்பெண்கள்

இப்பலவகையான ஊனநிலை ஏற்படப் பல காரணங்களும் சூழல்களும் அடிப்படையாகின்றன. பெற்றோரிடமிருந்து பிள்ளைகட்கு வரும் ஊனம் மரபு சார்ந்தது (heriditary). பெற்றோரின் செவிப் புலன்குறை அல்லது பேச்சின்மை குழந்தைக்கு வந்தால் அதனை மரபூனமாகக் கருதலாம். சில கண்பார்வைக் குறைபாடுகள், சர்க்கரை வியாதி போன்ற நோய்நிலைகளும் இவ்வாறு வரலாம். சிதைவுற்ற மரபணு (aberrated gene) காரணமாகக் குழந்தை ஊனமாகப் பிறக்கும் நிலையும் உண்டு. தனிமனிதச் செயல், செயல்திறமின்மை என்பனவும் தமக்கு ஊனம் ஏற்படுத்தலாம். சோம்பல், தற்குறும்பு, குற்றம், விபத்து போன்ற பல தளங்கள் இதில் ஊடாகிவரும். சோம்பல் காரணமாகக் கல்வியின்மை, பிச்சையெடுத்தல் ஆகியன வரலாம்; வீட்டைவிட்டோடுதல் போன்ற தற்குறும்பு ஒருவனை அநாதையாக, வேலையற்றவனாக ஆக்கலாம். ஒரு பெண்ணை மணவினைக்குப் புறம்பாகக் குழந்தை பேறடைந்தவளாக்கலாம். குற்றம், விபத்து போன்றன வேலையின்மை, முடம் போன்ற உடல் ஊனம் ஆகிய குறைபாடுகளை ஏற்படுத்தலாம். இயற்கைச் சீற்றங்கள் பலவும் மற்றொரு காரணத் தொடர்நிலைக்கு இடம்தருகின்றன. பஞ்சம், நெருப்பு, வெள்ளம், நிலஅதிர்வு, கொள்ளை நோய் போன்றன வறுமை, உடல் ஊனம், அநாதை நிலை, பிச்சையெடுத்தல் போன்ற பல ஊனங்களை உருவாக்கும். சமுதாய நிறுவனங்கள் களனாகி, ஊனப்படுத்துதல்

என்பதும் உண்டு. அரசியல் நிறுவனம், போர், கலகம், சுரண்டல் போன்ற பல சூழல்களால், உடல், உள, சமுதாய ஊனங்களை விளைக்கிறது. கல்விச்சாலை, மருத்துவமனை போன்ற நிலையங்களும் தவறான கையாளுகையால் இளங் குற்றவாளிகளையும் உடலூனமுற்றவரையும் தரலாம். ஆழ் பார்வையில், இவை பன்முக நோக்கில் பல்குவது தெரியும். கீழ்வரும் வரைபடம் சில அடிப்படைகளைத் தரும்.

ஊனக்களமும் காரணமும்

- இயற்கைச் சீற்றம்
  - பஞ்சம்
  - நெருப்பு
  - வெள்ளம்
  - நிலஅதிர்ச்சி
  - கொள்ளைநோய்
  - வறட்சி
  - புயல்
- தனிமனிதக் குறை
  - மரபு
  - சோம்பல்
  - தற்குறும்பு
  - குற்றம்
  - விபத்து
- சமூக நிறுவனநிலை
  - அரசியல்
    - போர்
    - கலகம்
    - சுரண்டல்
  - பள்ளி
  - மருந்தகம்
    - தவறான மருந்து
    - மருத்துவம்
    - அறுவை

உண்டும் உறங்கியும் உயிர்ப்புடனும் இருக்கும்போதும் மூளைத்திறனும் உறுப்புகளும் உறுப்புகளின் செயல்களும் முற்றிலும் இன்றியோ, சிறிய பெரிய அளவில் குறைப்பட்டோ இருக்கும் இவ்வூனநிலை, இயற்கை உடல்-உள்ளம்-சமுதாயம் ஆகிய காரணங்களால் அமைந்தது வெளிப்படை. தொழில் நுட்பமும் மருத்துவமும் செழித்தும் வளர்ந்துமுள்ள நிலையில், ஆண்டுதோறும் மக்கட்தொகையில் ஊனமுற்றோரளவு குறைந்து கொண்டே வரவேண்டும் என எதிர்பார்க்கலாம்; ஆயின் நிலைமை அத்தகு மேம்பாடு காட்டுவதில்லை. பெருகிவரும் இத்தகையோரின் வாழ்வியல் மேம்பாட்டுக்காக, கல்வியில் இருக்கைகள் ஒதுக்கீடு அளித்தல், வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு, இவர்க்கென அரசு மானிய ஒதுக்கீடு ஆகியன வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. குறைவாக - மதிப்புக் குறைவாகக் கருதப்படும்போது ஊனம் மறைக்கப்படலும், நலத் திட்டங்களைப் பெறுவதற்காக வெளிப்படுத்தப்படுதலும் வாய்ப்பாகும். இளமைப் பருவத்திலும் முதுமைப் பருவத்திலும் உள்ளதைவிட இடை வயதுப் பருவத்திலேயே (20-59 வயது) ஊனம் முக்கியத்துவம் பெற்றுக் கருதப்படுகிறது. மனித வாழ்வின் பயனுறு நிலையாக (productive age) இப்பருவம் அமைவதும், நலத்திட்டங்கள் மிகுதியாக இவரை மையம் கொள்வதும் காரணமாகும்.

இளமைப் பருவத்தினருக்கு (10-19 வயது) ஊனமுற்றோருக்கான தனிக்கல்வி - சேவை நிறுவனங்கள், கல்வியும், எதிர்கால வாழ்க்கைக்கான தொழிற்கல்வியும், கருவிகள், போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியனவும் வழங்கி உதவுகின்றன. பார்வையற்றவருக்கு, பிரெயில் எழுத்தில் கல்வி அளித்தலும், செவிப்புலனும் பேச்சுத் திறனும் குறைந்தவர்க்குச் சைகைமொழி மற்றும் அவர்க்கேற்ற மொழிக் கல்விக்கான கருவிப்பயன்பாடும் கையாளப் படுகின்றன. இசை, தொலைபேசி இயக்குதல், கூடை பின்னுதல் போன்ற குடிசைத் தொழில்கள் பார்வையற்றோருக்குக் கற்றுத் தரப்படுதல் உண்டு. கால் கை ஊனருக்குச் செயற்கை உறுப்புகள், ஊன்றுகோல், மூன்று சக்கர வண்டி போன்றன கருவிநிலை உதவியாகின்றன.

ஊனமுற்றோருக்கான ஓய்வூதியம் (handicapped pension) போக்குவரத்துக் கட்டணச் சலுகைகள், இலவச மருத்துவமும் பராமரிப்பும், குழந்தைகளுக்கு வழங்குவது போல மையங்களில் சத்துணவு வழங்குதல் போன்ற பல வழிமுறைகள் மூப்பினர்க்கு உதவ முடியும்.

ஒருவருக்கு ஒரு ஊனநிலை என்பதைக் கையாள்வது ஓரளவு எளிதாகலாம். ஆயின் பெரும்பாலும் ஒருவருக்குப் பல ஊனங்கள் அமைவதால் பிரச்சினை பன்முகம் கொள்ளும். பேச்சுத்திறனும் கேள்வித்திறனும் ஒருங்கிணைந்து செல்லல் பெரும்பான்மையாதலால், அவற்றின் குறைபாடும் இணைகின்றன. அறிவுக் குறைவுடையவர்க்குப் பிறபுலன்களிலும் ஊனம் அமைவதும் இத்தகையதே.

சமூக நோயாக, சமூகப் பிரச்சினையாக இளைய தலைமுறையினரின் ஊனம் எடுத்தாராயப்படுகிறது. பிறப்புக்கு முன்னே உருவாகும் ஊனநிலை, பிறப்பில் அமையும் ஊனம், பின்பு குழவிப் பருவத்தில் ஏற்படும் ஊனம் ஆகிய மூன்று பாங்கும் முக்கியத்துவம் பெறுகின்றன. குழந்தையிடம் உள்ளது ஒரு குறைபாடு (defect) மட்டுமா அல்லது ஊனமா (handicap) எனத் தெளிவாக வேறுபடுத்திக் கண்டறிவதே, அதனை வளர்ச்சிக்கு நேராகக் கொணர்வதில் உதவமுடியும். பெற்றோர், கல்வியாளர், மருத்துவர், சமூக ஊழியர் எனப் பலருடைய ஒருங்கிணைந்த உதவியும் பாதுகாப்பும் தேவையாக அமைகின்றன.

ஊனம் எப்படி ஏற்பட்டது, ஏன் ஏற்பட்டது என்பது முதலிலேயே கவனிக்கப்பட வேண்டும். தொடக்கத்திலேயே குறைபாடு இனம் காணப்பட்டால், அது ஊனமாக மாறுவதற்கு முன் தடுக்கவோ தவிர்க்கப்படவோ தேவையான நடவடிக்கைகள்

எடுக்கமுடியும். குழந்தையின் இயல்பான வளர்ச்சியில் காணப்படும் எந்தத் தாமதமும் தயக்கமும் குறைபாடாகும்; உடல், அறிவு, ஆளுமை ஆகியவற்றில் இக்குறை தொடர்வதும் இயல்பான வளர்ச்சி, கற்றல் ஆகிய்வற்றைப் பாதிப்பதும் ஊனநிலை ஆகும். பிறந்த உடனேயே குறையை இனங்காண முடிவதும், வளரவளர உரிய திறன்கள் குறைந்தமைவதால், அடையாளங்காண இயல்வதுமாகிய இருநிலையும் உண்டு. இப்புரிந்து கொள்ளலின் அடிப்படையில் தான், பொதுவான பள்ளியிலா அல்லது சிறப்புப் பள்ளியிலா (special school) கல்வியும் பயிற்சியும் அளிக்கப்பட வேண்டும் என்பதை முடிவு செய்ய இயலும்.

கடினமாக ஊனமுற்ற குழந்தைகளில் சுமார் ஏழு விழுக் காட்டினர் பிறவியிலேயே அத்தன்மையுடையவராக அமைகின்றனர்.* குழந்தைப் பருவத்திலேயே காணப்படும் பார்வையின்மை, மிகுந்த பார்வைக் குறைபாடு, காது கேளாமை, குழந்தையின் வளர்ச்சித் தன்மையில் காணப்படும் பல குறைபாடுகள் ஆகியன பிறப்பும் மரபும் சார்ந்ததாகவே அமையும். இயல்பான தன்மைகளுடைய பெற்றோர் இருவருக்கும் கூட ஊனமுடைய ஓரிரு குழந்தைகள் பிறப்பது மரபுத் தொடர்ச்சியிலுள்ள மூன்று வகைப்பாடுகள் காரணமாக அமையும். மரபுக் கூறின் விஞ்சுநிலை (dominant), பின்னடைவு நிலை (recessive), இனக்கீற்றுப் பிறழ்வு (chromosome abnormality) என்பன அவை.

பெற்றோரிடம் வெளிப்படப் புலப்படாத போதும் விஞ்சு மரபுக் கூற்றின் கால்வழித் தொடர்ச்சியால் சில வகையான காது கேளாமை, பார்வைக் குறை, வேறு சிறு உடற்குறைபாடுகள் என்பன குழந்தைகளில் வெளிப்படலாம்; தலைமுறை தலைமுறையாக இது தொடரவும் வாய்ப்புண்டு. அறிவுத்திறன் குறைதல் என்பதும் இவ்வாறு தொடரும் பாங்குடையது. பாதிப் பங்குக் குழந்தைகள் இவ்வாறு பாதிப்புடையோராய் அமைவர்.

பின்னடைவு மரபுக் கூறு நிலையில், கால் பங்குக் குழந்தைகள் மிகு பாதிப்புக்காட்ட வாய்ப்புண்டு. ஊனமோ நோயோ தாங்கும் ஒரு மரபுக்கூறு, வெளிப்படப் புலப்படாது, பெற்றோரிடம் அமையும்போது, நால்வரில் ஒரு குழந்தையில் அது வெளிப்படுகிறது. செவ்விய மரபுக் கூறு R எனவும் பின்னடைவு r எனவும் அமைத்து, கீழ்வரும் சமன்பாட்டில் இதனை விளக்குவர்.**

---

* Handicapped children in the community, Grace E. Woods, Wright, P.S.G., London, 1983, p. 8.

** Ibid. p. 9.

$$\frac{Rr + Rr}{RR \quad Rr \quad Rr \quad rr}$$

இதில் rr மிகுபாதிப்புடைய குழந்தையைக் குறிக்கும்; RR மிக இயல்பானதும் நோய்க்கூறு இல்லாததுமான குழந்தையையும், Rr மிக இயல்பானதும் ஆயின் மரபுக்கூறில் ஊனம், நோய்க் கூறு தாங்குவதுமான குழந்தையையும் குறிக்கும்.

ஒரு பெற்றோரிடமிருந்து அதே பாலின அல்லது எதிர்ப்பாலினக் குழந்தைகளுக்கு நோய் பகரப்படுதல் என்பதும் உண்டு. தாயைப் பாதிக்காது, ஆனால் அவளிடமிருந்து கால்வழி கொண்டு மகனைப் பாதிக்கும் நோய் நிலையான குருதிஉறையாமை (haemophilia) இதற்குச் சான்று. தாயின் எக்ஸ் இனக்கீற்றில் இம்மரபணு அமைகிறது.

மனித உயிரணுக்களில் 46 இனக்கீற்றுகள் 23 இரட்டையாக அமையும்; அவற்றிலொரு இரட்டை பால்பகுப்புச் சுட்டுவதாகும். ஆண் பெண் கருஅணுக்கள் இணையும்போது 46 இனக்கீற்றுடைய அணு உருவாகி பின் அணுவகுப்பால் கரு-உடலாக உருவாகுவது முறையான இயல்பாகும். ஏதேனும் காரணத்தால் 46க்குப் பதிலாக 47 இனக்கீற்றுள்ள குழந்தை பிறப்பின் அது அறிவிலியாக (Mongol child) அமைகிறது. வயது கூடிய பெண்ணுக்கோ, வயதானவனின் மனைவிக்கோ அல்லது இயல்பான எப்பெண்ணுக்குமோ இத்தகு குழந்தை பிறக்கலாம். இனக்கீற்று வகுப்பில் வேறு பிறழ்ச்சியும் அமையலாம். பெரும்பாலானவை குழந்தையின் அறிவுத்திறனை பாதிக்கும். பால்பகுப்பு சுட்டும் இனக்கீற்றில் (sex chromosome) வகுப்புப் பிறழ்ச்சி ஏற்படும்போது மலட்டுத்தன்மை, பால் முதிர்ச்சி பெறாமை என்பன கால்வழியிலமையும்.

கருவுறு காலமும் சில பல பிறழ் வளர்ச்சிக்குக் களனாக அமையும். கருவுற்ற தாய் உட்கொள்ளும் மருந்துப் பொருட்களில் தலிடோமைட் (thalidomide) இருத்தல் குழந்தைகளில் மிகு பிறழ் நிலையை உருவாக்குகிறது. இயல்புக்கு வேறான நிலையில் உடலும், தலையும், கை கால்களும், இருதயமுமமைந்த குழந்தைகளின் தாயார் கருவுற்றிருந்த நிலையில் வலிப்பு தவிர்க்கும், அமைதிப் படுத்தும் மருந்துகள் உட்கொண்டிருந்தமை காணப்பட்டது. தாய் உட்கொண்ட சத்தில்லாத உணவு, வைட்டமின் பி குறைவுபட்ட

சமச்சீரில்லா உணவு என்பனவும் உரிய வளர்ச்சியுறாக் குழந்தையை உருவாக்கும். கருவுற்ற காலத்தில் புகை பிடிப்பது, எடைகுறைந்த குழந்தை பிறப்புக்குக் காரணம். நோயினங் காணவோ மருத்துவத்திற்காகவோ எக்ஸ்ரே மற்றும் கதிரியக்க முறைகளைக் கையாளுவது கருவுற்ற தாயிடம் தவிர்க்கப்பட வேண்டியதாகும். குடி, போதை போன்றனவும் காரணமாகலாம். வேறு பல சூழலும் காரணமாகலாம் என்பதால் இவையே தான் காரணம் எனக் கூற முடியாது.

தாய் கருவுற்ற காலத்தின் நோய் தாக்குதல்களும் குழந்தையைப் பாதிக்கின்றன. சின்னம்மை போன்ற தொற்று நோய் வகை (german measles / rubella), கருவுற்ற தொடக்கநிலையில் மூளைப் பாதிப்பையுடைய குழந்தைப் பேற்றை ஏற்படுத்தும். கருவுற்று சிறிது காலத்திற்குப்பின் நோயுற்றால், கண் தொடர்பான பல பாதிப்புகள் உருவாகும். குருட்டுநிலை, மிகக்குறைந்த பார்வை, கண்புரை, விழித்திரை நோய் என்பன ஏற்படும். இதே பருவத்தில் இதய நோயும் உருவாக வாய்ப்புண்டு. 3ஆம் 4ஆம் மாதக் கருநிலையில் நோய் தாக்கினால், கேள்வித் திறன் பாதிப்பு ஏற்பட்டு உட்செவி ஒழுங்கின்றி உருவாகும் நிலை தோன்றும். இவ்வாறு குழந்தையின் பல் வகையான ஊனநிலையும் தாய்க்கு ஏற்படும் நோய்ப் பாதிப்பால் உருவாகலாம். வேறு விதமான தொற்றுக் கிருமிகளும் பாதிப்புத் தரும் காரணமாகின்றன. 12 வயதுக்குள் சிறுவர் சிறுமியர்க்குத் தடுப்பூசிகள் போடுவதன் மூலம், அவர் பெற்றோராகும் சூழலில் இத்தகு குறையுடைய குழந்தைப் பிறப்பை முன்பே தடுக்கலாம்.

இன்னும் பிற பல ஊனப்பாங்கும் குழந்தைக்குப் பிறக்கும்போதே அமைந்திருக்கக் காணலாம். உதட்டுப் பிளவு, அண்ணப் பிளவு, இதயக்கோளாறு, இயல்புக்கு மாறான கண்கள், முதுகுத்தண்டு செவ்வியின்மை, இயல்பில்லாத கை, கால்கள், ஒரு கை அல்லது காலின்மை, சிறுதலை, பெருந்தலை, உணவுச் செரிமான உறுப்புகளில் கோளாறு எனப் பலவாகும்.

குழந்தையின் ஊனநிலைக்கும் பெரும்பாலும் பெற்றோரே குற்றம் சாட்டப்படுகின்றனர். குறிப்பிட்ட பொருளாதார வகுப்பினர் என்றில்லாது எல்லா நிலைக் குழந்தைகளிடமும் ஊனம் காணப்படலாம்.

கருவிலிருக்கும்போதேயன்றி பிறக்கும் நிலையிலும் குழந்தைக்கு ஊனம் ஏற்பட வாய்ப்புண்டு. சிக்கலான பிரசவம் குழந்தையின் உடல்நலத்தைப் பாதிப்பது இது. குறை மாதத்திலேயே பிறந்துவிடுவது, கருவிப்பயன்பாடு காரணமாகத் தலையும் மூளையும் பாதிக்கப்படுவது என்பன குறிப்பாக மிகு பாதிப்பை உருவாக்குகின்றன. பெரும்பாலும் மூளை அழற்சி, வலிப்பு, அறிவுக் குறைபாடு, கற்றல் திறன் குறைவு, பேச்சு-பார்வை-கேள்வி ஆகியவற்றில் சிக்கல் என்பன ஏற்படுகின்றன. முதற்பார்வையில் எக்குறைபாடுமற்ற இயல்பான ஆரோக்கியமான குழந்தை எனத் தோற்றம் அமையினும் போகப்போகக் குறைபாடுகள் வெளிப்படத் தொடங்குவது உண்டு.

பிறந்தபின் விபத்து போன்ற காரணங்களால் ஏற்படும் ஊனம் கடுமையானதாக - கொடுமையானதாக அமைகின்றது. வீட்டிலோ தெருவிலோ விபத்துக்குள்ளாதல், மின்சாரம் தாக்குதல், நீரில் மூழ்குதல் போன்றன மிகுதியான மூளைப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அதிர்ச்சி தரத்தக்க இல்ல நிகழ்ச்சி, பிற காட்சிகள் என்பனவும் மனப்பேதலிப்புப் போன்ற பாதிப்பை உருவாக்க முடியும். போலியோ, அம்மை போன்ற நோய்களால் ஏற்படும் ஊனமும் நீக்கப்படமுடியாத நிரந்தர ஊனம் ஆகிவிட முடியும். குழந்தைப் பருவ ஊனம் காரணமாக, அக்குழந்தை தனிமனிதனாகவும், சமுதாய உறுப்பினனாகவும் வளர்ந்து முழுமை பெறுதலில் இடைஞ்சல் அமையலாம். எல்லோருக்கும் இயல்பான கல்வியும், உடன் சகோதரர் அல்லது தோழருடனான விளையாட்டுச் சூழலும் (peers/siblings) பெற முடியாத நிலை ஏற்படலாம். இதற்கென ஏற்பட்டுள்ள சிறப்புப் பள்ளிக்கூடங்களில் கற்றல், தனிமைப்படுத்தப்படுதல், பிறரால் வித்தியாசமானவராகக் கருதப்படுதலும் கையாளப்படுதலும் என்பன போன்ற சூழல்கள் இவர்களைச் சமுதாய ரீதியாகவும், உளவியல் நிலையிலும் பாதிப்பதால், இவர்கள் முழுமையான குடிமக்களாக உருவாவது தடைப்படுகிறது. இவர்களைத் தக்கவிதமாகக் கையாளுதல் வழியும் ஆலோசனை அளித்தல் (counseling) வாயிலாகவும் திட முள்ளவர்களாக மனவலிமையுடையவர்களாக உருவாக்கி மேம் படுத்தும் பணியும் பொறுப்பும், உடன் சமூகத்தினர்க்குரியதாகும். அந்நிலையில், இத்தகையவரும், பயனுடைய குடிமக்களாகி,

சமுதாயத்திற்குச் சுமையாகாது, தாமும் சமுதாயக் கடமைகளைச் சுமக்கும் ஆற்றலினராகி, முழு சமுதாய உறுப்பினராக முடியும்.

ஊனம் பற்றி சமுதாயம் சிந்தித்தது. கவலை கொண்டது. சமூகத்தின் படைப்பான இலக்கியமும் இதனால் ஊனரைப் பற்றிய தகவல்களையும் தரவுகளையும் எக்காலத்திலும் பதிவு செய்தது. அரியதான மானிடப் பிறவி ஊனமற்றமைதலின் அருமை ஔவையாரால் உணர்த்தப்படுகின்றது (தனிப்பாடல் திரட்டு, பூம்புகார்ப் பிரசுரம், 1977, பக். 32-33).

அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிது அரிது மானிடர் ஆதல் அரிது
மானிடர் ஆயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது

இலக்கிய வருகைகள் பலவும் இத்துறை பற்றிய உண்மைகளை வழங்க வல்லனவாய் உள்ளன.

இலக்கியத்தில் ஊன வருகை

தொல்காப்பியம் முதல் பெரியபுராணம் வரையிலான இலக்கண இலக்கியங்களையும், நிகண்டுகள் அகராதிகள் போன்றவற்றையும் களனாகக் கொண்டு ஊனம், ஊனர் பற்றிய தரவுகளைத் தேடும்போது, அவற்றின் வருகையில் சில வகைப்பாடுகள் காணப்படுகின்றன. ஊன, ஊனம் என்ற சொற்கள் ஒருபாலும், பல்வகையான ஊனங்கள் பற்றிய முதற் சொற்களும், பரியாயச் சொற்களும் மற்றொருபாலும் அமைகின்றன. இலக்கணத்திலும், நிகண்டு அகராதியிலும் சொல், சொற்பொருள், சொற்றொகுதி, சொற்பட்டியல் போன்ற நிலைகளில் இவை வரும். இலக்கியத்திலும் சொல், பொருள், பெயர், விளக்கம் என வருவதுடன், பாத்திரமாகவும் வந்து, உவமை, உருவகம், எடுத்துக் காட்டு என ஆளப்பட்டு, நம்பிக்கை, பழக்கவழக்கச் சார்பிலும் இடம்பெறும். இயல்பு, கற்பிதம், புராணச் சார்பு, வசை (இழிப்பு/ பழிப்பு) என இவற்றின் வருகை பல்வகையாக அமையினும் பரவலாக வருவது இல்லை. மேலும் ஊனம் குறிக்கும் சொற்கள் சிலவற்றிற்கு வேறுபிற பொருளும் உள்ளமையால், சொல் வருகைகள் அனைத்தும் ஊன வருகையாக அமையாது சில வேறு பொருண்மையும் புலப்படுத்தும். மேலும், மனித ஊனர் மட்டுமன்றி பிற, அஃறிணை உயிர் ஊனமும் சுட்டுப்பெறுவதுண்டு. இயல்படையாகவும், இழிப்படையாகவும் வரும்போது, தமக்கெனத் தனிக்குறிப்புப் பெறலும் காணப்படும்.

சொற்களைப் பற்றி ஆராய்ந்து, விதிகள் வகுக்கும் தொல்காப்பியம் ஆளும் சில தொடர்கள், உள்ளுறு பொருளாக ஊனம் சுட்டுகின்றன. பால் ஊனமாக அமையும் 'பேடி' என்பதைச் சொல்லாமலே சொல்கின்றது.

> பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
> ஆண்மைதிரிந்த பெயர்நிலைக் கிளவியும் (தொல். 487)

> ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
> ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்றே (தொல். 495)

என்பன சான்று. மேலும், உயர்திணையை உணர்த்துவன ஆயினும் அஃறிணையாகச் சொல்லாட்சியமையும் மொழிப் பாங்கினை

விளக்குமிடத்தும் அலி, குருடு முதலியவற்றை வேறு தொடரால் மறைத்து மொழியும்.

> .... தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி ....
> அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
> முன்னத்தின் உணரும் கிளவி எல்லாம்
> உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்
> அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும்
> (தொல். 540)

'தன்மை திரி பெயர் அலி. இதனோடு ஒரு பொருட் கிளவியாய் வருவனவுங் கொள்க. உறுப்பின் கிளவி, குருடு முடம் என்னுந் தொடக்கத்தன' என்பது சேனாவரையம்.

இத்தகைய சொல் விளக்கம், சொல்லாய்வுகள் ஊனம் தொடர்பாக இலக்கியத்திலமைதற்கு வாய்ப்பு இல்லை; அல்லது குறைவு என்று சொல்லலாம். உவமை, விளக்கம் போன்ற ஆட்சிகளுக்கு இலக்கியம் களம் தரும். நேரடியாக அளிப்பதை விடப் பயன்பாடு ஆக்குவது காணப்படுகிறது.

சங்க இலக்கியம், சொல், பெயர், பட்டியல், உவமை, மாந்தர், செயல் எனப் பல நிலைகளில் ஊன வருகையை அமைக்கிறது. ஊமை எண்கு (மலை. 501), முடப் பனை (புறம். 2293) என்பன போன்ற சொல் நிலைகள், ஊனம் குறிப்பிடாதோ, ஊனப் பொருள் தந்தும் மனித ஊன நிலை குறிக்காதோ வருகின்றன. ஐயூர் முடவனார், முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன் போன்ற வற்றில் புலவர் - அரசர் பெயராக்கக் கூறாக ஊனம் அமைகின்றது. புறநானூறு (28) 'சிறப்பில் சிதடு ..' எனத் தொடங்கி எண்பேரெச்சப் பட்டியல் வழங்குகிறது. 'புழுங்கல் நெல்லின் பொரி சிந்தினாற் போன்ற புற்றீயல், கோல் பிடித்து நடக்கும் குருடரை ஒத்துச் செல்லும்' என்பது ஊனம் சார்ந்த ஓர் உவமையாகும். இது ஐங்குறுநூற்றில் அமைகிறது.

> '........... வெள்ளைப்
> புழுங்கல் நெல்லின் பொரி வீழ்த்து என்ன
> நுண்குழிப் புற்றின் மண் கால் ஈயல்
> கோல் பிடி குருடர் ஏய்க்கும்' (ஐங்.தி. 4)

கலிப்பாடல் தரும் கூனி-குறளன் உரையாட்டு, கதை மாந்தர், பாத்திர நிலை காட்டுவது மற்றொரு வகையாகும். இதன் தொடர்ச்சி, பின்பு, பெயர்ச்சுட்டுடன் காப்பியத்தில் அமையும்.

செயலாக, ஊனம் செய்தல் என்பது, அன்னி மிஞிலி கதையில் பொருந்துகிறது. தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் 'உறுப்பறை' என வெகுளி வெளிப்பாட்டைக் காட்ட, இங்கு, சங்க இலக்கியம் தண்டனை நிலையைக் காட்டியது (அகம் 196, 262). மேலும், இது உவமையாக வரினும், ஒரு கால வழக்கைக் காட்டுகிறது. இதனைப் போன்றே ஊனம் தொடர்பான பிற உவமைகளிலிருந்தும் ஊனர் நிலை, அவர் செய்கை போன்றவற்றை அறியலாம். 'துஞ்சு புலி இடறிய சிதடன்' (புறம். 73) என்பதை ஒத்து பழமொழித் தொடர்களையும் இனங்காணலாம். முதுமை, நோய் என்பனவும் ஊனச் சார்புடன் வெளிப்படுவது உண்டு. முடமுதிர் பார்ப்பான் (கலி. 65), தொழுநோயும் முதுமையுமுடைய முடநிலையில் காட்டப்படுவது சான்று.

இலக்கிய வகைக்கேற்பவும், இலக்கிய ஆக்கத்தின் தேவைக்கேற்பவும் ஊனம்-ஊனர் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன எனக் கருதலாம். அறநூல், காப்பியம், சமய-பக்தி இலக்கியம் வெவ்வேறான அணுகுமுறையையும் கையாளுகை யையும் ஊனம் பற்றி அமைப்பது புலப்படுகின்றது.

கீழ்க்கணக்கின் அற நூல்கள், அறிவுரை கூற வாய்ப்பாக, அறம் கூற எடுத்துக்காட்டாக, உவமையாக, ஊனச் செய்திகளைப் பயன்கொள்கின்றன. துஞ்சு ஊமன் கண்ட கனா (திரி. 7) உவமையாகிறது. பகையகத்துப் பேடி கை ஒள்வாள் (குறள். 727) உருவகத் தோற்றம் கொள்கிறது பழமொழித் தொடர்களும் ஊனச் சார்புடன் வெளிப்படுவது, 'குருட்டுக் கண் துஞ்சிலென் துஞ்சாக் காலென்' (பழ. 218) என்பது போன்றவற்றில் புலப்படுகின்றது.

காப்பியங்கள் ஊனர் வாழ்வு, ஊனப் பாத்திரங்கள் எனப் பிறிதொரு தளத்தில் களம் வழங்குகின்றன. கலித்தொகை, அடியோர் வினைவலர் பாங்கில் கூன், குறள் அமைத்ததன் தொடர்ச்சியாக, ஏவலிளையரில் கூன், குறள், பேடி ஆகியவரைச் சிலம்பு முதலான காப்பியங்கள் காட்டும். 'கூனுங் குறளும் ஊமுங் கூடிய குறுந்தொழில் இளைஞர்' (20. 17) என்பது சிலம்பு. 'போகக் கலப்பையும் பொறுத்தனர் மயங்கிக் கூனும் குறளும் மாணிழை மகளிரும்' (1.38.177-178) என்பது பெருங்கதை. ஊனப் பிறப்புப் பற்றிய எண்ணமும் கரிசனையும் கூட காப்பிய வெளிப்பாடாகும். ஊனம் நீக்கும் இலஞ்சி மன்றத்தைச் சிலப்பதிகாரம் (5.118-121) காட்ட, புத்த ஞாயிறு தோன்றும் போது ஊனர் பிறவார் என மணிமேகலை (12.86-98) கூறி, ஆபுத்திரனும் மணிமேகலையும் அத்தகையோருக்கு

உண்டியளித்துப் புரத்தலைப் புலப்படுத்தும் (13.111-112; 28. 222-223). காப்பியப் பாத்திரமாகக் கூனியும், குறளியும் வரல் பெருங்கதை முதலே தொடங்கினும், கம்பராமாயணக் கூனியில் தான் செயல் உச்சம் வெளிப்படுகிறது எனலாம். சிலம்பில், மாதவியின் மாலைக்கு விலை கூறுகிறாள் கூனியொருத்தி. சீவக சிந்தாமணி, விசையையின் தோழியாகச் சண்பக மாலை எனும் கூனியையும் காந்தருவ தத்தையின் தோழியாக வீணாபதியெனும் பேடியையும் (314, 555) சுட்டுகின்றது. பெருங்கதையில், பதுமாபதியின் தோழியாக அயிராபதியெனும் கூனி, வாசவதத்தையின் தோழியாக விச்சுவலேகையெனும் குறளி போன்றவரைக் காண முடிகிறது. துணைமைப் பாத்திர நிலை இவ்வாறமைய, பாரதத்தின் திருதராட்டிரனின் கண் பார்வையற்ற பாங்கு, முதன்மைப் பாத்திரத்தில் ஊனம் தருகின்றது. பெரியபுராணம் தண்டியடிகளைப் பார்வையிழந்தவராகக் காட்டுவதிலும் ஊனப்பாத்திர நிலை காப்பியத்தில் பொருந்துகிறது.

சமய, பக்தி நூல்கள், சமுதாயச் சார்புடன் மட்டுமன்றி, புராண, இறைச் சார்புடன் ஊனத் தகவல்களை உள்ளடக்கி அமைக்கின்றன. இறைப்புகழை எடுத்துக் கூறுதல், முரண் பட்டோரைத் தண்டித்தல், இறையருளால் ஊன நீக்கம் பெறுதல் என பிறவிடத்துப் பெரிதும் அமையாத பரிமாணங்கள் இங்குக் காணப்பட வாய்ப்புண்டு. திருமாலுக்கு, அவதாரங்களுள் ஒன்றான வாமனம் இதற்கு மிகுந்த இடமளிக்கின்றது. சிறப்புடன் 'குறள்' ஆளப்படுவது இங்குதான் எனலாம். முன்னிலைப்படுத்தும் பெயரும் ஆகிறது.

மாணிக் குறளனே தாலேலோ (நாலாயிரம். 44)

குறட் பிரமசாரியாய் மாவலியைக்
குறும்படக்கி யரசு வாங்கி.... (நாலாயிரம். 418)

முன்னம் குறளுருவாய் மூவடிமண் கொண்டளந்த
(நாலாயிரம். 1779)

எனப் பன்முறை அமையும். தேவர்களை உறுப்புக்குறை செய்து தண்டித்தல் என்பது சிவன் சார்பில் தேவாரத்தில் காணப்படும்.

பெற்றிமையோன் றறியாத தக்கனது வேள்வியில்
பெருந்தேவர் சிரந் தோள் பற் கரங் கண் பீடழியச்
செற்று மதிக்கலை சிதையத் திருவிரலாற் றேய்வித்து
(தேவாரம். சுந். 16. 9)

இறைவனைப் புகழுதல் என்ற பயன்பாட்டில் இது அமைகிறது. புராண-கதை எடுத்துக்காட்டு எனவும் இதனை அமைக்கலாம்.

திருமந்திரம், ஊனப் பிறவிகள் அமையும் காரணம் பற்றி உடலியல் ரீதியாக விளக்குவது பிற இலக்கியக் களனில் தென் படாத தனித்தன்மையுடையது (480-481). பொதுக் கருத்தாக இது அமைகிறது. மருத்துவ நோக்குடையதாகவும் கருதலாம். உருவக நிலையாகவும், மரபுத் தொடராகவும் ஊனம் ஆளப்படுதலும் இந்நூற் பண்பாகும்.

இலக்கியத்திலுள்ள ஊன வருகை போன்றே இலக்கணம், உரை, நிகண்டு, அகராதி ஆகியவற்றிலும் உள்ள ஊன வருகை பற்றிக் கருதிப் பார்க்கவும் கண்டு கணிக்கவும் முடியும். தொல் காப்பியமே, யாப்பு நோக்கில் கூன், குறள் பற்றிச் செய்யுளியலில் கூறுவது ஒருபால் அமையும். நன்னூல் பாயிரம் 'முடத்தெங்கு' பற்றி மொழிவது மற்றொரு வகையாம். இத்தகு பார்வை, ஊனம் சிலவேளை பழிக்கப்படுவதையும், ஏற்கப்படுவதையும் தரும்.

உரையாசிரியர், வாய்ப்பு ஏற்படும்போது ஊனம் பற்றிப் பேசுவது, விளக்கமாக அமைவதுடன் சமுதாய நோக்கம் புலப்படுத்தியும் அமைகின்றது. இளம்பூரணர், 3-ஆம் வேற்றுமை யுருபாகிய 'ஆல்' என்பதன் பயன்பாட்டை விளக்குமிடத்து (சொல். 73), 'கண்ணால் கொத்தை, காலால் முடம்' எனத் தருவார். சொல் வழக்கும் இதில் விளங்கும். இறையனார் களவியல் உரை,

> **இவ்வூர் உப்பூரிகுடிக் கிழார் மகனாவான் உத்திரசன்மன் என்பான் பைங்கண்ணன் புன்மயிரான் ஐயாட்டைப் பிராயத்தான் ஒரு மூங்கைப் பிள்ளை உளன் (ப. 8)**

என மக்கட் தொகுப்பில், ஊன வகையை இனங்காட்டப் பயன் கொள்ளும். மேலும், 'மற்று உலகத்துக் களவாயினவெல்லாம் கை குறைப்பவும் கண் சூலவும் கழுவேற்றவும் பட்டு......' (ப.25) எனத் தண்டனைப் பாங்கைச் சுட்டும். அன்றியும், அகத்திணையின் பிரிதல் பற்றிய தொல் எண்ணங்களின் தொடர்ச்சியுடன், புதுச் சிந்தனையாக,

> **நாட்டகத்து நின்றும் நகரத்துத் தமக்கு உற்றது உரைக்கலாத மூத்தார்களும் பெண்டிர்களும் இருக்கை முடவரும் கூனரும் குருடரும் பிணியுடையாரும் என இத்தொடக்கத்தார் தம்முறைக் கருமங்**

> கேட்டுத் திருத்துதற் பொருட்டாகவும்......
> பிரியும் (ப. 159)

என சமூக நோய் நீக்கும் முயற்சியையும் தரும்.

நிகண்டுகளுக்குச் சொற்றொகுதியும், சொற் பொருளும் தருவதே நோக்கமாகும். ஊனம் தொடர்பானதையும் இந்நிலையில் தருதற்கு வாய்ப்பு எதிர்பார்க்கலாம். சமுதாயக் குறைபாடும், சிக்கலும், சிதைவும் பாதிப்பு ஏற்படுத்தியது காரணமாகவே இவற்றையும் தம் தொகுப்பில் உட்படுத்தியிருக்க வேண்டும். எண் பேரெச்சப்பட்டியல் (திவாகரம், ப. 195), பேடியிலக்கணம் (திவாகரம், ப. 310) என்பனவும் இவற்றில் உண்டு. சூடாமணி நிகண்டு, மத்திம தானம் பற்றிய விளக்கத்தில்,

> அங்கங் குறைவுடையோர்க்கும் பெண்களுக்கும்
> செவிடர்க்கும் வறியவர்களுக்கும் கொடுத்தல் (ப.6)

என விளக்குவதில் ஊனரின் சமூக நிலை புலப்படுவது தெரிகிறது.

சொற்பொருள் விளக்க நோக்கின் அகராதிகள் இலக்கியப்பாங்கின் சொற்கள் மட்டுமன்றி, வழக்கிலமையும் பயன்பாடுகளையும் தருவதால், ஊனச் சொற்கள் தொடர்பான புதிய பரிமாணங்கள் கிடைக்கின்றன. பிற மொழிச் சார்பின் சொற்களும்; அருகிய பயன்பாட்டினவும், சிதைந்த சொல் நிலையினவும் கூடக் கிடைக்க வாய்ப்பேற்படுகிறது. சான்றாக, பால் மருள் பற்றி வரும் அழிதூஉ, இடபி, இப்பந்தி, தூவரன், நாமர்தா போன்று தமிழ் லெக்சிகன் தருவனவற்றைக் காட்டலாம்.

ஏட்டிலக்கியங்களும், அச்சுப் பதிவுகளும் மட்டுமன்றி நாட்டார் இலக்கியமும் இவர் பற்றி அறிய உதவும். கீழ்க்கணக்கின் பழமொழி நானூறு போல, வழக்கில் அமையும் பழமொழிகள் சில இதற்குக் களன் வழங்கும். நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு என்பது சான்று. மேலும், தொல்காப்பியம் முதலே உணர்த்தப்படும் விடுகதை-பிசி-யிலும் ஊனச் சுட்டிற்குக் களன் அமைகின்றது. 'அக்காள் சப்பாணி, தங்கை நர்த்தனப் பெண்' என்பது ஒரு சான்று. பெரியவர்-மூத்தோர் மட்டுமன்றிச் சிறுவயதினரும் இவ்விடுகதைகளைக் கையாள்வதால் இளவயது சமூகத்திலும் ஊனர் பற்றிய எண்ணப்புலப்பாடுகளை இதில் பெற முயலலாம். மேலும் சிறுவர் தம் விளையாட்டுகளிலும், விளையாட்டுப் பாடல்களிலும் கூட ஊனர் பற்றிய தரவுகளை அறிந்தோ \அறியாமலோ வழங்குகின்றனர். இது இன்று நேற்று வழங்கியதல்ல. காலங்காலமாகக் களனாயமைந்தது என்பதை நீலகேசி வழி அறியலாம்.

ஓலகுளவி குருட்டெண்ணெய் வாணிச்சி
கோலஞ் சிதையுமென் றெண்ணெயட்டா ளென்னும்
பாலகர் பாட்டுரை போன்றது மற்றுநின்
நூலுரை யெல்லா நுழைந்துணர் வார்க்கே (635)

என்பது நீலகேசி தரும் பாடல். கண்ணாம் பொத்தி, நொண்டி விளையாட்டு எனப் போலச்செய்யும் விளையாட்டுகள், சமுதாயத்தில் ஆழங்கால்பட்ட பிரச்சினையாக ஊனம் என்பதை உணர அடிப்படையாகும். பேச்சு வழக்கின் மரபுத் தொடர்களும், நொண்டிச் சாக்கு, குருட்டாட்டம் என்பது போல ஊனந் தொடர்பாக அமைவதற்கு இது காரணமாகின்றது. அண்மை நூற்றாண்டிலக்கியமும் உவமையாக, உருவகமாக இவரைப் பயன் கொள்கின்றது.

ககனப்பூ வந்திமகன் கொய்தானாம் – அதைக்
கண்டு குருடன் அம்பால் எய்தானாம்
செகமிசை ஊமையனும் வைதானாம் – அதைச்
செவிடன் கேட்டு நகை செய்தானாம்
(வேதநாயகம் பிள்ளை)

என இல்பொருள் உணர்த்த, உள்ள பொருண்மையான ஊனம் கையாளப்படுகிறது.

ஊனப் பாத்திரங்கள்

இலக்கியங்கள், பொதுச் செய்தியாகவும் உவமை முதலிய வெளியீட்டுக் கூறிலும் ஊனம்/ஊனர் தொடர்பான கருத்துகளை உரைப்பதுடன், பாத்திரங்களாக, கதை மாந்தராகவும் அவரைக் காட்டுகின்றன. முதற் கதையிலும், துணைக் கதையிலும் இவர் வரலாம்; முதன்மைப் பாத்திரமாகவோ துணைமைப் பாத்திர மாகவோ அல்லது பின்புலப் பாத்திரமாகவோ தரப்படலாம். ஊனப் பிறவியராகவோ, ஊனம் செய்யப்பட்டவராகவோ வரலாம். இவர் செயற்பாடுடையவராகவோ, செயற்பாடில்லாதவராகவோ அமையலாம். பெயர் சுட்டப்பட்டோ, சுட்டப்படாதோ காணப்படலாம். பொதுமக்களாக, குழுவாக, கூட்டமாக அமையும் தொகுதி நிலையோ,அன்றித் தனி நிலையோ கொள்ளலாம். ஓரச்சில் வார்த்த அமைப்போ (Stereo-type), தனிப்பாங்கோ இருக்கலாம். குறிப்புணர்த்தவும், நகைச்சுவைக்காகவும், நாடகப் பாங்கு கொள்ளவும் இவரையமைத்து, வாசகர் - பார்வையாளருக்குப் பாத்திர வகைமை காட்டியும் அமைக்கலாம். உளப்பாங்கின் குறை பாட்டை, உடலின் குறைபாடு வழியாகப் புலப்படுத்தல் அமையலாமெனினும் தீமைக் குறியீட்டுச் சார்பின்றியும் ஊனப்பாத்திரம் அமைதல் கூடும். சமூகத்தில் இவர் அமைந்தார் என்பதாலேயே, இயல்பாக, இவர் ஆளுமை புலப்படுத்திப் பாத்திரப் பாங்கில் பொருத்தி அமைக்கப்பட்டிருக்கலாம் எனவும் அமைதி கூறலாம். ஊம், செவிடு என்பன அன்றி, கூன், குறள், பேடு என்பன பெரும்பாலும், குருடு அருகியும் பாத்திரப் பாங்கில் பொருந்து வதாகத் தெரிகிறது. தோற்றத்தாலேயே குறைபாடு வெளிப்படுதல் என்பது இந்தத் தேர்ச்சிக்குக் காரணமாகலாம். அரங்கப் பாத்திரங்கள் என்ற நிலையில் இது பொருந்தக்கூடும்.

காப்பியக் களனில் ஊனப் பாத்திர நிலை காணுதல் வாய்ப்புடைத்தெனினும் பிறவிடத்தும் அருகி உண்டு. கலித்தொகை காட்டும் கூன் குறள், அவரின் காதல் உரையாடல், பாத்திரப் பண்பும் செயலும் விளக்குவதாகும். பாத்திரநிலை பெறினும் இவர் கதைமாந்தராக உருவாகவில்லை. தனிப்பாடலின் கூற்றுக்குரிய பாத்திரமாக நின்றுவிடுகின்றனர்.

சிலப்பதிகாரம் முதல் பெரியபுராணம் வரையிலான காப்பியக் களனைக் காணும்போது துணைமைப் பாத்திர ஊனம், முற்பகுதியின் நூல்களிலும், முதன்மைக் கதை மாந்தரில் ஊனம் பிற்பகுதியின் படைப்புகளிலும் அமைவது தெரிகிறது. மேலும் முதன்மையில், ஆண்பாத்திரமும் துணைமையில் பெண் பாத்திரமும் மிகுதியிடம் கொள்வதும் அறிய முடிகிறது. அன்றியும் தோழி - கூனி என இணைத்துக்காணுமளவிற்குப் பரவலான பயிற்சிக் களனைக் கருதிக்கொள்ளமுடிகிறது. பிறப்பூனமே பின்புற்ற ஊனத்தினும் மிகுதியாகப் பாத்திரத் தளத்தில் புலப் படுகின்றது.

அரச ஊழியத்தில் உழையராக ஊன மாந்தர் அமைவது சிலம்பில் தொடங்குகின்றது. இவர் பெயர்ச்சுட்டுப் பெறுவதில்லை. சோழனுக்கு இத்தகையோர் காட்டப்பெறாமல் பாண்டிமா தேவிக்கும் (20.17-18) சேரமா தேவிக்குமே (27.214, 28.58-60) அமைக்கப்படுகின்றனர். ஊன நீக்கும் இலஞ்சி மன்றம் (5.118-121). புகாரில் காட்டப்பட்டதே, இத்தகையோர் சோழ அரசில் உழையரா காமைக்குக் காரணம் போலும். எனினும் மாதவி மாலைக்கு விலைபேச, 'கூனி' யொருத்தியையே அடிகள் காட்டுவது சிந்தனை வேறுபாட்டைத் தருகிறது. இவளுக்கும் பெயரில்லை!

> **........... மாலை வாங்குநர் சாலும் நம் கொடிக்கு என**
> **மான் அமர் நோக்கி ஓர் கூனிகைக் கொடுத்து**
> **நகர நம்பியர் திரிதரு மறுகில்**
> **பகர்வனர் போல்வதோர் பான்மையின் நிறுத்த**
> **மாமலர் நெடுங்கண் மாதவி மாலை**
> **கோவலன் வாங்கி கூனி தன்னொடு**
> **மணமனை புக்கு ....** (3.166-172)

உதவிப் பாத்திரமாகக் கூனி அமைதல்; அரச மகளிர் போல ஆடல் மகளிரும் தம் உழையரில் ஊனமுற்றவரை அமைத்தல்; தட்டும் கிண்ணமும் ஏந்துபவராக மட்டுமன்றி, செயற்பாடுடையவராகவும் இவர் அமைதல் என்பன இங்கு வெளிப்படுகின்றன. இவள் இந்த ஒரு காட்சியில் மட்டும் வந்தாளேயன்றி வேறெங்கும் காட்சி மேடையில் தென்படவில்லை. நகரப் பொதுமக்களோடு தொடர்பு கொள்ள வாயிலாக, கருவியாக இவள் பயன்பட்ட நிலை இத்தகு பிற பாத்திரங்களில் அமைவது பிற காப்பியக் களனில் தெரிய வில்லை.

தம்மையே ஊனம் செய்த பாத்திரங்கள் எனச் சிலம்பில், 'இடமுலை கையால் திருகி... விட்டாள் எறிந்தாள் விளங்கு

இழையாள்' (21.43-46) எனக் கண்ணகியும், 'கை குறைத்த' (23.52-53) பொற்கைப் பாண்டியனும் அமைகின்றனர். இத்தன்னூன நிலையும் பிற காப்பியப் பாத்திரப்பாங்கிற்குரியதல்ல.

பேடியாடல், ஆரியப் பேடி என்பன சிலம்பிலும் மணி மேகலையிலும் பேடியைக் காட்சிப்படுத்தியபோதும் பாத்திர நிலை கொள்ளப்படவில்லை (சிலம்பு. 27.186, மணி. 3.125).

புரத்தற்குரிய பொது மக்கட் கூட்டத்தில் ஊனரை அமைத்தல் மணிமேகலைக் காப்பியப்பாங்காகும். மணி மேகலையும் ஆபுத்திரனும் உணவளித்தவருள் ஊனரும் அடங்குவர் (13.111-113, 28.222-223). இவர், பாத்திரம் எனத் தக்கோர் அல்லர். பின்புல மாந்தரே யாவர். துணைக் கதைகளில் ஊனப் பாத்திரம் சில வருகின்றன. பாரதக் கதையின் அருச்சுனன், 'விசயனாம் பேடி' (3.140) எனச் சுட்டப்படுகின்றான். சார்ங்கலன் கதையில், 'பார்ப்பான் தன்னொடு கண் இழந்து இருந்த இத் தீத்தொழிலாட்டியேன்' (6.132-133) எனவும், 'என் கண் இல் கணவன்' (6.155) எனவும் அவன் தாய் தந்தையர் விழியற்றவராகக் காட்டப்படுகின்றனர்.

பெருங்கதை, பிற காப்பியங்களை விட ஊனப் பாத்திரப் பாங்கிற்கு இடம் மிக அளித்துள்ளது. தோழியர் பாத்திரங்களின் ஊனநிலை இதில் குறிப்பிடற்குரியது. அரசத் தலைவியர் இவரைத் தமக்கு உதவியாகக் கொண்டதும் இவர் செயற்பாடுடையவராக அமைவதும், நன்மை வயப்பட்டவராகக் காணப்படுவதும் சுட்டத்தக்கது. திறமையுடைய இன்றியமையாப் பாத்திரமான இத்தோழியரை ஊனராகக் காப்பிய ஆசிரியர் படைக்கும் தேவை என்ன, இதில் ஆசிரியரின் உளவியல் வெளிப்படுமாறு எங்ஙனம் என்பன சிந்தித்தற்குரியனவாம்.

அடியோர் வினைவலர் பற்றித் தொல்காப்பியம் கூறியதே தவிர அவர் ஊனராக அமைதல் சுட்டப்படவில்லை. கலித்தொகை அதற்கு வழிவகுத்தது. தோழி-செவிலிமகள் எனத் தொல்காப்பியம் வரையறுத்ததேயன்றி அவள் ஊனமுடையவளாக அமைதல் குறிக்கப்படவில்லை. காப்பிய காலம் இதற்கு இடமளித்தது. எனவே இவை மரபாயின. மாதிரி ஆய்விட்டன. ஆகவே காப்பிய ஆசிரியர் அவ்வாறே தொடர்ந்து கையாள வேண்டிய தேவை ஏற்பட்டு விடுகின்றது. உலகியலும், நாடகவியலும், பிற மொழி இலக்கிய இயலும் கூட இதற்கு வழியமைத்திருக்கலாம்.

போகக் கலப்பை பொறுத்த கூன் குறள் (1.38-177-178), நானச் செப்பு எடுத்த கூன் (1.40.29), குறிவயினின்ற குறள் (1.44. 37), குங்குமம்

கொண்ட கூனும் பாலிகை பற்றிய குறளும் (1.46.251-263) எனப் பெருங்கதை பன்முறை காட்டி, அரசுப் பரிவாரத்தில் இவர்க்குள்ள இடத்தை, நிலையைக் காட்டுகிறது. பின்புல உழையராக இவர் அமைய முன்புல மாந்தராகவும் அமைவனர் உளர். இவர் பெண்களாக அமைவதும் திறமையும் தேர்ச்சியும் உடையவராகக் காட்டப்படுவதும், ஊனம் திறமைக்குத் தடையல்ல என்ற கருத்தாக்கம் பற்றியாகலாம். ஆடவரில் இது ஏன் காட்டப்பட வில்லை என்பது தனிச் சிந்தனைக்கு உரியதாம்.

பதுமாபதியின் தோழி அயிராபதி எனும் கூனியும் வாசவதத்தையின் தோழி விச்சுவலேகையென்னும் குறளியும் பெருங்கதையில் குறிப்பிடத்தக்க ஊனக் கதைமாந்தராவர். காப்பியக் களனில், பெயர்ச்சுட்டியமைதல் ஊனருக்கு இவர்களிடம் தொடங்குகிறது. செவிலி மகள் தோழி எனும் மரபுப் பாங்கில் அயிராபதி பொருந்துகிறாள்.

செயிர் தீர் பதுமைதன் செவிலித் தாய் மகள்
அயிராபதி எனும் அம்பணைத் தோளி
மானேர் நோக்கிற் கூனி (பெரு. 4.12.76-78)

தோழியர் தலைவியர்க்கு வலக்கை அனையர் என்பதை வாசவதத்தையின் தோழியில் பொருத்தி, ஊனம் அதற்கும் தடையாகாமையை உணர்த்துகின்றார் ஆசிரியர்.

ஏசா நல்லெழில்
வாசவ தத்தைக்கு வலத்தோள் அனைய
அச்சமில் காரிகை விச்சுவலேகை என்று
உற்ற நாமப் பொற்றொடிக் குறளி (4.12.91-94)

அச்சமின்மை எனக் காட்டப்படும் பாத்திரப் பண்பும் இங்கு நினைத்தற்குரியது. பெண்டிர்க்குரியதாகத் தொல்காப்பியம் விதந்தோதிய அச்சம் இவட்கு இன்மை, இவளை வேறுபடுத்திக் காண உதவுகிறது.

பதுமாபதி, காமன் கோயில் செல்ல ஏறிய வையத்தை அயிராபதியே செலுத்துகிறாள் (3.5.97). பதுமாபதியைக் கண்டு விரும்பிய உதயணன், அவளைப் பற்றி அறிய, அயிராபதியையே வினவுகிறான் (3.6.156-200). பதுமாபதியும் அவனைக் குறித்தறிய அயிராபதியையே அணுகுகிறாள் (3.8.67-77). மேலும் தன் மன விருப்பத்தைக் குறிப்பாலுணர்த்த வாய்ப்பாக உதயணன் கையிலுள்ள பந்தினைக் கேட்டு அயிராபதியையே அனுப்புகிறாள் (3.8.78-89). இவ்வாறு அயிராபதி தோழியும் தூதும் ஆகிறாள். மகத

காண்டத்தில் இவளது இப்பாத்திரப் பங்கு போலவே, தொடரும் வத்தவ காண்டத்திலும் இவள் பந்தடிக் காட்சியில் தோன்றிப் பங்கு பெறுகிறாள். பந்தடி கண்டது எனும் காதை இதற்கு இடமளிக்கிறது (4.12). சிந்தாமணி போன்றன தலைவியின் பந்தடியையே தர, கூனும் குறளுமாகிய தோழியர் பந்தடி பெருங் கதையிலேயே அமைகிறது. மிகவிரிவாக அயிராபதியின் பந்தடியும் (4.12.76-91), விச்சுவலேகையின் பந்தடியும் (4.12.92-113) புனையப் பெறுகின்றன.

சிந்தாமணியில், அரசி விசயையின் தோழி சண்பக மாலை கூனியாக அமைகிறாள். காப்பியக் களனில் அவள் காட்டப் படாதபோதும், சுடுகாட்டில் சீவகன் பிறந்தபோது வந்துதவிய தெய்வம், அவளுருவில் வந்தது என்பதில் தகவல் அடங்கியுள்ளது.

> .... தான் அமர்ந்து உழையின் நீங்காச் சண்பக
> மாலை என்னும்
> கூனியது உருவம் கொண்டு ஓர் தெய்வதம்
> குறுகிற்றன்றே. (314)

தோழி கூனியுருவின் அத்தெய்வம், தொடர்ந்து அவட்கு உறுதுணையாக அமைகின்றது (314-357). குழந்தை சீவகனைக் கந்துக்கடன் எடுத்துச் செல்லவும், விசயையின் வழிப்போக்கில் துணையாகவும், ஆரணியப் பள்ளியை அடையவும் களமமைக் கின்றது. தெய்வதம் ஆகையால் பாத்திரப் பண்பன்றி, பாத்திரச் செயல் வெளிப்படுகிறது.

சிந்தாமணியின் காந்தருவதத்தையார் இலம்பகம், அத்தலைவியின் தோழியாக வீணாபதியெனும் பேடியைத் தருகிறது. அழகு நிறைந்தவளாகவும் இசைவல்லளாகவும் யாழ்ப் போட்டியை முன்னின்று நடத்துபவளாகவும் இவள் அமைகிறாள். அவள் பெயரும் இதற்குப் பொருந்துகிறது. இந்நிலை பிற ஊனப் பாத்திரங்களில் இல்லை.

> தளை அவிழ் கோதை பாடித் தான் அமைந்திருப்ப,
> தோழி
> விளை மதுக்கண்ணி வீணாபதி எனும் பேடி, 'வேல் கண்
> இளையவள் பாட, வீரர் எழால்வகை தொடங்கல்;
> அன்றேல்
> வளையவள் எழாலின் மைந்தர் பாடுக வல்லை'
> என்றாள் (651)

இவள் உருவ வருணனை பார்வையாளர் கூற்றில் அமைகிறது.

"வேயே திரள் மென்தோள்; வில்லே
கொடும்புருவம்;
வாயே வளர் பவளம்; மாந்தளிரே மா மேனி;
நோயே முலை சுமப்பது" என்றார்க்கு அருகு இருந்தார்
'ஏ யே இவள் ஒருத்தி பேடியோ' என்றார்
'எரி மணிப் பூண் மேகலையாள் பேடியோ' என்றார்
(652)

இவள் கண்களே, உயிருண்ணும் கூற்றாக அமைந்து விட்டதால், பிரமன் முலை கரந்து வைத்தார் என இவளே பதிலளிக்கிறாள் (653). சீவகனுக்கு யாழ்களைத் தருதல் போன்றவற்றை வீணாபதியே செய்கிறாள் (715, 716). கனகமாலையார் இலம்பகம், இனிய கூரிய சொற்களுடைய படுவியை (= பணி செய்யும் குறியவள்), குறளியைத் தரும் (1653). சீவகன் செய்த மாலையும் பந்தும் கனகமாலைக்குப் பொருந்தின எனத் தன் கண்ணே வாயாக, இமைப்பே சொல்லாகக் குறிப்புணர்த்தி அதனைப் பெற்றுச் சென்று தன் தலைவிக்குக் கொண்டு கொடுக்கிறாள் (1654). குறிப்பறிந்து கொடுத்துத் தூதியாக அமைகிறாள்.

மகளிரே ஊனப்பாத்திரநிலை கொள்ளும் இப்பாங்கு, உழையர் - தோழி என்பதிலமைதல், சூளாமணியில் மாற்றம் பெறுகிறது. காப்பியத் தலைவரான திவிட்டன், விசயனுக்கமையும் தோழனும் விதூடகனுமாக வரும் அந்தணன் குஞ்சித்த வடிவினனாக (1566) அமைகிறான். தன்னையே பூதமாகக் கருதும் உருவினனாகக் காட்டப்படுகிறான் (1547). 'காதொடு கண் பிறழ்ந்துளது, கைகுறிது; ஊதிய வயிற்றது' என உருவ வருணனை அமைகிறது (1598). 'பேதைமை கலந்து பிறழ் கண்ணினொடு ஒடுங்கும் மாதவன்' (1615) எனவும் சுட்டப்படுவதால் வேடிக்கையான உருவமும், அறிவுக்குறைவும் குறிப்பிடப்படுவது தெரிகிறது. நகைச் சுவைப் பாத்திரநிலைக்கு உடற்குறை இடந் தருவது இங்கமைகிறது. நாடக விதூடகன் பாத்திர நிலை காப்பியத்தில் இணைவதாகவும் இது அமைகிறது.

கம்பராமாயணத்தில், முதல், துணைக் கதைகளில் ஊனப் பாத்திரப் பாங்கு உண்டு. மந்தரை எனும் கூனி, கைகேயியின் தோழியாக அமைந்ததும், அவளால் காப்பியக் கதையோட்டம் திருப்பம் கொள்வதும் குறிப்பிடற்குரியது. மந்தரை சூழ்ச்சி, கூனியின் சொல் திறனையும் செயல் திறனையும் தெளிவு படுத்துகிறது. கொடுமனக் கூனி (1445), உள்ளமும் கோடிய கொடியள் (1487) என மனக்கோட்டம் அமைவது முந்தைய

காப்பிய ஊனப் பாத்திரங்களில் காட்டப்படாதது; வேறுபாடாகும். எதிர் மாந்தராய் அமையும் நிலையும் இவ்வாறே (1399-1490).

தசரதன், முன்பு நடத்திய மகவருள் ஆகுதிக்கு வந்த முனிவர் கலைமாமுகச் சிருங்கர் (211-215), எச்ச வகையுள் 'மா' அமைப்பினராவர். இப்பாங்கும் பிற நூல்களில் பாத்திரப்பாங்கு பெறவில்லை.

தசரதனின் வாழ்வில், தவறுதலாகக் கொன்றுவிட்ட முனிகுமாரன் பற்றிய கதையிலும் ஊனக்குறிப்பு உண்டு. சலபோசனன் கதை 'இரு கண்களும் இன்றிய தாய் தந்தையரை'த் தருவது (1682) மணிமேகலையின் சார்ங்கலன் கதையிலும் ஒத்துக் காணப்பட்ட பாத்திர நிலையாகும். இதில் இணைமை புலப் படுகிறது.

தண்டனையாக உறுப்பறை செய்தல், சூர்ப்பணகை அயோமுகி ஆகியோர் ஊனஞ் செய்யப்படுவதில் பொருந்துகின்றது. சிலம்பில் தன்னூனமமைய இங்குப் பிறரை ஊனஞ்செய்தல் வருகிறது. கும்பகருணன் போன்றோரும் ஊனஞ் செய்யப் பெற்ற பாத்திரமாக போர்ச் சூழலில் அமைகின்றனர்.

பாரத வெண்பா, தலைமை மாந்தரில் ஊனம் காட்டுவது பாத்திர ஊனத்தில் முன் காணப்படாத வகைப்பாடாகும். திருதராட்டிரன் கண் பார்வையில்லாதவனாக அமைகின்றான் (215, 670). பேடி எனச் சிகண்டி குறிக்கப்படல் (670) என்பது போல் பிறவும் உண்டு.

பெரியபுராணம் பல நாயன்மாரின் கதைத் தொகுதி ஆகையால் பல பாத்திரத்தில் ஊனம் காட்டுகிறது. ஊனப் பிறவி, ஊனம் செய்தல், தற்காலிக ஊனம், ஊன நீக்கம் எனப் பல அமைகின்றன. தலைமை மாந்தரிலும் முதன்மை மாந்தரிலும் அமைவதால், முந்தைய காப்பிய ஊனப் பாத்திரப் பாங்கிலிருந்து வேறுபட்டுச் செல்கிறது. பாத்திரத் தீமையன்றி பண்புயர்வு, பக்திப்பற்று, இறையருள், மீவியற்கையின் அற்புதம் என்ற உணர்வுடனேயே அமைவதாக் கூறலாம். காப்பியமாகுமுன் தேவாரத்தின் திருத்தொண்டத் தொகையிலும், நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியிலும் ஏற்கெனவே பதிவு பெற்ற நிலையும், பிற ஊனப் பாத்திரங்களை நோக்க இவரைத் தனித் தன்மையுடையவராகக் காட்டுகிறது.

தண்டியடிகள் பிறவிக்குருடராக அமைந்து பின்பு கண்பார்வை பெறுகிறார். கூன்பாண்டியன் கூன் நிமிரப்

பெறுகிறான். கண்ணப்பர், தன்னூனம் செய்து கண் இடந்து அப்புகிறார். சண்டேசுரர் தந்தையின் கால்களைத் தறிக்கிறார்; கலிக்கம்பர் மனைவியின் கையைத் தறிக்கிறார்; அரசியின் கைதடிந்து மூக்கரிந்தமை, கழற் சிங்கர், செருத்துணையார் செயலாக வெளிப்படுகின்றது; சங்கிலியார் காரணமாக சுந்தரருக்குத் தற்காலிகமாகக் கண்பார்வை கெட்டு, பின்பு, முதலில் இடக் கண்ணும் பின்பு மற்றைக் கண்ணும் பார்வை பெறுகின்றன. இவையனைத்தும் தண்டனையாக ஊனம் செய்யப்படுதலை உணர்த்தும். சண்டேசர், கலிக்கம்பர், கழற்சிங்கர், செருத் துணையார் ஆகியோர் பக்தி மேம்பாடு காரணமாக, தமக்கு நெருக்கமானவரையே, செய்தது சிறு பிழையாயினும், ஊனமுறத் தண்டித்தனர். இறைவனால் ஊனம் ஏற்பட்டது சுந்தரரில் அமைந்ததுடன், தண்டியடிகளை ஒறுத்த சமணருக்கும் பார்வை இழப்பு என்ற பாங்கில் ஆகின்றது. நாவுக்கரசருக்கு முதுமை காரணமாக உறுப்புகள் தேய்ந்து உடல் குறையுறுகின்றது.

இவ்வாறு காப்பியக்களன் பலவகையில் ஊனமுற்றவரைப் பாத்திரமாகக் கொள்கின்றது.

அறநூல்களில் ஊனர்/ம்

பதினெண் கீழ்க்கணக்கில் பெரும்பான்மையாக அமையும் அறநூல்கள், அதன் பிற அக, புற நூல்களை விட ஊனர் பற்றிய மிகுதியான குறிப்புகளை வழங்குகின்றன. அக நூல்களிலும், ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, கைந்நிலை ஆகியன ஊனக் குறிப்பெதுவும் வழங்கவில்லை. பிற அக-புற நூல்களிலும் அருகி வரும் இரண்டு முதல் ஆறு வரையான குறிப்புகள் சொற்சுட்டு தருமளவிற்குக் கருத்து விளக்கத்திற்கு இடமளித்தில. அறநூல்களுள்ளும் ஆசாரக் கோவை, முதுமொழிக் காஞ்சி என்பனவும் ஓரிரு சொற்சுட்டுடன் அமைந்துவிடுவனவாகும்.

சங்க அகப்பாடல்களிலும் புறப்பாடல்களிலும் பெரும் பாலும் உவமை நிலையிலும், பட்டியலாகவும், பாத்திரநிலை காட்டியும், அஃறிணையாட்சியிலும் வந்த ஊனத் தரவுகள், இங்கு அறநூல் களத்தில் சிறிது வேறுபடக் கையாளப்படுகின்றன. அறம் உணர்த்தவும் கருத்து விளக்கத்திற்காகவும், நேர்நிலையிலும் எதிர்நிலையிலும் ஊனச் செய்தி கையாளப்பெற்று, ஊனர்/ம் பற்றி, ஒரு குறிப்பிட்ட இலக்கிய காலப்பகுதியின் சமூக எண்ணத்தைப் புலப்படுத்துகின்றன. எண்வகை ஊனம் பற்றிய தொகைக் கருத்து அங்குப் புறநானூற்றிலமைந்தமை இங்குக் காணப்படாது, ஓரிடத்து மூன்று ஊனம் வரை ஒருங்கு வைத்து எண்ணப்படல் அமைகிறது. ஊனம் பழிப்புக்கும் இழிப்புக்கும் உட்படுதல், குறியீட்டுப் பொருள் நிலையில் ஆளப்படுதல், பழவினை நம்பிக்கை சார்பில் அணுகப்படுதல் என்பன இங்கு உள. மூப்பு - பிணி நிலையிலும் தண்டனைச் சார்பிலும் ஊனம் பார்க்கப்படல் இரண்டு தளங்களிலும் உண்டு. ஊனரைப் புரத்தலை நல்வினையாக, தொடரும் வாழ்க்கைக்கு (அடுத்த பிறவிக்கு?) ஏற்றம் தருவதாகக் கணித்தலும் காட்டுதலும் அறநூலின் தனித் தன்மையாகும். அன்றியும், பிற நூல்களை விட ஏலாதி, நாலடியார், பழமொழி, சிறுபஞ்சமூலம் என்பனவே இத்தகு சிந்தனைகட்கு மிகுகளன் அமைப்பது காணப்படுவதும் தனித்துச் சிந்தித்தற்குரியது. குருடு, முடம் போன்ற நேர்ச் சொல்லாட்சிகள் பழந்தமிழில் காணப்படுவது இங்குத் தொடர்ந்த போதும், நேரடியாகவன்றிக் 'கண் இல்லார்', 'நோக்கற்றவர்' என்பது போல் கருத்தைப் புலப்படத்

தரும் சொல்லாட்சி முறை இக்காலத்திற்குரிய புதிய சேர்க்கையாகத் தோன்றுகிறது. மேலும், அலி, பேடி போன்றன ஓரிரு குறிப்புடன்/ அருகி, தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியனவற்றில் வரல் இங்கும் தொடர்வதும், அங்குப் பண்பு விளக்கமாக வரும் மடம், பேதைமை எனபன இங்கு அறிவுக் குறைபாடாகத் தென்படுவதும் காணப்படுகின்றன.

வாழ்க்கை இப்படி அமைகின்றது எனக் காட்டும் முந்தைய நிலை, வாழ்க்கை இவ்வாறு அமைய வேண்டும் என நெறிப் படுத்தும் பாங்கில் அற நூல்களில் பொருந்துவதால், சமூக உறுப்பினராக அமையும் பல்வகை மக்கட் பகுதியினர், படி நிலையினர், தகுதியினர்க்கு ஆவனவற்றை உரைக்கும் இவ் அற நூல்கள், பாதிக்கப்பட்டோரான ஊனரைப் பற்றி ஓரளவேனும் அதிகமாகச் சிந்திக்கலாம் என்ற எதிர்பார்ப்பு இவ்வணுகு முறையைத் தேவையாக்குகிறது. பழமொழி,

> **தோற்றம் அரிதாய மக்கட் பிறப்பினால்**
> **ஆற்றும் துணையும் அறம் செய்க – மாற்றின்றி**
> **அஞ்சும் பிணி மூப்பு அருங்கூற்றுடன் இயைந்து**
> **துஞ்ச வருமே துயக்கு** *(365)*

என, வாழ்க்கை இறுமுன் அறம் செய்யத் தூண்டுவது இங்கு நினைத்தற்குரியது.

ஊனருக்கு உதவுதல்

சமூகநலம் (social welfare), சமூக சேவை (social work) என்ற நிலையில் ஊனருக்கு உதவுதல் என்ற இன்றைய பாங்கினோடு ஓரளவு ஒப்பிடும் வண்ணம் அறநூல்கள் ஊனருக்கும் உதவுதலை அறிவுறுத்துகின்றன. கொடை நிலையாகவும், பயனுடை வாழ்வாகவும் இது புலப்படுகின்றது.

> **புண்பட்டார் போற்றுவார் இல்லாதார் போகு உயிரார்**
> **கண்கொட்டார் கால்இரண்டும் இல்லாதார், கண்**
> **கண்பட்டு**
> **ஆழ்ந்து நெகிழ்ந்து அவர்க்கு ஈத்தார் – கடைபோக**
> **வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து** *(சிறுபஞ்சமூலம். 76)*

என்ற சிறுபஞ்சமூலப் பாடலில் கண்கெட்டாரும் கால் இரண்டும் இல்லாதாருமாகிய ஊனர், சமுதாயத்தில் தேவையிலிருக்கும் பிறரான நோயுற்றவர், புரப்பாரில்லாதவர் (destitutes), இறக்குந் தறுவாயிலிருப்போர் ஆகியோருடன் உடன் வைத்துத் தரப்

படுகின்றனர். இதையொத்த அணுகுமுறையும் கருத்தும் ஏலாதி யிலும் உண்டு.

> தாய் இழந்த பிள்ளை தலை இழந்த பெண்டாட்டி
> வாய் இழந்த வாழ்வினார் வாணிகம் போய் இழந்தார்
> கைத்து ஊண் பொருள் இழந்தார் கண்ணிலவர்க்கு ஈய்ந்தார்
> வைத்து வழங்கி வாழ்வார் (ஏலாதி, 78)

ஈத்தார் எனவும் ஈய்ந்தார் எனவும் இவற்றில் கொடை பொதுவாகச் சுட்டப்பட, 'உண்டி கொடுத்தல்' என வெளிப்படமொழிதலும் ஏலாதியில் உண்டு. அன்றியும், அவற்றில், ஊனருக்கும் பிறருக்கும் ஊண் கொடுக்கும் இவர் தேவரால் விரும்பப்பெறும் மறுமைப் பயன் பெறுவர் என்பதும் விதந்தோதப்படுகிறது.

> கால் இல்லார் கண் இல்லார் நா இல்லார் யாரையும்
> பால் இல்லார் பற்றிய நூல் இல்லார், சாலவும்
> ஆழப்படும் ஊண் அமைத்தார் இமையவரால்
> வீழப்படுவார் விரைந்து (ஏலாதி, 36)

தேவர் விரும்பும் மறுமை இங்கமைவது காணப்பட, வேறு இரண்டு பாடல்களில், மறுபிறவியில் படைபலம் உடையவராகவும், அரசராகவும் கூட, இத்தகு ஊனருக்கும் பிறருக்கும் உணவளித்தோர் ஆக முடியும் என்ற நம்பிக்கை வயப்பட்ட சிந்தனை காணப் படுகிறது.

> இல்இழந்தார் கண்இழந்தார் ஈண்டிய செல்வம் இழந்தார்
> நெல் இழந்தார் ஆன்நிரை தான் இழந்தார்க்கு, எல் உழந்து
> பண்ணி ஊண்ஈய்ந்தவர் - பல்யானை மன்னராய்
> எண்ணி ஊண் ஆர்வார் இயைந்து (ஏலாதி, 52)

> புலையாளர் புண்பட்டார் கண்கெட்டார் போக்குஇல்
> நிலையாளர் நீர்மை இழந்தார் தலையாளர்க்கு
> ஊண்கொடுத்து ஊற்றாய் உதவினார்-மன்னராய்க்
> காண்கொடுத்து வாழ்வார் கலந்து (ஏலாதி, 80)

இவை மன்னராகுதலைத் தரும்.

> கடம்பட்டார் காப்பு இலார் கைத்து இல்லார் தம்கால்
> முடம்பட்டார் மூத்தார் மூப்பு இல்லார்க்கு உடம்பட்டு

உடையராய் இல்லுள் ஊண்ஈத்து உண்பார் –
மண்மேல்
படையராய் வாழ்வார் பயின்று (ஏலாதி, 53)

எனப் படைபலம் பெறுவதைத் தரும். அடுத்த பிறவியில் இப் பேறுகள் அமையும் எனும் கருத்து வெளிப்படப் புலனாகின்றிலது என்ற கருத்தமையின், தேவரால் விரும்பப்பெற்றவர் போன்ற-மன்னர் போன்ற-படை பலத்தினர் போன்ற மகிழ்ச்சியுறுவர் எனக் கூறப்படுவதாகவும் கருதலாம்.

சிறுபஞ்சமூலம் இயற்றிய காரியாசானும், ஏலாதி படைத்த கணிமேதாவியாரும் சமணர் என்பதால், ஊனருக்கும் உதவி தேவைப்படும் பிற பலவகை மக்கட்கும் ஈத்தலும் ஊண் அளித்தலும் சமய அறநோக்கிலும் காணத்தக்கதாகும்.

சமூக நோய்கள் பலவற்றுள் ஊனத்தையும் ஒன்றாகக் கருதி ஆய்தல் சமூக நோயியல் துறையில் (social pathology) காணப்படு கின்றது. சிறுபஞ்சமூலமும் 'நோய்' என ஊனத்தைக் குறிப்பிட்டு, அத்தகையோர்க்கு உதவும் மக்கள் தாம் நோயின்றி வாழ்வர் எனக் கூறுவதும் இங்கு இணைத்துச் சுட்டத்தக்கது:

சிக்கர் சிதடர் சிதலை போல்வாய் உடையார்
துக்கர் துருநாமர் தூக்குங்கால், தொக்கு
வருநோய்கள் முன்நாளில் தீர்த்தாரே – இந்நாள்
ஒருநோயும் இன்றி வாழ்வார் (சிறுபஞ்சமூலம், 74)

முன்நாள் - இந்நாள் என்பதால், பிறப்பில் தொடரும் 'புண்ணிய நிலை' யாகவும் இது கருதத்தக்கது. மணிமேகலை போன்ற பிற்கால நூல்களில் ஊனர் புரக்கப்படலமைந்து கருத்துத் தொடர்ச்சி காட்டுகின்றது.

ஊன நீக்கம்

ஊனம் நீக்கப்படுதல் பற்றிய சிந்தனை மீவியற்கை, சமயம் சார்ந்த நோக்கில் அமைவது இங்கு அறநூல்களில் காணப்பட வாய்ப்பில்லை. எனினும் அறிவூனமான மடம், பித்து என்பன நீங்கும் வழிமுறைகள் பற்றிய அருகிய சிந்தனை உளது. மடமை கல்வியால் அகலும் என்பது நான்மணிக்கடிகை.

கற்ப கழிமடம் அஃகும் மடம் அஃக
புற்கம் தீர்ந்து இவ்உலகில் கோள் உணரும் (நான். 27)

மருந்தினால் பித்து அகலும் என்பது, மறுதலையாக,

.... மருந்தின் தணியாத
பித்தன் என்று எள்ளப்படும் (நாலடி 340)

எனும் நாலடியில் புலப்படும்.

ஊன(ப்பிறப்பு)க் காரணம்

ஊனம் வினைவயப்பட்டதாகக் கருதும் நம்பிக்கை சார்ந்த பாங்கு ஓரிரு குறிப்புகளில் புலப்படுகின்றது. நாலடியாரில் மட்டும் இந்நிலை காணப்படுவது சுட்டற்குரியது. ஊனம் செய்வதால் மறுபிறவியில் ஊனம் அமையும் எனவும், பிறன்மனை நயந்தவர் மறுபிறவியில் ஊனமுடையவராவர் (அலியாவர்) எனவும் இருபாங்குகள் இதன்கண் உள.

கையும் விரலும் ஊனமுறும் தொழுநோயினரை, முற்பிறவியில் அலவன் (நண்டு) கால் முறித்துத் தின்றவராகக் கருதுகிறது நாலடி.

அக்கே போல் அங்கை ஒழிய விரல் அழுகி
துக்கத் தொழுநோய் எழுபவே – அக்கால்
அலவனைக் காதலித்துக் கால்முரித்துத் தின்ற
பழவினை வந்து அடைந்தக்கால் (123)

புலால் மறுத்தல் என்ற நிலையிலன்றி, தீவினையச்சம் என்ற அணுகுமுறையில் இது காணப்படுகிறது.

செம்மை ஒன்று இன்றி சிறியார் இனத்தர் ஆய்
கொம்மை வரி முலையாள் தோள்மரீஇ உம்மை
வலியால் பிறர் மனைமேல் சென்றாரே இம்மை
அலி ஆகி ஆடி உண்பார் (83)

இது பிறவியூனமாகலாம். பிறன்மனை நயவாமை பற்றிய அதிகாரம் இக்கருத்துச் சூழலாகும்.

நோய் காரணமாக ஊனம் அமைதல், மேலே சுட்டிய நாலடிப் பாடலில் விளங்கும். தொழுநோயினர் விரல் அழுகி, கை குறைந்து அமைவர் என்பது அது. மூப்பும் ஊனம் ஆக்கும் என்பது,

வேல் கண்ணள் என்றிவளை வெஃகன்மின் மற்றிவளும்
கோல் கண்ணள் ஆகும் குனிந்து (நாலடி 17)

சொல் தளந்து கோல் ஊன்றி சோர்ந்த நடையினராய்
பல் கழன்று . . . (நாலடி 13)

என்பனவற்றில் வெளிப்படும்.

ஊனக் குறியீடு

செறிவாகவும், சுருக்கமாகவும், குறிப்பாகவும் கருத்து விளக்கும்/தெளிவு வழங்கும் சூழலில் ஒரு பொருண்மைக்கு மாற்று அல்லது பிரதியாக ஒரு பொருள் - வண்ணம் - வடிவம் - அடையாளம் போன்றன பயன்படும் குறியீட்டாட்சி ஊனச் சார்பிலும் காணத்தக்கது. ஊனம் உடலளவில் அமைவது வெளிப்படப் புலப்பட, மனம் - அறிவு - எண்ணம் - பண்பு என்ற நிலைகளில் அமையும் குறைபாடுகளான அக ஊனங்கள், ஊனச் சொற் பயன்பாட்டில் விளக்கப்படல் உலக வழக்கும் புலனெறி வழக்குமாகத் தென்படுகின்றது.

இதில் இருபாங்குகள் உண்டு. ஒன்று, இழிவு அல்லது குறைவுக்கு ஊனம் சுட்டாதல்; மற்றொன்று ஊனத்தைப் பயன்கொண்டு உயர் கருத்து மொழிதல். இவற்றை, முறையே நேர்நிலை, எதிர்நிலை எனக் கூறலாம்.

நாலடி, 'கண் இல் புன் மாக்கள்' (44) என மெய்யறிவு இல்லாதவரைச் சுட்டும். குறள், 'கண்ணோட்டம் இல்லவர் கண் இலர்' (577) எனவும், பழமொழி 'கண்ணில் கயவர்' (109) எனவும் மற்றொரு கருத்துத் தரும். கண்ணோட்டம் இல்லாமையும் கல்லாமையும், கண் இன்மையாகவும் புண்ணாகவும் குறளால் கொள்ளப்படும் (392, 393, 573-575); கேள்வி இன்மை, 'செவியிற் சுவையுணராமை'யாக இதன்கண் புலப்படுத்தப்பெறும் (420).

புலனவிதல், பொறியடக்கம் என்ற பாங்கில், செவிடு - குருடு - ஊமை என்பன சில சூழலில் உருவக நிலையில் சிறப்பிக்கப் பெறுகின்றன. ஏலாதி,

> கொல்லான் கொலை புரியான் பொய்யான் பிறர்பொருள்மேல்
> செல்லான் சிறியார் இனம் சேரான், சொல்லும்
> மறையில் செவியிலன், தீச்சொற்கண் மூங்கை
> இறையில் பெரியாற்கு இவை (19)

எனவும், நாலடி,

> பிறர் மறையின்கட் செவிடராய், திறனறிந்
> தேதிலாரிற்கட் குருடனாய்த் தீய
> புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாதும்
> அறங் கூறவேண்டா அவற்கு (158)

எனவும் இதனைப் புலப்படுத்தும்.

முழுமையான குறியீட்டு உருவாக்கம் இவை சிலவற்றிலமையாத போதும், உவமை, உருவக, குறிப்புப் பார்வையில் வளர்ச்சிப்போக்குக் காணப்படுவதாகக் கருதலாம். உவமையாட்சி பலவற்றில் ஊனர் உயர்வாகக் கருதப்படாமை, பழிக்கப்படல் என்பன அமைதல் இவ்வெண்ணம் தரும். கூன்மேல் எழுந்த குரு (பழ. 283), ஆடுபணைப் பொய்க்காலே போன்று (பழ. 284), பாற்கூழை மூழை சுவையுணரா தாங்கு (நாலடி, 321) (?), பேடி கை ஒள்வாள் (குறள். 727), பேடி கை வாளாண்மை போல (குறள். 614) எனப் பல உவமை நிலையும் உருவகத் தன்மையும் காட்டி அமையும்.

மேலும், மேம்போக்காக அன்றி ஆழ்நிலையில் பார்க்கும் போது ஊனச் சுட்டு அமையும் வண்ணமும் அருகிய ஆட்சி அமைந்து காணப்படுகின்றது. 'குறிப்புணராதவர் கண்ணற்றவர், குருடர்' என்ற குறிப்புப் பொருள் தரும் வண்ணம் அமையும்,

> **குறிப்பிற் குறிப்புணராவாயின் உறுப்பினுள்**
> **என்ன பயத்தவோ கண்** (குறள். 705)

என்ற குறள் இதற்குச் சான்று.

ஊன வகை

ஊன வகையாக, உடல் ஊனம், அறிவூனம் ஆகிய இருநிலையும் புலப்படுகின்றன. உடலிலும் உறுப்பூனம், பால் ஊனம் ஆகிய இரு பாங்கும் தென்படுகின்றன. மேலும், பிறவியூனம் எனக் கருதத்தக்கனவும் ஊனம் செய்தல் அல்லது ஊனம் உறல் என்பதும், யதேச்சையாக - விபத்தாக ஊனம் வருதல் என்பதும் காணப்படுகின்றன.

ஊனமுறல் என்பதில் அஃறிணையும் உயர்திணையும் அமைவது உண்டு. அலவனைக் கால் முரித்து (நாலடி. 123) என்பது நாலடியில் அமைய, களவழி நாற்பதில், போர்க்காட்சியில் யானையின் கை துணிக்கப்படுவது வருவது ஒருவகை. கை நூற (13), கைகள் துணிக்க (14), தடக்கை - துணிப்ப (22), துணித்திட்டன கை (26) எனப் பன்முறை இது அமைகிறது. வீரர் போர்க்களத்தில் கையிழத்தலும் களவழியில் உண்டு - அற்ற தடக்கை (28).

தண்டனையாக, ஊனமுறச் செய்தல் எனும் பழைய நிலையின் தொடர்ச்சியில் ஊனஞ்செய்தல் இங்கும் அருகி வந்தது. கொடிறுடைக்கும் கூன்கையர் (குறள். 1077) என்பதில் இதன் சாயல் காணப்பட, பிறன்மனை நயந்தவன் கைப்பற்றப்படின் அவன் கால்

வெட்டப்படுதல் என நாலடி கூறுவதில், ஒரு காலத்தின் வழக்கம் தென்படுகிறது.

> **காணின் குடிப்பழியாம் கையுறின் கால்குறையும்** (84)

விபத்தாகவும் ஊனம் ஏற்படலாம் என்பதும் உண்மை. கற்றவன் வீழ்ந்தாலும் எழுவான்; கல்லாதவன் வீழ்ந்தால் எழ இயலாது அழிவான் என்ற கருத்தைக் கால் ஒடிவதாகத் தரும் நான்மணிக் கடிகைப்பாடலில் இச்செய்தி உள்ளீடாகப் பொருந்தும்.

> **கற்றான் தளரின் எழும்; கல்லாத**
> **பேதையான் வீழ்வானேல் கால் முரியும்** (நான். 72)

ஊனம் சுட்டும் முறை

கீழ்க்கணக்கில் ஊனம் எனும் சொல் வருகை பன்முறை அமைகிறது.

> **ஊனம் ஒன்று இன்றி உயர்ந்த பொருளுடைமை**
> **மானிடவர்க்கு எல்லாம் இனிது** (இனியவை. 13)

> **ஊனம் கொண்டாடார் உறுதி உடையவை**
> **கோள் முறையால் கோடல் இனிது** (இனியவை. 27)

> **ஊன வாய்ப் பாண . . .** (ஐந்திணை எழுபது. 45)

> **ஆர்வமே செற்றம் கதமே அறையுங்கால்**
> **ஓர்வமே செய்யும் உலோபமே சீர்சாலா**
> **மானமே மாய உயிர்க்கு ஊனம் என்னுமே**
> **ஊனமே தீர்ந்தவர் ஒத்து** (ஏலாதி. 61)

> **உரையான் குலன் குடிமை, ஊனம் பிறரை உரையான்**
> (ஏலாதி. 32)

எனச் சான்றுகள் பல. ஆயின் இங்கு இன்றைய (handicap என்ற) பொருளன்றி கேடு, குற்றம், குறை என்ற பொதுப் பொருண்மையே அமைந்து காணப்படுகின்றன.

எனினும் ஊனத்தன்மை, நேரடி ஊனச் சொற்களாலும், விளக்க முறையிலும் தனித்தும், பொதுவாகவும் கையாளப் படுகின்றன. பெரும்பாலும் நேரடிச் சொற்கள் முன்நூல் தொடர்ச்சி காட்ட, பிற இக்கால இலக்கியச் சொல்லாக்கமாகக் கருத இடமளிக்கின்றன.

பொறியின்மை (618), கோளில் பொறி (9) என்பன குறள் தருவன; இவை புதியன; பொதுமை சுட்டியன.

உறுப்பளவிலானவற்றில் கண்ணிலும் காலிலும் ஏற்படும் குறைபாடே பலவாறு சுட்டப்படுவதாகப் புலப்படுகின்றது. கொடுமையானதும் கடுமையானதும் ஆதல் பற்றி இந்நிலை எனலாம்.

கண் ஊனம்,

கண் இல்	-	நாலடி 44, பழ. 109
கண் இல் ஒருவன்	-	இன்னா. 16
கண் இல்லார்	-	ஏலாதி. 36
கண் இழந்தார்	-	ஏலாதி. 52
கண் கெட்டார்	-	சிறுபஞ்ச. 76, ஏலாதி, 86
கண்ணிலர்	-	குறள். 577
கண்ணிலவர்	-	ஏலாதி, 78
குருட்டுக்கண்	-	பழ. 218
குருடன்	-	நாலடி, 158, திரிகடு. 93
குருடு	-	பழ. 298
சிதடர்	-	சிறுபஞ்ச. 74
சிதடி	-	முதுமொழி. 45
நோக்கற்றவர்	-	பழ. 115
மைம்மைப்பு	-	பழ. 298

என அமைகிறது. செவியூனம்,

காது இரண்டும் இல்லாதாள்	-	சிறுபஞ்ச. 3
செவி இலன்	-	ஏலாதி. 19
செவிடர்	-	நாலடி 158
செவியிற் சுவை யுணரா	-	குறள். 420

என வருகிறது. வாயூனம்,

ஊமன்	-	திரிகடு. 7
(ஊன வாய்	-	ஐந்.எழு. 45)
நா இல்லார்	-	ஏலாதி. 36
மூகை	-	நாலடி 158
மூங்கை	-	ஏலாதி, 19
வாய் இழந்த வாழ்வினர்	-	ஏலாதி. 78

என அமையும். பல் கழன்று - நாலடி 13 என்பதையும் இங்கு இணைக்கலாம். மூக்கூனம், மூக்கற்றது - பழ. 115 என ஒரு வருகையே கொள்ளும். காலூனம்,

கால் இல்லார்	-	ஏலாதி 36
கால் இரண்டும் இல்லாதார்	-	சிறுபஞ்ச. 76
கால் முடம்பட்டார்	-	ஏலாதி, 53
காலும் இழந்து	-	பழ. 189
முடங்கு (இறவு)	-	திணைமாலை நூற். 131
முடத்தோடு	-	பழ. 189
முடம் (முதிர் புன்னை)	-	ஐந்.எழு.மிகை
முடவன்	-	பழ. 16

எனவரும். பொய்க்கால் - பழ. 284 என்பதையும் இங்கு இணைக்கலாம்.

ஊனம் சுட்டிக் குறள், மா, உறுப்பில் பிண்டம் போன்றன வரவில்லை;

கூன் - பழ. 275, 283 இரு வருகையே பெறும். முலையிரண்டும் இல்லாதாள் (குறள். 402), முலை இல்லாள் (இன்னா. 12) என இரு வருகை அமையும்.

அலி (நாலடி. 85) ஒருமுறையும், பேடி (குறள். 614, 727; நாலடி 251; முதுமொழி, 42) நான்முறையும் வரும்.

அறிவூனம் குறிக்கப் புல்லறிவாண்மை எனும் நாலடி (அதி. 33), குறள் அதிகாரங்களும் (85), பேதைமை எனும் குறள் (அதி. 84), நாலடி (அதி. 33) அதிகாரங்களும் காணப்படுகின்றன. அறிவுத் திறன் (IQ) குறைவு என இதைப் பொருத்தலாம். மேலும் பேதை, பேதைகள், பேதைமை (நாலடி. 71, நான்மணி. 22, 72, 78, 96, பழமொழி. 93, 102, 114, 138, திரிகடுகம். 14, 74, 93, 94, ஆசார. 98, இன்னா. 17, 35) போன்ற ஆளுகை பயின்றது. பித்தன் (நாலடி 340), மடம் (நான்மணி. 27) என்பனவும் இவ்வகையில் இணைத்துக் காணத்தக்கன.

புறநானூற்றின் (28) பட்டியல், 'மருள்' எனக் குறித்ததில் அடங்கும் அறிவு மருள், பால் மருள் என்பன இங்கு விரிவாகக் கையாளப்படுவதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. 'பெண் அவாய் ஆண் இழந்த பேடி' (நாலடி 251), பழித்தவை சொல்லுதல் வற்றாகும்

பேதைமை (திரி.14), இகழ்ந்து ஒருவன் பேணாமை செய்வது பேதைமை (நான். 22) போன்ற விளக்கங்கள் இங்கேயே பெற முடிகிறது.

ஊனர் பழிப்பு

ஊனருக்கு உதவுதல் என்பது புலப்பட்ட போதும் ஊனமோ ஊனரோ முழுமையாகச் சமுதாயத்தால், படைப் பாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. எள்ளல், இழிப்பு, பழிப்புக்கு ஆளானமை புலப்படுகிறது. பழமொழி யாட்சியில், ஒப்புமை - உவமை கூறுமிடத்து இது முன்னிற்கின்றது. பழமொழியாகையால், இப்பழிப்பு எண்ணம் இக்காலத்தில் உருவானதாக அன்றி, முன்பிருந்தே தொடர்வதாக உய்த்துக் கொள்ளத்தக்கது. பிற சில நூல்களிலும் இத்தன்மை காணப்படல், இதற்குப் பொதுமை நல்கும்.

கண்ணற்றவர் பழிக்கப்பட்டமை வெளிப்பட,

தாக்குற்ற போழ்தில் தமரே போல் நன்கு உரைத்து
போக்குற்ற போழ்தில் புறன் அழீஇ, மேன்மைக்கண்
நோக்கு அற்றவரைப் பழித்தல் என்? என்னானும்
மூக்கு அற்றதற்கு இல் பழி (பழ. 115)

எனும் பாடல் அமைகிறது. மேலும், கொடைத்திறம் அற்றவராகப் பொருட்குவை சேர்த்து வைப்பவரின் 'தீவினை' குருட்டுத் தன்மையாக இணைக்கப்படலும் பழிப்பாகின்றது.

நாவின் இரந்தார் குறை அறிந்தும் தாம் உடைய
மாவினை மாணப் பொதிகிற்பார், தீவினை
அஞ்சில் என் அஞ்சாவிடில் என் – குருட்டுக்கண்
துஞ்சில் என் துஞ்சாக்கால் என் (பழ. 218)

அன்றியும், அரைகுறைப்பார்வையை விடக் குருடு நன்று என்பது போன்ற எள்ளல் தொனியுடனமையும் மற்றொரு பழமொழிப் பாடலும் இதன் தொடர்ச்சி காட்டும்:

இம்மைப் பழியும் மறுமைக்குப் பாவமும்
தம்மைப் பிரியார் தமர்போல் அடைந்தாரின்
செம்மைப் பகைகொண்டு சேராதார் தீயரோ
மைம்மைப்பின் நன்று குருடு (பழ. 298)

பழமொழிபோலத் திரிகடுகமும் கண்தெரியாமையின் இழிவு, பயனின்மை என்பனவற்றை உணர்த்துமுகமாக, மனைவியின் அழகு குருடனுக்குத் தெரியாது என்பது போன்ற கருத்தை வழங்கும்:

குருடன் மனையாள் அழகும், இருள்தீரக்
கற்று அறிவில்லான் ஆழ்ந்துரையும் பற்றிய
பண்ணின் தெரியாதான் யாழ் கேட்பும் இம்மூன்றும்
எண்ணின் தெரியாப் பொருள் (திரி. 53)

இதற்கு ஒருபடி மேற்சென்று, கண்ணில்லாதவனுக்கு அழகு இன்னாதது - பயனற்றது என்ற போக்கில், இன்னா நாற்பது ஒரு பாடல் அமைக்கும்:

உண்ணாது வைக்கும் பெரும் பொருள் வைப்பு இன்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனி இன்னா
கண்இல் ஒருவன் வனப்பு இன்னா ஆங்கு இன்னா
எண் இலான் செய்யும் கணக்கு (இன்னா. 16)

கண்ணூனம் போன்று இத்துணையளவு பிற ஊனங்கள் பழிக்கப்படல் சான்றுப் பரப்புக் கொள்ளவில்லை. எனினும் முடம், ஊமை, செவியின்மை, பேதைமை போன்றன குறைத்தும் இழித்தும் மொழியப்பட்ட அரிய இடங்கள் உள.

கற்றவரைச் சினமுறச் செய்து, கல்லாதவருடன் கூடியமையும் ஒருவன் நிலை, நடக்க இயலா முடவன் யானையின் முன் நிற்பதாகக் காட்டப்படுகிறது.

கற்று ஆற்றுவாரைக் கறுப்பித்து கல்லாதார்
சொல் தாற்றுக் கொண்டு சுனைத்து எழுதல் எற்று
என்னின்
தானும் நடவான் முடவன் பிடிப்பூணி
யானையொடு ஆடல் உறவு (பழ. 16)

திரிகடுகம், ஊமை கண்ட கனவு எனப் பயன்விளைவற்ற சூழலை, பழமொழியாட்சிவழி உணர்த்துகின்றது.

வாளைமீன் உள்ளல் தலைப்படலும் ஆள் அல்லான்
செல்வக்குடியுள் பிறத்தலும், பல் சவையின்
அஞ்சுவான் கற்ற அருநூலும் இம்மூன்றும்
துஞ்சு ஊமன் கண்ட கனா (திரி. 47)

இத்தொடராட்சி முன்பின் இலக்கியக் களனில் தொடர்ந்து பயில்வதாகும்.

நல்லவரால் நகைப்புக்கு இடனாகும் பொருட்பட்டியலைத் தரும் சிறுபஞ்சமூலம், அதில் காதில்லாத ஊனரையும் உட்படுத்துகின்றது. எள்ளல், இளமை, பேதமை, மடன் என்பன

நகைப்புக்களனாவதைத் தொல்காப்பியம் கூற, இங்கு, ஊனர் மிகை எண்ணம் கொள்வதும் இணைகிறது.

கல்லாதான் தான்காணும் நுட்பமும் காதுஇரண்டும்
இல்லாதாள் ஏக்கழுத்தம் செய்தலும் இல்லாதான்
ஒல்லாப் பொருள் இலார்க்கு ஈத்து அறியான் என்றலும்
நல்லார்கள் கேட்பின் நகை (சிறுபஞ்ச. 3)

அறிவுக் குறைபாடான பேதைமை/மடமையின் இழிதகவும் பரவலாகப் பேசப்படுவது காணப்படுகிறது. முன்சுட்டிய குறளதிகாரங்களில் பேதையும், புல்லறிவாளனும் புனையப்படல் இதற்குத் தளமமைக்கும். சான்றாக,

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில் (833)

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும் ஓர் நோய் (848)

எனும் குறள்களைச் சுட்டலாம். நாலடியும் இத்தகு அதிகாரங்களில் (புல்லறிவாண்மை. 33. அதி; பேதைமை. 34. அதி) விளக்கம் அமைப்பதுடன், பேதையை, 'மருந்தின் தணியாத பித்தன்' (340) என எள்ளுவதும் எண்ணத்தக்கது.

பேதையோடு யாதும் உரையற்க பேதை
உரைப்பிற் சிதைந்துரைக்கும் (நாலடி. 71)

எனவும்,

பேதைக்கு உரைத்தாலும் தோன்றா துணர்வு
(பழ. 93)

எனவும்,

தேற்றம் இல் பேதை (நான்மணி. 78)

எனவும்,

பழித்தவை,
சொல்லுதல் வற்றாகும் பேதைமை (திரி. 14)

எனவும்,

ஆன்றவிந்த சான்றோருள் பேதை புகல் இன்னா
(இன்னா. 17)

எனவும்,

இன்னா அழகுடையான் பேதை எனல் (இன்னா.35)

எனவும் பிற நூல்களிலும் இக்கோட்பாட்டைப் பரக்கக் காணலாம். அனுதாபத்தோடு அணுகப்படாது, ஊனம் இவ்வாறு இழிப்புக்கு உட்படுதல் ஒரு கால நிலை எனத்தகும்.

நிறைவுரை

கீழ்க்கணக்கின் அறநூல்களிலிருந்து ஊனம்/ஊனர் பற்றிய சில தகவல்களைப் பெறமுடிகிறது.

ஊனருக்கு உதவுதல், ஊன நீக்கம், ஊனக் காரணம், ஊனக் குறியீடு, ஊன வகை, ஊனம் சுட்டும் முறை, ஊனர் பழிப்பு எனப் பலவகையான குறிப்புகள் கிடைக்கின்றன.

முன் நூல்களைப் பார்க்க, ஊனம் பற்றிய செய்தி, பெருக்கம் காட்டுகிறது; ஊனச் சொற்களும் மிகுதியாகவும் வகைமைப்பட்டும் அமைகின்றன.

ஊன நீக்கம் பற்றிய பின் நூல்களின் மீவியல்பு சமயச் சார்பு இங்கு அமைந்திலது.

கொடை, உண்டி, நோய்நீக்கல் என ஊனர் புரக்கப் படவிலமையும் அறநூல்களின் பாங்கு தனித்தன்மை உடையது. தொடர்ந்த கால நூல்களில் இதன் தொடர்ச்சி உண்டு.

முன்வினை ஊனக் காரணமாதலும், ஊனரைப் புரந்தவர் பின்பு பயனுறலும் பிற நூல்களில் காணப்பட்டதாகத் தெரிய வில்லை.

ஒரு குறிப்பிட்ட இலக்கிய - காலப்பகுதியின் சமூக எண்ணம் ஊனர் தொடர்பாக அமைந்ததை இக்களன் வெளிப் படுத்துகின்றது.

சிதடு

சிதடு என்பது, குருடு என்பதுடன் பேதைமை, உள்ளீடின்மை எனவும் பொருள்படுவதால் (தமிழ் லெக்சிகன், தொகுதி, 3, ப.1417); கண்ணுக்குரிய காட்சி எனும் உள்ளீடின்மை பற்றி ஏற்பட்ட சொல்லமைவாகக் கருதத்தக்கது. 'சிறப்பில் சிதடு' (புறம். 28.1) என்ற முதல் வரவு இதன் தன்மையை, நிலையை வெளிப்படச் சுட்டுகின்றது.

பிரித்தல், வெட்டுதல், சிந்துதல் எனப் பொருள்படும் சிதர்(த்தல்) என்றதனை இச்சொல் அடியாகக் கொண்டிருக்கலாம் என்ற கருத்து அமையினும் (தமிழ் லெக்சிகன், மேற்படி), 'சிதை' என்பதிலிருந்து தோன்றியதாகக் கருத முடியலாம். சிதை (தல்) = தன்மை கெடுதல், சிதைவு = கேடு, குற்றம் என்ற அடிப்படைப் பொருண்மைகள், கண்ணின் பண்பான 'பார்வை' என்னும் தன்மை கெட்டு - கேடுற்று, புலனுக்குரிய செவ்வியாகவன்றிக் 'குற்ற'மாக அமைவதால் பொருத்தமுற்று சிதை(வு) > சிதடு என உருவாகி யிருக்கலாம். சொற்சிதைவு மற்றும் நூலிலுள்ள சிதைவு பற்றிக் கூறும்போது இவ்அடிப்படைச் சொல்லாட்சியைத் தொல் காப்பியம் தருவது (தொல்.சொல். 402, பொருள். 664) இப்பொருண்மையைப் புரிந்துகொள்ள உதவும்.

பேதைமை, சிள்வண்டு எனப் பொருள்படும் 'சிதடி' என்பது இங்கு இணைத்துக் காணத்தக்கது. சங்க இலக்கியம்

> அலந்தலை யுன்னத் தங்கவடு பொருந்திச்
> சிதடி கரையப் பெருவறங் கூர்ந்து (பதிற். 23)

> கானத்துக்
> கறங்கிசைச் சிதடி பொரியரைப் பொருந்திய
> சிறியிலை வேலம் (பதிற். 58)

எனச் சிள்வண்டைக் குறிப்பிடுகின்றது. இதன் 'கண்'ணுறுப்பு எவ்வாறமைகிறது என்ற தெளிவு, ஒருவேளை சிதடி - சிதடு என்பதன் தொடர்பு புலப்படுத்தலாம். பேடி - பேடு என்பதிலும் இச்சொல்லமைப்புத் தொடர்பு உள்ளதுடன் பதர் - பதடி என்பது போல, சிதர் - சிதடி - சிதடு எனப் பொருத்தவும் கூடும்.

குருடன் என்ற பொருளில் சிதடன் என்ற சொற் பயன்பாடும் (துஞ்சு புலி இடறிய சிதடன் போல, புறம். 73), உள்ளீடின்மை என்ற பொருளில் சித(ட்)டு என்பதும் (சிதட்டுக்காய், குறு. 261, உள்ளீடு இல்லாத ஊமைக் காய்) அமைந்து இதனை மேலும் விளங்கிக்கொள்ள உதவும்.

சிக்கர் சிதடர் சிதலைபோல் வாயுடையார்
(சிறுபஞ்ச. 74)

செய்யாமை மேற்கோள் சிதடியின் துவ்வாது
(முதுமொழி. 35)

என்பதில் சிதடர் = பேதைமையுடையோர், சிதடி = அறிவிலன் எனப் பொருள்படுவன தனித்துச் சிந்தித்தற்குரியன. கண் எனும் உறுப்பு கல்வி, அறிவு என்பனவற்றுக்குக் குறியீடாவதால், கண்ணின்மை/கண் பார்வையின்மை, அறிவின்மை/பேதைமைக்குக் குறியீடாதல் எனும் இணைவு இங்குப் பொருந்தும்.

அன்றியும், சிதகு = குற்றம், சிதகுதல் = எழுதினதை அழித்தல் என்ற பொருளும் (தமிழ் லெக்சிகன், மேற்படி) ஒப்புமைப்படுத்திக் கருதத்தக்கன. சிதகன், சிதன் என்பன வெண்மையானவன் என்ற நிலையில் சுக்கிரனைக் குறித்து வருவது (தமிழ் லெக்சிகன், மேற்படி) பார்வையற்ற ஒரு பாங்கினரின் வெண்விழி நிலைமையையோ, சுக்கிரன் என்ற புராணப் பாத்திரத்தின் பார்வைக் குறைவை ஒட்டியோ அமைந்து சொற் - பொருள் தொடர்பு காட்டலாம் (சுக்கிரம் = கண்ணோய் வகை, சுக்கிரக் கண்ணன் = ஒரு கண் குருடானவன், சுக்கிராச்சாரி = ஒற்றைக் கண்ணன் எனத் தொடர்பு கொள்வன பிறமொழிச் சார்பு காட்டலாம்).

சிதடு, எச்சவகை, எட்டுள் ஒன்றாக அமைவதும், சிறப்பற்றதாகக் காணப்படுவதும், 'பேதைமை அல்லது ஊதியம் இல்' என்பதால் பயனற்றதாகுவதும் இவ்வூனம் பற்றிய பழங்காலக் கருத்தாக்கத்தைத் தரும் (புறம். 28). தொடர்ந்த கால இலக்கியங்கள் இவர் பற்றிய எத்தகு எண்ணம் கொண்டுள்ளன என்பதும், பிறவிக் குருடன் - பின்பு குருடாதல்/குருடாக்குதல் என்பனவும், குருடர் பாத்திரமாதலும், குருட்டுத் தன்மை பற்றிய விளக்கமும், குருடர் நிலைமையும், இவ்வூனக் காரணமும், அதன் நீக்கமும், நம்பிக்கைகளும், சொற்பயன்பாடும் பிறவும் இப்பொருண்மைபற்றி மேலும் விளக்கம் தர முடியும். மருத்துவ நிலையில், கண்பார்வை இன்மை, இழப்புக்கான சூழல்/காரணம் என்பனவும், நீக்க/தடுக்க வழிமுறைகளும் கருதப்படுகின்றன. சமூகவியலாளர் பார்வையற்றோர் பற்றித் தனிக்கவனம் கொள்கின்றமையும் சுட்டற்குரியது.

நிலை

சிதடு என்பதில் கண் இன்மை (உறுப்பு), காட்சியின்மை (புலன்) ஆகியன அமையும். பின்னதில், முழுப்பார்வையின்மை (totally blind), பகுதிப் பார்வையின்மை (partially blind) என்பன உள. பின்வகையில் பகுதிப் பார்வை (partial sight), பார்வைக்குறை (defective sight) என்பன காணப்படும். இவை பிறப்பில் அமைதல் (congenital) எனவும் பின்பு ஏற்படுதல் எனவும் வகைப்படும்.

ஊனம் ஏற்படற்கு அடிப்படையாக அமையும் பொதுவான காரணங்கள் கண்ணூனத்திலும் கருதத்தக்கன. ஊனம் ஏற்படும் சூழல் என்பது பரம்பரை அல்லது மரபணு அடிப் படையினதாகவோ (inherited or genetic), கருவளருங் காலத்தில் உருவாகுவனவாகவோ (during pregnancy), பிறக்கும் போது ஏற்படுவனவாகவோ (at the time of birth) அமையலாம். பின்பு ஏற்படும் ஊனம், ஒவ்வா மருந்துகள், நோய், விபத்து, சமச்சீருணவு (சத்துணவு)க் குறைவு (malnutrition), வன்முறை, மூப்பு எனப் பல்வேறு சூழல் மற்றும் காரணத்தால் அமையும். போலி மருத்துவரின் தவறான கையாளுதல் (pernicious activities of coucher and quacks), அறியாமை காரணமாகச் செவ்வியற்ற களிம்பு/மை போன்றன வற்றைக் கண்ணில் தடவுதல் - இடுதல் (irritants applied in ignorance), செவ்வையல்லாத இருக்கை நிலை (bad posture), ஒளிர்வு (glare), ஒளி போதாமை (bad lighting), செவ்வியற்ற அச்சு நூல்கள் (badly printed books) போன்று கண்பார்வை கெட, குறைவு ஏற்படக் காரணம் பலவாகும்.

நிறக்குருடு நிலை (colour blindness) மாலைக்கண் போன்றன மரபு தொடர்பானவை. கருவுற்றிருக்கும் காலத்தில் தெரிந்தோ தெரியாமலோ தாய் உட்கொள்ளும் சில மருந்து/பொருட்கள் மற்றும் அவற்றில் கலந்துள்ள நச்சுப் பொருட்கள்-தாலிடோமைடு (thalidomide), சாராயம் (alcohol), புகையிலை (tobacco), காரீயம் (lead), அமிலங்கள் என்பனவும் தூசு, சில அலங்காரப் பொருள் (cosmetics) போன்றனவும் பிறக்குமுன்பே-கருவிலேயே குழந்தையின் கண் பார்வையைப் பாதிக்கின்றன. பெற்றோரிடம் குறிப்பாகத் தாயிடம் கிரந்திப்புண் (syphilis), மேகவெட்டை (gonorrhoea) போன்ற பால்வினை நோய் (venerial disease) இருப்பின் அவற்றின் கிருமி, பிறக்கும்போது குழந்தையின் கண்களைப் பாதிக்கின்றன. பிறந்த குழந்தை இப்புனிற்றுக் கண்ணோயால் (opthalmia neonatorum) பாதிப்புற்றுப் பார்வை இழக்கலாம். இதனால், குழந்தை பிறந்தவுடன் அதன் கண்களில் சில்வர் நைட்ரேட் நீர்

மையத்தின் சொட்டுகள் விட்டு (solution of nitrate of silver) பார்வை இழப்பைத்தவிர்க்க - தடுக்க முடியும்.

தட்டம்மை (measles), பெரியம்மை (small pox), நச்சுக் காய்ச்சல் (typhoid), தொண்டையடைப்பான் (diphtheria), ஸ்கார்லட் காய்ச்சல் (scarlet fever), மூளைச் சவ்வு அழற்சி (meningitis) போன்றவை குழந்தைப் பருவத்தில் ஏற்படும் போது பார்வையின்மை, பார்வைப் பாதிப்பு ஏற்படலாம். இமை அரிப்பு (trachoma), விழி விறைப்பு (glaucoma), கண்புரை (cataract) என்பனவும் கண்களில் நோயை உருவாக்கிக் கண்பார்வையைப் பாதிக்கின்றன. கண்ணிலும் மூளையிலும் ஏற்படும் புற்றுக் கட்டிகள் (விழித்திரைப் புற்று - retinoblastoma) கண்பார்வையை இழக்கச் செய்கின்றன.

விபத்து மற்றும் காயங்கள் தவிர, கண்களுக்கு ஓய்வு தராமை, சூரிய ஒளியை-கிரகணம்-நேராகப் பார்த்தல், பக்கவாதம், அளவிற்கதிகமான சூடு அல்லது குளிர் நேரடியாகக் கண்களைத் தாக்குதல், திரைப்படம் - தொலைக்காட்சி - கணிப்பொறி போன்ற வற்றை உரிய கண்பாதுகாப்பின்றி நீண்டகாலம் பார்த்தல் எனப் பிறவும் கண்பார்வை சிதைவுறக் காரணமாகும். இன்னும் பிற காரணமும் இருக்கலாம். கண் மற்றும் காட்சியுறுப்புக் கூறுகளான கருவிழிப்படலம் (iris), விழிவில்லை (lens), விழித்திரை (retina), பார்வை நரம்பு (optical nerve), மூளையின் பிடரிமடல் (occipital lobe) போன்றவற்றில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்படுமாயின் அவை பார்வை இன்மையை/பார்வைக் குறையை உண்டாக்கும் என இவற்றைச் சுருக்கமாக மொழியலாம்.

கிட்டப்பார்வை (myopia), தூரப்பார்வை (hyper metropia) கண் வளைவு வெவ்வேறாக இருகண்ணிலும் அமைதல் (astigmatism) என்பன பொதுவாகக் காணப்படும் பார்வைக் கோட்டக் குறைகளாகும் (refractive errors). கண் இயக்கத்தில் (eye movement abnormality) குறைபாடுகளாக மாறுகண் (squint), விழியூசல் (nystagmus), விழி அலைவு (wandering eye), குழல் பார்வை (tunnel vision) போன்றன அமைகின்றன. கண்ணாடி, விழிவில்லை அணிதல், சத்துணவு, வைட்டமின்கள் உட்கொள்ளுதல், மருத்துவம், அறுவை போன்றவற்றால் எளிதில் சரிசெய்ய முடியாதும் பகுதிப் பார்வையுடன் அமையும் நிலைகள் பலவாகும். பத்திலொன்றாகப் பார்வை அமையும் போதும் (one tenth vision), கல்வி பெறுதல் அல்லது தொழில் செய்தலுக்குத் தடையாக/ இடையூறாகப் பார்வைக் குறைவு அமையும் போதும் (educational

and vocational blindness) ஊனமாக, சிதடு நிலையாகக் கருத முடியலாம்.

தனக்குமுன், 2 மீட்டர் தூரத்தில் நீட்டப்பட்ட கரத்தின் விரல்களை இரு கண்களாலும் காண-எண்ணமுடியாத நிலையைப் பார்வை இன்மை அல்லது குருடு எனவும், அதனை, முழுமையான பார்வை இன்மை (no vision) முதல், பத்திலொரு பார்வைநிலை (one - tenth of normal vision) வரையிலான இருநிலைக்குட்பட்டது எனவும் விளக்குதல் காணப்படுகிறது. உலகில், பார்வையற்றோரின் எண்ணிக்கை 5 முதல் 7 மிலியனாக அமைகிறது. துல்லியமான கணக்கீடு அமையாமைக்குப் பல காரணம் உள. ஊனநிலை தெளிவாக இனஞ்சுட்டப்பட்டு அமையாமையும், உறவினராலும் பிறராலும் ஊனம் மறைத்து மொழியப்படுதலும் உண்டு. 1881 முதல் இந்திய மக்கட் கணக்கெடுப்பில் ஊனரும் அமைந்தனர். மூளைக்கோளாறு (insanity), செவிட்டூமை (deaf-muteness), குருடு (blindness), தொழுநோய் (leprosy) என்பனவே குறைகளாக (infirmity) கணக்கீடு செய்யப்பட்டன. 1881-இல் 1,26,743-ஆக அமைந்த குருடரின் எண்ணிக்கை 1931-இல் 6,01,370ஆக அமைந்ததாகத் தரப்படுகிறது. தனிநபரும், சமயப்பரப்புநரும் (missionaries), தன்னார்வ மனிதநேய நிறுவனங்களும் (philanthropic institutions) ஊனமுற்றோருக்கு உதவ முயன்றமை இந்திய விடுதலைக்கு முன்னும்; அரசும் இத்துறையில் கவனம் கொண்டது விடுதலைக்குப் பின்னும் அமைந்தது தெரிகிறது. சென்னை மாகாணத்தில் (Madras state), பாலடிப்படையில் சிதடரின் எண்ணிக்கை கீழ்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது.

சிதடர் எண்ணிக்கை		
ஆண்டு	ஆண்	பெண்
1901	7,711	7,898
1911	8,569	8,742
1921	9,913	9,764
1931	11,134	11,390
1961	1,04,682	1,11,204

அறிவியல் வளர்ச்சி, புதிய மருந்துகள் கண்டுபிடிப்பு மற்றும் மருத்துவ மேம்பாடு, தூய்மை சுகாதாரம் பற்றிய வழிப்புணர்வு, கல்வி, பொருளாதாரவளம் எனப்பல மேன்மைகள் ஏற்படினும் ஊனமுற்றோரின் எண்ணிக்கை குறையாமல் கூடிவருவது தனித்த

சிந்தனைக்குரியது. ஒருலட்சம் மக்கட் தொகையில், 1931-இல் 96.2 ஆணும் 95.8 பெண்ணும், 1961-இல் 423.0 ஆணும் 565.0 பெண்ணும் கண்பார்வையற்றவராகக் கணக்கிடப்பட்டு, இப்பிரச்சினையின் ஆழத்தை உணர்த்துதல் உன்னத்தக்கது. இந்தியாவில் மட்டுமன்றி பிரிட்டனிலும் இவ்வாறே எண்ணிக்கைப் பெருக்கம் அமைகிறது எனவும் அதற்குச் சில காரணங்களமையலாம் எனவும் கருதுவர். பார்வையற்றோர் சட்டத்தின் (blind persons act) அடிப்படையில் அரசு மற்றும் மனிதநேய உதவிகள் / சேவைகள் கிடைக்க வாய்ப்பிருந்ததால், 1919-இல் 29,926-ஆக இருந்த பதிவு செய்த குருடர் எண்ணிக்கை 1941-இல் 74,324 ஆக உயர்ந்து 148% வளர்ச்சி காட்டியது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமூக நலத் திட்டத்தினரின் கருதுதலில், 10-19வயது வரையிலான பள்ளிப் பருவ மக்கட் தொகையில் (1921/1931), 12,087 பார்வையற்றோர் (ஆண் 5,234; பெண் 6,853) அமைவதும், 20-59 வயது வரையிலான பணிபுரியும் மக்கட் தொகையில் 86, 887 (ஆண் 36,638; பெண் 50,249) பார்வையற்றோர் அமைவதும் எடுத்து மொழியப்படுகிறது. இவர் தவிர பணி புரியாதவர் அல்லது பணி கிடைக்காதவர் 1,30,658 (ஆண் 58,936; பெண் 71,722) எண்ணிக்கை அமைவதும் தெரியவருகிறது.

தமிழகத்தில் மட்டும், கண்ணூனமுற்றோருக்காக 23 நிறுவனங்கள் செயல்படுவதும் சுட்டத்தக்கது. இந்தியாவில் 90 நிறுவனம் அமையினும், பார்வையற்றோர் எண்ணிக்கை 2,00,000ஆக அமைவதால், 15,000 குழந்தை மற்றும் பெரியவருக்கே கல்வி, தொழில்பயிற்சி தரும் வாய்ப்பமைந்து, முழுமேம்பாட்டைத் தாமதப்படுத்துகிறது. கண்தானத்தால் மட்டுமே மீண்டும் பார்வை பெறும் தகுநிலையுடையவராக 2½ லட்சம் பார்வையற்றோர் இந்தியாவில் இன்று இருக்கின்றனர் என்பது அண்மைத் தகவல் (தில்லி - தொலைக்காட்சி, 5-9-96, இரவு 10).

ஊனமுற்றோர் பயிற்சி மற்றும் பாதுகாப்பிற்காகப் பெருந்தொகை ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியுள்ளதால் அது தேசியப் பொருளாதாரத்தைப் பாதிக்கிறது; சமூகத்திற்கு இவர் பாரமாக அமைவதால் சமூகத்தின் பொறுப்பு மிகுகின்றது. எனவே இவர் தம்மைத்தாமே காத்து, தம்நிலையில் பொருளாதாரத் தன்னிறைவுடையவராக அமைய வாய்ப்பும் வசதியும் அளிக்கப்பட வேண்டியது அரசின் / சமுதாயத்தின் பொறுப்பாகும். இசை, இதழியல், நிருவாகம், ஆசிரியத் தொழில்களும், சுருக்கெழுத்தர், தொலைபேசி இயக்குவோர் போன்ற சார்பணிகளும் இவருக்கு

வழங்கப்பட முடியும். குடிசைத் தொழில், சிறுதொழில்களான கூடை முடைதல், நாற்காலி செய்தல், தாள் கூடு தயாரித்தல், நெசவு, பின்னல் போன்றவற்றிலும் இவர் ஈடுபடமுடியும். உளவியல் பாதிப்போ, பொருளாதாரப் பின்னடைவோ இவர்க்கு ஏற்படாமல் முழுமையான ஆளுமையுடைய நபர்களாக இவர் அமைவதும், நடத்தப்படுவதும் வேண்டும். இவர்க்குரிய கல்வி, தொழில், மறுவாழ்வு நிறுவனங்கள் பல அமைந்து திட்டங்கள் வகுத்துச் செயல்படுதல் தனித்த சிந்தனைக்கு இடம் வழங்கும்.

இலக்கியத் தரவு வகைப்பாடு

தமிழ் இலக்கியக் களன் (தொல்.-பெரியபுராணம்), மேற்கண்ட தகவல்களுக்கு வேறான மற்றொரு தரவுப்பரப்புக் காட்டுகின்றது. சொற்களும் செய்தியும், நிகழ்ச்சியும் பல்வகைப்பட்டு அமைகின்றன.

காலங்களூடே, குருடு (பழ. 298), குருடன் (நாலடி, 158), குருட்டுக்கண் (பழ. 218), மைமைப்பு (பழ. 298), குருடியர் (திருமந். 3089), அந்தகன் (நாலாயிரம், 1073), அந்தன் (திருத். 31, தண்டி 17), கொத்தை (தேவா. அப்பர். 4.100.1) என ஊனச்சுட்டும்; கண்ணில் (குறள். 577), நோக்கற்றவர் (பழ. 115), கண் கெட்டார் (ஏலா. 50), கண் இழந்தார் (ஆசா. 52), காணார் (மணி. 13, 111), கண் சூன்று (சீவக. 2795), மாலைக் கண் (சீவக. 2397), பிறழ் கண் (சூளா. 1615), விழி போயிற்று (கம். 1688), சிந்தின நயனம் (கம். 3623), பொறி இலர் (கம். 6786), நோக்கு இழந்தனர் (கம். 7597), கண்ணைப் பிடுங்குறும் (கம். மிகை. 762), கண்கொள் (நாலாயிரம், 178), கண்ணை அறுத்தது (நாலாயிரம், 323), கண்ணிடந்து (திரு.திருவந்.11), கண்ணிழப்ப (திரு.திருவந். 37), கண்மறைய (திருத். 29. ஏயர். 274), மறைந்த இடக்கண் (திருத். 29, ஏயர், 287), விழிக்குருடு (திருத். 31, தண்டி 8), கண் குருடு (திருத். 31, தண்டி 9), கண்கள் காணார் (திருத். 31, தண்டி 21), ஒன்றரைக் கண்ணன் (தேவா. அப். 4, 867), கண்பீடழிய (தேவா. சுந். 7.169), காணாத கண்கள் (தேவா. சுந். 7. 92.8), காட்சியுமில்லோன் (திருவாச. திருவண்ட 113), கண்கெட்ட (திருவாக. திருச்சத. 53), நயனம் இடந்து (திருவாச. திருச்சாழல். 18), கண்ணைப் பறி (திருவாச. திருவுந்தி, 12), மரக்கண் (திருவாச. செத்திலா, 4.9), கண்ணிலி (திருவாச. படையாட்சி, 5), கண்கோளிழத்தல் (திருக்கோ. 382), கண் இல்லை (திருமந். 482) கண் இலாதார் (திருமந். 1808), கண்கழி (திருமந். 2140), விழிகண் குருடன் (திருமந். 2169), குழிகண் (11ஆம், சேர. பொன். 75) என உறுப்பு/புலன் சார்புடனும் வருகைகள் அமைகின்றன. கண்

அழித்தல், கண் அளித்தல், கண் இழத்தல், கண் பெறுதல் என்ற பல்நிலையும் இதில் பொருந்துகின்றன. நிகண்டு, அகராதிச் சொற்பட்டியலுடன் (சுமார் 76)* ஒப்பிடும் போது, ஆதன், கபோதி, காபோதி, சாத்தியந்தன், தர்ப்பணானனன், நுளை, நொள்ளல், பூஞ்சல், பொட்டை, மகுடம், வாக்கி போன்ற பல இங்குப் பயனாதல் காணப்படவில்லை. இலக்கியம் தரும் நோக்கற்றவர், கண் குருடு, விழிக்குருடு போன்றன நிகண்டகராதியில் இடம் பெற வில்லை.

யமன் அந்தகனெனப்படுமிடங்கள் (கண்ணிலி) தவிரப் பிற குறிப்புகள் பெரும்பாலும் குருடு பற்றிய பலவகையான எண்ணங் களைத் தந்து நிற்கின்றன. உவமை, உருவகம், வருணனை, மரபுத் தொடர் போன்ற வெளியீட்டுத்திகளில் பயன்பட்டுச் செய்திகள் அமைவது ஒருபாலும், நேரடிப் பொருண்மைநிலை மறுபாலும் அமைகின்றன. வாழ்வியல்எண்ணங்கள் அல்லது தத்துவச் சிந்தனைகள் எனக் கூறத்தகுவனவும், நம்பிக்கை வயப்பட்டனவும், அறிவியல் சார்ந்தனவும், உட்பொருள் கொள்வனவும் காணப் படுகின்றன. மனிதக் கண்ஞானத்துடன் அருகி விலங்குக் கண்ஞானமும் இடம்பெறும். மனிதத் தொடர்போடு மட்டுமன்றி இறைத் தொடர்புடனும் கண்ஞானம் அமைவதும் ஊனநீக்கத்தில் இயல்பு நிலையன்றி இறைநிலையே அருமருந்தாதலும் அமையக் காணலாம்.

---

* அந்தகன், அந்தன், அந்தம், ஆதன், இராக்குருடு, ஏகாட்சி, ஒற்றைக் கண்ணன், ஒன்றரைக் கண்ணன், கண்டுயில்(லு)தல், கண்ணறை, கண்ணறையன், கண்ணிலன், கண்ணிலி, கண் தெரியாதவன், கண்பஞ்சடைதல், கண்புகைச்சல், கண்பொறி தட்டுதல், கண்பொன்றுதல், கண்மங்குதல், கண் மங்குலம், கண்மூடி, கபோதி, கருடப்பார்வை, காக்கைக்கண்ணன், காணான், காணார், காபோதி, குருடன், குருடி, குருடு, கொத்தை, கோணப்பார்வை, சாத்தியந்தன், சிதடன், சிதடி, சிதடு, சுக்கிரக் கண்ணன், சுக்கிராச்சாரி, சோங்கண், தர்ப்பணானனன், திருஷ்டிக்குறைவு, நிரம்பா நோக்கு, நிழலாடுதல், நுளை, நொள்ளல், நொள்ளை, நொள்ளைக்கண், பார்வைக்குறை, பார்வைத் தாழ்ச்சி, பார்வையிலி, பூ, பூச்சிவெட்டு, பூஞ்சல், பூஞ்சலாடுதல், பூஞ்சற்கண், பூத்துப் போதல், பொட்டை, பொட்டைக் கண், பொட்டையன், பொன்றுதல், மகுடம், மண்டைக்கண், மரக்கண், மாலைக்கண், மாலைக்கண்ணன், மாலைக் காமாலை, மாறுகண், மானக் குருடன், மைம்மைப்பு, வக்கிரக்கண், வாக்கி, வாக்குக்கண், வாக்குக் கண்ணன், விழிகண் குருடு, வெள்ளெழுத்து, ஜாத்யந்தன்.

கருத்து

சிதடு முதலிய ஊனம் பயனற்றது என்ற பொருளில் 'பேதைமை யல்லது ஊதியம் இல்' என்று சுட்டிய முன்கருத்துத் தொடர்ச்சி போல, அவரை யார் மனிதராக எண்ணுவர் என்ற கேள்வி எழுப்பப்பட்டு, அவர் மனிதரல்ல மனிதராக ஏற்கப் பெறார் என்பது போன்ற காலக் கணிப்பு காணப்படுகிறது.

அண்ணை யலி குரு டாதி யவர்களை
மண்ணுயர் ஞாலத்து மானுடராகவைத்
தெண்ணுநர் யாருளர் (சூளா. 1985)

இவர் கண்ணற்றவராகப் பிறக்கக் காரணம் தாயின் உடல் நிலையுடன் சார்த்தி மொழியப்படுவது தனித்த கருதுதலுக்குரியது.

மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே (திருமந். 481)

(இரண்டு : மலம், சலம்; மலமிகில் மந்தனாம், சலமிகில் மூங்கையாம்)

கண்ணின்மை, குருடு என்ற நிலையுடன் கண்ணிலமையும் வேறுபாடு, பார்வைக்குறை என்பதும் குறிக்கப்படுகின்றன. கண் பிறழ்ந்துளது (சூளா. 1598), பிறழ்கண்ணினனாக (சூளா. 1615) என்பன 'மாறுகண்'ணைக் குறித்திருக்கலாம். மைம்மைப்பு (பழ. 298) எனப் பார்வைக் குறை (defective sight) சுட்டப்படுகின்றது. நேர்ப் பொருளாக அன்றி நயங்கூறலாக 'ஒன்றரைக் கண்ணன் கண்டீர் ஒற்றியூர் உறை உத்தமனே' (தேவா. அப். 4. 86. 7) என அருகி அமைந்தது. திடீரெனப் பார்வைக் குறைவு ஏற்படல், 'படல மென்கண் மறைப்பித்தாய்' (தேவா. சுந். 89.1),

தாம் செய்த சபதத்தால்
முன்னடிகள் தோன்றாது கண்மறைய மூர்ச்சித்தார்
சங்கிலிக்காக என் கண்ணை மறைத்தீர்
(திரு.ஏயர். 274, 279)

எனச் சுந்தரரில் காட்டப்படுவதும், தொடர்ந்து, 'மறைந்த இடக் கண்' (மேற்படி 287), 'ஒரு கண்ணிலேன்' (மேற்படி 296) எனவரும் குறிப்புகள் வழி இடையில் ஏற்பட்ட பார்வைகுறை நீங்குதல், ஒருகண்ணில் மட்டும் பார்வை அமைதல் எனத் தரப்பெறுவதும் குறிப்பிடத்தக்கன. முதுமையால் பார்வைக் குறை ஏற்படுவது, 'கண்டுயின்று' (புறம். 159), கோல்கண்ணள் (நாலடி 17) எனச் சுட்டப் படுகின்றன. நீண்ட நேரம் பார்ப்பதால் கண்ணொளி குன்றல் (நற்.

397, குறு. 44, குறள். 1261) மற்றும் ஒளிர்வு மிகுதியால் கண்வெளிறு போதல் (புறம். 177) என்பனவும் இலக்கியத்தில் உள.

பக்தி இலக்கியச் சூழலில் மட்டுமே விலங்கின் குறிப்பாகப் பசுவின் குருட்டு நிலை வருவது உட்குறிப்புடையது.

கோவுடனே கூடிவரும் குருட்டாவு மூர்புகுதும்
(சே.நா.பு, 10)

சீறடியார் நின்பாதஞ் சேரக் கண்டும் கண்கெட்ட
ஊரேறாய் இங்குழல்வேனோ (திருவாச. திருச்சத. 53)

ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்தாங்கு
(திருவாச. திருச்சத. 87)

அறியாமை, கல்வி - ஞானம் இன்மை, அருள் - இரக்கம் - கருணை இன்மை போன்ற உட்குறிப்புகள் குருடுவழி வழங்கப்படுவதாகத் தெரிகின்றது. கண்ணுடையர் என்பவர் கற்றோர் (குறள். 393), கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் (குறள். 577), கண்ணில் புன் மாக்கள் (கண் = மெய்யறிவு, நாலடி. 44), செம்மை நலம் அறியாத சிதடர் (திருவாச. அச்சோ. 9), கண்ணில் கயவர் (பழ. 109), கண்ணிலர். . . . கணிகை மாக்கள் (சூளா. 2084), அறக்கண் அல்லது ஓர் கண்ணிலன் ஆகி (கம்ப. 6881) எனக் குறிப்புகள் பல்கும்.

உயிர்களின் உளக்குருட்டை நீக்கி ஞானமளிக்கவல்ல குரு பற்றிய கருத்தில் இறைமைத் தொடர்பு காணப்படுகின்றது.

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
(திருமந். 1680)

எனத் தேர்ச்சித்தவறு கடியப்படுகின்றது.

இருட்டறை மூலை யிருந்த கிழவி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்து
குருட்டினை நீக்கிக் குணம் பல காட்டி
மருட்டி யவனை மணம் புரிந்தானே (திருமந். 1514)

மருட்டிப் புணர்ந்து மயக்கமும் நீக்கி
வெருட்டி வினையறுத் தின்பம் விளைத்து
குருட்டினை நீக்கிக் குணம் பல காட்டி
அருட்டிகழ் ஞான மது புரிந்தானே (திருமந். 1518)

அருட்கண் ணிலாதார்க் கரும்பொருள் தோன்றா
இருட்கண் ணினோர்க்கங் கிரவியும் தோன்றா
(திருமந். 1808)

அறியாமை நீங்கல், அருளும் ஞானமும் பெறுதல் என்பன குருட்டு நீக்கம் என்பதில் இணைவது மேற்காணும் சான்றுகளில் பொருந்தும். குருடருக்குக் குருடர் வழிகாட்ட இயலாது - பயனற்றது - தீதே விளையும் என்று வெளிப்படத்தோன்றும் கருத்திலும் இதுவே உட்கிடையாம் போலும்.

குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடி
குருடுங் குருடுங் குழிவிழு மாறே (திருமந். 1680)

குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர்
முரணும் பழங்குழி வீழ்வார்கள் முன்பின்
குருடரும் வீழ்வார்கள் முன்பின் னறவே
குருடரும் வீழ்வார் குருடரோ டாகியே (திருமந். 2048)

அந்தக னந்தகற் காறு சொல லொக்கும் (வளை. 69)

இரு குருடர் ஒருவருக்கொருவர் உதவ முடியாது என்ற பொது நிலையும் இதில் புலப்படும். ஊனமுற்ற ஒருவர் அதே ஊனமுற்றவர்க்கு அல்லது மற்றொரு ஊனமுற்றவர்க்குக்கூட உதவியாதல் இயலாதோ எனும் ஐயம் குருடு - ஊமை, குருடு - முடம் இணைவுக் குறிப்பில் வழங்கப்படுவதாகத் தெரிகிறது.

கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித் தென்னைக்
கோகு செய்தாய்
(தேவா.அப். 4. 1001)

குருடனும் பங்குவுங் கூட்டத்திற் கூட்டிப்
பொருடம தாக்கமும் போத்தந் துரைப்பிற்
றெருட லிலை . . . . (நீல. 762)

(அந்த பங்கு நியாயம் - குருடன் தோள்மேல் நொண்டி யேறிக் கொண்டு வழிகாட்டக் குருடன் நடந்து செல்வது போன்ற நெறி)

இரட்டை ஊனநிலையில் குருடு அமையும் போது அந்நபர் தன்னையே பாதுகாத்துக் கொள்ள முடியாத மிகுந்த உதவியற்ற நிலையில் (acute helplessness) அமைவது,

மாரி யிரவின் மரங்கவிழ் பொழுதின்
ஆரஞ ருற்ற நெஞ்சமொ டொராங்குக்
கண்ணி லூமன் கடற்பட் டாங்கு (புறம். 238)

எனப் புலப்படுத்தப்படுகின்றது. குருடு பழிக்கப்படல் / இழிக்கப் படல் என்பது நோக்கற்றவரைப் பழித்தல் (பழ. 115) என்பதிலும் ஒருவனைக் குருடா எனக் குறிப்பதிலும் காணப்படும்.

அகத்தில் பெண்டுகள் நானொன்று சொன்னால்
'அழையேல் போ குருடா' வெனத் தரியேன்

(தேவா.சுந். 7.549)

இயல்பான மனிதனின் உணர்திறன் குருடனிடம் குறைவுபடலால், கருத்து விளக்கத்திற்காகத் துஞ்சுபுலி இடறிய சிதடன் என்பது போல், யானை கண்ட குருடர் -

முதலொன்றா மானை முதுகுடன் வாலுந்
திதமுறு கொம்பு செவி துதிக்கை கால்
மதியுடன் அந்தகர் வகைவகை பார்த்தே
அதுகூற லொக்கும் ஆறு சமயமே (திருமந். 3055)

என்பதும், குருடியர் குத்திய கரடி -

கரடிகள் ஐந்தும் கடுங்கானம் வாழ்வன
திருடி இராப்பகல் தின்று திரிவன
கரடிகள் ஐந்தும் கடைத்தலைப் பட்டால்
குருடியர் குத்தினும் குண்டுர லாமே (திருமந். 3089)

என்பதும் தரப்பெறுகின்றன.

அழகுணர்வு நோக்கிலும், பார்வையற்றோர் குறைத்து மதிப்பிடப்படுவதாகத் தெரிகின்றது. கண் இல் ஒருவன் வனப்பு இன்னா (இன்னா. 16), ஒல குளவி குருட் டெண்ணெய் வாணிச்சி கோலஞ் சிதையுமென் றெண்ணெ யட்டாள் (நீல. 635) என்பன மட்டுமன்றி, குருடன் மனையாள் அழகும் . . . எண்ணின் தெரியாப் பொருள் (திரி. 53) எனவும் தரப்பெறுகின்றமை சுட்டத்தக்கது. இயல்பான மனிதருக்குள்ள சில இயல்பு/உரிமை கூட இவரில் கருதப்படாமை, 'குருட்டுக் கண் துஞ்சிலென் துஞ்சாக்காலென்' (பழ. 218) என்பதில் அமைகின்றது. எனினும், 'திறனறிந்து ஏதிலாரின் கண் குருடனாய் . . நிற்பானேல் யாதும் அறங்கூற வேண்டா அவற்கு' (நாலடி. 158) எனும் சூழலில் மட்டுமே குருடு "போற்றப்படுவதாக"ப் புலப்படுகின்றது. சமயச் சார்பிலும், காணாக்கண், என்றிருப்பார்க்கு வாணாள் அடைக்கும் வழியதுவாமே (திருமந். 588), காணாத கண்ணுடன் . . காணாயென வந்து காட்டினன் நந்தியே (திருமந். 1610), கண்ணின்றிக் காணும் (திருமந். 1872) என இந்நிலையுயர்வு உட்பொருளுடன் புலப்படுத்தப்படுகின்றது.

கண் பார்வை இன்மை எனும் ஊனமுற்றவரால் - அவர்க்கு உதவுவதால் - பிறருக்குப் பயனமைவது அறவடிப்படையினதாகக் காணப்படுகிறது. முன்னாளில், சிதடர் போன்றோர்க்கு வரும் ஊறுகள் நீக்கினவர் இந்நாளில் ஒருநோயும் இன்றி வாழ்வார் (திரி. 74), கண் இல்லார்க்குச் சாலவும் ஊண் அமைத்தார் இமையவரால் விரைந்து வீழப்படுவார் (ஏலா. 36). மேலும் அத்தகையோர், பல யானைகளையுடைய மன்னனால் உணவூட்டப் பெறுவர் (ஏலா. 52); அத்துடன், மிகுந்த செல்வமுடையராகி பிறர்க்களித்து வாழ்வார் (ஏலா. 78); அன்றியும் அவர் மன்னரும் ஆவர் (ஏலா. 80) எனக் கருத்துகள் பல்கும். ஆபுத்திரனும் மணிமேகலையும் கண்ணூனருக்கும் உணவூட்டுவது தெரிகிறது (மணி. 13, 28). குருடர் கோல்பிடித்துச் செல்வர் என்பதும் (கம். 7825), அவர் சித்திரம் போன்றனவற்றைத் திருத்துவோமென்பது இயலாது என்பதும் (கம். 6136) போன்ற கருத்துகளும் காணப்படுகின்றன.

பாத்திரங்களில் கண்பார்வை இன்மை / பார்வைக்குறை

பிறவிக் குருடர், குருடர், கண் பறிக்கப் பெற்றவர், தாமே கண்ணைப் பறித்தவர், பார்வை இழந்தவர், பார்வை பெற்றவர் எனச் சிலநிலைகளிலான இலக்கியப் பாத்திரங்களைக் காண முடிகிறது.

> தண்டியடிகள், 'பிறந்த பொழுதே கண் காணார்'
> (திருத்31, தண்டி 1)

எனத் தெளிவாக, பிறவிக் குருடராகக் காட்டப்படுகிறார்.

சார்ங்கலன் கதையில், 'பார்ப்பான் தன்னொடு கண்ணிழந்து இருந்த இத்தீத்தொழிலாட்டியேன்', 'என் கண்இல் கணவன்' (மணிமே. 6132-133, 155) என வரும் குறிப்புகள், அவன் பெற்றோரைக் கண்ணற்றவராகக் காட்டும். முனிவர் சலபோசனன் வரலாறும், 'ஒளி ஒன்றிலவாய் நயனம்' 'இரு கண்களும் இன்றிய தாய் தந்தை' (கம். 1679, 1682) என முனிவர், மனைவி இருவரையும் விழியற்றவராய்க் காட்டும்.

> எண்ணில்லா வன்னெஞ்சத் தென்மகனுந்
> தம்பியருமென்னைப் போலக்
> கண்ணில்லா ராக்குவித்தா யென்செய்கே னினிநானுங்
> கடைப்பட்டேனே
> (பாரதவெண். 670)

என, திருதராட்டிரன் கூற்று அவனிலையுணர்த்தும் (காந்தாரியின் கண்கட்டிய நிலையும் கருதலாம்).

மேலே சுட்டிய பார்ப்பான் - மனைவி, முனிவர் - மனைவி என்போர் பிறவியிலேயே பார்வையிழந்தோர் அல்லது பின்பு இழந்தோர் என்பது வெளிப்படத் தெரியவில்லை. பாரத மன்னனோ,

உற்றொன் றறியே னுனதொளி கண்டகண்
மற்றொன்று காணாமல் வாங்கென்னக் – கொற்றவனும்
பாவொன்று நீண்ட பரஞ்சுடரோன் பார்த்தருளி
வாவென்று கொண்டான் மகிழ்ந்து (பாரதவெண். 215)

எனப் பார்வை இழந்த விருப்புச் சூழல் புலப்படுகின்றது.

கண்ணழிதல் என்பது தற்சார்பிலும் பிறர் சார்பிலும் அமைதல் கூடும்.

தன்கையிற் றன்கண்ணைத் தானே பொதக்குத்தி
யென்செயக் குத்தினை யென்பார் பிறரில்லை
தன்கையிற் றன்கண்ணைத் தானே பொதக்குத்துவ
தென்செயவோ விதன் காரணஞ் சொல்வாய் (நீல. 770)

என்பதில், முன்னதனை மறுத்தல் அமையினும், திருமால், கண்ணப்பர் செயலில் இது பொருந்துகின்றது. அருச்சனை மலரொன்று குறைய மால் தன் கண்ணையே மலராக இடல் உண்டு.

ஏறுட னேழடர்த்தா னெண்ணி யாயிரம் பூக்கொண்டு
ஆறுடைச் சடையினானை யர்ச்சித்தா னடியிணைக் கீழ்
வேறுமோர் பூக்குறைய மெய்ம்மலர்க் கண்ணை
யீண்டக்
கூறுமோர் ஆழியீந்தார் குறுக்கை வீரட்டா னீரே
(தேவா. அப். 4.49.5)

இது, இலக்கியப் பயிற்சி பெறுகின்றது.*

வலத்திற் கடுங்கணையாற்றன் மலர்க்கண்ணிடந்
தப்பினான்
(திரு.திருவந். 11)

அம்பர் பிரான் காளத்தி உத்தமர்க்குக் கண் அப்பும்
(திருத். 3. இலைமலி. 9.42)

என்றவாறு, வழிபடுலிங்கத்தின் கண்ணில் குருதி சோர, அந்நோய் நீங்கத் தன்கண்ணையே மருந்தாக்கி இடந்து அப்பிய கண்ணப்பர்

---

* தேவா. அப். 4.65.9, 100:4; சுந். 7. 9. 2. 66.3; திருவாச. திருச்சாழல். 18, திருத்தோணோ. 10; திருக்கோவை. 153; 11ஆம். நக். போற்றி. 24-25; பரண. சிவ. திருவந். 32; பட்டி.கோ.நான். 30; பட்டி. திருவேக. 18.

பற்றிய குறிப்பும் பயிற்சி காட்டும்* (கண்ணே வேண்டுமெனினும் ஈயக் கடவேன் (கம்பன். 1522) என்பது போல இவற்றில் 'கண் தானம்' புலப்படுகின்றது போலும்).

'சுரிகையின் கண்மலர் சூன்று நீக்கினார்' (கம். 1777) என்பதில் தம்மையே ஊறுசெய்தல் அமைகின்றது. தண்டனையாக இவ்வாறு 'உறுப்பறை' செய்தல், 'கண் சூன்றிடப்பட்டும்' 'நாடகம் நயந்து காண்பார் நலங்கிளர் கண்கள் சூன்றும்' (சீவக. 2795, 2989) எனப் பிறவிடத்தும் அமைந்தது. அன்னி மிஞிலியின் தந்தையின் கண்களைக் கோசர் இவ்வாறு செய்தனர் என்பது 'தந்தையைக் கண்களைந்து' (அகம். 262) எனவும் 'தந்தை கண்கவின் அழித்த' (அகம். 196) எனவும் குறிப்புப்பெறுகின்றது.

வரலாற்று நிலையன்றி, புராணத் தொடர்புடன், பகன் கண் கொண்டார் (தேவா. அப். 3109), ஒரு காலத் தொருதேவர் கண் கொண்டான் (மேற்படி. 2403), பெருந்தேவர்...... கண் பீடழியச் செற்று (தேவா. சுந். 7. 16. 9), சீர் அருக்கன் குருட்டிற் புகச் செற்ற கோன் (திருக்கோவை. 270) எனக் கண் கொண்ட செயல் பெருகி வரும். காகத்தின் கண் கொண்ட செயலும் சுட்டப்படுகின்றது (நாலாயிரம், 178, 323). 'கண்ணைப் பிடுங்குறும் சிலவர் தம்மை' (கம்ப.மிகை. 762) எனக் களக்காட்சியும் அமையும்.

பார்வை இழந்தவரில், 'கண்ணார் மணி ஒன்றுமின்றி...... அமணர் கண்ணாங்கிழப்ப' (திருத். திருவந். 37) என அமணரும் 'முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன்' 'சங்கிலிக்காக வென் கண்கொண்ட பண்ப நின்னடியேன் படு துயர் களையாய்' (தேவா. சுந். 7.54. 9, 69.3) எனச் சுந்தரரும் அமைவர்.

பார்வை பெறுதல் என்பதில் பிறவிக்குருடர் பார்வை பெறல் தண்டியிலும், இழந்த பார்வையை மீண்டும் பெறல் சுந்தரரிலும் அமையும். இறையருள், இறையிடையீடு என்பன சூழல் ஆகும். 'குருடனும் கண்பெற்றமை சாற்றித் திரியும்' (திரு.திருவந். 48) எனவும் 'சிந்தின நயனம் வந்தனைய செய்கையான்' (கம். 3623) எனவும் வருவன பார்வையற்றோர் / இழந்தோர் அதைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை வழங்கும். 'கண் சாபமது நீக்கும் முதல்வனவன்' (நாலாயிரம். 1230), 'காணாத கண்கள் காட்ட வல்ல கறைக்கண்டனே' (தேவா. சுந். 7.92.8) என இறைப்பண்பு புலப்படும்.

---

* கண்ணப்பநாயனார் புராணம் 178, 181-185; தேவா. அப்பர். 4, 65-8; தேவா. சுந். 7.88.6; 11ஆம். நக். போற். 43; கண்ணப்ப தேவர் திருமறம் 140-144, 146-148; கல்லாடர் - கண்ணப்பதேவர் திருமறம். 29.

இறைச்சார்புடன், தன் விருப்பாகவோ தண்டனையாகவோ கண் இழத்தல், பார்வை இழத்தல் அமையும் போது, அவை தற்காலிகமாக, பின்பு நீக்கம் பெற்று, முதனிலைக்குச் செல்கின்றன என்பது மேற்படி பல குறிப்புகளிலும் புலப்படும். மாலும் கண்ணப்பரும் தேவரும் மீண்டும் கண்/காட்சி பெறுகின்றனர் என்பதது.

நிறைவு

கண்ணூனம் பற்றிய குறிப்பு இலக்கியக் களனில் பரவலாகப் பெறப்படுகின்றது.

சிதடு என்ற பழைய ஆட்சி பின்பு அருகியது. குருடு, கண்ணில் - என்பன தொடர்ந்து பயின்றன.

குருடு என்ற சொல் சங்க இலக்கியத்தில் வரவில்லை.

கண்ணூனத்தின் சமூக மருத்துவ அணுகுமுறை, இலக்கியத்தில் அவ்வாறே பிரதிபலிக்கவில்லை.

கண்ணூனமுடைய நபர்கள் இலக்கியப் பாத்திரமாகக் காட்டப்படுவதால் இவர் முற்றாக ஒதுக்கப்படவில்லை என ஊகிக்கலாம்.

இலக்கியம் காட்டும் சமுதாயவியலில், கண்ணூனரும் ஒரு பகுதியினராகக் கருதப்பட முடியும்.

முடம்

'முடங்கு' என்ற அடியாகப் பிறந்ததாகக் கருதப்படும் முடம் எனும் சொல், கைகால் உபயோகத்திற்கின்றிப் போகும் நிலை, வளைந்தது, வளைவு, ஆடல் பாடல் முதலியவற்றின் குற்றம் ஆகிய பொருளுடையது (தமிழ் லெக்சிகன், தொ. 6, ப. 3243). எலும்பு, எலும்புகள் பொருந்தும் மூட்டு, இவற்றிற்கு உறுதுணையாகும் தசைநார் ஆகியவற்றின் செயற்குறைபாடு - செயலிழப்பு என்பன முடமாக வெளிப்படலால், மூட்டு > முட்டு > முடக்கு > முடம் எனச் சொல்லுருவாக்க நிலையும் கருதக்கூடும்.

உடலூனமாக அமையும் முடம், எச்சமாக பிறவியூனமாகக் கொள்ளப்படவில்லை என்பதைப் புறநானூற்றிலிருந்து (28) உய்த்துணரலாம். சிறப்பில் சிதடு முதல் மருள்வரையிலான எண்பேரெச்சம் பட்டியலில் முடம் இல்லை. 'Cripple is made, not born' என்ற தொடர் இன்றும் வழங்கப்பட்டாலும், முடவூனமுடன் பிறத்தல் இல்லை என்பதை முழுமையாக அறுதியிட முடியாது. பிறவியூனமாகவும், பின்பும் ஏற்படும் ஊனமாகவும் முடமும் கருதப்படத் தக்கதே. மரபு (heriditary) என்பதுடன், நோய், விபத்து, போர், முதுமை, சத்துணவுக்குறைபாடு, ஒவ்வாமை, போன்ற பல்வகைக் காரணங்களால் முடநிலை ஏற்படுகிறது. குழந்தைப் பருவத்திலேயே இளம்பிள்ளை வாதம் (polio-myletis), முடக்கு வாதம் (infantile paralysis) ஆகியவற்றால் முடத்தன்மை ஏற்பட்டு நீங்கா நிலை கொள்வது உண்டு. கல்விப் பேறுக்கும் தன்னிறை வாழ்வுக்கும் தடையாக-இடையூறாக அமையும் போது இம்முடம் ஊனமாகக் கருதப்படுகிறது.

எச்ச வகையுள் முடம் உட்படுத்தப்படாத போதும், சங்க இலக்கியம் முடநிலை பற்றிய குறிப்புகளை வழங்கி இப் பொருண்மை பற்றிய கருத்து விளக்கத்திற்கு இடம் அமைக்கின்றது. மனித முடமும், பறவை - விலங்கு - தாவர முடமும் காட்டப் படுகின்றன. ஊனம், செயற்பாட்டுக்குறை என்பனவற்றுடன் வளைவு என்பதும் இவற்றிலமையும்.

குறுந்தாட் கூதளி யாடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட விருக்கை முடவன்

உட்கைச் சிறுகுடை கோலிக் கீழிருந்து
சுட்டுபு நக்கியாங்கு . . . (குறுந். 60)

என்பதிலும்,

தீரத் தறைந்த தலையுந்தன் கம்பலுங்
காரக் குறைந்து கறைப்பட்டு வந்துநஞ்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பானைத்
தோழிநீ போற்றுதி யென்றி (கலி. 65. 6-9)

என்பதிலும் அருகி மனிதமுடம் (உயர்திணை) வந்து, முட(ம்), முடவன் எனும் ஆளுகையைத் தந்தன. பின்னது, நோய், முதுமையாகியன காரணமாக ஏற்பட்ட முடமாம். இப்பாடலில் முதுபார்ப்பான் (வரி, 20, 28) என்ற குறிப்பு மீண்டும் மீண்டும் வருவதாலும்,

"தன்னுடைய மயிர் நீங்குதலாற் றட்டையான தலையினையும் படாத்தினையு முடையனாய்க் கருங் குட்டத்தாலே காலுங் கையுங் குறைந்து கடமைத் துறைப் பட்டு வந்து நந் தெருவினின்றும் போகாமல் ஒளித்துத் திரியும் முடமாகிய முதிர்ந்த பார்ப்பானை.."

என நச்சினார்க்கினியர் உரைவிளக்கம் தருவதாலும் இக்கருத்து வலியுறுத்தப்படும்.

சங்க இலக்கியப் புலவர் சிலர் பெயர்கள், அவரும் முடவரோ எனும் எண்ணத்தை ஏற்படுத்தும். ஏணிச்சேரி முடமோசியார் (புறம்.13), ஐயூர் முடவனார் (அகம். 216), முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் (அகம். 30), முடத்தாமக் கண்ணியார் (பொருநராற்றுப்படை), முடத் திருமாறன் (நற். 105) எனப் புலமைக்கும், அரச வாழ்வுக்கும் முடம் தடையாகாமை வெளிப் படுகின்றது (முடத்திருமாறன், இறையனார் அகப் பொருளுரை, ப.6).

நீரும் புல்லு மீயா துமணர்
யாருமி லொருசிறை முடத்தொடு துறந்த
வாழா வன்பக டேய்ப்ப . . . (புறம். 307. 7-9)

என உமணரின் உழைப்புச் சுரண்டலால் பகடு முடமாகிப் புரக்கப்படா நிலையிலும்,

இன்னா வேற்றத் திழுக்கு முடங் கூர்ந்
தொருதனித் தொழிந்த வுரனுடை நோன்பகடு . . .
(அகம். 107. 14-15)

என விபத்துச் சூழலும் விலங்கு முடத்தில் பொருந்துகின்றன. முடமேற்படும்-மிகும் காரணச் சூழல் சுட்டப்படும் இந்நிலைக்கு வேறாகப் பறவை முடமமைந்து, மூப்பே காரணம் போலும் எனும் எண்ணத்தை 'முட முதிர் நாரை கடன்மீ னொய்யும்' (நற். 263. 7) எனும் குறிப்பால் ஏற்படுத்துகின்றது. பயிரினத்திலும் முதிர்வு, வளைவு ஆகியன பற்றி, 'முடம்' அடையாகியமைவது பரவலாகக் காணப்படுகின்றது.

முடக் காஞ்சிச் செம் மருதில் . . . (பொருநர். 189)

தொகுமுகை விரிந்த முடக்காற் பிடவின் . (அகம். 344.3)

கடற்றிற் கலித்த முடச்சினை வெட்சி . . . (குறு. 209. 5)

பெருங்களிறு தொலைத்த முடத்தாளோமை . . .
(நற். 137. 7)

முடமுதிர் மருதத்துப் பெருந்துறை (ஐங். 31.3)

முட (முடம்) என்பதுடன், முடவு எனும் சொல்லாட்சியும் மூப்பு இணைவுடன் பயிரினச் சார்பில் அகநானூற்றில் பயில்வது தனியாகச் சுட்டற்குரியது.

முடவுமுதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினை
(அகம். 10. 3)

முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம் ....
(அகம். 352. 1)

முடம் எனும் பொருளிலன்றி, வளைவு, கூன் எனப் பொருந்தும் வண்ணம் முடங்கு, முடந்தை, முடங்கல் ஆகிய சொற்கள் சங்க இலக்கியங்களில் கையாளப்படுகின்றன.

மாண்ட எறிந்த படைபோன் முடங்கி மடங்கி
(கலி. 94. 9)

என மனிதக் கூனும்,

கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி
முடங்குதா ளுதைத்த பொலங்கெழு பூழி (அகம். 63. 4-5)

பெருஞ்சே யிறவின் றுய்த்தலை முடங்கல் ... (நற். 358.7)

முடந்தை வரகின் வீங்குபீள் அருந்துபு. . . (அகம். 289.3)

என உயிரின - பயிரின வளைவும் தரப்பெறுகின்றன.

இவையனைத்தையும் நோக்க, ஒரே வேர்/அடியிலிருந்தே இவையனைத்தும் உருவாயுள்ளன எனவும் ஓரளவு ஒத்த பொருள் நிலையின எனவும் தெரிய முடிகின்றது. முட, முடம், முடவு, முடங்கு, முடங்கல், முடந்தை, முடவன் என்பன பொது நிலையில் காலில் ஏற்பட்ட ஊனத்தையும், அருகி முதுகில் ஏற்பட்ட கூனையும் உட்படுத்துகின்றன. இயங்க முடியாமை 'இருக்கை முடவன்', 'முடங்கிக் கிடந்த' என்பனவற்றில் உள்ளுறுத்தப் பெறலாம்.

காலில், அல்லது பொதுவாக - மொத்தமாக - உடலில் ஏற்படும் ஊன நிலையுடன், கையிலமையும் குறைபாடும் முடம் என்பதில் இணைத்துக் கருதப்படலாம். சங்க இலக்கியம் கைஇல் ஊமன் (குறுந். 58) என்பதில் அருகிய குறிப்பு வழங்குகின்றமை இங்குச் சுட்டத்தக்கது.

திவாகரம் முதலான நிகண்டுகளிலிருந்து, குணில், பங்கு, மொண்டி ஆகிய சொற்கள் கால்முடம் குறித்து வருவதை அறிய முடிகிறது. தமிழ் லெக்சிகன் முதலியன தரும் சுமார் 70 சொற்கள் (இணைப்பு) பலவகைப்பட்டு அமைகின்றன. இலக்கியப் பயிற்சியிலும் சில உள.

குறைத்தகை, கூழங்கை, கூழைக்கை, கையில், விகல பாணிகள் என்பன கைமுடம் குறிக்கத் தனியாக அமைகின்றன.

அனூரு, கஞ்சன், கால்முடம், குகதி, குணி, குணில், கோடம், சப்பாணி, சூன், சொத்தி, நொண்டி, பங்கம்,பங்கு, முட, முடங்கால், முடங்கி, முடத்தி, முடந்தை, முடம், முடவன், முடவாண்டி, முடவு, மொண்டி, லங்கடா என்பன பொதுநிலையின.

காலிலி, இரு காலும் இல்லாததையும், நொண்டிக் கால், ஒரு காலிலுள்ள குறையையும் குறிக்கலாம்.

உதறுகால், உதைகால், கட்டைக் காலி, கடப்புக் கால், கப்புக்கால், கப்பைக் காலன், கவட்டுக்கால், கவைக்கால், கிந்து காலன், சப்பைக் கால், தெற்றிக்கால், தெற்றுக்காலன், முட்டிக்கால், வள்ளக்கால், விற்கால் என்பன காலின் அமைப்புக் குறைகளையும் அதனால் நடப்பதில் ஏற்படும் செவ்வியின்மையையும் குறிக்கும். பின்னதைக் கால்வாங்குதல், கிந்துதல், குந்தி நடத்தல், தாங்கி நடத்தல், நொண்டுதல், நொடித்தல், முடவுதல் என்பனவும் காட்டவல்லன.

இலக்கியத் தரவுகள்

தமிழிலக்கியக் களனில் (12ஆம் நூற். வரை), முடவர் பற்றிச் சில கருத்துகள் கிடைக்கின்றன. போர், தண்டனை எனும் சூழலால் கை, காலிழந்து முடமாதல் தெரிகிறது. முடமாகிப் பிறத்தற்கான காரணம் கருதப்படுகிறது. முடவர் செயல், செயலின்மை பற்றி நினைந்தது காணப்படுகிறது. அருகி நோய் - மூப்பு என்பன முடத்தோடு இணைத்துக் காண்பிக்கப்படுகின்றன. செயற்கை உறுப்புப் பற்றிய எண்ணம் இருந்ததாக ஊகிக்க வாய்ப்பு அமைகின்றது. ஊன நீக்கம் என்பதும் இறைச் சூழலில் அருகிப் பெறப்படுகின்றது. ஊனர் வாழ்வியல் அல்லது மறுவாழ்வு, கல்வி, தொழில் பயிற்சி மற்றும் வாய்ப்பும் பற்றிய கருத்துகள் இருப்பதாகத் தெரியவில்லை. இக்கால நூல்களும் திட்டங்களும் இதற்கும் இடனளிக்கின்றன. ஊனர் புரப்புப் பற்றிய எண்ணம் உண்டு.

பிறப்பு

கருவின் மரபணுநிலை, தாயின் உடற்கூறும் உடல்நிலையும் போன்ற காரணங்களால் குழவியின் மூளையும் முதுகுத் தண்டும் இயல்பான செவ்வியுடன் உருவாகாத நிலையில் முடமான ஊனப் பிறப்பு அமைகின்றது.

வாதம்-அதாவது வாயு காரணமாகப் பிறவி இவ்வாறமையுமென,

> **“பாய்கின்ற வாயுக் குறையிற் குறளாகும்**
> **பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்**
> **பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும்”** (480)

என்ற திருமந்திர வரிகள் கூறும்.

மூளைவாதம் (cerebral palsy, spastics) பெரும்பாலும் பிறப்புக்கு முன், விரைவாக மூளை வளர வேண்டிய காலத்தில் ஏற்படும் பாதிப்பால் உருவாகிறது. அருகி பிறக்கும் போதும் 2, 3 வயதிலும் இது ஏற்படக்கூடும். உடலின் இயல்பான இயக்கத்தில் இதனால் கோளாறு ஏற்படுகிறது (motor dysfunction). மூளையின் இரு பக்கங்களுள் ஒரு பக்கத்தில் மட்டும் பாதிப்பு-சிதைவு அமைந்து ஒரு பக்க உறுப்பு கை/கால் - இயங்குவதில் சிக்கல் ஏற்படுவதுமுண்டு (hemiplegia). சில நிலையில், கையியக்கம் இயல்பாக அமைந்து, உடலின் கீழ்ப்பகுதி / கால்கள் செயலிழத்தல் ஏற்படுகின்றது.

முதுகுத் தண்டுக் குறைபாடு (spinabifida) கரு உருவாகும் மூன்றாம் / நான்காம் வாரத்திற்குப் பின், நரம்பு மடிப்புகள் இணைந்து நரம்புக் குழாய் (neural tube) உருவாக வேண்டிய நிலையில் ஏற்படும் சிதைவால் தோன்றுகின்றது. குறைபாட்டின் அளவுக்கேற்ப, கால்களின் செயற்பாடு பாதிப்புறுகின்றது. மூளை, முதுகுத்தண்டு ஆகிய முழு நரம்பு மண்டலம் உடலமைப்பில் முதன்மை பெறுவதால், இக்குறைபாடு காரணமாகத் தலைநீர் மிக்குப் பெருந்தலைநிலை (hydrocephalus) அமைவதும் உண்டு. இதனால் மூளையின் செயற்பாட்டில் செவ்வியின்மையமைந்து, எலும்புக்கட்டு, மூட்டு, தசை நார் இயக்கத்தில் குறைபாடேற் படுத்துகிறது. இது முடநிலையாக வெளிப்படுகின்றது.

வளர்நிலை

ஏற்கெனவே சுட்டியவாறு குழந்தையின் வளர்ச்சிப் பருவத்தில் இளம்பிள்ளைவாதம், முடக்கு வாதம் ஆகிய நோய்நிலைகளால் உடல் முடம்படுகின்றது. முடமும் நோயும் தொடர்புறுமாற்றை,

வீங்கும் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்கிய வாதமும் கூனு முடமதாய்
வீங்கு வியாதிகள் கண்ணில் மருவியே *(655)*

எனத் திருமந்திரம் சுட்டும்.

விட்டமின் டி ஊட்டச்சத்துக் குறைபாட்டால் உருவாகும் 'ரிக்கெட்' (குழந்தைக்கண நோய்) எலும்புகளையும், தசை நார்களையும், மூட்டுச் சவ்வையும் பாதித்து அவற்றைத் தம் வன்மை இழக்கச் செய்து வளைந்த வலுவற்ற கால் என்ற பாங்கை உருவாக்குகிறது. சுகாதாரமற்ற சூழல், கவனிப்புக் குறைவு, மக்கள் நெருக்கம், சரியான உணவு, வெளிச்சம், உடற்பயிற்சியின்மை என்பன குழந்தையை இந்நிலைக்குத் தள்ளுகின்றன. நோய் தாக்கும் போது, இத்தகு குழந்தைகட்குப் போதிய எதிர்ப்புச் சக்தி இன்மை, நிலைமையை இன்னும் மோசமாக்குகிறது. எலும்பு மற்றும் மூட்டுகள் காச நோயால் தாக்கப்படும்போதும் (bone and joint tuberculosis), மூட்டு வீக்கம் (arthritis) காரணமாகவும் முடநிலை உருவாகிறது. உடலின் இருக்கை நிலை செவ்வியற்றுத் தொடரும் போதும் (postural deformity) முடநிலை வரலாம் எனத் தெரிகிறது.

குழந்தை பிறக்கு முன்பிருந்தே தாயின் உடனலமும் சுகாதாரமும், பிறந்த பின் குழந்தையின் உணவு, சூழல், உடல்

நிலையும் தேவையான சத்துணவு - சமச்சீருணவு, தடுப்பு மருந்து, பயிற்சி, சுத்தம் இவற்றால் பாதுகாக்கப்பெற்று, பராமரிக்கப் பட்டால் முடமமைவதைத் தவிர்க்க - தடுக்க அல்லது குறைக்க முடியும்.

முதுமை

மூப்புப் பருவம் பொதுவாக உடலின் செயல்திறனைப் பல பாங்கிலும் பாதிக்கின்றது; பல ஊனங்கள், புலன் குறைபாடுகள் தோன்றுகின்றன. அதில் முடமும் உண்டு. காலின் செயல்திறன் குன்றுதலாக, கோல் காலாகி உதவுதலாக இது அமைகிறது.

> **முற்ற மூத்துக் கோல் துணையா முன்னடி நோக்கி வளைந்து**
> **இற்ற கால்போல் தள்ளி மெள்ள விருந்தங் கிளையாமுன் ...**
> (968)

என நாலாயிரமும்,

> **குந்தி நடந்து குனிந்தொருகை கோல் ஊன்றி**
> **நொந் திருமி ஏங்கி நுரைத்தேறி வந்துந்தி . . .** (3)

எனவும்,

> **கரம் ஊன்றிக் கண்இடுங்கிக் கால்குலைய மற்றோர்**
> **மரம் ஊன்றி வாய்குதட்டா முன்னம்** (21)

எனவும் ஐயடிகள் காடவர்கோனின் க்ஷேத்திரத் திருவெண்பாவும் இதனைக் காட்டும்.

தண்டனை

தண்டனையாக முடம் ஏற்படுவதைப் பிற்கால நொண்டி நாடகங்கள் காட்ட, முன்னிலக்கியக் காலத்தும் சில குறிப்புகள் கிடைக்கின்றன. இறையனாரகப் பொருளுரை, களவுக்குரிய ஒரு தண்டனையாகக் கைகுறைத்தலைச் சுட்டும்.

> **மற்று உலகத்துக் களவாயின எல்லாம் கைகுறைப்பவும்**
> **கண்சூலவும்பட்டுப் பழியும் பாவமும் ஆக்கி நரகத்**
> **தொடக்கத்துத் தீக்கதிகளில் உய்க்கும்** (ப. 25)

சிலப்பதிகாரம், பொற்கைப்பாண்டியன் கதையில் இதனைத் தரும். தானே தனக்குத் தண்டனையளித்தலாக இது வேறுபடும்.

> **வச்சிரத் தடக்கை யமரர் கோமான்**
> **உச்சிப் பொன்முடி யொளிவளை யுடைத்த கை**
> **குறைத்த செங்கோற் குறையாக்கொற்றத்து** (23. 50-52)

களவு என்றில்லாமல் வேறு தவறுக்கும் இது தண்டனையாதல் இங்குப் புலப்படும். கல்லாடமும்,

புதவு தொட்டெனத் தன் புயன்முதிர் கரத்தினை
வரன்முறை செய்த கூன்மதிக் கோவும் *(100. 5-6)*

என இதனை எடுத்து மொழியும். பெருங்கதை, வேடர் உதயணனை நலியுமிடத்து,

எவ்வழி யாயினு மெரியவித் தவ்வழிக்
காணலுறுதுங் காட்டா யாயின்
ஆண முன்கை யடுதும் யாமென
நன்கை யாத்தது *(156. 108-111)*

என எச்சரித்து மிரட்டுவதிலும் கைமுடம் தண்டனையாதல் புலப்படும். சினத்தால், கைகுறைத்தல் உறுப்பறையாதலைத் தொல்காப்பியப் பேராசிரியர் உரை தரும். (பொருள். 258).

சிவனடியார் கதைகளில், இறைக்குற்றம் நேர்ந்ததற்குத் தண்டனையாகக் கை, கால் தறிக்கப்படலைப் பெரியபுராணம் வழி அறியலாம்; தேவாரம் போன்ற பக்தி இலக்கியமும் இதனை எடுத்து மொழியும். சுந்தரரின் திருத்தொண்டத் தொகை,

மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா
லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன் ... *(3)*

எனவும்,

கை தடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி விரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன் *(7)*

எனவும் சண்டீசனாயனார் தந்தையின் காலை வெட்டியதையும்* அரசன் கழற்சிங்க நாயனார் தேவியின் கையை வெட்டியதையும் தரும். நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும்,

குலமேறிய சேய்ஞலூரிற் குரிசில் குரை கடல் சூழ்
தலமேறிய விறற்சண்டி கண்டீசர் தாதைதாள் இரண்டும்

---

* **சண்டீசர் கதை:** *அப்பர் தேவாரம் 65.6, 73.5, 187.8, 289. 9; சுந்தரர் தேவாரம் 16.3, 55.3, 88.6; திருவாசகம், திருத்தோணோக்கம், 7; ஒன்பதாம் திருமுறை - சேந்தன் திருப்பல்லாண்டு. 10; பதினோராம் திருமுறை - நக்கீர. போற்றி. 19-21, கபில. சிவ.திரு. இரட்டை 2, பட்டினத். கோயில் நான். 40.27-28.*

வலமேறிய மழுவால் எறிந்தீசன் மணிமுடிமேல்
நலமேறிய பால் சொரிந்தவர் சூட்டிய நன்னிதியே (22)

எனவும்,

மாதவத்தோர் தங்கள் வைப்பினுக் காரூர் மணிக்கு வைத்த
போதினைத் தான்மோந்த தேவிதன் மூக்கை யரியப் பொற்கைக்
காதிவைத் தன்றோ வரிவதென் றாங்கவள் கைதடிந்தான்
நாதமொய்த் தார்வண்டு கிண்டு பைங்கோதைக் கழற்சிங்கனே (64)

எனவும் இதனை விரிக்கும். பெரியபுராணம் சண்டேசுர நாயனார் புராணத்தில் முன்னதையும் (பெரிய. 4. 20. 51-52, 59), கழற்சிங்க நாயனார் புராணத்தில் (பெரிய. 10.53. 10,11, 13) பின்னதையும் விரிக்கும். மேலும், கலிக்கம்பர், சிவனடியார் தாள் விளக்க மனையாள் கரகநீர் வார்ப்பதில் செவ்வியின்மை காட்டியதால், அவள் கை தடிந்ததையும் இப்புராணம் தரும் (பெரிய. 8. 44. 8.10).

வெறித்த கொன்றை முடியார் தம் அடியார் இவர் முன் மேவுநிலை
குறித்து வெள்கி நீர்வாரா தொழிந்தாள் என்று மனங்கொண்டு
மறித்து நோக்கார் வடி வாளைவாங்கிக் கரகம் வாங்கிக் கை
தறித்து கரக நீரெடுத்துத் தாமே அவர்தாள் விளக்கினார் (8)

என அப்பகுதி அமையும்.

மனிதர் மனிதர்க்களிக்கும் தண்டனையாகவன்றி, இறைவர் இறைவர்க்கு/பிறர்க்கு அளிக்கும் தண்டனையாகவும் முடப் படுத்துதல் அமைவதை இலக்கியத் தரவுகள் உணர்த்தும். திருமந்திரம்,

அரி பிரமன் தக்கன் அருக்க னுடனே
வருமதி வாலை வன்னி நல்இந்திரன்
சிரமுகநாசி சிறந்த கைதோள் தாள்
அரனருள் இன்றி அழிந்த நல்லோரே (358)

எனச் சிவன் செயலாகத் தேவர், கை, தோள், தாள் முடமாக்கியதைத் தரும். அக்கினியின் கை தறித்தது,

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்தீ பற

(திருவாச.திருவுந்தி. 7)

எனவும், இந்திரனின் தோள் நெரித்தது,

இந்திரனைத் தோள் நெரித்திட்டு . . .

(திருவாச. திருவம். 15)

புரந்தரன் தன் தோள் துணித்த புனிதா . . .

(அப்.தேவா. 2452)

இந்திரனைத் தோள் முரிவித்து அருள் செய்தான் . . .

(அப். தேவா. 266. 9)

இந்திரனைத் தோள் முரித்த விறைவ னூர்

(சுந்.தேவா. 162)

எனவும், யமனின் கால் தறித்தது,

நமனையொரு கால்குறைத்த நாதர் போலும்

(அப்.தேவா. 267. 2)

உச்ச நமன் தாளறுத்தார் . . . (அப்.தேவா. 310. 9)

எனவும் பயின்றன. தக்கனது வேள்வியில் பெருந்தேவர் தோள், கரம் பீடழியச் செயற்பட்டதைச் சுந்தரர் தேவாரமும் (16. 9) நம்பியாண்டார் நம்பி பாடலும் (விநா. 6) சுட்டும். எதிர்த்துப் பொருதவரைத் தண்டித்து அடக்குதல் என்பது இவற்றிலமையும். இறையருளால், ஏற்பட்ட ஊனம் நீங்குதல் என்பதும் இவற்றிலமையும்.

போர்

போரில் ஏற்படும் கை, கால் முறிவுகளும் முடநிலையை உருவாக்குகின்றன. கம்பராமாயணப் போர்க்களக் காட்சிகள் இங்குச் சுட்டத்தக்கன. இறைச்சார்பு அமைவதால் தண்டனை என்ற கோணத்திலும் இணைத்துப் பார்க்கலாம். நாலாயிரம் சுருக்கமாக 'இலங்கைக் கோன் சிரமும் கரமும் **துணித்து**' (1702), 'அரக்கன் உரமும் கரமும் **துணித்த**' (1801) எனத் தருவதுண்டு. கரன் முதலியோர் வதை பற்றி 'உம்பியர் தோளும் தாளும் சின்னபின்னங்கள் செய்த' (5202) எனவும், கும்பகருணன் வதையில் 'கை இரண்டொடு கால்களும் துணிந்தன' (7619) எனவும், களக் காட்சியில் 'கை அற்றார் கால்கள் அற்றார்' (8100) எனவும்

இராமாயணத்தில் பயின்றது.* கும்பனொருவனே கை, கால் அற்ற நிலையிலும் போரிட்டுச் செயற்படுவது தரப்படுகிறது.

புரத்தல்

ஊனரைப் பற்றிய கரிசனை, அவர் புரக்கப்பட வேண்டும், அவர் தேவை நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற சிந்தனைக்கும் இடமமைகின்றது. காவல் வினைமேற் செல்லும் தலைவன் பிரிவு, முடவர் போன்ற ஊனர் குறைகேட்கவும் திருத்தவும் அமையக் கூடும் என்பதை இறையனார் அகப்பொருள் உரை உணர்த்தும்.

> **நாட்டகத்து நின்றும் நகரத்துத் தமக்கு உற்றது உரைக்கலாத மூத்தார்களும் பெண்டிர்களும் இருக்கை முடவரும் கூனரும் குருடரும் பிணியுடையாரும் என இத்தொடக்கத்தார் தம் முறைக்கருமங் கேட்டுத் திருத்துதற் பொருட்டாகவும்.... பிரியும் என்பது (ப. 159)**

மணிமேகலை, கால் முடப்பட்டோர் (13. 111), கால் முடமானோர் (28. 222) என்போரை உணவளித்துப் புரக்கப்படுவோர் பட்டியலில் தந்தது.

செயற்கை உறுப்பு

கை கால் இழந்தவர்க்கு அக்குறைபாட்டை மேற்கொள்ளச் செயற்கை உறுப்பு (prosthesis) பொருத்தப்படல் நடைமுறையில் காணப்படுகிறது. இலக்கியக் களம் இது பற்றிய ஊகத்திற்கே இடமளிக்கின்றது. புதவு தொட்டதால் கை தறித்துக் கொண்ட பாண்டியன் 'பொற்கைப் பாண்டிய' னெனப்படுவதால், பொன்னால் செயற்கைக் கையுறுப்புச் செய்து பொருத்தப்பட்டதாகக் கருதலாம். 'கொற்கையான் மாறன் குலசேகர வழுதி, பொற்கையானான கதை போதாதோ என்றார் பிறரும்' எனச் சிலம்பில் இச்செய்தி வருமிடத்து உவே.சா. குறிப்பு எழுதுவார் (ப. 499) 'பொற்கை . . . பாண்டியன்' தொல்காப்பிய இளம்பூரணர் உரையிலும் (களவியல் தொடக்கம்), சுட்டப்படுவதையும் அவர் தருவார் (ப. 21)

மரக்கால் பற்றிய சொல்லாட்சியும், குறிப்பும் முடக் காலுக்கும் இவ்வாறு செயற்கை உறுப்புப் பொருத்தப்பட்டதை உணர்த்தலாம். 'ஆடு பணைப் பொய்க்கால்'.எனப் பழமொழி (284) மூங்கிலால் செய்யப்பட்ட இதன் நிலையை உணர்த்தும்

---

* பிற வருகைகள், 7616, 7617, 7618, 7620, 7622, 7834, மிகை. 703.

மரக்காலாடல் (சிலம்பு. 659) என்பதில் போல, இது ஆடலுக் குரியதுமாகலாம்.

கருத்து விளக்கம்

முடவர் பற்றிய காட்சி, அவர் செயல், உவமையாக, கருத்து விளக்கம் தரக் கவிஞரால் கையாளப்படுதல் உண்டு. சங்கக் களன் தரும் இருக்கைமுடவனும், கையில் ஊமனும், செயலற்ற நிலைக்கு விளக்கமாகும்.

கொடுங்குன்றின் நீள்குடுமி மேல்
தேன்விரும்பும் முடவனைப் போல் (திருக்கோவை. 150)

என்பதும் 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படல்' என்ற பாங்கைப் புலப்படுத்தும். செல்லலாகா நெறியின் கண் செல்வதைக் கடியுமிடத்து,

கடுப்பத் தலைகீறிக் காலும் இழந்து
நடைத்தாரா என்பதூஉம் பட்டு – முடத்தோடு
பேர்பிறிதாகப் பெறுதலால் போகாரே
நீர்குறிதாகப் புகல் (பழமொழி, 189)

எனவும், கல்லாதார் பற்றிய விளக்கத்தில்,

கற்று ஆற்றுவாரைக் கறுப்பித்துக் கல்லாதார்
சொல்தாற்றுக் கொண்டு சுனைத்து எழுதல் எற்றெனின்
தானும் நடவான் முடவன் பிடிப்புஊணி
யானையோடு ஆடல் உறவு (பழமொழி, 16)

எனவும் பழமொழி பயன்கொள்ளும். நீலகேசி, ஏனைத் தத்துவங்களின் பொருந்தாமையை விளக்கும் சூழலில், 'குருடனும் பங்குவும்' கூடியமையும் நிலையைப் பயன்கொள்ளும் (762).

நிறைவு

பிற ஊனங்களை நோக்க முடம் பற்றிய இலக்கியக் குறிப்புகள் எண்ணிக்கையில் குறைந்து அமைகின்றன.

எச்சம் எட்டல்ல; அதில் முடம் போன்ற பிறவும் சேர்க்கப்பட வேண்டும்.

நொண்டி நாடகம் போல முடவன் முதன்மைப் பாத்திரமாகக் காட்டப்படல் எடுத்துக் கொண்ட இலக்கியக் களனில் புலப்படவில்லை.

தண்டனையும் ஊனமும் தொடர்புறுமாற்றை முடம் என்பதிலும் காணமுடிகிறது.

இணைப்பு

முடம்தொடர்பான சொற்கள்

அனூரு
உதறுகாலி
உதைகால்
கஞ்சன்
கட்டைக்காலி
கடப்புக்கால்
கதவடிகாரர்
கப்புக்கால்
கப்பைக்காலன்
கவட்டுக்கால்
கவைக்கால்
கவைத்தாள்
கவையடி
கால்பின்னு
கால்மடக்கு
கால்வாங்கு
கால்விழுந்துபோதல்
காலிலி
கித்துதல்
கிந்துதல்
கிந்திநடத்தல்
கிந்துகாலன்
குகதி
குணி
குணில்
குந்திநட
குந்திநிற்றல்
குந்துதல்
குந்து
குந்துகாலன்
குறைத்த கை
கூழங்கை
கூழைக்கை
கெந்து
கொந்து
கோடம்
சந்து போனவன்
சப்பாணி
சப்பைக்கால்
(சில்லு)
சூன்
சூனியவன்
சொத்தி
சொத்தியன்
தாங்கிநட
தாங்குதல்
தெற்றிக்கால்
தெற்றுக்கால்
தெற்றுக்காலன்
நொடித்தல்
நொண்டி
நொண்டிக்கால்
நொண்டித்தனம்
நொண்டுதல்
பங்கம்
பங்கு
மடிகாலி
முட்டிக்கால்
முட்டிக்கால் தட்டுதல்
முட்டிக்காலன்
முட்டுக் கால்தட்டுதல்
முடங்கி
முடங்குதல்
முடத்தி
முடந்தை
முடம்
முடவன்
முடவாண்டி
முடவுதல்
முழங்கால் முட்டி
மொண்டி
லங்கடா
வள்ளக்கால்
விகலபாணிகன்
விற்கால்

மாவும் உறுப்பில் பிண்டமும்

எண்வகையாக அமையும் எச்சங்கள் பற்றிய முதற் பட்டியல் முதலாகவே, 'சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும் மாவும் மருளும் . . .' (புறம். 28, 1-3) என, ஊன வகைகளான மா, உறுப்பில் பிண்டம் என்பன சுட்டப்படுகின்றன. தமிழ் லெக்சிகன், மா என்பதை, 'விலங்கு வடிவமாய்ப் பிறக்கும் மானுடம்' (தொகுதி 5, ப. 3142) எனவும், உறுப்பில் பிண்டம் என்பதை, 'கருவில் வடிவுறுமுன் சிதைந்த தசைப் பிண்டம்' (தொகுதி 1, ப. 485) எனவும் விளக்குகின்றது. இவையிரண்டில் முன்னது கற்பனைச் சார்பு காட்டுகின்றது. மனிதனுக்கு விலங்கு பிறக்காது. மரபணுச் சிதைவு போன்ற காரணங்களால் உறுப்பில் பிண்டம் பிறக்கலாம். ஆனால், மருத்துவ நிலையில் இவை உயிர்ப்புடையன ஆகாது; உயிர் வாழாது. எனினும் ஏதேனும் அகப்புறக் காரணங்களால், தாய் உட்கொள்ளும் மருந்து, கதிர்வீச்சு, சுற்றுச் சூழல் மாசு, விபத்து, சிக்கலான பிரசவம் போன்றவற்றால், இயல்பான மனிதக் குழவிச் சாயல்/உறுப்பமைப்பின்றிப் பிறக்க, குறைந்த-அருகிய வாய்ப்பு காணப்படுவதால் இவையும் கருதப்பட்டிருக்க வேண்டும்.

தரவுகளைப் பார்க்கும்போது பயனற்ற பிறவி 'பேதைமை அல்லது ஊதியம் இல்' - எனக் கூறத்தக்க பாங்கின இவற்றில் அருகியன்றி சுட்டுப்பெறவில்லை. மேலும், குருடு, செவிடு, முடம், கூன், குறள், ஊம் போன்ற பிற ஊனங்கள், வேறு சொற்களாலும் குறிக்கப்படும் நிலை காணப்படுவது, இவற்றில் இல்லை என்றே கூறலாம். நிகண்டுகளைப் பார்க்கும்போது, ஆசிரிய நிகண்டு ஊனப்பட்டியலில் உறுப்பில் பிண்டம் என்பதைக் குறிப்பிடவேயில்லை; உரிச்சொல் நிகண்டு, துறுபிண்டம் எனச் சிறு வேறுபாட்டுடன் தந்தது. மா என்பதற்கு மாற்றுச் சொல் - பரியாயச் சொல் - நிகண்டுகளின் ஊனப் பட்டியலில் காணப்படவில்லை. சூடாமணி நிகண்டு மட்டும் 'மா' என்பதை எண்பேரெச்சத்துள் ஒன்றாகத் தர, பிற - திவாகரம், ஆசிரிய நிகண்டு, பொருட்டொகை நிகண்டு, உரிச்சொல் நிகண்டு போன்றன - இத்தகு ஊனப் பிறப்பைச் சுட்டாதே விட்டன. தமிழ் லெக்சிகன் வழி, குறைப்பிள்ளை, முதிராப் பிண்டம், மோகை ஆகியவற்றை உறுப்பில் பிண்டம் என்பதற்கு ஓரளவு இணையாகப் பெற முடிகிறது. மா என்பதற்கு

அங்கும் வருகை இல்லை. ஆனால் புராணப் பாத்திர நிலையில், தேவ, அசுரச் சார்பில், விலங்குமுகம் - மனிதன் போன்ற உடல் என்ற பாங்கில், அத்திமுகத்தோன், அயக்கிரீவன், ஆனை முகன், கயமுகன், கரிமுகன், கிம்புருடர், கின்னரர், பரிமுக மாக்கள், புரவித்தேவர், புருடமிருகம், புலிப்பாதர் (வியாக்கிர பாதர்), மகண்மா போன்ற சொல் வருகைகள் அங்குக் காணப்படுகின்றன.

உறுப்பில் பிண்டத்தைச் சுட்டிய புறநானூறே, ஓரளவு ஒத்த பிறிதொரு வருகையைப் பெறக் களன் வழங்குகிறது.

குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள்அன்று என்று வாளில் தப்பார் (74. 1-2)

என்பதில் வரும் ஊன்தடி, உறுப்பில் பிண்டம் எனக் கொள்ளலாம். ஆள் அன்மை, பிறத்தல் என்பன இதன் பயனில் பிறப்பு நிலையைப் புலப்படுத்துகின்றன. பிற்காலக் காப்பியங்களுளொன்றான சூளாமணி, 'ஊனிலா உறுப்பமைய' (2066) என்பது, 'மாமிச பிண்டமில்லாத அங்கம்' என உரைக் குறிப்புப் பெறுவதும் இங்குக் கருதற்குரியதாகலாம்.

மா, பொதுநிலையில் விலங்கைக் குறிக்கும். மாவும் மாக்களும் ஐயறிவினவே (தொல். 1531) என ஒரிணையாக்கப்படலும், மனிதனைச் சமூகவிலங்கு எனக் கூறலும், 'ஆன் இயல்பார்ப்பன மாக்கள்' என ஒப்பாக்கலும் உண்டு. வேறுபடுத்திக் காணல் 'விலங்கொடு மக்கள் அனையர்' (குறள். 410) என்பன போன்ற இடங்களில் அமையும். உயர் திணை என்மனார் மக்கட் சுட்டே (தொல். 484) என விதந்தோதிய பின்பும், 'விலங்கு போன்ற பிறப்பை' இணைத்தல் இலக்கியச் சார்பில் அமையும்.

இயற்கையில் காணப்படுவதற்கு வேறாகவுள்ள இவ்விணைவு ஊனச் சார்பன்றியே பெரும்பாலும் காணப்படுகிறது. யானையும் சிங்கமுமான விலங்குகளின் கலப்பாக அமையும் யாளி (குறிஞ்சிப். 252) அல்லது ஆளி (பொருந. 139), ஆணின் தலையும் பறவையின் உடலுமுடைய ஆண்டலை (மணி. 6.77) என்பன போன்ற கற்பனை இணைவுகள் இதற்கு அடித்தளம் அமைத்திருக்கலாம். அன்றியும் மக்கள், தேவர், நரகர் என இணைத்து அமைப்பதில், மக்கள் தவிரப் பிறரில் - புராணச் சார்பில் விலங்குச் சேர்க்கை காணப்படுவது மகிடாசுரன் (எருமைத்தலை, அரக்க உடல்), நரசிங்கம் (சிங்கத் தலை, தேவருடல்) போன்றவற்றில் வெளிப்பட்டு, அதனை மக்கட்கும் விரிவு செய்திருக்கலாம். நரசிங்கம், மடங்கல் எனச் சிலம்பில் (17.34.4) குறிக்கப்படுவதும்

மாமயிடன் (1291) என மகிஷாசுரன் அங்குச் சுட்டப்படுவதும் இங்குக் கருதலாம்.

பிறப்பிலமையும் மனித விலங்கு இணை பற்றிய இலக்கியச் செய்திகளை மூவகையாகப் பகுக்கலாம். ஒன்று, விலங்குக்கு மனிதன் பிறப்பது. ஆபுத்திரன் சான்று. மற்றொன்று, தேவைக்கு விலங்குரு மாற்றுவது. கண்ணகி கூறும், குரக்குமுகமாக்கிக் கொண்ட பத்தினிப்பெண் சான்று. மூன்றவாது, மான்முகன் என மயன் கூறப்படுவது போன்றது. இவை எதுவும் ஊனப் பார்வையிலுட் படாதன என்பது வேறு. இம்மூன்றாம் வகையில் தேவர்-அசுரர் போன்ற பகுப்பும், வருணனை, போர் போன்ற சூழல் வகுப்பும் பார்க்கப்படலாம். காப்பியம் போன்ற இலக்கியங்களிலுள்ள வருகை ஒரு விதமாகவும், பக்திச் சார்பின் இலக்கியங்களிலுள்ள வருகை சற்று மாறுபட்டும் அமைவதுண்டு. மீவியல் பார்வையே இவற்றில் பொருந்துகின்றது.

மணிமேகலை கூறும் ஆபுத்திரன், சாலி என்பவளின் புதல்வன். பிறந்தது முதல் ஏழுநாளளவும் ஒரு பசு பாலூட்டி வளர்த்தமையால் அப்பெயர் பெறுகின்றான். அவன் இறந்த பின்பு, சாவக நாட்டிலுள்ள நாகபுரத்தில், பசு வயிற்றின் பொன் முட்டையில் தங்கிப் பிறந்து புண்ணியராசனென்று பெயர் பெறுகின்றான்.

> **ஆங்கு அவ்ஆவயிற்று அமரர் கண முவப்பத்**
> **தீங்கனி நாவல் ஓங்கும் இத்தீவினுக்கு**
> **ஒருதானாகி உலகு தொழத் தோன்றினன்.** (மணி. 15.19-21)

இவ்வாபுத்திரனின் கூற்று, பிற விலங்குவயிற்றிற் பிறந்தவரையும் சுட்டும்.

> **ஆன்மகன் அசலன் மான்மகன் சிருங்கி**
> **புலிமகன் விரிஞ்சி புரையோர் போற்றும்**
> **நரிமகன் அல்லனோ கேச கம்பளன்**
> **ஈங்கு இவர் நும்குலத்து இருடி கணங்கள் என்று**
> **ஓங்கு உயர் பெருஞ்சிறப்பு உரைத்தலும் உண்டால்**
> **ஆவொடு வந்த வழிகுலம் உண்டோ** (மணி. 13. 63-68)

பசுவயிற்றில் பிறந்த அசலன்; மானின் மகனாகிய சிருங்கி; புலியின் பிள்ளையாகிய விரிஞ்சி; நரியின் மகனான கேச கம்பளன் என்பவர் இங்கமைகின்றனர். இப்பாங்கு பிற நூல்கள் சுட்டாததாகும். சாதாரண மக்களாக அல்ல, ரிஷிகளாக இவரமைவர்.

தற்காலிகமாக ஒரு பெண் குரங்கின் முகத்துடன் அமைவது சிலப்பதிகாரம் தரும் சாட்சி.

வேற்றொருவன்
நீள்நோக்கம் கண்டு நிறை மதி வாண்முகத்தைத்
தான் ஓர் குரக்குமுகம் ஆக என்று, போன
கொழுநன் வரவே குரக்குமுகம் நீத்த
பழுமணி அல்குல் பூம்பாவை *(21.19-23)*

இது பிறப்பாக அன்றி, தானே கருதிச் செய்யும் முகவுருமாற்றமாக அமைகின்றது. கவுந்தியடிகள் கூற்றில் வரும் வானவன், முன்னொரு பிறப்பிலமைந்த குரங்கு உருவை நினைவுகூர, குரங்குக் கையுடன் அமைதலும் மற்றொரு நிலையில் இங்கு இணைத்துக் காணத்தக்கது (15. 151-197). கவுந்தி சாபத்தால் வம்பப் பரத்தை வறுமொழியாளன் ஆகியோர் நரியாக மாறுவதும் சிலம்பு தரும் செய்தி.

பக்தி நூல்களும் காப்பியங்களும் காட்டும் மா, பின்புலக் காட்சியிலோ, முன்புல வருணனையிலோ அமையும். பாத்திரப் பாங்கும் சிலவற்றில் வெளிப்படும். கடவுட் சார்பும் பொருந்தும். தேவாரம்,

உள்ள மிக்கார் குதிரை முகத்தார் ஒரு காலர்கள்
எள்கல் இல்லா இமையோர்கள் சேரும் இடம்
என்பரால்
(250.4)

எனத் திருக்கேதாரத்தைத் தருவதும், நீலகேசி, 'யாமத்து ஈண்டு வந்து ஆண்டலை மாண்பில அழைக்கும்' (29) எனத் தருவதும் இடவருணனை சார்ந்து அமையும். சித்திரகூடத்தின் அழகுகளைச் சீதைக்குக் காட்டிச் செல்லும்போது, இராமன், 'பளிக்கு அறை சிலபரிமுக மாக்களைப் பாராய்' (கம்பன். 2056), 'பாடுகின்றன கின்னர மிதுனங்கள் பாராய்' (2057) என்பதும் அது.

காப்பியப் பாத்திரமாக வருவதில் கம்பனில் குறிப்பிடற் குரியவர் கலைக்கோட்டு முனி. கலைமாமுகச் சிருங்கன் (மிகை. 25) ஒரு கலைமாமுகச் சிருங்க உயர்தவன் (211), 'மாந்தர்கள் விலங்கு என்று உன்னும் மனத்தான்' (212) எனப் பலவாறு இவர் குறிக்கப் படுகிறார்.

கடவுளர் சிலர் விலங்கு முகத்தினராகக் காட்டப்படல் உண்டு. அப்பர் தேவாரம், கைவேழ முகத்தவன் (267.4) தண் கடமா

முகத்தினான் (2799), ஆனை முகன் (238.7) எனவும்; நம்பியாண்டார் நம்பியின் விநாயகர் திருவிரட்டை மணிமாலை, அத்தி முகத்தன் (1), முகத்தாற் கரியன் (2), களிறு முகத்தவனாய் (5) எனவும்; நந்திக் கலம்பகம் 'கரியின் முகவனை' (1) எனவும் தருவதில் விநாயகர் குறிக்கப்படல் அமையும். கம்பன், வானவருள் ஒருவனான மயனை, மான் முகன் (9956, 10231), மான்முகத்து ஒருவன் (10318) எனச் சுட்டுவான். கல்லாடம், ஆம்பன் முகஅரக்கன் (5), முடங்கு உளை முகத்துப் பஃறோள் அவுணன் (6) என அரக்கரைக் குறிக்கும்.

அசுரரின் போர்களில், பல்வகை விலங்கு முகமுடைய வரைக் கம்பனில் காணலாம்.

குஞ்சரம் குதிரை பேய் குரங்கு கோள் அரி
வெஞ்சிகை கரடி நாய் வேங்கை யாளிஎன்று
அஞ்சுற கனல் புரை முகத்தர் (2919)

கரிபரி வேங்கைமாக் கரடி யாளி பேய்
அரிநரி நாய் என அணி முகத்தினர் (5127)

ஆளி மாமுகவர் சீறும் அடுபுலி முகவர் மிக்க
யாளி மாமுகவர் யானை முகவர் மற்று எரியும் வெங்கண்
கூளி மாமுகவர் ஆதி அளப்பு இலகோடி உள்ளார்
ஊழி சென்றாலும் உட்கார் ஒருவர் ஓர் அண்டம்
உண்டார்
(மிகை. 919)

உடலாற்றல் பற்றிய குறியீட்டு வெளிப்பாடாக இவை அமைகின்றன.

திருவாசகம், 'ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக் கூட்டின வாபாடி உந்தீபற' (திருவுந்தி. 11) எனத் தருவது காணப் படுகிறது. ஷேக்ஸ்பியரின் நடுவேனில் இரவுக்கனவு தரும் கழுதைத் தலையனை (Midsummer night's dream - Ass headed bottom) இங்கு நினைக்கலாம். இவ்வாறு மா பற்றிய காட்சிகள், எச்சப் பட்டியலில் புறநானூறு தரும் மா என்பதுடன் இணைமை காட்டாதே பெரும் பாலும் வருகின்றன.

மருள்

பெயர்ச் சொல்லாகவும் வினைச் சொல்லாகவும், 'மருள்' பயன்படுகின்றது. வினை வடிவில் மயங்குதல், வெருவுதல், வியத்தல், ஒப்பாதல் எனும் பொருண்மையும்; பெயர் நிலையில் மயக்கம், திரிபுணர்ச்சி, வியப்பு, உன்மத்தம், கள், குறிஞ்சி யாழ்த்திறம் எட்டனுள் ஒன்று, மருளிந்தளம், எச்சம் எட்டனுள் பிறவி முதல் அறிவின்றி மயங்கியிருக்கும் நிலை, பெருங்குரும்பை, புதல், பேய், ஆவேசம், புல்லுரு எனும் பொருண்மையும் உடையதாகத் தமிழ் லெக்சிகன் வழி அறிய முடிகிறது (தொகுதி 5, ப. 3096). 'பிறவி முதல் அறிவின்றி மயங்கியிருக்கும் நிலை' என்பதைச் சுருக்கமாக **அறிவுமருள்** எனக் குறிக்கலாம். அறிவூனம் என்பதும் இது.

மருள் எனும் சொல் வருகை, தொல்காப்பியம், சங்க இலக்கியத்தில் பயின்ற போதும் ஊனநிலையான அறிவு மருளைச் சுட்டி அருகியன்றி வரவில்லை. மயக்கம்/மயங்குதல், திரிபுணர்ச்சி, உன்மத்தம் என்ற மருளின் பொருள் நிலைகள் அறிவு மருளை, மனநோய் நிலையினதாகப் புரிந்து கொள்ள உதவுகின்றன. தெளிவு பெற முடியாத அறிவுக்குழப்பம், மனப்பிறழ்ச்சி என இதனை உணரலாம். மனவளர்ச்சி குன்றிய பாங்கு (mental retardation) எனவும் அறியலாம். எச்சம் என்பதால் இது பிறவிக்குறையான போதும், பின்பும் - தாற்காலிகமாகவும் கூட ஏற்படக் கூடியதாகும்; விபத்து, உளச்சிக்கல் போன்றன காரணமாக இது அமையும். இயல்பான மனிதர்க்குரிய எண்ணம், சொல், செயல் இவரிடமமையாது; அறிவு பூர்வமான சிந்தனை (rational thinking), மொழித்திறன் (linguistic capacity), செயற்பாடு (action) என்பன இன்றி, மாறுபாடான வெளிப்பாடு கொள்வதால் 'பேய் பிடித்தவ'ராகவும், 'பைத்தியம் பிடித்தவ'ராகவும் கருதப்படுவர். முற்றிய நிலையான இதற்கு அகன்று, புத்திக்கூர்மை இன்மையும் மருள் என்பதில் உட்படும்.

புத்திக்கூர்மையின் (intelligence quotient IQ) ஒரு சீரான அளவு 100 எனச் சுட்டப்படுகிறது. அது கூடும்போதும் குறையும்போதும் இயல்புக்கு மாறானதாக (abnormal) உணர்த்தப்படுகிறது. ஐக்யூ எண் மிகும்போது 'அதிபுத்திசாலி' (genius) என்பது உருவாகும்; குறையும்போது 'மடமை' (fool)

தென்படும். இம்மடமையிலும் மக்கு (moron), முட்டாள் (imbecile), மூடன் (idiot) எனும் படிநிலைகள்/அடுக்குகள் அமைந்து மருளின் பல தளங்களைக் காட்டும். சிறிதே அறிவுக் குறைபாடுள்ள நிலையில், மற்ற மக்களோடு உடனுறையவும் உழைக்கவும் தக்கவராக அமைய, மிக்கக் குறைபாடுடையவர் பாதுகாப்பான நிலையில் (institutionalised) வைக்கப்பட வேண்டியவராக அமைவர். இவர் தமக்கும் பிறருக்கும் ஆபத்து விளைவிக்கக் கூடியவராகக் காணப்படுவர்; தம்மைத் தாமே கவனித்துக் கொள்ள இயலாதவராகவும் இருப்பர்.

மக்கள் மனநலமுடையோராக இருத்தல் என்பது ஒரு நாட்டின் மனித வள மேம்பாட்டில் மிகத் தேவையான கூறாகும். இந்திய மக்கட் தொகையான சுமார் 100 கோடியில், சுமார் ஒரு மில்லியன் ஆட்கள் (10 லட்சம் பேர்) மன நோயால் பீடிக்கப் பட்டவராக உள்ளனர். நரம்பு மண்டலத்தில் ஏற்படுகின்ற பாதிப்போ (nervous disorders), உணர்வுக் குழப்பமோ (emotional disorders) மனநோயை உருவாக்கலாம். இந்தியாவில் மனத்திறன் குறைந்தோராக (feeble minded) உள்ளோர் பற்றிய சரியான கணக்கீடு இல்லை. எனினும், அத்தகைய இளம்பருவத்தினரின் கல்விக்கும், இளவயதினரின் தொழில்நுட்பப் பயிற்சி-கல்விக்கும், நிறுவனங்கள் வழி திட்டங்கள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன. அரசும் தனியார் அமைப்புகளும் இத்தகையோர் மறுவாழ்வுக்கும் (rehabilitation), வேலைவாய்ப்பு வழி பொருளாதாரப் பின்தாங்குதலுக்கும் பொறுப்பான சமூக உறுப்பினர் ஆகுவதற்கும் நேராக உதவுகின்றன.

தொல்காப்பியம் உவமவியலில் 'மருளறு சிறப்பு' (தொல்.பொருள். 280.2), மருள (282.8;286.1) என, மயக்கம் எனும் பொருளிலும் உவம உருபு எனும் பயன்பாட்டிலும் இதனைத் தருகின்றது. அறிவுமருள் பொருண்மை இங்கு இல்லை. அறியாமை, அறிவு திரிதல் எனும் பொருண்மை உரியியலில் எய்யாமை, துயவு எனும் சொற்களால் குறிக்கப்படுகின்றன.

எய்யாமையே அறியாமையே (825)

துயவு என் கிளவி அறிவின் திரிபே (851)

இவையும் மருள் பொருளின் முழுமையின அல்ல. அறியாமையைக் குறிக்கும் பேதை, மடம் போன்ற சொற்களும் சூதுவாது இல்லாத (innocent), நுண்ணறிவில்லாத (ignorant) எனப் பொதுமையே கொள்கின்றன. அறிவூனத்தைக் குறிப்பன அல்ல. எனினும் உளச்சிக்கல், மன அழற்சி எனக் கருதத் தக்கனவான சில குறிப்புகள்

கருதிப் பார்க்கப்பட முடிகின்றது. ஏதேனும் சூழல் பிரச்சினை காரணமாக, அறிவு/மனம், போதிய தெளிவின்றி அமைதலாக மனம் பேதலித்தலாக இதனை உணரலாம்.

புறநானூறு, எண்பேரெச்சத்துள் ஒன்றாக மருள் என்பதைச் சுட்டுகின்றது (புறம். 28.3). தொடர்ந்த காலத்தில் மணிமேகலை ஆறு ஊனங்களைக் கூறும்போது இதனையும் தருகின்றது.

கூனுங் குறளு மூமுஞ் செவிடும்
மாவும் மருளும் மன்னுயிர் பெறாஅ (மணி. 12. 97-98)

திருக்குறள், 'மருளானாம் மாணாப் பிறப்பு' என்ற அடியை இருமுறை தருகிறது (351, 1002); அத்துடன் 'மருள் தீர்ந்த மாசறு காட்சியவர்' (199), 'மருள் நீங்கி மாசறு காட்சி யவர்க்கு' (352) என்ற ஆட்சிகளையும் அளிக்கிறது. 'ஐயந்திரிபற உணர முடியாமை' இங்கு மருளாக உணர முடிகிறது. மாண்பில்லாத பிறப்பாக மருள் கருதப்படலின் தொடர்ச்சியும் இதில் விளங்குகிறது.

சங்க இலக்கியத் தொடர்களில், மருள் தீர்ந்து மயக்கு ஒரீஇ (புறம். 362.11), மருளறு தேர்ச்சி முனைவர் (பரி. 1.30), மருளுறு நோயொடு மம்மர் அகல (கலி. 140. 32) போன்றன மன மயக்கத்தை உணர்த்துகின்றன. மருளி நெஞ்சம் (அகம். 361. 9; கலி. 122. 15), மருளி மட நோக்கம் (கலி. 14.11, 61.16), மருளியான் மருளுற (கலி. 59.10), மன்னிய நோயொடு மருள் கொண்ட மனத்தவர் (கலி. 143. 57), மருள் கூர்பிணை போல் மயங்க வெந்நோய் செய்யும்' (கலி. 146. 32) என்பனவும் இதனை ஒரு மனநிலையாக, உளநோய் நிலையாக உணர உதவுகின்றன. 'அடாஅ நறவுண்டார் போல மருள்' (கலி. 147. 54) என்பதால் (தாற்காலிகமாகக்) கள்ளுண்ணலால் மருள் ஏற்படலை உணர முடிகிறது.

பேதைமை, மடமை என்பன அறிவுக்குறைவைச் சுட்டி வருவது, 'சொல்லறியாப் பேதை மடவை மற்றெல்லா' (கலி. 114.8), கடவுள் ஆயினும் ஆக மடவை மன்ற வாழிய முருகே (நற். 34, 10-11), மடவை காண் நல் நெஞ்சே (ஐந்.ஐம். 39.1), ஓம்பா மடமை மடவார்கண் உண்டு (குறள். 89), வேலன் மடவன் அவனினும் தான்மடவன் ஆலமர் செல்வன் புதல்வன் (சிலம்பு. 24.13) போன்ற தொடர்களில் வெளிப்படும்.

மனம் பேதலித்தல், துன்பம் மிகுதியால் அமைதலைப் பேதுறுதல் எனும் தொடர் புலப்படுத்துகின்றது. 'ஆதி மந்தியின் அறிவு பிறிதாகி பேதுற்றிசினே' (அகம். 135.5-6), காதலர் அகன் றெனக் கலங்கிப் பேதுற்று (நற். 109-2) என்பன சான்று. பேதைமை

கந்தாப் பெரும் பேதுறுவர் (சிலம்பு. 14, 32), பேதுறவு மொழிந்தனள் மூதறிவாட்டி (சிலம்பு. 12151) எனும் தொடர்களும் இங்குச் சுட்டத் தக்கன.

பேதைமை எனத் திருக்குறளும் (அதி. 84) நாலடியும் (அதி. 33) தரும் அதிகாரங்கள், அறிவுக் குறைபாட்டின் ஒரு நிலையை விளக்குகின்றன. 'மையல் ஒருவன் களித்தற்றால்' என்ற குறள் தொடர் (838), மையலுறுதலும் கள்ளுண்ட மயக்கமும் இணைந்தது போன்ற பாங்கினதாகப் பேதைமையை விளங்கிக் கொள்ள உதவும். 'சொன்னாலும் தெரியாது சுயபுத்தியும் இல்லை' என்று கூறுவது போலவும் 'ஏவவும் செய்கலான் தான் தேறான்' என்பதாகவும் (குறள். 848) இப்பேதை அமைவதை 'ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதை' (குறள். 834) எனும் தொடர் விளக்கும். பேதையினியல்பை,

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில் (குறள். 833)

என வள்ளுவர் விளக்குவார். 'பேதையோடு யாதும் உரையற்க, பேதை உரைக்கின் சிதைந்து உரைக்கும்' என நாலடியும் (71) விளக்கும். பேதைமையும் புல்லறிவும் இணைந்து செல்வதையும் இந்நூல் உணர்த்தும்.

கற்றதூஉம் இன்றி கணக்காயர் பாடத்தால்
பெற்றதாம் பேதை ஓர் சூத்திரம் – மற்றதனை
நல்லாரி டைப்புக்கு நாணாது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும் (நாலடி 345)

புல்லறிவாண்மை எனும் குறள் அதிகாரமும் (85) இங்குக் கருதத்தக்கது. மணிமேகலை, பேதைமைக்குத் தரும் விளக்கம் இதன் மற்றொரு பரிமாணத்தை உணர்த்த வல்லது.

பேதைமை என்பது யாது என வினவின்
ஓதிய இவற்றை உணராது மயங்கி
இயற்படு பொருளால் கண்டது மறந்து
முயற்கோடு உண்டெனக் கேட்டது தெளிதல்
(மணி. 24, 111-114; 30. 51-54)

இவ்விளக்கத்தினைத் தரும் நோக்கநிலை வேறுபட்ட போதும், திரிபுணர்ச்சி புலப்பட்ட போதும், அறிவுப் பிறழ்ச்சியில்லா விடினும் அறிவுக் குறைவு உணர்த்தப்படுவதால் இங்குக் கொள்ளற் குரியது. மருள் என்பதன் ஒரு நிலை இது என்பது தெளிவு.

இலக்கியக் காலங்கள், இன்னும் பிற சில சொற்களையும் மருள் என்பது தொடர்பாக வழங்கவல்லன. மருந்தின் தணியாத பித்தன் (நாலடி. 340), பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் . . பன்னப் பெறுபவோ (கம்பன். 8), பேதைநீ பித்தி (கம்பன். 1460), பிச்சர் சொல்லுவ சொல்லினை (கம்பன். 6171), பேர் பல சொல்லிப் பிதற்றிப் பித்தர் என்றே பிறர் கூற (நாலாயிரம். 2355), உன்மத்தம் போல் பித்தே யேறி (நாலாயிரம். 2938), கரு வீறிலாப் பித்தன் சொன்னம் மொழி (தேவாரம். 254. 10), பின்னை அவனையோர் பித்தன் என்னாமோ (நீலகேசி. 769) எனப் பல பாடல் அடிகள் 'பித்து' என்பதை உணர இடம் தருகின்றன. மடவோன் (புறம். 73.3) வெள்ளை மகன் (மணி. 1436), ஏழை (சூளா. 1586), கருத்து இலான் (கம்பன். 6136), உணர்வு இல் நெஞ்சினர் (கம்பன். 6786), அனந்தல் (நாலாயிரம். 482), தெண்ணர்கள் (அப்பர் தேவாரம், 145.1, 207.1), மூடர் (திருமந்திரம். 2544) எனப் பிறபல சொற்களும் இலக்கியக் களனில் இப்பொருள் தந்து புலப்படும். திருமந்திரம், 'மாதா உதரம் மலமிகில் மந்தனாம்' (481) என அறிவின்றியிருக்கும் பிறவி நிலைக்குக் காரணம் வகுக்கும். பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்கு மனநோய் வரும் இம்மரபு வழி (heriditary) மட்டுமன்றி, மூளையின் இயல்பான வளர்ச்சிக்கு ஏற்படுகின்ற ஏதேனும் தடையும் இதற்குக் காரணமாகலாம். குழந்தை பிறக்கச் சற்று முந்தைய நிலை (prenatel causes), பிறப்பில் அல்லது பின்பு ஏற்படும் விபத்து, அல்லது நோயும் இதற்குக் காரணமாகலாம். கால் வழியாக 50 முதல் 60 விழுக்காடு வரை இந்நிலை அமைய, பிற காரணம் வழி அமைவது இதனினும் குறைவாகும்.

மனப் பேதலிப்புக்குச் சூழ்நிலை காரணங்களும், உடலியல், பழக்க வழக்கத்தாலேற்பட்ட காரணங்களும் அமையலாம். மிகுந்த வெப்பம், காரணமாகச் சிலரால் கூறப்படுவதுண்டு. கஞ்சா, போதைப் பொருட்கள் உட்கொள்ளுதல், மிகைப்பட்ட பாலுணர்வு, மன அழுத்தம்; சமச்சீருணவுக் குறைபாடு, காக்காய் வலிப்பு, தோல் நோய்கள்; பருவ வரவு, பருவமுடிவு, விதவை நிலை வற்புறுத்தப்படுதல் போன்றவற்றால் ஏற்படும் தனிமை போன்றன பிற காரணங்களாம். வயது, பால் இவற்றிற்கேற்பவும், நகரம், கிராமம் என்பனவற்றிற்கேற்பவும், பொருளாதாரச் சூழலுக் கேற்பவும், கல்வியின்மை, கள்ளுண்ணல், தீய வாழ்க்கை என்பனவற்றிற்கேற்பவும் மனப்பேதலிப்பு நிலைகள் (insanity) மாறுபடுகின்றன. உளவியல் வல்லுநர், பாலுணர்வு (sex), காதல் (love) ஆகியவற்றை உளநோய்க்கு அடிப்படையாகக் கண்டறிந் துள்ளனர். உளப்பகுப்பாய்வு வழி (psycho analysis) நோயாளியின்

அடிமனச் சிந்தனைகளை ஆய்ந்து, சிக்கலுக்கான அடிப்படையைக் க்ண்டுபிடித்து, மனச்சிக்கலுக்கு இட்டுச் செல்லக் கூடிய, தாழ்வு மனப்பான்மை, இனந்தெரியாத அச்சம், சமுதாயம் வகுத்த விலக்குகள் போன்றவற்றை இனங்கண்டு, சரியான அணுகுதலை, கையாள்கையை வகுத்தளித்து நோய்நீக்க முடியும் எனவும் காட்டியுள்ளனர்.

உளவூனர் காரணமாகச் சமுதாயத்தில் பலவகையான சிக்கல்கள் ஏற்படுகின்றன. சமுதாயத்தின் பொறுப்புள்ள முழுநிலை உறுப்பினராக, வாழ்க்கைத் தேவைகளை எதிர்கொள்ள வல்லவராக அவர் செயற்பட இயலாமையால், அவரைப் பாதுகாக்கவும் கவனிக்கவும் புரக்கவும் பிற தனிமனித நிறுவன உழைப்பும், நேரமும், பொருட் செலவும் தேவைப்படுவதால், பாரமாக அமைகின்றனர். குற்றவாளிகளாக உருவாகுபவரும் இவரில் உண்டு. தற்கொலை, தற்கொலை முயற்சி, விபத்துக்கு ஆளாதல் போன்றனவும் இவரிடையே காணப்பட வாய்ப்புண்டு. நெறிப்பட்ட பாலுணர்வு வாழ்வு இல்லாததால், உளவூனரான ஆடவர் பாலியல் வன்முறையில் ஈடுபடுவதும், அத்தகு பெண்டிர் திருமணமாகாது பல குழந்தைகட்கும் தாயாகி, அவற்றை வளர்க்கவும் பாதுகாக்கவும் தெரியாது, மேலும் விபச்சாரம், பிச்சையெடுத்தல், சமூகக் குற்றங்களில் ஈடுபடுதலைப் பெருக்குகின்றனர். அறிவுரை கூறியோ தண்டனை அளித்தோ திருத்தப்பட முடியாத நிலையில், அறம் - நீதி - நியாயம் போன்ற கருத்துகளை உள்வாங்கிக் கொள்ள இயலாத பாங்கினராக அமைவதால் தொடர் சிக்கல் உருவாகின்றது. இத்தகையோர் தம் நோயைக் கால்வழியினரை உருவாக்கித் தொடராமல் இருக்க, பிள்ளைப் பேற்றைக் கட்டுப்படுத்தல், தடுத்தல் என்ற முறைகளைச் சமுதாயவியல் வல்லுநர் முன்வைப்பர்.

தொடக்க காலங்களில், மனப்பேதலிப்புற்றோரைச் சமுதாயம் ஒதுக்கியது, ஒறுத்தது; அடுத்த காலகட்டத்தில், சமுதாயப் பாதுகாப்புக்காக, இத்தகையோரைத் தனிப்படுத்திப் புறத்தே வைத்தது; தொடர்ந்த காலப் பகுதியில் இரக்கவுணர்வுடன் இவரை அணுகி ஆதரிக்க முயன்றது; இதனைத் தொடர்ந்த இன்றைய காலகட்டத்தில்தான் இவரை நோயாளியாகக் கருதி இவர்க்கு மருத்துவச் சிகிச்சையும் உளவியல் மருத்துவமும் அளித்து நோய்த் தடுப்பு உத்திகளும் வகுத்து வாழும் முறைக்கு வழி வழங்கியது. இத்தகு பகுப்பு நிலை, தமிழிலக்கியங்களைப் பார்க்கப் புலப்படவில்லை. இறைவனையே 'மடவை மன்ற வாழிய முருகே' (நற். 34.11) எனவும், பித்தா பிறைசூடி (சுந்.தேவா. 1.1) எனவும் கூறுவதால், அத்தகு மக்களை அகற்றியதாகவோ, அவரைக் கண்டு

அஞ்சி ஒதுங்கியதாகவோ, சமுதாயத்தில் இடம்பெறாது ஒடுக்கியதாகவோ கருத முடியவில்லை. சூளாமணியில், திவிட்டனின் தோழன் பேதையாகக் காட்டப்படுகிறான் (1586, 1615). கம்பன், இராவணனின் அவையில் விளக்கேந்தி நிற்கும் ஊழியரில் 'உணர்வு இல் நெஞ்சினர்' அமைவதைக் காட்டுகிறார் (6786). அறிஞர் அவையில் பேதைகள் சேர்க்கப்படவில்லை என்பதை, 'ஆன்றவிந்த சான்றோருள் பேதை புகல் இன்னா' (இன்னா. 17), 'கழாக்கால் பள்ளியுள் வைத்தற்றால், சான்றோர் குழாத்துள் பேதை புகல்' (குறள். 840) போன்ற தொடர்கள் உணர்த்துகின்றபோதும், அத்தகையோர் சமுதாயத்திலிருந்து விலக்கிவைக்கப்பட்டதாக அறியமுடியவில்லை. ஆனால் அவர்களால் எந்தப் பொறுப்பான செயலும் செய்யப்படமுடியாமை உணரப்பட்டுள்ளது (பார்க்க. குறள். 835, 836).

மானுடத்திற்கு அப்பாற்பட்டதும், மந்திர ஆற்றலினது மான தீய சக்தியின் பீடிப்பால் உளநோயுருவாகுவதாகவும், அதனை வெளியேற்றற்குரிய முயற்சியில் ஈடுபடுவதுமான பழங்கால நிலையை சில இலக்கியக் குறிப்போடும் பொருத்திக் காணலாம். காதல் நோயுற்ற தலைவிக்கு, அணங்குறுதலாகக் கருதிச் செய்யும் வேலன் வெறியாட்டு இந்நிலையினதாகும். கட்டும் கழங்குமிட்டுக் கட்டுவிச்சி குறிகூறி, நோய் முதல் நாடுதல், உளப்பகுப்பாய்வு நிலையில் நோய் மூலம் நாடும் இந்நாளைய நிலையுடன் ஒப்பிடக் கூடியதாகும்.

கவலை, மனப்போராட்டம், இயற்கையாக எழும் ஆசைகளை அடக்குதல் போன்றவற்றால், உடலிலுள்ள நாளமிலாச் சுரப்பிகளின் இயல்பான செயற்பாட்டில் சிக்கல் ஏற்பட்டு, அதன் விளைவாக உணர்ச்சிப் பாதிப்பேற்பட்டு உளநோயில் சென்று இறலாம். மருந்தியல், அறுவை மருத்துவங்கள் மட்டுமன்றி சமூக மருத்துவமும் உளவியல் மருத்துவமும் இணைந்த சிகிச்சை முறை இச்சூழலில் தேவைப்படும்; நிரந்தர நோயாளியாகாமல் சிக்கல் சரிசெய்யப்படமுடியும். சுகப்படுத்தப்பட முடிபவர் (curable), முடியாதவர் (chronic or uncurable), குற்றம் புரிந்த மனநோயாளி (criminal) எனப் பிரித்து, தனியே கையாளலும், பாதுகாத்தலும், சிகிச்சை செய்தலும் தேவையாகும். தீவிர நோயாளி, குற்றவாளி என்பவரையும், பாதுகாப்பாக அடைத்துவைத்தல் என்பதல்லாமல் தற்காலிகமாக வெளியே இருக்க அனுமதித்தல் (parole), வேறு இல்லங்களில் தங்கவைத்தல் (boarding out) என்பனவும் கைக் கொள்ளப்படுவதுண்டு. புறநோயாளியாக உளவியல் மருத்துவ மனைகளில் சென்று வருவதும் வாய்ப்பாகும்.

உளப்பிறழ்வுடையோர் முழுமனிதராக மதிக்கப்படாது கேலி, கிண்டல் என எள்ளி நகையாடப்படல் உண்டு. நகை எனும் மெய்ப்பாட்டிற்குரிய நான்கு அடிப்படைகளுள் பேதமை, மடன் ஆகியனவற்றைத் தொல்காப்பியர் கூறுவதை இங்கு நினைக்கலாம்.

எள்ளல் இளமை பேதமை மடன் என்று
உள்ளப்பட்ட நகை நான்கு என்ப (1198)

அறிவுக் குறைபாடு இவற்றில் உணர்த்தப்பட்டதாகக் கொள்ளலாம். பெண்மைக்குரியதாகப் பிறிதிடத்தில் கூறப்பட்ட மடன் (தொல். 1045) நகைக்குரியதாக இங்கு அமைக்கப்படுவது சிந்தித்தற்குரியது; அறிவுக்குறைபாடான பேதமையுடன் ஓரிணையாக வைக்கப்படல் சமுதாயத்தில் இவர்க்குரிய பங்கு, இடம் பற்றிய சிந்தனையை உணர உதவலாம். நகைப்பிற்குரியவராகப் பேதையர் அமைவர் எனவோ, பேதையர் செயல் நகைப்பை விளைவிக்கும் எனவோ புரிந்து கொள்ள முடியலாம். பேதமை என்ற பண்பு நகை விளைவிப்பது அடிப்படை.

அறிவு மருளைச் சுட்டி சுமார் 280 சொற்கள் தமிழ் மொழியில் அமைவதைத் தமிழ் லெக்சிகன் வழியாக அறிய முடிவதில்* இவ்வூனத்தின் வன்மை, சமுதாயத்தில் இது ஏற்படுத்திய அழுத்தம்-பாதிப்பு உணர்த்தப்படுவதாகக் கருதலாம். சமுதாயத்தின் மற்ற உறுப்பினர்களோடு ஒத்த வாழ்க்கை வாய்ப்பு அறிவுக்குறை காரணமாகத் தடைபடுவதால், இத்தகையோர் இயல்பு வாழ்க்கை தடைபட்டு, சிக்கல் ஏற்படுகிறது. குறை நீக்க முடியாத நிலையில், தீர்வில்லாத நிரந்தரப் பிரச்சினையாக உருவாகின்றது. சிக்கல் நீக்கப்பட அல்லது குறைக்கப்பட வாய்ப்பு அமையும் போது சமூகச் செயற்பாட்டொழுக்கின் தடை நீங்கப்பெறுகின்றது.

* பார்க்க: தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர், அன்னிதாமசு, 2002, பக். 28-31, நிகண்டுச் சொற்களுக்குத் தொடரும் அட்டவணை காண்க.

அட்டவணை

நிகண்டுகளில் அறிவூனச் சொற்கள்

சொற்கள்	சேந்தன் திவாகரம்	கயாதரம்	பொதிகை	அரும்பொருள் விளக்கம்
அஞ்ஞை	–	அஞ்ஞை	அஞ்ஞை	–
அஞர்	அஞர்	–	அஞர்	–
அண்ணை	–	அண்ணை	அண்ணை	–
அருளிலர்	–	அருளிலர்	–	–
அற்றவன்	–	அற்றவன்	–	–
அறிவிலன்	–	–	அறிவிலன்	–
அறிவிலான்	அறிவிலான்	–	–	–
ஆதன்	ஆதன்	ஆதன்	ஆதன்	–
இழுதை	இழுதை	இழுதை	இழுதை	–
உஞ்ஞை	உஞ்ஞை	–	–	
ஏழை	ஏழை	–	ஏழை	
குதலை	குதலை	குதலை	–	–
சளன்	–	சளன்	–	–
சிதடன்	சிதடன்	சிதடன்	சிதடன்	சிதடன்
சுமடர்	–	சுமடர்	–	–
தீயோர்	–	தீயோர்	–	–
பேதை	பேதை	பேதை	பேதை	–
பொறியற்றவர்	–	பொறியற்றவர்	–	–
போதன்	–	போதன்	–	–
மடம்	–	மடம்	–	–
மடன்	மடன்	–	மடன்	–
மண்ணை	மண்ணை	–	–	–
மூகன்	–	–	மூகன்	–
மூடன்	மூடன்	மூடன்	–	மூடன்
மூர்க்கர்	–	மூர்க்கர்	–	–
முழுமகன்	முழுமகன்	முழுமகன்	முழுமகன்	முழுமகன்

பால் மருள்

உலக மனித உயிர்கள் ஆண், பெண் எனும் இரு பால் பகுப்பில் அமைவது இயல்பாகும். இவ்வாறன்றி, அருகி, மாறுபட்டமையும் மானுடப் பிறவியும் உண்டு. இதனைப் பால்மருள் அல்லது உறுப்பு மருள் எனக் கூறலாம். மனவூனமாக அறிவுமருள் அமைய உடல் ஊனமாகப் பால்மருள் அமைகின்றது.

எண்பேறெச்சத்துள் ஒன்றாக 'மருள்', முதலில் குறிக்கப்பட்டவிடத்து (புறம். 28), உரைக்குறிப்பு அதனை அறிவு மருளாகப் புரிந்துகொள்ள உதவுகின்றது. ஆனால், பிற்காலத் தெழுந்த சூடாமணி நிகண்டின் உரை, 'மருள்' - ஆணோ பெண்ணோ வென்றறியப்படாத உறுப்பு மயக்கம்' என்று கூறுவதால், பால்மருள் என்ற வகையும் கருதப்பட - அடிப்படை அமைகிறது.

மருள் என்ற சொல், தொல்காப்பியம் சங்க இலக்கியம் ஆகியவற்றில் பயிலும் தொல்பழமையுடையது. எனினும் அங்கு அதற்குப் பால் மருள் எனும் பொருண்மை அமையவில்லை. அறிவு 'மருள்' பற்றிய இயலில் கண்டவாறு வேறுவிதமான பொருளும் பயன்பாடுமே காணப்படுகின்றன. ஆயினும், வேறு சொற்சார்பில் பால்மருள் பற்றிய சிந்தனைகள் காணப்படவே செய்கின்றன. மருள், மயக்கம் என்ற பொருள் அடிப்படையில், ஆணோ பெண்ணோ என (ஆண்பாலோ பெண்பாலோ என) முடிவு செய்ய இயலாத போது பொதுமை சுட்டிப் பால்மருள் (அலிப்பால் என்பது போல neuter gender) எனல் பொருந்துகின்றது.

திவாகரம் 'உறுப்புமருள்' என்ற ஆட்சியையும், பொருட்டொகை நிகண்டு 'உறுப்பு மயக்கம்' எனும் சொல் நிலையையும் தருகின்றன. பால் மயக்கம் எனவும் இந்நிலையைக் குறிக்க முடியும். இப்பொதுச் சொற்கள் தவிர, சுமார் 45 சொற்கள் நிகண்டு, அகராதிகளில் பால் மருளைக் குறிக்கப் பயன்படுகின்றன.

நிகண்டுகள் இரண்டு முதல் ஏழு சொற்கள் வரைத் தருகின்றன (பார்க்க: அட்டவணை). இவற்றிலிருந்து சுமார் 25 சொற்கள் பெறமுடிகின்றது. அவை, அலி, ஆண்பெண்ணல்லாதவன், கிலிபம், கிலீபம், கிலீவம், சண்டம், சண்டன், சிகண்டி, நபுஞ்சகம்,

நபுஞ்சகன், நபுஞ்சம், நபுங்கிஷம், பெண்டகம், பெண்டகர், பெண்டகன், பெண்டர், பெண்டு, பேடர், பேடர்கள், பேடன், பேடி, பேடியர், பேடு, பேடுகள், பேதை என்பன. இதில் உட்படாத மேலும் சுமார் 20 சொற்களைத் தமிழ் லெக்சிகன் தரமுடிவது சிந்தித்தற்குரியது (பார்க்க: பட்டியல்).

தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கத்தில், திணைக்குப் புறநடை கூறும்போது, உயர்திணையினவாயினும் அஃறிணை முடிவுபெறும் சொற்பட்டியலைப் பற்றிக் கூறும்போது, 'தன்மை திரிபெயர்' என்பதைச் சுட்டுகின்றது (தொல். 540.4) 'தன்மை திரிபெயராகிய அலி' என இது உரைவிளக்கம் பெறும். சேனாவரையம், 'தன்மை திரிபெயர் அலி. இதனோடு ஒரு பொருட் கிளவியாய் வருவனவுங் கொள்க' (தொல்.சொல். 57, சேனா) என, பல சொல்வரும் வாய்ப்பை உணர்த்தும்.

கிளவியாக்கத்தின் வேறு இரு நூற்பா வரிகள், மேற்கண்ட 'அலி' என்பது உள்ளுறுத்தியமைந்தது போல், பேடி என்பதையும் உணர்த்துகின்றன.

> பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
> ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
> (தெய்வம் சுட்டிய பெயர் நிலைக் கிளவியும்)
> இவ்என அறியும் அந்தம் தமக்கு இலவே
> உயர்திணை மருங்கின் பால் பிரிந்திசைக்கும்
> (தொல். 487)

> ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி
> ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்றே (தொல். 495)

உரையாசிரியர், 'பேடி வந்தாள்' எனச் சான்று தந்து இச்சொல்லை உணர இடம் தருகின்றனர். சேனாவரையர் பேடிவந்தாள், பேடியர் வந்தார் எனப் பால் பிரிந்திசைத்தலை (பெண்பால், பலர்பால்)க் குறிப்பார். பாலுள் அடங்காத பேடியைப் பாலுள் அடக்கியவாறு என விளக்குவார். மேலும்,

> அலிப்பெயரின் நீக்குதற்குப் 'பெண்மை சுட்டிய' என்றும், மகடூஉப் பெயரின் நீக்குதற்கு 'ஆண்மை திரிந்த' என்றுங் கூறினார்.
>
> பெண்மை சுட்டிய எனவே பெண்மை சுட்டாப்பேடு என்பது ஒழிக்கப்பட்டதாம்.

பெண்மை திரிதலும் உண்டேனும் ஆண்மை திரிதல் பெரும்பான்மையாகலான் 'ஆண்மை திரிந்த' என்றார்.

பேடியர், பேடிமார், பேடிகள் என்பனவும் அடங்குதற்குப் பேடியென்னும் பெயர்நிலைக் கிளவி யென்னாது 'பெண்மைசுட்டிய ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி என்றார்"

என விளக்குகிறார் (தொல்.சொல். 4, சேனா.). கழகப் பதிப்பின் குறிப்புரை (1966, ப7),

பால் திரிந்த மக்களும் அவர்களைக் குறிக்குஞ் சொற்களும் பின்வருமாறாம். ஆண்மை திரிந்து பெண்மை கொண்டவன் பேடி; பெண்மை திரிந்து ஆண்மை கொண்டவன் பேடன்; இவ்விருவர்க்கும் பொதுப்பெயர் பேடு. இம்மூவர்க்கும் பலர்பாற் பெயர் முறையே பேடியர் பேடர் பேடுகள் என்பன. புணர்ச்சி யுணர்ச்சியில்லாததும் பால் காட்டும் உறுப்பால் ஆணும் பெண்ணு மல்லாததும் அலி. பேடி என்னும் பெயர் பேடிமார் பேடிகள் எனவும் பலர்பால் ஏற்கும்.

என இதனை விரிக்கும். மேலும் இதன் விளக்கவுரை, 'பேடியும் பிறப்பில் அமைவதொன்றே; இடையில் ஆக்கிக் கொள்ளப் படுவதன்று' (ப. 12, விளக்கவுரை) என இப்பால் மயக்கத்தை எச்சமாக (congenital deformity) உணர உதவும்.

தொல்காப்பியச் செய்யுளியல், பாவகைகள் பற்றிக் கூறும்போது தரும் 'மருட்பா' இப்பால்மயக்குப் போலப் பாமயக்காகும் (மருள்+)

அலி, பேடி என்ற சொற்சுட்டின்றி, பொருண்மை, மேற்கண்டவாறு தொல்காப்பியத்தில் அமைய, சங்க இலக்கியமும் இத்தகு சொல்லின்றி 'மருள்' (புறம். 283) என்பதில் உட்படுத்தியது. 'பேடிப் பெண் கொண்டாடுகை கடுப்ப' (அகம். 206.2) என்பதே சங்க இலக்கியம் தரும் மற்றொரே குறிப்பாகும்.

கீழ்க்கணக்கில் நாலடி, குறள், முதுமொழி போன்றன இச்சொல்லாட்சிகளைத் தருகின்றன. முற்பிறப்பின் வினைப் பயனால் அலிப்பிறப்பேற்பட்டது என்ற நம்பிக்கை வயப்பட்ட சிந்தனை நாலடியாரில் அமையும். பிறன் மனை நயந்த முற்பிறவிக் குற்றத்திற்கு இப்பிறவித் தண்டனையாகும் இது; அலியின் வாழ்க்கை 'ஆடி உண்ணும் வாழ்க்கை' என்பதையும் இந்நூல் தரும்.

செம்மை ஒன்று இன்றி சிறியார் இனத்தர்ஆய்
கொம்மை வரிமுலையாள் தோள்மரீஇ உம்மை
வலியால் பிறர்மனைமேற் சென்றாரே - இம்மை
அலிஆகி ஆடி உண்பார் (நாலடி. 85)

எச்ச வகையுள் ஒன்று என்ற நிலையில், பிறப்புக்கு முன், தாயின் வயிற்றுள் அமைந்த கருச் சூழலில் இப்பால் குறைபாடு ஏற்படுவதைத் திருமந்திரம் குறிப்பிடும்.

மாண்பதுவாக வளர்கின்ற வன்னியுங்
காண்பது ஆண்பெண் அலியெனுங் கற்பனை
பூண்பது மாதாபிதா வழி போலவே
ஆம்பதி செய்தானச் சோதிதன் ஆண்மையே.
ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகில் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகும் . . .
(477,78)

குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்
குழவியும் இரண்டாம் அபான னெதிர்க்கில்
குழவி அலியாகும் கொண்ட கால் ஒக்கிலே (482)

'பேதமை அல்லது ஊதியம் இல்' (புறம். 28) என்பதால், பிற ஊனப் பிறப்புகளைப் போல அலி - பேடி நிலையும் பயனற்றது எனல் பொருந்தும். சூளாமணியும், இத்தகையோர் மனிதராகக் கூடக் கருதப்படுவதில்லையோ எனும் ஒரு கால சமுதாய எண்ணத்தைச் சுட்டுகின்றது.

அண்ணை அலி குருடாதி யவர்களை
மண்ணுயர் ஞாலத்து மானுடராக வைத்து
எண்ணுநர் யாருளர் (1985)

அலிப்பிறப்பு பயனற்றது என்ற இக்கருத்தின் தொடர்ச்சி போல, அலி பெற்ற அழகால் விளைவது எதுவுமில்லை என்ற கருத்தும் சூளாமணியில் அமைகின்றது.

மன்னுயிர் வருத்தம் கண்டும் வாழ்வதே வலிக்கு மாயின்
அன்னவன் ஆண்மையாவது அலிபெற்ற அழகு போலாம்
(775)

நீலகேசிக் காப்பியம், எண்ணிறந்த உயிரினப் பிறப்புகளுள் அலியும் ஒன்றாக அமைவதையும், பிள்ளையும் பெண்ணும் அல்லாதது அலி என்ற கருத்தையும் வழங்குகின்றது.

கீழார் அலிகள் முழுச்செவி கின்னரர்கள் எண்இகந்த
ஊழாம் பிறப்பு . . . (76)

ஆரம்பிச்சி அலி விலங்கு அவ்உருச்
சீரிற்கு ஒத்தாள் கணிகை தெருண்டாள் பெண்... (249)

பிள்ளைபெண் அலி ஆயினும் மாண்வயிற்று
உள்ளதே என்று ஒழுக்கம் கொடுத்தியால்
பிள்ளை பெண் அலி அன்மையை ஆதினால்
உள்ளம் கொண்டு இழஊசி உரைப்பதே (324)

இறைச் சார்பில் அலி பற்றிய கருத்துகள் சில அமைவதும் இங்குக் கருதற்குரியது. மூவகையாக இதனைக் கண்டு கணிக்கலாம். இறைமை நிலவும் எண்ணிறந்த உயிரினங்களுள் அலியுமுண்டு என்பது ஒன்று; இறைமை ஆணோ, பெண்ணோ, அலியோ அல்ல என்பது மற்றொன்று; இறைமை ஆணும் பெண்ணும், அலியுமாவது என்பது மூன்றாவது; பக்தி இலக்கியமும், பக்திச் சார்பு இலக்கியங்களும் இறைமை பற்றிய கருத்தாக்கத் தேட்டத்தின் விளைவாக இவற்றைத் தருகின்றன.

பெண்ணில் பேர் எழில் ஆணில் அலியினில் பிறிதும்
உள்நிற்கும் உயிர் உள்ளதில் இல்லதில் உலவான்
(கம்பன். 6202)

என்பது கம்பன் வாக்கு. எல்லா உயிரும் தான் ஆனான் என்ற நிலையில் அவன் அலியுமாகின்றான்.

ஆண் ஆகி மற்றும் அலி ஆகி ஆர்இவ்
அதிரேக மாயை அறிவார் (கம்பன். 8255)

பெண்ணொரு பாகர் போலும் பேடலி யானார் போலும்
(தேவா. அப். 72.1)

பலிசேர் படு கடைப் பார்த்துப் பன்னாளும் பலரிகழ
அலியா நிலைநிற்கும் ஐயன் ஐயாறன் அடித்தலமே
(தேவா. அப். 93.10)

ஆண்பெண் அலியெனும் பெற்றியன் காண்க (திருவாச.357)

பெண் ஆண் அலி என்று பேச்சுக் கடந்த பெருவளியை
(11-ஆம். பரண. 9)

இக்கருத்தை மறுப்பதாக அமையும் போது இறைமை ஆணோ பெண்ணோ அல்லாதது போல, அலியுமல்ல எனக் கூறுகையில் 'அலி' பற்றிய குறிப்பு இணைகிறது.

ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்
(நம்மாழ்வார்.திருவாய். 2.5.10)

ஆணொடு பெண்ணலி யல்லரானார் போலும்
(தேவா.அப். 289.5)

சமுதாயத்தில் அலிகள் காணப்பட்டதாக இவற்றிலிருந்து ஊகிக்க முடிகின்றது; தத்துவ நிலையில் இறைமை - அலி தொடர்பு கருதினும், சமயவாதிகள்/இறையியல் வல்லுநர் அலிகள் பற்றிய கரிசனம் கொண்டவராக, அத்தகையோரைப் பற்றிய சிந்தனையினராக அமைந்தனர் என்பதும் தெரிகிறது.

அலி பற்றிய குறிப்புகளைக் காட்டிலும் பேடி பற்றிய இலக்கியத் தரவுகள் மிகுதியாக அமைகின்றன. நாலடியார்,

பெண்ணவாய் ஆணிழந்த பேடி அணியாளோ
கண்ணவாத் தக்க கலம் (251)

என்பதால், ஆண்மை இழந்து, பெண்மை அவாவி நிற்பது பேடி என்ற விளக்கம் கிடைக்கிறது. பெண்மை அவாவுவதால் அணிகலன்கள் அணிதல் என்பதில் இணைகிறது; படைக்கலங்கள் விலக்கப்படுகின்றன. போர்க் களத்தில் பேடியின் கையிலுள்ள வாள் பயனற்றமையும் என்ற குறள் கருத்து இப்பின் தகவலுக்கு உதவுகின்றது.

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும் (614)

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சும் அவன்கற்ற நூல் (727)

முதுமொழியும் இதே கருத்தை அடியொற்றியே

கழி தறுகண்மை பேடியின் துவ்வாது (4.2)

எனக் கூறுகிறது.

ஏற்கெனவே கண்ட 'பேடிப் பெண் கொண்டாடுகை' (அகம். 206.2) 'பேடிப்பெண்' என்ற சொல்லமைப்பைத் தருவதுடன் 'ஆடுகை' என அவரது ஆடற்றொழிலையும் குறிப்பிடும். சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றன பேடி ஆடல் பற்றிக் கூறுவது ஒருபுடை ஒப்புமையுடையது. பேடிக் கோலத்து ஆட்டம் என்பதும், பேடியர் ஆடினர் எனவும் கருதலாம்.

அன்றியும், சிலப்பதிகாரம், அரசியரின் சிலதியர் குழாத்தில் பேடியரையும் காட்டுகின்றது.

வண்ணமும் சுண்ணமும் மலர்பூம் பிணையலும்
பெண்அணிப் பேடியர் ஏந்தினர் ஒருசார் (28.59-60)

மாதவி ஆடிய பதினொரு ஆடலுள் பேடியாடல் ஒன்றாகும். பேடு எனவும் குறிக்கப்படுகிறது. 'இப்பேடு உழை காரணமாக வாணனாற் சிறைவைக்கப்பட்ட தன் மகன் அநிருதனைச் சிறை மீட்டுக் காமன் சோநகரத்து ஆடிய ஆடல்' (மணி. 3125, உரை) ஆகும்.

ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காமன் ஆடிய பேடி ஆடலும் (சிலம்பு. 6.56-57)

இக்கோலம் எத்தகையதாக இருந்திருக்கும் என்பதை இரு காப்பியங்களும் உணர வழி செய்யும். ஆரியப்பேடி பற்றிய சிலம்புக் குறிப்பு முதலாவது:

சுருளிடு தாடி மருள்படு பூங்குழல்
அரி பரந்து ஒழுகிய செழும் கயல் நெடுங்கண்
விரிவெண் தோட்டு வெண்நகைத் துவர் வாய்ச்
சூடக வரிவளை ஆடுஅமைப் பணைத்தோள்
வளர்இள வனமுலை தளிர் இயல் மின்இடை
பாடகச் சீறடி ஆரியப் பேடி ... (27.181-186)

உருவ வருணனை, கண், குழல், வாய், தோள், இடை, அடி எனப் பல உறுப்பு சுட்டியும், ஆடலுக்கேற்ப வளையும், பாடகமும் அணிந்தும், மெய்ப்பாடு தோற்ற கண்ணும் நகையும் குறித்துத் தரப்படுகின்றது. இதனை அவ்வாறே ஒத்தும் ஒட்டியும் மணிமேகலை அமைப்பது, மாதவி ஆடலையும் ஆரியப் பேடியையும் இணைத்து உருவாக்கப்பட்டதாகக் காணப்படுகிறது.

சுரியற் றாடி மருள்படு பூங்குழல்
பவளச் செவ்வாய் தவள வாணகை
ஒள்ளரி நெடுங்கண் வெள்ளி வெண்டோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்கு வளை பிறைநுதற்
காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை
அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்
இகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து
வாணன் பேரூர் மருகிடைத் தோன்றி
நீணிலம் அளந்தோன் மகன்முன் ஆடிய
பேடிக் கோலத்துப் பேடு ... (மணி. 3. 116-125)

புராணச் செய்தியாக அமையினும், சமுதாயத்தில் பேடியரமைந் தமையே ஆடற் கலையிலும் இவரைக் கருப்பொருளாக,

பாத்திரமாக, நாயகராக ஆக்கியது என நினைக்கலாம். கதைப் பாத்திரம் என்ற நிலையில், மணிமேகலை, அருச்சுனனை, 'விராடன் பேரூர் விசயனாம் பேடியைக் காணிய சூழ்ந்த கம்பலை மாக்கள்' (3.146) எனத் தருவதும் இங்கு நினைக்கத்தக்கது. அன்றியும், ஆடவரைக் காணின் மகளிர் விலக, பேடியரே அவ்வாறன்றி யமைவர் என்பதும் மணிமேகலைத் தகவலாம்.

ஆடவர் கண்டா லகறலு முண்டோ
பேடிய ரன்றோ பெற்றியி னின்றிடின் (3. 24-25)

என அமைகின்றது.

சிந்தாமணி, காந்தருவதத்தையின் தோழியைப் பேடியாகக் (555) காட்டுகிறது. காப்பியப் பாத்திரங்களுள் தோழியாக வருபவரில் இவளொருத்தியே பேடியாகக் காட்டப்படுகிறாள்; கூன், குறள் தோழியரே பிறவற்றிலமைகின்றனர். 'தோழி, விளை மதுக்கண்ணி வீணாபதியெனும் பேடி' (651) என்ற குறிப்புடன், அவள் உடல் வருணனையுமமைவது சிலம்பு, மணிமேகலையின் ஆரியப்பேடி, பேடிக் கோலங்களுடன் ஒப்பிடத்தக்கது.

வேயே திரண் மென்றோள் வில்லே கொடும்புருவம்
வாயே வளர் பவள மாந்தளிரே மாமேனி
நோயே முலை சுமப்ப தென்றார்க் கருகிருந்தார்
ஏயே யிவளொருத்தி பேடியோ வென்றார்
எரிமணிப் பூண் மேகலையாள் பேடியோ வென்றார்
(652)

வீரமற்ற ஆடவனைப் 'பேடி' எனல் கம்பனின் 'ஆண் அலாய் பேடி என்றாள்' (மிகை. 898) என்ற பகுதியில் உண்டு. பேடிக்குக் குழந்தைப் பேறு இல்லை எனும் கருத்தை நீலகேசி வழங்கும்.

பேடிகள் சாரினும் பிள்ளை பெறாமையை
நாடியும் காண் . . . (764)

பாரத வெண்பா, அம்புப்படுக்கையில் அமைந்த பீஷ்மரைக்காட்டும்போது, சிகண்டியைக் குறிக்கப் 'பேடி' என்பதை ஆள்கின்றது.

ஏடகப் பகழி தீண்டா யாக்கை யெங் கோவே பேடி
சூடகச் செங்கை யம்பிற் றுயில்வதொன் றறிந்திலேனே (671)

அலி என்பதை இறைமைச் சார்த்திப் பார்த்தது போல, பேடி என்பதையும் காண முடிகின்றது. பேடும் அறிய முடியாத

இறைமையும், இறைமைபேடாக அமையாமையும் குறிக்கப் பெறுகின்றன.

பேடு மாணும் பிறரறியாததோர்
ஆடு நாக மசைத்த வடிகளே (தேவா.அப். 155.8)

பெண்ணல்ல ஆணல்ல பேடல்ல மூடத்துள்
உள்நின்ற சோதி . . . (திருமந். 1872)

மேலும், சிவனின் அர்த்தநாரீசுர உருவநிலை அப்பர் தேவாரத்தில் பன்முறை 'பாதி பெண்ணுருவாய பரமன்' (196.8), ஆணாகிப் பெண்ணாய முடிவு (232.2), பாதியொரு பெண் (248.2), பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் (246.10) என வருவதை நோக்க, இவ்வெண்ணமே அவனை அலி/பேடி எனச் சார்த்திக் காணக் காரணம் போலும் என நினைக்க முடிகிறது. மதுராபதி தெய்வமும் (23.1-13) கூத்தச் சாக்கையனும் (28.67-77) சிலம்பில் இவ்வாறு காட்டப்படுவர். நடன, நாடகப் பாத்திரமாகப் பேடி வரும் போது, மெய்ப்பாடு புலப்பட அமைத்தலின் தேவைபற்றிப் போலும் திவாகரம் பேடியிலக்கணம் என ஒரு பகுதி அமைக்கிறது. பேடியின் உருவம் எப்படியிருக்கும், உரை/பேச்சு எவ்வாறு அமையும், நடையும் நடமும் எந்நிலையில் வெளிப்படும் எனப் பல கூறுகளும் தரப்படுகின்றன.

பேடி யிலக்கணம் பேசுங் காலை
நச்சுப் பேசலும் நல்லுரை யோதலும்
அச்சு மாறி ஆண் பெண் ணாகியும்
கைத்தல மொன்றைக் கடுக வீசியும்
மத்தகத் தொருகை மாண்புற வைத்தலும்
விலங்கி மிதித்தலும் வழிவே றாகியும்
துளங்கித் தூங்கி சுழன்று துணிந்தும்
நக்கும் நாணியும் நடம் பல பயின்றும்
பக்கம் பார்த்தும் பாங்கு திருத்தியும்
காரண மின்றிக் கடிபல கொண்டும்
வாரணி கொங்கையை வலிய நலிந்தும்
இரங்கியும் அழுதும் அயர்ந்தும் அருவருத்தும்
குரங்கியும் கோடியும் கோதுகள் செய்தும்
மருங்கிற் பாணியை வைத்தும் வாங்கியும்
இரங்கிப் பேசியும் எல்லே லென்றும்
இன்னவை பலவும் இயற்றுத லியல்பே (ப. 310)

பேடியாடல் பற்றிய காப்பிய வருணனைகளுடன் இதனை ஒப்பிட்டுக் காண முடியும்.

சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் தரும் விளக்கமும் இங்கு இணைத்துக் காணத்தக்கது.

> ஆண்மைத் தன்மையில் திரிந்த பெண்மைக் கோலத்தோடு காமன் ஆடிய பேடு என்னும் ஆடலும்; ஆண்மைத் தன்மையில் திரிதலாவது விகாரமும் வீரியமும் நுகரும் பெற்றியும் பத்தியும் பிறவும் இன்றாதல்; ஆண்மை திரிந்த என்பதனால் தாடியும், பெண்மைக் கோலத்து என்பதனால் முலை முதலிய பெண் உறுப்புப் பலவும் உடையது ஆண்பேடு என்று பெயர் பெறும் எனக் கொள்க (சிலம்பு. 6. 56-57, அடியார்க்கு நல்லார் உரை).

கலை வாழ்வினராக பால் மருளினர் அமைந்த சமுதாயப் பாங்கை இவற்றில் உய்த்துணர முடியலாம் (பார்க்க: இரா. கலைக் கோவன், பேடி ஆடல், ஆய்வுக் கோவை, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், 1998, பக். 374-378).

அட்டவணை

நிகண்டுகளில் பால்மருள் சொற்கள்

சொற்கள்	சேந்தன் திவாகரம்	சூடாமணி	பிங்கலம்	ஆசிரியம்	கயாதரம்	உரிச்சொல்	பொதிகை	நாமதீபம்	பாரதிதீபம்	வடமலை	அரும்பொருள் விளக்கம்
அலி	அலி	அலி	அலி	அலி	அலி	அலி	அலி	அலி	அலி	அலி	அலி
ஆண்பெண்ணல்லாதவன்	-	-	-	ஆண்பெண்ணலாதவன்	-	-	-	-	-	-	-
கிலிபம்	-	-	-	-	கிலிபம்	-	-	-	-	-	-
கிலீபம்	-	-	-	-	-	-	கிலீபம்	கிலீபம்	-	-	-
கிலீவம்	-	-	-	-	-	கிலீவம்	-	-	-	-	-
சண்டம்	-	-	-	-	-	சண்டம்	சண்டம்	சண்டம்	-	-	-
சண்டன்	-	சண்டன்	சண்டன்	சண்டன்	சண்டன்	-	-	-	-	-	-
சிகண்டி	-	-	-	-	-	-	-	-	-	சிகண்டி	-
நபுஞ்சகம்	-	-	-	-	-	-	-	நபுஞ்சகம்	-	-	-
நபுஞ்சகன்	-	நபுஞ்சகன்	நபுஞ்சகன்	நபுஞ்சகன்	-	-	-	-	-	-	-
நபுஞ்சம்	-	-	-	-	-	-	-	நபுஞ்சம்	-	-	-
நபுங்கிஷம்	-	-	-	-	-	-	நபுங்கிஷம்	-	-	-	-
பெண்டகம்	-	-	-	-	-	பெண்டகம்	பெண்டகம்	பெண்டகம்	-	-	-
பெண்டகர்	பெண்டகர்	-	-	-	-	-	-	-	பெண்டகர்	-	-
பெண்டகன்	-	பெண்டகன்	பெண்டகன்	பெண்டகன்	பெண்டகன்	-	-	-	-	-	-
பெண்டர்	பெண்டர்	-	-	-	-	-	-	-	-	-	-
பெண்டு	-	-	-	-	-	-	-	-	பெண்டு	-	-
பேடர்	பேடர்	-	-	-	-	-	-	-	பேடர்	-	-
பேடர்கள்	-	-	-	-	பேடர்கள்	-	-	-	-	-	-
பேடன்	-	-	பேடன்	-	-	-	-	-	-	-	-
பேடி	-	பேடி	-	பேடி	-	பேடி	பேடி	-	-	-	பேடி
பேடியர்	பேடியர்	-	-	-	பேடியர்	-	-	-	பேடியர்	-	-
பேடு	-	-	-	-	-	-	-	பேடு	-	-	-
பேடுகள்	-	-	-	-	பேடுகள்	-	-	-	-	-	-
பேதை	-	-	பேதை	-	-	-	-	-	-	-	-

பட்டியல்

பால்மருள் சொற்கள்

அண்ணகன்
அண்ணாளன்
அல்லி
அலி
அழிதூஉ
ஆண்பெண்ணலாதவன்
ஆணலி
இடபி
இப்பந்தி
கிலிபம்
கிலீபம்
கிலீவம்
கோஷா
சண்டம்
சண்டன்
சிகண்டி
தூவரன்
நபுங்கிஷம்
நபுஞ்சகம்
நபுஞ்சகன்
நபுஞ்சம்
நபும்ஸகம்
நாமர்தா
பண்டகன்
பெட்டையன்
பெண்டகம்
பெண்டகர்
பெண்டகன்
பெண்டர்
பெண்டு
பெண்ணலி
பெண்ணைவாயன்
பேடர்
பேடர்கள்
பேடன்
பேடி
பேடியர்
பேடு
பேடுகள்
பேதை
மகண்மா
மருள்
வசங்கெட்டவன்
வண்டரன்
வருடவரன்
வறடன்

ஊனக் குறியீடு

ஊனம்/ர் குறிக்கும் சொற்களும் தொடரமைப்புகளும் நேரடியாக அப்பொருண்மையைத் தருவதுடன், பலபோதும், இலக்கியத்திலும், பேச்சு வழக்கிலும் தொடர்புடைய மற்றும் தொடர்பகன்ற பிற பொருண்மையையும் குறிப்பாகவோ குறியீடாகவோ தருவதுண்டு. மரபுத் தொடர்களிலும், பழமொழியிலும், இவற்றின் பயிற்சியில், பெரும்பாலும் இத்தகு குறியீட்டுப் பொருண்மை முன்னிற்பதாகக் கருத முடிகிறது.* ஊனச் சொற்களின் தொடர்களின் பிற பொருண்மைகள் எனக் காணும் போதும் இழிப்புப் பொருண்மையின் இழையோட்டம் ஆட்சிப் பெருக்குக் காட்டுவது புலப்படுகின்றது. ஊனர் நிலை இதனால் உணர்த்தப்படுவதுடன் மொழியாக்கத்தில் இத்தகு மக்கட் பகுப்பினரின் பாதிப்பும் இதில் புலப்படுகின்றது.

ஓரி போலப் பதுங்கும் படித்தவர்
ஊமை நொள்ளை செவிடென்று சொல்லுவேன்

(பாரதிதாசன்)

என்பது போல இக்காலக் கவிதையிலும் இந்நிலை இடம்பெறும். இழிப்புப் பொருண்மையே பரவலாகப் பயில்கிறது எனினும் அருகி உயர்வுக்குறிப்பும் (positive) அமைவதுண்டு. இத்தகு ஊனக் குறியீடு தமிழுக்கு மட்டுமன்றி பிற மொழி/பண்பாடுகட்கும் உரியதாக அமைவதால் உலகளாவிய பொதுமை கொள்கின்றது எனலாம். ஒப்பீட்டுக் கல்வி இக்கருத்தை நிறுவக் கூடும். உவமையாக, உருவகமாக, எதிர்நிலைச் சொற்பேற்றுடன் (-அல்லா / -இல்லா) எனப் பல பாங்கில் வெளியீடு அமைகின்றது**

---

* ūnam (handicap) and idiomatic usages - Annie Thomas, Paper presented at xviii All India Conference of Dravidian Linguistics, Kanyakumari, 1990.

பழமொழியிலும் விடுகதையிலும் ஊனர் - அன்னிதாமசு, தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர், 2002, பக்.109-126.

** சங்க இலக்கியம் முதல் பெரியபுராணம் வரை களனமைத்தும் அகராதித் துணையுடனும் இக்கட்டுரை ஆக்கப்படுகிறது.

ஊனம்

தமிழ்லெக்சிகன், குறைவு, குற்றம், பழி, தீமை, அழிவு, பிணம், இறைச்சி கொத்தும் பட்டடை மரம் ஆகிய பொருண்மைகளை ஊனம் எனும் சொல்லுக்குத் தருவது (தொகுதி 1, ப. 506) உடற்குறை (handicap) என்ற அடிப்படைப் பொருண்மையைவிடப் பிற பொருண்மையின் பெருக்கைக் காட்டுகிறது. இதிலிருந்து, இச்சொல்லாட்சியின் அடிப்படை, பண்பைச் சார்ந்தமைந்து, பின்பே பருப்பொருளை ஒட்டியமைந்தது என ஊகிக்கலாம். எனினும் இன்றைய வழக்கில் பின்னதும், இலக்கியப் பார்வையில் முன்னதுமே பயின்றமைவது புலப்படும். பொதுப்பொருண்மையினதாகத் தோன்றினும், இலக்கியப் பாடுபொருள் சிலவேளை சில இடங்களில் இச்சொற்குத் தமக்கேற்ற சிறப்புப் பொருளை நிர்ணயிப்பதாகத் தோன்றுகின்றது.

அறநூல்களில் அமையும், **குறை** (ஊனம் ஒன்று இன்றி, இனியவை. 13), **குற்றம்** (ஊனம் பிறரை உரையான், ஏலாதி. 32), கேடு (மாய உயிர்க்கு ஊனம் என்னுமே ஊனமே தீர்ந்தவர் ஓத்து, ஏலாதி. 61) எனும் பொருண்மைகள் வழங்கும் இச்சிந்தனை, தொடரும் காலகட்ட இலக்கியங்களை நோக்கும்போதும் தொடர்ந்து ஏற்படுகின்றது.

காப்பியங்களில், சிந்தாமணி, **தீங்கு** (ஊனத்தின் தீர்ந்த சீர்த்தி உத்திரட்டாதியானே, 387), **குறைபாடு** (ஊனமில் கட்டுரைக்கு உள்ளம் குளிர்ந்து, 519) எனும் பொருண்மைகளையும் சூளாமணி, **குறை** (ஓர் ஊனங் கண்டேன், ஒட்டினும் ஒட்டேன் உரைக்குற்றேன், 309) எனும் பொருளையும், நீலகேசி, **பிழை** (ஊனத்தையின்றி, 117- அவை **ஐயமும்** திரிபும்) என்பதையும் இச்சொல்லால் புலப்படுத்துகின்றன. கம்பராமாயணத்தில் இச்சொற் பயிற்சி மிக்கு அமைவதுடன், கேடு (ஊனம் இல் அற நெறி, 126), **குற்றம்** (ஊனம் இல் ஞாலம், 410), **குறைபாடு** (ஊன வில் 1294, 6179), **சிதைவு** (ஊனம் இல் மலராடை, 2383), **தீமை** (ஊனமில் பெருங்குணமுடைய, 1856), **தீவினை** (ஊனம் உற்றிட மண்ணில் உதித்தார், 5451), **பழி** (ஊனம் இனி இலதாகுக இளங்கோக்கு, 9065) என்பன போலப் பன்முறை பல பொருளில் பயின்றது. எனினும் இப்பொருண்மைகளிடையே அமையும் எதிர்மை எனும் பொருட்டொடர்பு இவற்றை/இவற்றுள் சிலவற்றைத் தம்முள் மயங்கி அமைக்கவும் இடம்தரும்.

சமய, பக்திச் சார்புடைய இலக்கியக் களன் இப்பொருட் தொடர்ச்சியின் சில அரிய - புதிய பரிமாணங்களை அளிப்பது

புலப்படுகின்றது. உடம்பு, பிணி, பிறவி எனும் பொருண்மைகள் இந்நிலையில் குறிப்பிடத்தக்கன.

> ஊனமாம் உடம்பினில் உறுபிணி கெட
> - சம்பந்தர் தேவாரம், 284. 7
>
> ஊனமாயினபிணி அவை கெடுத்து
> - சம்பந்தர் தேவாரம், 292. 6
>
> ஊன சம்பந்தத்து உறுபிணி நீங்கி
> - சம்பந்தர் தேவாரம், 377. 11
>
> நம்மை ஊனம் அறுத்த பிரான்
> - சம்பந்தர் தேவாரம், 106 3
>
> ஊனந் தன்னை ஒருங்குடன் அறுக்கும் - திருவாசகம்,2. 105

தேவார திருவாசகங்கள் தரும் இப்புலப்பாடுகள் தனித் தன்மையுடையன. திவ்வியப் பிரபந்தம்,

> ஏத்த வல்லார்க்கு இல்லை ஓர் ஊனமே (2213)
>
> ஊனமில் செல்வம் என்கோ ஊனமில் சுவர்க்கம் என்கோ
> ஊனமில் மோக்கம் என்கோ ஒளிமணி வண்ணனையே (2343)

என்பன போன்ற வருகைகளில் அழிவு, கேடு, குறை எனும் பொதுப்பொருண்மையையே கொண்டு மரபுத் தொடர்ச்சி வழங்கினது. பெரியபுராணமும், இச்சொற் பயிற்சியைத் தந்து,

> ஊனமிகு பகைத்திறத்தால் .... (திருநகர. 36)
>
> மிக்க ஊனமாம் சமணை நீக்கி (திருஞான. 859)

எனவும்,

> ஊனனமில் தொண்டர் கும்பிட்டு (இயற்பகை. 15)
>
> ஊனமில் பலிகள் போக்கி (கண்ணப்ப. 13)
>
> ஊனமின்றி நிறை அன்பால் (முருக. 5)
>
> ஊனமில் சீர்ப் பெருவணிகர் (காரைக். 1)
>
> ஊனமில் வேத வேள்வி (திருஞான. 739)

எனவும் பொதுப்பொருண்மை சார்ந்து அமைக்கின்றது.

பிற சொற்கள் / பொருள்கள்

ஊனம் தண்டனையாக வழங்கப்படுதலும், ஊனரில் காட்டப்படும் இயலாமை, துன்பம் என்பனவும், ஊனம் இழிக்கப்படுதலும், இத்தகு பொருண்மைக் களனையும் குறிப்பாக - குறியீடாக ஊனத்திற்கு வழங்கவல்லது. பொதுமைப்படுத்திக் கூறினால் இத்தகு இழிப்புப் பொருண்மையின் பன்மை இங்கு அடங்கும்.

ஊனம் போன்று, பொதுநிலை குறித்து வரும் '**பொறி இன்மை**' (குறள். 618) அறிவின்மை, ஆள்வினை இன்மை சுட்டி வருவதும், **எச்சம்** (புறம். 28) குறைபாடு, பேதமை, பயனின்மை, மனிதத் தன்மையின்மை ஆகியவற்றை உணர்த்துவதும் இங்குச் சுட்டத்தக்கன.

குருடு: பார்வைக் குறைபாடு குறிக்கும் தொடர்புடைய சொற்கள், ஒளியின்மை, அறிவின்மை (பித்தன்/மூடன்/மடமை/பேதமை) கல்வி இன்மை, கண்ணோட்டமின்மை (அருள்/இரக்கம்/கருணையின்மை), மெய்யறிவு இன்மை, அழகின்மை, சிறப்பின்மை, உள்ளீடின்மை, கயமை போன்ற பல பொருண்மைகளைக் குறிப்பாகத் தரவல்லன. துஞ்சு புலி இடறிய சிதடன் (புறம். 73.4) என்பதில் அறியாமை குறிபெறுகிறது. கண்ணோட்டம் இல்லவர் கண் இலர் எனக் குறள் அமைய (577), நாலடி, கண் இல் புன்மாக்கள் (44) என மெய்யறிவு அற்றோரைத் தருகிறது. கண்ணில் கயவர் எனப் பழமொழியும் (109), கண்ணிலார் துறந்திடும் கணிகை மார்கள் எனச் சூளாமணியும் (2084) அமைக்கும். கம்பராமாயணம்,

> **குருடு ஈங்கு இது என்ன குறிக்கொண்டு கண்ணோட்டம் குன்றி**
>
> **அருள் தீர்ந்த நெஞ்சின் கரிது என்பது அவ் அந்தகாரம்** (3205)

என வடிக்கும். மேலும், மறம் உள்ளுணர்த்தி,

> **அறக்கண் அல்லது ஓர் கண்இலன் ஆகி** (6881)

எனவும், பெருமை இழப்பைச் சுட்டி,

> **நோக்கு இழந்தனர் வானவர் எங்களால்** (7597)

எனவும் அமைக்கும். திருவாசகம், 'செம்மை நலம் அறியாத சிதடரொடு' (அச்சோ. 9), 'கண்ணிலி காலம் அனைத்திலும்' (திருப்படை. 5) என்ற பயன்பாடுகளைச் செவ்வியின்மை குறித்துக் கையாளும். திருமந்திரம், 'காணாக்கண். (588) என்பதில்

புலனடக்கத்தையும், ‘அருட்கண்ணிலாதார்க் கரும்பொருள் தோன்றா’ (1808) என்பதில் இறைஞானம் இன்மையையும் அமைக்கும்.

திருமந்திரம் புலனடக்கத்தைக் குறிக்குமிடத்தில் நேர்ப் பொருள் அமைவது போல, நாலடியிலும் ‘திறன் அறிந்து ஏதிலாரிற்கட் குருடனாய்’ (158) என்பதில் நேர்ப்பொருள் அமையும்

மரபுத் தொடர்கள் பல இப்பார்வைக் குறைவைச் சுட்டும் சொல் தொடர்புடனமைந்து குறியீட்டுப் பொருள் வழங்குகின்றன. நேர்ப் பொருண்மையன்றி மறுதலைப் பொருண்மையே மேலோங்குவது வெளிப்படுகின்றது. அந்தகஜ நியாயம், கண்கெடப் பேசுதல், குருட்டாட்டம், குருட்டுப் பனங்காய், மனக்குருடு போன்று பல உள (பார்க்க: இணைப்பு).

செவிடு: கேள்வி (ஞானம்) இன்மை, அறிவின்மை, மூடமை போன்று ஒரு தளப்பொருண்மையே காதின்மையில் புலப்படுகின்றது. காதறை என்பதில் இழிப்பு, கீழ்மை வெளிப்படுவதாகக் கொள்ளலாம்; அவமானம் செய்தல் என்பதும் பொருந்தும்.

பிறர் மறையின்கட் செவிடராய் (நாலடி. 158) எனவும், சொல்லும் மறையில் செவி இலன் (ஏலாதி. 19) எனவும் கேளாச் செவி (திருமந். 588) எனவும் வருமிடங்கள் அருகி நேர்ப் பொருள் வழங்குகின்றன.

மரபுத் தொடருள் காது கிழிதல், காது வெட்டுதல் போன்ற சில உள.

ஊமை: உள்ளீடின்மை, அறிவின்மை, பயனின்மை, ஒலிப்பின்மை, புரிதல்-வெளியிடுதல் - தெரிவித்தல் போன்ற திறன் இன்மை, தனித்துச் செயற்பட அல்லது உதவ இயலாமை, வெளிப்படத் தெரியாமை போன்றன சூழற்பொருளாக இங்கு வெளிப்படுகின்றன. சங்க இலக்கியம் தரும்,

கூவற் குராலான்
படுதுயர் இரவிற் கண்ட
உயர்திணை ஊமன் (குறு. 224)

கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் (குறு. 58)

கண்ணில் ஊமன் கடற்பட்டாங்கு (புறம். 235)

எனும் குறிப்புகள் மேற்படி பொருண்மை பலவற்றிற்கும் இடன் அளிக்கும். துஞ்சு ஊமன் கண்ட கனா எனத் திரிகடுகம் தருவதும் (7), நோம், உறுநோய் நுவலகிற்றிலள் ஊமரின் மனத்திடை உன்னி விம்முவாள் எனக் கம்பன் (521) அமைப்பதும் இச்சார்பினவே. அறிவின்மை, பயனின்மை குறித்து, ஊதியம் ஏதும் அறியார் உரைப்பினும் ஓதியும் ஏதும் அறியாத ஊமர்கள் (870) எனத் திருமந்திரம் அமைக்கும்.

இறைவனை வணங்காத-பாடி வாழ்த்தாத நாவினரைச் சமயச் சார்பிலக்கியம் ஊமராகக் காட்டுவது தனிவகை அமைக்கும். நம்பியாண்டார் நம்பி இதனை வழங்குகின்றார்:

> **மன்றாடவும் பின்னும் மற்றவன் பாதம் வணங்கி அங்கே**
> **ஒன்றார் இரண்டில் விழுவார் அந்தோ சில ஊமர்களே**
> (கோயில்திருப்பண்ணியர் விருத்தம், 42)

> **மதியந்தவழ் மாடமாளிகைக் காழி என்றால் வணங்கார்**
> **ஓதியம் பணைபோல் விழுவார் அந்தோ சில ஊமர்களே**
> (ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக் கோவை, 6)

நேர்ப் பொருள் வழங்குவனவாகத் தீய புறங்கூற்றின் மூகையாய் நிற்பான் (நாலடி 158), தீச்சொற்கண் மூங்கை (ஏலாதி.19) என்பன காணப்படுகின்றன. மரபுத் தொடரில், ஊமைப் பணம், ஊமைக்கட்டி, ஊமைத் தேங்காய் போன்றன அமையும்.

மூக்கிலி : மூக்கறை கீழ்மையையும், மூக்கறுத்தல், மூக்கை உடைத்தல் அவமானம் செய்வதையும் குறிக்கின்றன. மூக்கின்மை பழி என்பதைக் கீழ்க்கணக்கு சுட்டும் (பழ. 115). கம்பராமாயணம், திவ்வியப்பிரபந்தம் ஆகியன, அயோமுகி, சூர்ப்பணகை ஆகியோர் மூக்கறுதலைத் தருவது சுட்டத்தக்கது.

முடம் : கைமுடம், கால்முடம் ஆகிய இரண்டும் இங்குக் கருதுதற்குரியன. கையின்மை அல்லது கை அறுதல், இயலாமை, செயல் இன்மை, இழப்பு என்பனவற்றையும்; கால் முடம் இயக்கமின்மை, பயனின்மை, ஒதுக்கப்படுதல், முதிர்வு, மூப்பு, தளர்ச்சி, இயலாமை அல்லது உதவி அற்ற நிலை ஆகியவற்றையும், தகுதிக்குமேல் விருப்பம் கொள்ளல் என்பதையும் குறிக்கும்.

> குறுந்தாட் கூதளி யாடிய நெடுவரைப்
> பெருந்தேன் கண்ட இருங்கான் முடவன்
> (இருக்கை. பா.பேதம்)

உட்கைச் சிறுகுடைக் கோலிக் கீழிருந்து
சுட்டுபு நக்கியாங்கு (குறு. 60)

எனவும்,

தானும் நடவான் முடவன் பிடிப்பு ஊணி
யானையோடு ஆடல் உறவு (பழ. 16)

எனவும் வருவன இயலாமை, இயக்கமின்மை போன்றவற்றை விளக்கும். தன்னிலை உணராமை, தகுதி மீறிய ஆசை என்பனவும் இவற்றில் புலப்படும்.

ஒரு காலில் நிற்றல், உறுதியாய் இருத்தல் என்பதையும், ஒரு கை பார்த்தல், வெல்ல முயலுதல் என்பதையும் தரல் நேர் நிலையில் கருதத்தக்கன.

கூனும் குறளும் : எள்ளல் பொது நிலையில் இங்குப் புலப்படுகின்றது. கூன், கொடுமை, உள்ளக் கோட்டம், உறாஅவகை செய்தல், வளைவு ஆகியவற்றையும், குறள் - குள்ளம் என்ற நிலையில் சிறுமை, கொடுமை, தந்திரம் என்பனவற்றையும், மனக்குள்ளம் என்பதால் தந்திரம், வஞ்சம் என்பனவற்றையும் தருகின்றது. கூழை என்பதில் புத்திக் குறைவு, மடமை என்பன பொருந்துகின்றன.

உள்ளமும் கோடிய கொடியளாகக் கூனியான மந்தரை இராமாயணத்திலும் திவ்வியப்பிரபந்தத்திலும் காட்டப்படுவது இங்கு இணைத்துக் காண்டற்குரியது.

மருள் : பால் மருளாக அமையும் அலி, பேடி என்பன அச்சம், வீரமின்மை, அறிவின்மை, உள்ளீடு - உள்வயிரமின்மை, தாளாண்மை - முயற்சி இன்மை, கேடு பயத்தல், பயன்படாமை எனும் பொருட் பரிமாணங்கள் கொள்ளும்

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும் (குறள். 614)

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையத்து
அஞ்சும் அவன் கற்ற நூல் (குறள். 727)

போன்ற அடிகள் இங்கு நினைக்கத்தக்கன.

அலி எழுத்து, பேடி எழுத்து, அலி மரம் போன்ற பயன்பாடுகள் இப்பொருட்டொடர்ச்சி புலப்படுத்தும்

முடிப்புரை

ஊனம், குருடு எனும் இரு சொற்களும் மிகுதியான குறியீட்டுப் பொருள் தருவது இவற்றிலிருந்து வெளிப்படுகிறது. இப்பாங்கு, ஊனநிலை மற்றும் பார்வையின்மை பற்றிய எண்ணப் பாதிப்பையுணர்த்துவதாகக் கருத முடிகிறது. அன்றியும் ஊன நிலைகளனைத்தும் இழிப்புப் பொருண்மைச் சார்புடன் பயன்பட்டாலும், அருகி உயர்வுக் குறியீடாகக் கையாளப்படல் இம்மக்கள் முழுமையாக ஒதுக்கப்படாமையை உள்ளுறுத்தும்.

இணைப்பு*

அந்த கஜ நியாயம்	ஒன்றை முற்ற ஆராயாது அதனொரு பாகத்தை மாத்திரம் கண்டு நிச்சயிக்கும் நெறி
அந்த பங்கு நியாயம்	குருடன் தோள்மேல் நொண்டியேறிக் கொண்டு வழிகாட்டக் குருடன் நடந்து செல்வது போன்ற நெறி
அந்த பரம்பரை	குருடரைக் குருடர் பின்பற்றும் நெறி
அலி எழுத்து	ஆய்த எழுத்து
அலி மரம்	வயிரமில்லாத மரம், பாலும் நாரும் முள்ளும் உள்ள மரம்
இடுப்பொடி	உடல் வருந்துதல்
உள்ளதும் போச்சுடா நொள்ளைக் கண்ணா	ஏதோ ஒரு வகையில் தேவையை நிறைவேற்றுவதாக இருந்ததற்கும் கேடு வருதல்
ஊமை ஊரைக் கெடுக்கும்	தன் கருத்தைத் தெரிவிக்காமல் அப்பாவி போல் காணப்படுபவர்
ஊமைக்கட்டி	முகங்கொள்ளாத சிலந்திக் கட்டி
ஊமைக்காய்	பருப்பற்ற காய்
ஊமைக் காயம்	முரட்டடியால் வெளிக்குக் காயந் தெரியாது உண்டான வீக்கம்

---

* களன்

1. தமிழ் லெக்சிகன், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1982.
2. தற்காலத் தமிழ் மரபுத் தொடர் அகராதி, மொழி, மொழி கலாச்சார வள மேம்பாடு அறக்கட்டளை, சென்னை, 1997.

ஊமைக் கோட்டான்	பேசத் தெரியாமல் விழிப்பவன், அதிகம் பேசாமல் அமுக்கமாக இருக்கும் நபர்
ஊமைக் கோட்டான் வெயில்	மேகமூட்டத்தில் உறைக்கும் வெயில்
ஊமை கண்ட கனா	பிறரிடம் வெளிப்படுத்த முடியாத விருப்பம்
ஊமைத் தேங்காய்	நீராடாத தேங்காய், உள்ளீடு இல்லாதது
ஊமைப்பணம்	ஒலிக்குறைவுள்ள பணம்
ஊமை வீக்கம்	ஊமைக் காயம்
ஊமை வெயில்	ஊமைக் கோட்டான் வெயில்
ஒருகாலில் நிற்றல்	உறுதியாயிருத்தல்
ஒற்றைக் காலில் நில்	எடுத்த முடிவில் பிடிவாதமாக இருத்தல்
ஒற்றைக் காலினிற்கை	விடாது முயல்கை
ஓட்டைக் கை	பொருள் தங்காத கை
கண்கெடச் செய்தல்	அறிந்து தீமை செய்தல்
கண்கெடப் பேசுதல்	கண்டொன்று சொல்லுதல்
கண்கெடுதல்	அறிவழிதல்
கண்ணைக் கெடுத்துக் கொள்	கேடு தேடிக் கொள்ளுதல்
காதறை கூதறை	ஒழுக்கங் கெட்டவள்
காதறைச்சி	சண்டை பிடிப்பவள்
காது கிழித்தல், காது கிள்ளுதல், காது நறுக்குதல், காது விடுதல், காது வெட்டுதல்	பத்திரத்தை ரத்து செய்தல்
கான் முரிதல்	அடியோடு கெடுதல்
குருட்டடியாய்	தற்செயலாய்
குருட்டாட்டம்	கண்மூடித்தனமான செய்கை
குருட்டாம் போக்கில்	யோசித்து முடிவு செய்யாமல்
குருட்டுக் கண்ணாடி	முகந்தெரியாத கண்ணாடி

குருட்டுக்கல்	ஒளி மங்கிய மணி
குருட்டுச் சாயம்	மங்கலான சாயம்
குருட்டுத்தனம்	கண்மூடித்தனம்
குருட்டுத் தீர்ப்பு	அதிவேகமான தீர்மானம்
குருட்டு நியாயம்	கண்மூடத்தனமான நியாயம்
குருட்டுப் பக்கம்	அச்சடிச் சீலையின் மங்கலான பக்கம்
குருட்டுப் பணம்	தேய்ந்த நாணயம்
குருட்டுப் பத்தி	மூட பத்தி
குருட்டுப் பலகை	அழுக்கடைந்த எழுது பலகை
குருட்டுப் பனங்காய்	உள்ளீடற்ற பனங்காய்
குருட்டுப் பாடம்	பொருளுணர்ச்சி இல்லாமல் செய்யும் மனப்பாடம்
குருட்டுப்பூனை விட்டத்தில் பாய்தல்	எந்தத் திட்டவட்டமான யோசனையும் இல்லாமல்
குருட்டுப்போக்காய்	கண்மூடித் தனமாய், தற்செயலாய்
குருட்டு முத்து	மங்கலான முத்து
குருட்டு மை	எழுத்துத் தெரியாத மசி
குருட்டு யோகம்	முயற்சியின்றி செல்வமுண்டாதற்குக் காரணமான யோகம்
குருட்டுவழி	கண்மூடித்தனமான முறை
குருட்டுவாக்கில்	தற்செயலாய்
குருட்டெழுத்து	மங்கலான எழுத்து
கூனிக்குறுகு	அவமானத்தால் உடல் குறுகுவது போல் உணர்தல்
கை ஒடித்தாற்போல்	செயலற்றுவிட்டது போல்
கையை அறுத்துக் கொள்	நஷ்டப்படுதல்
கொட்டை செத்தவன்	கையாலாகாதவன்
நொண்டிச் சமாதனம்	வலுவற்ற விளக்கம்
நொண்டிச் சாக்கு	பொருத்தமற்ற காரணம்
பேடி எழுத்து	ஆய்த எழுத்து

பொட்டை நெட்டுரு	பொருள் புரியாமல் செய்யும் குருட்டு மனப்பாடம்
மனக்குருடு	அறிவின்மை
மனக்குள்ளம்	தந்திரம், வஞ்சம்
மூக்கறு, மூக்கறுத்தல், மூக்கறுப்பு, மூக்கறுபடு	அவமானப்படுத்துதல், அவமானம், அவமானம்படுதல்
மூக்கை உடை	மட்டம் தட்டுதல்
மொட்டைக் கடிதம்	அநாமதேயக் கடிதம் : மலையாளத்தில் இது 'ஊமக் கத்து' எனப்படுகிறது.

ஊனத்தில் நோயும் முதுமையும்

அறிவு, புலன், உறுப்பு, உடலமைப்பு ஆகியவற்றில் ஏற்படும் குறைபாடு, சிதைவு, செயலிழப்பு ஆகியன ஊனம் ஆகும். வெள்ளம், நெருப்பு, நிலநடுக்கம், வறட்சி, பஞ்சம் போன்ற இயற்கைச் சீற்றங்களாலும், நோய், தொற்றுநோய், கொள்ளை நோய் உருவாக்கும் கிருமிகள் தாக்குதலாலும், போர், கலகம், விபத்து, குற்றம், சுரண்டல் ஆகிய மனிதச் செயல்களாலும்; மூடநம்பிக்கை, கல்வி/அறிவின்மை ஆகிய சமூக நிலையாலும், சோம்பல், தன்னழிவு, மூப்பு, மரபு ஆகிய தனிமனித நிலையாலும் ஊனம் ஏற்படலாம். இவற்றுள் நோயாலும் மூப்பாலும் ஏற்படும் ஊனம் தனித்த சிந்தனைக்குரியது.

வயது முதிர்ச்சி காரணமாக மூப்பும் அதைச் சார்ந்த உள உடல் நோய்களும் ஊனத்திற்கு இட்டுச் செல்வதால் நோயும் மூப்பும் ஊனமும் தொடர்புடையன. வயது நிலையின்றி, இளம்பருவத்திலேயே நோய் காரணமாக ஊனம் உருவாகலாம். மரபு (heridity) பற்றி, குழவி பிறக்கு முன்னும், தாயின் உடல்நிலை மற்றும் மருத்துவ-புறச் சூழ்நிலையால் பிறக்கும் போதும் (perinatel), நோய்க்கு ஆட்படுவதால் பிறந்த பின்-வளரும் பருவத்திலும் ஊனம் ஏற்படலாம்.

ஊனமுற்றோர் - முதியோர் என இணைத்துச் சுட்டுவது போல, நோயாளரும் ஊனரும் இணைத்துச் சுட்டப்படுதல் உண்டு. சிலப்பதிகாரம்,

> கூனுங் குறளு மூமுஞ் செவிடும்
> அழுகுமெய் யாளரும் (5.118-119)

எனத் தொழுநோயாளரை ஊனர்பட்டியலில் தரும். மணிமேகலை,

> காணார் கேளார் கால்முடப்பட்டோர்
> பேணுநர் இல்லோர் பிணிநடுக்குற்றோர் (13.111-112)

எனப் பிணியாளரை ஊனருடன் சார்த்தி மொழியும். பிணியும் மூப்புமிணைந்து தரப்படுதலைப் பழமொழியில் காணலாம்.

அஞ்சும் பிணி மூப் பருங்கூற் றுடனியைந்து
துஞ்ச வருமே துயக்கு (365)

இந்நிலைகள் பற்றி "நோய் - மூப்பு - ஊனம்" இங்கு இணைத்துப் பார்க்கப்படுகிறது.

முதுமையால், உடல் தளர்ச்சி ஏற்பட்டு, புலன்களின் செயற்பாடு குன்றி பன்முக ஊனம் உருவாகின்றது. கண்பார்வை மங்குதல், காது கேட்குந்திறன் குறைதல், முதுகு வளைந்து கூனாதல், கால்-கைச் செயல்திறன் குன்றல், பல் விழுந்து பேச்சு குழறுதல் என நான்கு புலனும் பாதிக்கப்படுகின்றன. மறதி, நினைவாற்றல் குன்றல் (senelity) என அறிவுப் புலனும் பாதிக்கப்படுகின்றது. வயதேற்றம் மட்டுமன்றி, முதுமையில் நோய் எதிர்ப்புச் சக்தியும் குன்றியமைவதால், போதிய ஊட்டம், மருத்துவம், சுகாதாரமான சூழல், உடல் - உள நலம் இவை பேணப்படாதபோது ஊனநிலை விரைந்து மிகுகின்றது. மூப்பியல் (Gerontology) இது பற்றி நினைக்கிறது.

இவ்வாறன்றி, எப்பருவத்திலும் நோய் தாக்கி ஊனம் ஏற்பட வாய்ப்புண்டு. வாழ்க்கைத் தரமும், சூழலும், மருத்துவமும் செவ்வையாக இருக்கும்போது, நோய் தாக்கினாலும் ஊனம் உருவாகாமல் காக்க முடியும் அல்லது மறுவாழ்வு வாய்ப்புகளால் (re-habilitation), ஓரளவு இயல்பான வாழ்முறையை அமைத்துக் கொள்ள இயலும்.

நோயால் ஊனம்

மரபணுச் செவ்வியின்மை பற்றி (chromosome disorder) உருவாகும் உளச்சிதைவான டௌண்குறியம் (down's syndrome) மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நோய் நிலையாகும் (mongolism/mongoloid). மூளைவாதம் (cerebral palsy/spastics) மற்றும் முதுகுத் தண்டுக் குறைபாடு (spinabifida) என்பன காரணமாக ஏற்படும் மூளைவளர்ச்சியின்மையும் மனவளர்ச்சி குன்றிய பாங்கை (mental handicap) ஏற்படுத்துகிறது. தலையில் அடிபடுதல், மூளைச் சவ்வு அழற்சி (மெனிஞ்சைட்டிஸ்) போன்ற நோய் நிலையும் இந்நிலையில் சுட்டற்குரியது. குழந்தையின் உடலில் குறிப்பிட்ட அமிலம் அளவு மீறியிருத்தலாகிய பினைல்கெட்டோனூரியா (phenylketonuria) காரணமாகவும் மூளை பாதிப்பு ஏற்படுகிறது. சத்துணவின்மை, வலிப்பு (epilepsy), கிரந்திப்புண் (syphills) என்பனவும் மூளைச் செயற்பாட்டை ஊனப்படுத்துகின்றன.

மொழிபேசுதல், தகவலளித்தல் (language and communication) என்பனவற்றில் செயற்குறைபாடமைதலும் ஊனமாகும். இது மூளை பாதிப்பாலும் செவிட்டுத் தன்மையாலும், மேலுதடு அண்ணப் பிளப்பாலும் (cleft palate and lip) உருவாகும். மூளையின் பேச்சுருவாக்கும் பகுதியும் (broca's area), புரிந்துகொள் திறன் பகுதியும் (wernick's area) நோய், அதிர்ச்சி, விபத்து, காயம் ஆகியவற்றால் பாதிப்போ சிதைவோ அடையும்போது பேசும் திறனில் குறைவு உருவாகிறது; ஊமைத் தன்மை ஏற்படுகிறது.

கேள்விக்குறைபாடு, மரபு நிலை, குழவி பிறக்குமுன் தாயின் உடனிலை காரணமாக ஏற்படலாம். கருவுற்ற முதல் மூன்று மாதத்துள் தாய்க்குத் தட்டம்மை (german measles) அல்லது நீர்க்கோவை (influenza) போன்ற நுண்கிருமித் தொற்று நோய்கள் (viral infection) உருவாவது குழந்தையின் காதுகளைப் பாதிக்கின்றன. பிறக்கும்போது சிக்கல் கடினமாகிப் போதிய உயிர்வளி குழந்தைக்குக் கிடைக்காமையும், உரிய காலத்திற்கு முன்பே பிறத்தலும் (pre-mature) தாயின் இரத்தத்தில் மஞ்சள் காமாலைப் பாதிப்பு அமைவதும் கேள்விப்புலனை மோசமாகத் தாக்குகின்றன. வளர் பருவத்தில் காதுச் சீழாலும், மூக்கின் உட்பகுதியோ தொண்டையின் பின்பகுதியோ ஒவ்வாமை, வீக்கம் இவற்றால் பாதிக்கப்பட்டும், தட்டம்மை, நீர்க்கோவை, கன்னக்கட்டு (mumps) ஆகிய நோயாலும் கேள்வி சிதைவுறலாம்.

கண்கள், நரம்பதிர்ச்சியாலும் (trauma) காயம்படுதலாலுமே மிகுதியாகப் பாதிப்படைகின்றன. ஒரு கண்ணிலேற்படும் ஊறு கவனிக்கப்படாது விடப்பட்டு இருகண்ணும் பார்வையிழத்தலும் (sympathetic ophthalmia) உண்டு. கருவளர்ச்சியில் முதல் ஆறுமாத காலப் பகுதியில் கண் வளர்ச்சி உருவாகுவதால் அப்பகுதியில் கருப்பையில் ஏற்படும் எக்குறைபாடும் குழந்தை பிறக்குமுன்பே அதன் கண்ணில் பல நிலைகளையும் பாதிக்கலாம். கண்களே உருவாகாமை, சிறிய கண்கள், கருவிழிப் படலம் இன்மை அல்லது சரியாக அமையாமை என்பன இதனால் அமையும். குழந்தைப் பருவத்தில் அருகிக் காணப்படும் விழிவிறைப்பு (glaucoma), கண்புரை (congenital cataract) என்பனவும் பார்வையிழப்புக்குக் காரணமாம். கருவின் 6 முதல் 12 வாரத்திற்குள் தட்டம்மை தாய்க்கு ஏற்படுவதால் குழந்தை மூளைவளர்ச்சி குன்றியதாகவும், செவிடாகவும் அமைவதுடன் இக்கண்புரையும் பெறுகிறது. மூளையில் ஏற்படும் புற்றுக்கட்டி, விழித்திரைப் புற்று (retino blastoma), இமை அரிப்பு (trachoma) போன்றன நேரடியாகக்

கண்பார்வையைப் பாதிக்கின்றன. தட்டம்மை, பெரியம்மை, நச்சுக் காய்ச்சல்; தொண்டையடைப்பான், ஸ்கார்லட் காய்ச்சல், மூளைச் சவ்வு அழற்சி என்ற நோய்கள் குழந்தைப் பருவத்தில் வருவதும், பார்வையிழக்கச் செய்கின்றன. நிறக்குருடு, மாலைகண் எனப் பரம்பரை நோயும் உள.

முடமாகுதற்கும் நோய்க் காரணம் உள. மூளை வாதம், முதுகுத் தண்டின் வளர்ச்சிக் குறைபாடு என்பன பிறக்கும் போதே குழந்தையை முடமாக்குகின்றன (orthopaedically handicapped). இளம்பருவத்தில் ஏற்படும் இளம்பிள்ளை வாதம் (poliomyletis), முடக்குவாதம் (infantile paralysis) என்பன நீங்கா முடத்தன்மையை ஆக்குகின்றன. எலும்பு மற்றும் மூட்டுகள் காசநோயால் தாக்கப்படும்போதும் (bone and joint tuberculosis), மூட்டு வீக்கம் காரணமாகவும் (arthritis), குழந்தைக்கணை (rickets) போன்ற வற்றாலும் இந்நிலை உருவாகின்றது.

இவையனைத்தும் இணைத்துப் பொதுவாக நோக்க, கருவாக அமையும் போதே தாயைத் தாக்கும் நோய்கள் குழந்தையின் சில புலன் வளர்ச்சியைப் பாதிக்கலாம் என்பதும், குழவிப் பருவத்திலும் பின்பும் பெரும்பான்மையான ஊனங்கள் பலவாறான நோய்களாலுருவாகின்றன என்பதும் தெரிய வருகின்றன.

இலக்கியக் களனில் . . .

தொல்காப்பியம் முதல் பெரியபுராணம் வரையிலான களனில் ஊனம் பற்றி அமையும் தரவுகளில் நோயும் ஊனமும், முதுமையும்-ஊனமும், நோயும் - முதுமையும் - ஊனமும் என இணைத்தும் பொருத்தியும் காணத்தகும் குறிப்புகள் சிலவே உள. ஊனம் பற்றிய கருத்தும் ஊனர் பற்றிய கரிசனையும் போதிய அளவுக்கு இன்மை இதன் காரணமாகலாம். மருத்துவப் பார்வை முழுமையாக இலக்கிய ஆசிரியரில் பொருந்தாமையும் காரணம் போலும்.

முதுமையால் கண்பார்வை மறைந்தது புறநானூற்றி லமையும்.

> வாழு நாளோ டியாண்டுபல வுண்மையிற்..........
> கோல்காலாகக் குறும்பல வொதுங்கி
> நூல் விரித்தன்ன கதுப்பினள் கண்டுயின்று
> முன்றிற் போகா முதிர்வினள் யாயும் (159. 1-5)

தொழு நோயாலும், முதுமையாலும் முடத்தன்மை உருவாகியதைப் பார்ப்பானில் கலித்தொகை காட்டும்.

தீரத் தறைந்த தலையுந்தன் கம்பலுங்
காரக்குறைந்து கறைப்பட்டு வந்துநஞ்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பானை ... (65. 6-8)

கம்பூன்றி, நடுக்கமும் இருமலுமாகியமையைத் தொடித்தலை விழுத்தண்டினார் பாடல் தருவதும் இங்கு இணைத்துக் கருதத் தக்கது.

தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே (புறம். 243. 12-14)

திருமந்திரம் முடமும் நோயும் தொடர்புறுமாற்றைத் தருகிறது.

வீங்குங் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்கிய வாதமும் கூனு முடமதாய்
வீங்கு வியாதிகள் கண்ணில் மருவியே (655)

இரத்த சோகை, வாதம் என்பனவும் நோய் - வியாதி - போல உடலின் செவ்வியின்மை பற்றி அமைவதால் நோய் நிலையாக இணைத்துக் கருதத்தக்கன. தொழுநோய் (குட்டம்), முகம், கை, கால், விரல்கள் போன்று பொதுவாகப் புறத்தோற்றம் முழுமையிலும் விகாரமான பாதிப்பு ஏற்படுத்துவதும்; ஊனர் பட்டியலில் இவருட்படுவது சிலப்பதிகாரம் முதலே அமைவதும்; கலித் தொகையும் முடம் - குட்டம் என்பதை இணைத்துத் தருவதும் (பார்க்க: நச்சினார்க்கினியர் உரை) இவண் இணைத்துக் கருதுதற் குரியது.

பக்தி இலக்கியச் சார்பில், முதுமையும் நோயும் தரப்படும் ஊனக் காட்சி, காலந்தாழ்த்தாது, இன்றே இறையருளை வேண்டுதல் நலம் என்பது போன்ற உணர்வடிப்படையில் தரப்படுவது தனித்துச் சுட்டற்குரியது.

முற்றமூத்துக் கோல்துணையா முன்னடி நோக்கி
வளைந்து
இற்றகால்போல் தள்ளிமெள்ள விருந்தங்
கிளையாமுன் (968)

என நாலாயிரம் தர, க்ஷேத்திரத் திருவெண்பா,

குந்தி நடந்து குனிந்தொருகை கோல் ஊன்றி
நெந்திருமி ஏங்கி நுரைத்தேறி வந்துந்தி (3)

கரம் ஊன்றிக் கண்இடுங்கிக் கால்குலைய மற்றோர்
மரம் ஊன்றி வாய்குதட்டா முன்னம் (21)

என அமைக்கின்றது. கூன், கால் முடம், கண் பார்வைக் குறை என்பன இவற்றில் புலப்படுகின்றன. இளமை, யாக்கை நிலையாமையை, மணிமேகலை, மூத்தாளொருவளைக் காட்டித் தருவதில் (20.40-69), கண்கள் வழுநீரும், மூக்கு சீழ் ஒழுக்கும், காது உள்ளூன் வடிதலும் கொண்டமைவது முதுமையின் நோய் நிலையாவதுடன், புலன்களின் சீர்கேடாகவும் புலப்படுகின்றன.

தொகுப்புரை

நோயும் முதுமையும் ஊனக் காரணங்களாம். மருத்துவத் துறையும் முதுமை நோயியல் துறையும் (geriatrics) இதனால் ஊனம் பற்றிக் கருத்துச் செலுத்துகின்றன.

தண்டனையாக ஊனம்

தண்டனை எனும் சொல் 'சிட்சை' (punishment, penalty) எனப் பொருள்படுகிறது (தமிழ்லெக்சிகன், தொகுதி 3, ப. 1733). கோல் எனப் பொருள்படும் தண்டு, தண்டம் என்பதன் அடியாக இச்சொல் உருவாகியிருக்கலாம். கோலால் (கம்பு, கழி) அடித்தல் என்பது தொடக்ககால இயல்பான, எளிய தண்டனையாக அமைந்திருக்கலாம் என்ற ஊக அடிப்படையில் இதனைப் பொருத்திக் காணலாம். தண்டம் எனும் சொல்லும், சதுர் விதோபாயங்களுள் ஒன்றாகிய ஒறுத்தடக்குகை எனவும், தண்டனை எனவும் பொருள்படுவதும் (மேற்படி, ப. 1731); தண்டகம், தண்டல், தண்டனம், தண்டிப்பு எனும் சொற்களும் தண்டனை எனப் பொருள் கொள்வதும் (மேற்படி, பக். 1732, 1733, 1734), தண்டங் கொடுத்தல், தண்டப்படுதல், தண்டம் பிடித்தல், தண்டம் போடுதல் எனும் சொற்கள் (தண்டனை வகைகளுள் ஒன்றான) அபராத மிறுத்தல், அபராதம் விதிக்கப்பெறுதல், அபராதமிடுதல், அபராதம் வாங்குதல் எனும் பொருள் தருவதும் இச்சொற்பொருட் பொருத்தத்தை விளக்கவல்லன (மேற்படி, பக். 1730, 1731, 1732). மேலும், தண்டஞ் செய்தல் - தண்டித்தல், தண்டத் தீர்வை - தண்டனையாக இறுக்குந் தீர்வை, தண்டதரன் - தண்டிப்பவன் (யமன்), தண்டநாயகன் - (தண்டனை செய்யும் அதிபதியாகிய) அரசன், தண்டப்பொருள் - அபராதமாக வாங்கும் பொருள், தண்டர் - தண்டனை செய்வோர், தண்டனைத் தீர்ப்பு - குற்றவாளியை விசாரித்துத் தண்டனை விதிக்குந் தீர்ப்பு, தண்டித்தல் - ஒறுத்தல் (to chastise, scourge, punish), தண்டோபாயம் - சதுர் விதோபாயங்களில் தண்டனையாகிய உபாயம் எனத் தொடர் புடைய பல சொல்லாக்கங்களும் இதனொடு இணைத்துக் காண வல்லன (மேற்படி, பக். 1730-1736).

முதல் வருகை

பழந்தமிழில் ஒறு(ப்பு), தண்டம் எனும் சொற்கள் தண்டனை குறித்து வருவது தெரிகிறது. புறநானூறு, சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் பாடியதில் இவ்விரண்டு ஆட்சியையும் தருகிறது.

வழிபடுவோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழி தேறலையே
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி யத்தக வொறுத்தி
வந்தடி பொருந்தி முந்தை நிற்பிற்
றண்டமுந் தணிதிநீ பண்டையிற் பெரிதே (10. 1-6)

'தண்டமாப்பொறி' (புறம். 378.9) என இந்நூலில் காணப்படும் ஆட்சியும் இப்பொருட்டொடர்பு கொள்ளலாம்.

விளக்கம்

தனிமனிதன், சமுதாயம், அரசு ஆகியவற்றிற்கு எதிராகத் தீமையிழைக்கும் குற்றவாளிக்குச் சட்டப்படி அதிகாரத் தலைமை அல்லது நீதி மன்றம் விதிக்கும் இழப்பு தண்டனை எனப்படும். உடல், உயிர், பொருள், மானம், உரிமை போன்ற ஒன்றோ பலவோ இழப்புக்குள்ளாகலாம். உடலை வருத்தும்-துன்புறுத்தும் நிலையில் அளிக்கப்படும் தண்டனைகளுள் ஊனஞ்செய்தலும் உண்டு. உறுப்பு அல்லது உறுப்புகளுக்கு ஊறு/கேடு விளைவித்தலால், அவ்வுறுப்பை அழித்தல்-இல்லாமல் செய்தல், அதனைச் செயலிழக்கச் செய்தல், பயன்பாடற்றுப் போகுமாறு செய்தல் என இதனை விளக்கலாம்.

நோக்க வகைப்பாடு

தண்டனை வெவ்வேறு நோக்கங்களுக்காக வழங்கப் படுகிறது. குற்றவாளி தன் தவறை உணரவேண்டும், சமுதாயத்தி லிருந்து குற்றவாளிகள் நீக்கப்படவேண்டும், குற்றவாளி பெறும் தண்டனையால் மற்றவர்/பிறர் - பார்ப்போர் - குற்றமிழைப்பதைத் தவிர்க்க/விட வேண்டும், குற்றங்களற்ற-குற்றச் செயல்கள் இல்லாத சமுதாயம் உருவாக வேண்டும், குற்றம் செய்தவன், மீண்டும் குற்றம் செய்வதைத் தடுக்க வேண்டும் எனத் தனிமனித/சமூக நோக்கம் பலவாகும்.

பொதுவாகத் தண்டனையை மூன்று வகையாகப் பிரிப்பர். அவை 1. மீண்டும் குற்றம் நிகழாமலிருப்பதற்காகப் பிறரை எச்சரித்துக் குற்றத்தைத் தடுக்கும் நோக்கம் கொண்டவை. 2. வினையின் விளைவை அனுபவிக்கச் செய்யும் நோக்கம் கொண்டவை. 3. சீர்திருத்த நோக்கம் கொண்டவை (கலைக் களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1958, தொகுதி 5, பக். 441-442) என்பன.

பெரிய குற்றவாளிகளுக்கு மட்டுமன்றி, தவறும் குழந்தைக்குப் பெற்றோரும், மாணவர்க்கு ஆசிரியரும் அளிக்கும் ஒறுத்தலும் தண்டனையாகும். இப்பாங்கில், சட்ட நீதித் துறையில் மட்டுமன்றிக் கல்வித் துறையிலும் 'தண்டனை' இடம்பெற்று, பலவகை நோக்கமுடையதாகப் பகுத்தாயப்படுகின்றது. 1. விரும்பத் தகாத நடத்தையை நிறுத்தவோ, அல்லது விரும்பத்தக்க நடத்தையைத் தூண்டவோ தண்டனை வழங்கி நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துதல். 2. அச்சமூட்டிச் செயலூக்கம் கொடுக்க வல்ல தண்டனையளித்தல். 3. தண்டனை வழங்கும் தனிநபர் அல்லது அமைப்பின் நோக்க நிறைவேற்றத்திற்காக வழங்கப்படும் தண்டனை. 4. வஞ்சம் தீர்ப்பதற்காக - பழிக்குப்பழி வாங்குவதற்காக அளிக்கப்படும் தண்டனை. 5. தவறிழைத்தவரைத் தூய்மைப்படுத்த, இழைத்த குற்றத்திற்குக் கழுவாய் தேடிக்கொள்ளத் தரப்படும் தண்டனை. 6. குற்றமிழைக்கத் தூண்டும் உந்துதலைத் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ அடக்க, அழிக்கத் தண்டனை பயன்படுதல். 7. கற்றலில் ஒரு சிறந்த ஊக்கியாகத் தண்டனை கையாளப்படுகின்றமை. 8. ஆக்கநிலைப்பட்ட தூண்டலாகவும் தண்டனை பயன்படல். (வாழ்வியல் களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1988, தொகுதி 9, பக். 783-87).

கசையடி போன்று உடலுக்கு வழங்கப்படும் தண்டனைகள் வேதனையை அளிப்பதுடன், பிறர்முன் தண்டனையளிக்கப்படும் நிலையில் தன்மானத்தைப் பாதித்து அவமான உணர்வையும், மன உளைச்சலையும், எண்ணக்குலைவையும் (frustration) ஏற்படுத்தும். இதனால், தண்டனையால் ஏற்படும் பின்விளைவு, எதிர்பார்க்கப் படுவது போன்று நல்லதாக, நேரானதாக (positive) அமையாமல், எதிர்விளைவுடையதாகவும் (negative) அமையலாம். இந்நிலை, உளவியல் அடிப்படையில் தண்டனை பற்றிய தனிச்சிந்தனைக்கு இடமளிக்கிறது.

குற்றத்தின் அளவும் தண்டனையினளவும் சமமானதாகவோ, அல்லாமலோ அமையலாம். குறைந்த அளவான - எளிய தண்டனை ஒருபாலும், பொருந்தாத பெரிய - கொடுந் தண்டனை மறுபாலும் அமையக் கூடும். குற்றமிழைத்தவரன்றி, தொடர்பு பற்றி அல்லது தவறாக, மற்றொருவர் தண்டிக்கப்படுதல் என்பதும் காணப்படுகிறது. குற்றமிழைத்த பின் தண்டனை என்பதுடன், அம்முயற்சியிலீடுபடும் போதே தண்டிக்கப்பட்டு, குற்றம் நிகழல் தவிர்க்கப்படுதலும் அமையும். சட்டத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு, எந்தவிதமான விசாரிப்புமின்றி - சுயேச்சையாகத் தண்டனையை விதித்தல் - தானே நிறைவேற்றல் என்ற பாங்கால்,

காலந்தோறும் ஒரே குற்றம் வெவ்வேறு தண்டனையால் ஒறுக்கப் படலாம்.

குற்றமிழைத்ததையே தண்டனையாக்கல் என்பதும் உண்டு; கொலைக்குக் கொலை, திருட்டுக்கு, அப்பொருளைத் திருப்பியளித்தல், கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல் (விவிலியம். யாத். 21. 23-25) போன்றன. ஆயின் எல்லாக் குற்றங்களுக்கும் இவ்வாறு செய்தல் இயலாது. எனவே பொருளால் இழப்புக்கு ஈடு செய்தல் - தண்டத்தொகை வழங்குதல் என்பன அமையும். இதுவும் எல்லாச் சூழலிலும் பொருத்தமாக அமைவதில்லை. சமூகப் பார்வையில், தண்டனை வகையின் பொருத்தம் பொருத்தமின்மை, தனியாய்வுக்குரியது.

குற்றவாளி, பன்முறை குற்றம் செய்தவன் என்ற நிலையில் தண்டனை ஒருவிதமாகவும், கொடூரமானவன் என்ற நிலையில் பிறிதொருவிதமாகவும், முதன்முறை குற்றமிழைத்தவன் என்ற நிலையில் வேறுவிதமாகவும், இளம்பிள்ளை - அறியாமலிழைத்த குற்றம்-சூழ்நிலையால் குற்றமிழைத்தல் என்ற பாங்கில் மற்றொரு வகையாகவும் தண்டனை அமையும். இதனால் 'சரியான தண்டனை' என்பது பற்றிக் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. குற்றம் செய்தவர் தன்குற்றத்தை ஏற்றுக்கொள்ளும் போது தண்டனையின் அளவு குறையலாம்.

ஊனம் செய்தல்

இன்றைய - இந்தியக் குற்றவியல் சட்டம் ஊனம் செய்தலைத் தண்டனையாகக் கொள்ளவில்லை. ஆயின் தமிழ் இலக்கியக் களன், இழைக்கப்பெற்ற குற்றத்திற்காக ஊனஞ் செய்தலைத் தந்து ஊனமாகத் தண்டனை அமைந்ததைப் பெறச் செய்யும். 1. தன்னிச்சையான தண்டனையாகவோ, விதிக்கப் பட்டதாகவோ இது அமையும்.

தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் வெகுளிச்சுவை பற்றிக் கூறும்போது தரும். 'உறுப்பறை', உறுப்பு(கள்) அறுத்து - ஊனம் செய்தலைச் சினவெளியீடாகத் தருவது முன்வகையைச் சாரும்.

> **உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன**
> **வெறுப்ப வந்த வெகுளி நான்கே** (தொல்.பொ. 254)

நாலடியார், பிறன்மனை நயந்தவர்க்கான தண்டனையாகக் கால்வெட்டப்படுவதைத் தருவது பின்வகையைக் குறிக்கும்.

காணின் குடிப்பழியாம் கையுறின் கால்குறையும்
(நாலடி. 84)

2. அரசவிதியாக அல்லது சமூகச் சட்டமாக ஊனத் தண்டனை அமையும் போது, தானே தனக்கு விதித்தல் - தானே ஊனஞ் செய்தல் - என்பதும் பிறருக்கு விதித்தல் என்பதும் ஆகிய இரு நிலைகளும் காணப்பெறுகின்றன. பொற்கைப் பாண்டியனின் செயல் தானே தனக்கு ஊனத் தண்டனை வழங்கலாக அமைகிறது.

வச்சிரத் தடக்கை யமரர் கோமான்
உச்சிப் பொன்முடி யொளிவளை யுடைத்த கை
குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து
(சிலம்பு. 23. 50-52)

கோசர், அன்னிமிஞிலியின் தந்தையின் கண்களை அழித்தது பிறருக்குத் தண்டனை விதித்தல் எனும் வகைப்படும்.

.... தந்தை
கண்கவின் அழித்த தன் தப்பல் தெறுவர
ஒன்று மொழிக் கோசர்க் கொன்று முரண்போகிய ....
(அகம். 196.8-10)

பாசிலை யமன்ற பயறா புக்கென
வாய்மொழித் தந்தையைக் கண்களைந் தருளா
தூர்முது கோசர் நவைத்த சிறுமையிற் .... (அகம். 262.4-6)

3. ஒரு உறுப்பு ஊனம் செய்யப்படுதல் என்றும், உறுப்புகள் ஊனம் செய்யப்படுதல் எனவும் தண்டனையை அணுகலாம். உறுப்புகள் என்பதில் இணையுறுப்புகள் என்பதையும், எதிருறுப்புகள் என்பதையும், பல உறுப்புகள் என்பதையும் கருதலாம்.

கலிக்கம்ப நாயனார், மனைவியின் கரத்தை அரிந்ததைப் பெரியபுராணம் சுட்டும். சிவனடியார் கால்விளக்க மனைவி கரகநீர் வார்க்காததைக் கண்டு இவ்வாறு செய்கிறார்.

வெறித்த கொன்றை முடியார் தம்அடியார் இவர்முன்
மேவு நிலை
குறித்து வெள்கி நீர்வாரா தொழிந்தாள் என்று
மனங்கொண்டு
மறித்து நோக்கார் வடிவாளை வாங்கிக் கரகம் வாங்கிக்கை
தறித்து கரக நீரெடுத்துத் தாமே அவர்தாள் விளக்கினார்
(பெரிய. 8. 44. 5)

சண்டீச நாயனார், 'தாதை தாள் இரண்டும் வலமேறிய மழுவால் எறிந்தது' (பெரிய. 4.20.51-52) இணையுறுப்பாகவும்; நொண்டி நாடகம் காட்டும் திருடனின் மாறுகால் - மாறுகை வெட்டப் படுவது எதிருறுப்பாகவும், அயோமுகி (கம். 2825), சூர்ப்பணகை (கம். 3631-32) போன்றோரின் பல உறுப்புகளையும் இலக்குவன் அரிந்து நீக்குதல் மூன்றாம் வகையாகவும் அமையும்.

> . . . இளையவீரன் . . . அவளுடைய செவியும் மூக்கும்
> மல்கிய முலையும் கொய்தான் (கம்பன். 10216)

4. அரசத் தண்டனையாக, இறைத் தண்டனையாக, தனிமனிதத் தண்டனையாக ஊனம் செய்தல் எனவும் பகுத்துப் பார்க்கலாம். கோசர், பாண்டியன் ஆகியோர் செய்தது அரசத் தண்டனையாகும். கடவுள்/இறைவன் பிற கடவுள்களை/மற்றோரைத் தண்டிக்க ஊனஞ் செய்வதும் தெரியவருகிறது. சிவன், பல தேவர்களின் உறுப்புகளை அழித்தது,

> அரி பிரமன் தக்கன் அருக்க னுடனே
> வருமதி வாலை வன்னி நல் இந்திரன்
> சிரமுக நாசி சிறந்த கைதோள் தாள்
> அரனருள் இன்றி அழிந்த நல்லோரே (திருமந். 358)

என அமையும். சண்டீசர், கலிக்கம்பர் போன்றோர் செயல், தனிமனித வெளிப்பாடாகும்.

5. தனிமனிதனுக்கு அல்லது சமுதாயத்திற்கு எதிரான குற்றமும், இறைவனுக்கு எதிரான குற்றமும் ஊனத்தண்டனைக்கு உட்படுகின்றன. நாலடியார், பிறன்மனை நயந்தவன் கையும் களவுமாகப் பிடிபட்டுக் கால்தறிக்கப்படுவதைத் தருவதும், இறையனார் களவியல்,

> மற்று உலகத்துக் களவாயின எல்லாம் கைகுறைப்பவும்
> கண்சூலவும் பட்டுப் பழியும் பாவமும் ஆக்கி நரகத்
> தொடக்கத்துத் தீக்கதிகளில் உய்க்கும் (ப. 25)

எனத் திருட்டுக்குக் கைதறித்தல், கண்களைக் கெடுத்தல் என்பனவற்றைத் தருவதும் தனிமனித/சமுதாயக் குற்றத் தண்டனைகளாம். இறைவனுக்கு வைத்திருந்த மலரைத் தேவி எடுத்து முகர்ந்ததற்காக அவள் மூக்கும் கையும் தறிக்கப்பட்டது பின்வகையைச் சாரும். செருத்துணையாரும் கழற்சிங்கரும் இதனைச் செய்கின்றனர்.

**கடிது முற்றி மற்றவள்தன் கருமென் கூந்தல் பிடித் தீர்த்துப்
படியில் வீழ்த்தி மணிமூக்கைப் பற்றிப் பரமர் செய்ய சடை
முடியில் ஏறுந் திருப்பூமண்டபத்து மலர் மோந்திடும்
மூக்கைத்
தடிவன் என்று கருவியினால் அரிந்தார் தனிமைத்
திருத்தொண்டர்**
(பெரிய. 10.55.5)

**மன்னரும் அவரை நோக்கி மற்றிதற் குற்ற தண்டம்
தன்னை அவ்வடைவே யன்றோ தடிந்திடத் தகுவ தென்று
கட்டிய உடைவாள் தன்னை உருவி அக்கமழ் வாசப்பூத்
தொட்டுமுன் னெடுத்த கையாம் முற்படத் துணிப்ப தென்று
பட்டமும் அணிந்து காதல் பயில்பெருந் தேவி யான
மட்டவிழ் குழலாள் செங்கை வளையொடும்
துணித்தாரன்றே** *(பெரிய. 10. 53. 9-10)*

6. குற்றம் செய்த உறுப்பு ஊனத் தண்டனை பெறல், குற்றம் இழைத்தவரின் ஏதேனும் உறுப்பு ஊனப்படுதல் எனவும் பிரித்துக் காணலாம். பெரும்பான்மைத் தரவுகள் முன்வகை சார்ந்தன. பாண்டியனின்கை, சண்டீசரின் தந்தையின் கால், தேவியில் மூக்கும் கரமும் எனச் சான்று பல்கும். ஆய் அண்டிரனை முதலில் நினைக்க வில்லையே என வருந்தும் புலவர் ஏணிச்சேரி முடமோசியார் கூறும் 'ஆழ்க என் உள்ளம், போழ்க என் நாவே, பாழூர்ங் கிணற்றிற் தூர்க என் செவியே' (புறம். 132) என்பன, நாக்கைப் போழ்தல் (அறுத்தல்), காதைத் தூர்த்தல் (செவிடாக்கல்) என உறுப்புத் தண்டனையைத் தந்தன.

7. குற்றம் செய்யாதவருக்குத் தண்டனை, அறியாதிழைத்த குற்றத்திற்குத் தண்டனை, பொருத்தமில்லாத மிகைத் தண்டனை எனவும் காண ஊனத் தண்டனை இடம் தருகிறது. கோசரின் பயிறு விளைந்த நிலத்தில் பசு மேய்ந்ததால், அதன் உரிமையாளரான அன்னிமிஞிலியின் தந்தையின் கண்கள் அழிக்கப்படல் குற்றம் செய்யாதவருக்குத் தரப்பட்ட பொருத்தமில்லா மிகைத் தண்டனை யாம். தேவி, அறியாது இறைவர்க்கான மலரை முகர்ந்ததால் மூக்கும் கையும் அரியப்படுதல் அறியாதிழைத்த குற்றத்திற்கு வழங்கப்பட்ட மிகைத் தண்டனையாம்.

8. தண்டனையாக அமைந்த ஊனம் நீங்காமை, இறையருளால் நீங்குதல் எனவும் அணுக முடிகிறது. பொற்கைப் பாண்டியன் முன்னதற்கும், நொண்டி நாடகத் திருடன், தன்குற்றமுணர்ந்து

இறையருள் வேண்ட, இற்றகாலும் கையும் மீண்டும் பெறுதல் பின்னதற்கும் சான்றாகும். உரைத்த சூள் காவாமையால் சாபத்திற்கு ஆளாகிச் சுந்தரர் கண்ணிழந்து மீண்டும் பெறலும் இங்குப் பொருத்தலாம் (பெரிய. 6. 29. ஏயர். 274-299).

9. இன்ன குற்றத்திற்கு இன்ன தண்டனை என வகுத்தல் எல்லாச் சூழலிலும் காணப்படவில்லை. பிறன்மனை நயத்தலுக்குக் கால்தறிக்கப்படல் என நாலடியாரும், களவுக்குக் கைதறித்தலும் கண் சூலப்படுதலும் என இறைனார் களவியல் உரை தருவதுமே அமைகின்றன.

முடிவுரை

கை, கால், கண் ஊனஞ்செய்தல் பரவலாகத் தண்டனையில் வெளிப்படுகின்றது.

மூக்கு, காது பெரும்பாலும் மகளிருக்கும் மார்பறுத்தல் அரக்கியருக்கும் வருகின்றன.

நாக்கைப் போழ்தல், காதைச் செவிடாக்கல் அருகிக் குறிப்புப் பெறுகின்றன.

ஐம்புல உறுப்புகளும் தண்டனையில் ஊனப்படுகின்றன.

பிறருக்கும் எச்சரிக்கை, செய்த செயலின் விளைவை அனுபவித்தல் என்ற நோக்கங்கள் இத்தண்டனைகளில் அமைகின்றன.

ஊனமும் தானமும்

இயல்பான மனிதனுக்குரிய உடல், உள, அறிவுத் தன்மைகளிலும், செயல் திறங்களிலும் எந்நிலையிலேனும் குறைபாடமைதல் ஊனம் எனச் சுட்டத்தக்கது. தற்சார்ந்து வாழ இயலாது பிறர் துணையும் உதவியும் எதிர்நோக்கி, சமூக பொருளாதார நிலைகளில் பின்தங்கி நிற்கும் பாங்கு ஊனரிடம் அமைதல் கூடும். இந்நிலையில், வாழ்வியலின் பல கட்டங்களில், தனி மனிதரும், குழுவும், நிறுவனமும், சட்டமும் இவர்க்கு உறுதுணை வழங்க முடியும்.

ஊனமுற்றோர் பற்றிய சமுதாயச் சிந்தனை பழமை யுடையது. அவரைப் புரத்தலும் பாதுகாத்தலும் கூட காலத் தொன்மையுடையது தான். அரசும், தன்னார்வ நிறுவனங்களும் தம் கொடை வழி ஊனரைப் பின்தாங்குவதைத் 'தானம்' என அமைத்துக் காண இயலும். இன்றைய இவ்வளர் நிலைக்கு முன்னும் இத்தகு முயற்சிகள் இருந்தமை கண்டுகணித்தற்குரியது.

கொடை - அல்லது தானம் என்பதில் மூன்று நிலை உண்டு. அவை, தலைப்படுதானம், இடைப்படு தானம், கடைப்படுதானம் என்பன. கொடை மடம் என்பது வேறு. இவற்றுள், இடைப்படு தானத்தில் 'ஊனமுற்றோர்க்கு உதவுதலை' நிகண்டு போன்ற நூல்கள் அடக்குகின்றன: "சிறுமையுற்றோர்க்கு மனம் இரங்கி உதவுதல்" என; சிறுமையுற்றோரில் நோயுற்றோர், ஊனர், மாதர் ஆகியோர் உட்படுத்தப்படுகின்றனர். சமுதாயத்தில் உள்ள மக்கள் அடுக்கில், பெண்களோடு இணையாக வைக்கப்பெற்றவராக, இரண்டாம் நிலையினராக, பின்தங்கியவராக ஊனர் அமைவது இதில் புலப்படுகின்றது.

இடைப்படு தானம் ஆதுலர் குருடர்
மாதர் முதல் பிறர் சிறுமையைப் பற்றி
மனம்அது இரங்கியே வழங்கல் என்ப.

என்று பொருட்டொகை நிகண்டு (ப. 9) விளக்குகிறது. ஊனர், பட்டியலாக அமையாது 'குருடர்' என்பதில் அடக்கப்படுவதாகக் கொள்ளலாம். தானமாக என்ன அளிக்கப்பட்டது எனச்

சுட்டப்படாத போதும் உண்டி, உடை, உறையுள் என்பனவற்றைக் கருதலாம். கல்வி, உதவித் தொகை, தொழிற் பயிற்சி, தொழில் வாய்ப்பு போன்றன அளிக்கப்படல் தொன்மை வரலாறாக அமையாது, 2% பணி ஒதுக்கீடு வழங்கல் போன்ற இன்றைய அரசு நலத் திட்டமாகக் காணப்படுகிறது.

எனினும், தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் ஊனர் இருந்தனர், பணியாளராக அமைந்தனர் எனும் உறுதியான ஊகத்திற்கு இடம் அளிக்கவே செய்கின்றன. 'அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும் கடிவரை இல' (தொல். 969) எனவும் 'ஏவல் மரபின் ஏனோரும் உரியர்' (தொல். 970) எனவும் அகவொழுக்கம் விலக்கப்படாத குறுந்தொழிலினராகக் 'கூனியும் குறளும்' அமைவதைக் கலித்தொகை (94) தருவது இவ்வெண்ணத்தின் பாற்படும். திறமையால் பெற்ற தொழிலாகவோ, தானமாகப் பெற்ற பதவி வாய்ப்பாகவோ இது அமைந்திருக்கலாம். அரண்மனை ஊழியராக, அரசியருக்கு உழையராக இத்தகையோர் அமைந்ததைத் தமிழிலக்கியம் பல காட்டும். காப்பியங்கள் இந்நிலையில் குறிப்பிடத்தக்கன. இவரைத் தொகுப்பாகச் சுட்டுதலும்; தனித்தும், பெயர்க் குறிப்புடனும் சுட்டுதலும் உண்டு. சான்றாகச் சிலப்பதிகாரத்தில், பாண்டிமாதேவி, 'கூனுங் குறளும் ஊமுங் கூடிய குறுந்தொழில் இளைஞர் செறிந்து சூழ்தர' (சிலம்பு. 20.17) வருவது, ஊன ஏவலரைத் தொகுப்பாகச் சுட்டுகிறது; மாதவியின் மாலையுடன் வந்த 'மான் அமர் நோக்கி ஓர் கூனி' (சிலம்பு. 3.167) தனித்துச் சுட்டப்படுவதாகிறது; கைகேயியின் தோழி மந்தரை கம்பராமாயணத்தில் வருவது பெயர்க்குறிப்புடனமைவதாகிறது (கம்பன். 1445. மந்தரை சூழ்ச்சிப் படலம்).

ஊன நிலையை ஒரு குறையாகக் கருதாது, ஊனமுற்றவரை ஒதுக்காது - கைவிடாது, பணியளித்துப் பாதுகாத்த சமூக-அரசியல் நிலையினை இவற்றிலிருந்து உணர முடிகிறது. தன்னார்வம் அல்லது உயிரிரக்கம் காரணமாக இப்பாங்கு அமைந்திருக்கலாம். வெறும் பரிதாப உணர்வுபற்றி, ஊனருக்குத் தானமளித்தனர் எனக் கருதவேண்டியதில்லை எனலாம். 'புண்ணியம்' என்ற கருத் தமைந்ததும் விலக்க முடியாது.

அறநூல் காலம், ஊனருக்குத் தானம் அளித்தல் - கொடையளித்தல்-என்பதை ஒரு கருத்தாக்கமாக அளிக்கிறது. இதில் இரண்டு பாங்குகள் தென்படுகின்றன. ஒன்று ஊனருக்கும், பிற தேவையினருக்கும் தானமளிக்க வேண்டும் என்பது; மற்றொன்று, அவ்வாறளிப்பவர், பின்பு - அல்லது - மறுபிறவியில்

உயர்ந்த வாழ்வு பெறுவர் என்பது. இதனை ஊனதான ஊக்குவிப்பு உத்தியாக, வாழ்வியல் மதிப்பொன்றை நிறுவுவதாகக் கருதலாம்.

பதினெண்கீழ்க்கணக்கின் சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகியன இத்தகு கருத்துகட்குக் களம் வழங்குவது குறிப்பிடத்தக்கது. நம்பிக்கை வயப்பட்டதாக இருப்பினும், அறநூல்களின் சமுதாய நோக்கு என இதனைக் கருதலாம். சமுதாய நோய்களை நீக்கும் பொறுப்பைச் சமுதாய உறுப்பினர் ஒவ்வொருவரும் ஏற்று அதில் கவனம் கொள்ளும் வண்ணம் இம்முயற்சி அமைகின்றது.

முன்நாளில் பிறர் பலரின் நோய் நீக்கியவர் இந்நாளில் நோயின்றி வாழ்வார் என்பது முடிபு. அப்பலர் என்பதில் 'சிதடர்' எனப்படும் குருடர், சிதல் போன்ற வாயுடையார் என்பதில் உள்ளுறுத்தப்படும் **ஊமைகள்** என்போர் பிற பல நோயாளிகளுடன் சுட்டப்படுவதால், ஊனத்தை ஒரு நோயாகக் கருதும் சமுதாய எண்ணம் புலப்படும். தலைநோவுடையவரான 'சிக்கர்', காச நோயினரான 'துக்கர்', மூல நோயினரான 'துரு நாமர்' என்போரும் இப்பட்டியலில் உட்படுவர். இவர்களுக்கு அளிக்கப்படும் தானம், 'நோய் நீக்கல்' என்பதாகும். இதற்கான வழிமுறைகள் என்ன இருந்தன-அதாவது குருடர் பார்வை யடையவும், நோயினர் நோய் நீக்கம் பெறவும்-என்ன திட்டங்கள், செயற்பாடுகள் கையாளப்பெற்றன என்ற குறிப்பு இல்லை.

> சிக்கர் சிதடர் சிதலை போல் வாய் உடையார்
> **துக்கர் துருநாமர் தூக்குங்கால் தொக்கு**
> **வருநோய்கள் முன்நாளில் தீர்த்தாரே – இந்நாள்**
> **ஒருநோயும் இன்றி வாழ்வார்** (சிறு. 74)

தன்னார்வ இலவச மருந்தகங்களும், அங்கு வழங்கும் மருந்துகளும், சிகிச்சையும் இன்றமைவதுபோல் அன்றும் அமைந்திருக்கலாம். நோய்களை நீக்குவது போன்ற எளிய வாய்ப்பு, குருடு, ஊமை நிலைமைகட்கு அமையாது என்ற சிந்தனையும் கொள்ளவேண்டும். எனவே அவர்கட்கு வாழ வழிகாட்டுதல், உணவு - தொழில் போன்ற கொடையளித்தலும் பாதுகாத்துப் புரத்தலும் - எனப் புரிந்து கொள்ள முயலலாம்.

ஏலாதியில், ஐந்து பாடல்களில் இத்தகு தானம் பற்றிய சிந்தனை அமைவது குறிப்பிடத்தக்கது. யார் தானத்துக்குரியார், தானப் பொருள் என்ன, தானமளித்தார் பெறும்பேறு என்ன என்ற மூன்று கூறுகள் இவற்றிலிருந்து தெளிகின்றன.

முன்சுட்டிய சிறுபஞ்சமூலப் பாடலுடன் அதன் மற்றொரு பாடலையும் இக்கூறுபாட்டாய்வுக்கு முதற்கண் உட்படுத்தி மூன்று கூறுகளையும் தெளியலாம்; இவை ஏலாதிக் கருத்திலிருந்து ஒரு சிறை அகன்றனவாம்.

'புண்பட்டவர், போற்றுவார் இல்லாதார், போகு உயிரார், கண்கெட்டார், கால் இரண்டும் இல்லாதார்' (சிறு. 76) எனப் பட்டியலிடல் முந்தைய பாடலமைப்பையும் நினைவூட்டும். கண்கெட்டார், கால் இரண்டும் இல்லாதார் என்பதால் ஊனரான குருடு, முடம் உட்படுகின்றனர்; புண்பட்டவர், காய முற்றவராகவோ, தொழுநோயராகவோ, சிரங்கு போன்றன உள்ளவராகவோ அமையலாம்; போற்றுவார் இல்லாதோரில் அனாதை, கைவிடப்பட்ட முதியோர் (orphans, destitutes) உட்படலாம்; போகு உயிரார் - சாகும் தறுவாயிலிருப்பவர் (இவர் அன்னை தெரசா உதவிய 'the dying' போன்றோர்) எனத் தெரிகிறது.

இம்முதற் கூறுப்பட்டியல், முன் கண்ட பட்டியலை அண்மியும் அகன்றும் அமைகிறது.

இரண்டாம் கூறாக, அங்கு 'நோய்கள் - தீர்த்தார்' என்பதமைய இங்கு, 'கண்பட்டு ஆழ்ந்து நெகிழ்ந்து அவர்க்கு ஈத்தார்' - எனக் கண்ணோட்டமும் அருளும் உடைய ஈகை சுட்டுப் பெறுகிறது. என்ன தானமாக ஈத்தனர் என்பது இங்கும் வெளிப்படக் கூறப்படவில்லை; உணவா, பணமா, மருந்தா, கருவியா, பாதுகாப்பா.. என்பது தெளிவுபட வேண்டும்.

மூன்றாம் கூறு, அங்கு 'ஒரு நோயும் இன்றி வாழ்வார்' எனவர இங்கு 'கடைபோக வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து' - என இன்ப வாழ்வு சுட்டியமைகிறது.

நல்வாழ்க்கைக்கு ஈகை அடிப்படையாகுதல் இது; அது ஊனமுற்றோர்க்காகும் போது இருதிறனும் சிறக்கும் என்பது புலப்பாடு.

ஏலாதியும் சில சிறுபட்டியலமைக்கும்; அதன் பார்வை அல்லது அணுகுமுறையில் சிறிது வேறுபாடு புலப்படுகிறது. உடல் ஊனம் பட்டியலில் உண்டு. சிறிது அருகியது. எனினும், அதனை விட, சமுதாயத்தால் புறக்கணிக்கப்படுபவர், ஒதுக்க/ஒடுக்கப் படுபவர், மதிக்கப்படாதவர், உதவி செய்யப்பட வேண்டிய நிலையினர் ஆகியோர் முன்னிற்பது தெரிகிறது. அனாதை, விதவை,

ஊமை, வணிகத்தில் இழப்பு ஏற்பட்டவர், பொருள் இழந்தவர், குருடர் என ஒரு பட்டியலமையும்:

> **தாய்இழந்த பிள்ளை தலை இழந்த பெண்டாட்டி**
> **வாய்இழந்த வாழ்வினார் வாணிகம் போய் இழந்தார்**
> **கைத்து ஊண் பொருள் இழந்தார் கண்ணிலவர் . . .**
> *(ஏலாதி. 78)*

மற்றொரு பட்டியல் முடம், குருடு, ஊமை என்பவருடன் நிராதரவானோர், கல்வியில்லார் என்போரையும் அடக்கும்:

> **கால்இல்லார் கண்இல்லார் நாஇல்லார் யாரையும்**
> **பால்இல்லார் பற்றிய நூல்இல்லார் . . .** *(ஏலாதி. 36)*

இதில் 'நூல் இல்லார்', அறிவுமருளான பேதையையும் உட்படுத்தலாம்.

இவ்வாறே, பிற மூன்றன் பட்டியல்களையும் நோக்கும் போது (ஏலாதி. 52, 53, 80), ஊனர் சிறுபங்காகவும், பிற தேவையினர் பெரும்பங்காகவும் அமைவது தெரிகிறது. கண் இழந்தார், கண் கெட்டார் எனக் குருடரும், தம் கால் முடம்பட்டார் என முடவரும் சுட்டுப்பெறுகின்றனர். பட்டியலிலுள்ள பிறரைச் சில பகுதியினராகப் பிரித்துக் காணலாம். 'இழந்தார்' தொகுதியினராக இல்இழந்தார், செல்வம் இழந்தார், நெல் இழந்தார், ஆன்நிரை இழந்தார், நீர்மை இழந்தார் என்போரும்; ''இல்லார்'' தொகுப்பினராக போக்குஇல் நிலையாளர், காப்பு இலார், கைத்து இல்லார் என்போரும்; நோயினராகப் 'புண் பட்டாரும்', முதுமை நிலையினராக 'மூத்தாரும்', கடனாளியாகக் 'கடம்பட்டாரும்', புறக்கணிக்கப்பட்டவராகப் 'புலையாளரும்' அமைகின்றனர். இவர் தானத்துக்குரியோர். புலை, சாதியாகவும் இருக்கலாம்.

தானம், பொதுப்படையாக, 'ஈய்ந்தார்' என ஒரு பாடலிலும் (ஏலாதி. 78), உணவளித்தல் எனப் பிற அனைத்துப் பாடலிலும் அமையும். இத்தகு தானமும், புரத்தலும், ஒருமுறையில் பிரச்சினையைத் தீர்ப்பதல்ல; "தேவையிலுள்ளவனுக்கு மீனைக் கொடுப்பதை விட மீன்பிடிக்கக் கற்றுக் கொடுத்தலே வேண்டும்" எனும் பொதுக்கொள்கை இங்குத் தெரியவரவில்லை.

'சாலவும் ஆழப்படும் ஊண் அமைத்தார்' (36) 'எல் உழந்து பண்ணி ஊண் ஈய்ந்தவர்' (52) 'இல்லுள் ஊண் ஈத்து உண்பார்'

(53), 'ஊண் கொடுத்து ஊற்றாய் உதவினார்' (80) எனும் தொடர்கள் இவ்உண்டி கொடுக்கும் தானத்தின் பன்முகத்தைக் காட்டும்.

தானமளித்த இவர், இம்மை, மறுமை அல்லது மற்றொரு பிறவியில் பெறும் பேறு நம்பிக்கை வயப்பட்ட சிந்தனையுடையது மாகும். 'வைத்து வழங்கி வாழ்வார்' (78) என்பது இம்மையாகலாம்; 'இமையவரால் வீழப்படுவர்' (36) என்பது மறுமை போலும். மன்னராகவும் படையாளராகவும் (இதுவும் மன்னராகலாம்) அமைவர் என்பது மற்றொரு பிறவியிலாகலாம்.

"பல்யானை மன்னராய்
எண்ணி ஊண்ஆர்வார் இயைந்து" (ஏலாதி. 52)

". . . மன்னராய்க்
காண் கொடுத்து வாழ்வார் கலந்து" (ஏலாதி. 80)

". . . மண்மேல்
படையராய் வாழ்வார் பயின்று" (ஏலாதி. 53)

மற்றவர்களின் எதிர்காலத்தை ஒளியுடையதாக்கினால் தம் வருங்காலம் ஏற்றமுடையதாக அமையும் எனவும், ஊனர்க்குத் தானமளித்தால், அளித்தோர்க்கு உயர்வு நிச்சயம் எனவும் புலப்பாடுகள் இவற்றின் அமைகின்றன.

அறநூல்களின் இந்தத் 'தற்பயன் எதிர்பார்ப்பு' வினை, தொடர்ந்த காப்பிய கால கட்டத்தில், தமிழிலக்கியத்தில் வெளிப்படவில்லை. மாறாக, தேவையான நற்செயல் என்ற பாங்கே புலப்படுகின்றது. மணிமேகலைக் காப்பியம் வழங்கும் ஆபுத்திரன், மணிமேகலை ஆகியோர் செயல் இங்கு எண்ணற்குரியது.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' (மணி. 11. 96) என வரையாது உணவு வழங்கல், அற்புத 'அமுத சுரபி' வாயிலாக அதனைச் செய்தல் என்பன அறநூல் காட்டிய சூழலிலிருந்து வேறுபாடாகும்.

ஆபுத்திரன், வீடுவீடாகச் சென்று ஊனருக்கும், கதியற்றவருக்கும் நோயாளிக்கும் உணவளித்து மீதம் தானுண்டு வாழ்கின்றான்.

. . . மைஅறு சிறப்பின் மனை தொறும் மறுகிக்
காணார் கேளார் கால்முடப்பட்டோர்

பேணுநர் இல்லோர் பிணி நடுக்குற்றோர்
யாவரும் வருக என்று இசைத்து உடன் ஊட்டி
உண்டு ஒழி மிச்சில் உண்டு . . . *(மணி. 13. 110-114)*

மணிமேகலை கச்சி மாநகரில், பலமொழி பேசும் மக்களுள், காணார், கேளார், கால் முடமானார், பேசார், பேணாமாக்கள், பிணியினர், படிவ நோன்பிகள், பசிநோயுற்றோர், வறுமையுற்றோர் ஆகியோருக்கும் விலங்குகளுக்கும் கூட உணவூட்டுகிறாள் (மணி. 28. 217-229).

ஊனருக்குத் தானம் அளித்தனர்; உணவு தானம் முன் நிற்கிறது; தானம் செய்வோர் பெறும் பலன் அறநூல்களில் சுட்டப்படுகிறது; மணிமேகலை உணவு தானத்தைப் பலன் எதிர்பாராக் கடமை போல் உணர்த்துகிறது-ஆகிய கருத்துகள் இங்குப் புலப்படுகின்றன.

ஊன நலத்திட்டம்

ஊனமுற்றோர் நலனைக் கருதும் வண்ணம் ஆண்டு தோறும் டிசம்பர் திங்கள் மூன்றாம் நாள் 'ஊனமுற்றோர் உலக தினம்' நினைவுகூரப் பெறுகிறது. ஊனமுற்றோருக்கும் அவர் நலனில் அக்கறை கொண்டோருக்கும் பரிசும், விருதும் அளிக்கப் படுகின்றன. ஒவ்வொராண்டும் அந்நாளில் வழங்கப்பெறும் மாநில விருதுகள், இத்தகையோருக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்கிய சிறந்த தொழிலதிபர், ஊனமுற்ற சிறந்த தொழிலாளர், இத்தகையோருக்குக் கல்வி கற்பிக்கும்/பயிற்சி அளிக்கும் சிறந்த நிறுவனம், சிறந்த ஆசிரியர், பள்ளி இறுதி, மேல்நிலை வகுப்புகளில் மாநிலத்தில் முதல் மூன்றிடம் பெறும் பார்வையற்ற, காது கேளாத மாணவர் ஆகியோரைச் சிறப்பிப்பதாக அமையும். இவை தவிர, ஒவ்வொரு சுதந்திர தினத்தன்றும் மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு விருதுகளும், இத்தகையோர் நலனுக்காகச் சிறப்பாகப் பணியாற்றிய மாவட்ட ஆட்சியர், சிறந்த சேவை புரிந்த நிறுவனத்தார், மருத்துவர் போன்றவருக்கு வழங்கப்படுகின்றன.

ஊனமுற்றோர் நலனுக்காகத் தனியாரும், பல நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. அரசு நிறுவனங்கள், அரசு மானியம் பெறும் தனியார் அமைப்புகள், அரசு உதவி எதிர்பாராத தன்னார்வ நிறுவனங்கள் என்பன உள.

இம்மக்களின் நலனுக்காகத் தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கீடு செய்வதுடன், தேவை மிகுதி கருதி ஆண்டுதோறும் தொகையை உயர்த்தி வருகிறது. 1990-91ஆம் ஆண்டில் 433 இலட்சம் ரூபாயாக அமைந்த ஒதுக்கீடு அண்மை ஆண்டுகளில் பன்மடங்கு உயர்ந்துள்ளது.

1997-98	1138.39 இலட்சம்
1998-99	1778.06 இலட்சம்
1999-2000	1878.21 இலட்சம்
2000-2001	2009.20 இலட்சம்
2001-2002	2075.45 இலட்சம்

பல்வகையான நலத்திட்டங்களின் நிறைவேறுதலுக்கு இந்நிதி பயனாகிறது.

1991-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, தமிழக மக்கட்தொகையில் 1.9% ஊனமுற்றோர் உள்ளனர்; இவரது எண்ணிக்கை சுமார் 11 இலட்சம் ஆகும். இவரில் 1. பார்வையற்றோர் 2. பேசும் திறன் அற்று காது கேளாதோர், 3. கை - கால் குறைவுற்றோர், 4. மனவளர்ச்சி குன்றியோர், 5. தொழுநோய் நீங்கிக் குணமடைந்த உடற்குறையுடையோர், 6. வேறுவகையின் இயலாதோர் ஆகியோர் உள்ளனர். இவரில் கை-கால் பாதிக்கப்பட்டவரே 58%-க்கு மேலாக, கண் பார்வையற்றோரும், காது கேளாத பேச்சுத் திறன் அற்றோரும் 20% வீதமும் அமைகின்றனர். பிறர் 2% இல் அடங்குவர்.

தமிழ்நாடு அரசின் ஊன நலத் திட்டங்கள் 1967-68 காலப்பகுதியிலேயே சிறிய அளவில் ஆரம்பமாகிவிட்டன; பார்வையற்ற மாணவர்க்கு இலவசமாக பிரெயில் லிபியில் அச்சிட்டு நூல்கள் வழங்கும் அத்திட்டம் சுட்டத்தக்கது. 1975இலிருந்தே, இலவசமாக மூன்று சக்கர சைக்கிள், காதொலிக் கருவி ஆகியன வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுவிட்டது. நடுவண் அரசின் நிதியுதவியுடன் ஊனமுற்றவருக்கு மறு வாழ்வளிக்கும் முன்னோடித் திட்டம் 1984 முதல் செயல்பட்டு வருகிறது. போலியோ/இளம்பிள்ளைவாதத் தடுப்புத் திட்டம் 1989-இலிருந்து அத்தகையோருக்கான மறுவாழ்வுத் திட்டமாக வளர்ந்துள்ளது. இவ்வாறு பல்நிலையிலும் இவர் நலனுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூக நலத் துறையின் பணிப்பகுதியாக 1991 வரை ஊன நலத்திட்டச் செயற்பாடுகள் அமைந்தன. பின்பு 3.1.1992 முதல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை, இயக்குநரகமாக அமைக்கப்பெற்றது. ஊனமுற்றோர் மறுவாழ்விற்கான இந்திய சட்டம் 1992-இன் படி. மறுவாழ்வுத் திட்டங்கள் திறன்படச் செயற் படுத்தப்பட்டு 3.12.1994-இல் ஊனமுற்றோருக்கான மாநிலக் கொள்கையும் வகுத்து வெளியிடப்பட்டது. இதன் நோக்கம், ஊனத்தை முன்னதாகக் கண்டறிதல், பதிவு செய்தல், கணித்தல், நிவாரணம் வழங்குதல் என்பனவற்றுடன் அத்தகையோரின் மருத்துவம், தொழில், பொருளாதாரம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்குத் தேவையான உதவிகளை ஒருங்கிணைந்த நிலையில் வழங்குவதுமாகும்.

ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழுப் பங்கேற்பு) சட்டம் 1995-ஐ நடுவண் அரசு இயற்றியது, 7.2.96 முதல் செயற்படலாயிற்று. இச்சட்டத்தின்

13-வது பிரிவின்படி, மாநில ஒருங்கிணைப்புக்குழு அமைக்கப் பட்டது. நலத் திட்டங்களின் செயற்பாட்டினைக் கண்காணித்தல், மீள்பார்வையிடல், ஆலோசனை வழங்கல் என்பன இக்குழுவின் பணிகள். இதே சட்டத்தின் 19-வது பிரிவின்படி, மாநிலச் செயற்பாட்டுக்குழு, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டச் செயலரின் தலைமையில் அமைந்தது. தொடக்கத்தில் இச்செயலர் அவர்களும், பின்பு ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்குநரும் நலப்பணிகளை மேற்பார்த்தனர். மேற்படி ஊனமுற்றோர் சட்டத்தின் 60-வது பிரிவின்படி, ஊனமுற்றோருக்கான மாநில ஆணையம் 16.4.99-இல் உருவாயிற்று. இதன் ஆணையர், ஊனமுற்றோர் நலனுக்கென மாநில அரசின் துறைகளால் நிறைவேற்றப்படும் எல்லா திட்டம் மற்றும் செயற்பாட்டிற்கு ஒருங்கிணைப்பாளராக அமைகிறார். மாநில அரசு வழங்கும் நிதி செலவிடப்படுவதை மேற்பார்வை செய்து, ஊனமுற்றோர்க்கு அளிக்கப்பட்டிருக்கும் உரிமைகளையும் சலுகைகளையும் நிறைவேற்றவும் பாதுகாக்கவும் வழிமுறைகள் மேற்கொள்வார்.

தமிழ்நாடு அரசு, கல்விப் பருவம் முதல் முதுமை வரை இத்தகு இயலாமை உடையோரை, பல்வகையிலும் உதவி வழங்கி ஊக்குவித்து, இயல்பு வாழ்க்கை பெற வழிவகுக்கிறது. அரசு உதவிகள், இத்தகையோருக்கான பள்ளிகள், தொழிற்பயிற்சிக் கூடங்கள், மறுவாழ்வு மையங்கள், பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றிற்கும் அதன் பயனாளிகளுக்கும் வழங்கப்படுகின்றன.

இலவசக் கல்வி, கல்வி உதவித் தொகை, பார்வையற்ற மாணவர் தேர்வு எழுத உதவுபவருக்கு உதவித் தொகை, ஊனமுற்றோர்க்கான பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்க்குச் சிறப்புப் பயிற்சி உதவி எனக் கல்வித் தளத்தில் பல திட்டங்கள் வழி பொருள் உதவி செய்யப்படுகின்றது. பார்வையற்றோருக்கு இலவசமாக வழங்க பிரெய்ல் எழுத்தில் நூல்கள் அச்சிடும் பூந்தமல்லியிலுள்ள அச்சகத்திற்கும் அரசு ஆண்டுதோறும் மானியம் அளிக்கிறது. அண்மைக் காலத்தில், பிரெய்ல் புத்தகங்கள் மட்டுமல்லாமல், பள்ளிப் பாடங்களை ஒலிநாடாக்களில் பதிவு செய்து இலவசமாக வழங்கும் திட்டமும் நடைமுறைக்கு வந்துள்ளது.

மேலும், ஊனமுற்றோருக்கான அரசு சிறப்புப் பள்ளியில் பயிலும் மாணாக்கருக்கு, இலவசச் சிறப்புக் கல்வியுடன் இலவச உணவு உறையுள் வசதியும், ஆண்டுக்கு இரு இணை சீருடைகளும் வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வி தவிர, பட்டப்படிப்பு, தொழிற் கல்வி, பொறியியல், மருத்துவம், முதுநிலை பட்டப் படிப்பு

ஆகியனவற்றிற்கும் இவர்க்கு உதவித் தொகை உண்டு. சட்டக்கல்வியில் பட்டம் பெற்றவருக்கு, வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்யவும் நூல்கள் வாங்கவும் ரூ. 3000/- உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

தொழிற்பயிற்சியும் சிறப்புத் தொழிற்பயிற்சியும் பெறும் வாய்ப்பும் ஊனமுற்றோருக்கு உண்டு. பேச்சுத் திறன் இழந்த காது கேளாதோருக்கு, பொருத்துநர் பயிற்சியும்; பார்வையற்றோருக்கு, பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குதல், மின்கம்பி சுற்றுதல், புத்தகம் கட்டுதல் ஆகிய பயிற்சியும் உதவித் தொகையுடன் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சி பெற்றோர், பின்பு, அரசு, அரசு சார்பு, தனியார் நிறுவனங்களில் சிறப்புத் தொழில் பழகுநராக உதவித் தொகையுடன் ஓராண்டுக்கு அமர்த்தப்பெற்று, நிரப்பப்பட வேண்டிய (காலி) பணியிடம் தோன்றும் போது நிரந்தர பணி நியமனம் பெறுகின்றனர்.

பூந்தமல்லியிலுள்ள பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு நிலையத்தில் அத்தகு ஆதரவற்ற அனாதைப் பெண்களுக்குச் சாக்குக்கட்டி தயாரித்தல், துணி நெய்தல் ஆகியவற்றில் 6 திங்கள் பயிற்சியும், பின்பு அங்கேயே பணி வாய்ப்பும் அளிக்கப்படுகின்றன.

14 வயதுக்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய மகளிரைத் தங்கவைத்துப் பாதுகாத்து மருத்துவ வசதியும் அளிக்கும் தொண்டு நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு அரசு நிதி வழங்குகிறது.

கல்வி கற்ற ஊனமுற்றோருக்கு, அரசு, பொதுத் துறை, கல்வி நிறுவனங்களில் பயிற்சியிடங்களிலும் பணியிடங்களிலும் 3% இட ஒதுக்கீடு அளிக்கிறது. தற்போது, கல்வித் துறையில், ஆசிரியர் பணியிடத்தில் பார்வையற்றோருக்கு 2% என இட ஒதுக்கீடு உயர்த்தப்பட்டுள்ளது.

கல்வியோ, தொழிற் பயிற்சியோ பெற்று வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து ஓராண்டாகியும் வேலை கிடைக்காத, குறைந்த வருவாய் நிலையினரான ஊனமுற்றோருக்கு அரசு நிவாரணத்தொகை வழங்குகிறது.

கல்வியும் பயிற்சியும் பெறாதவராயின், அவர் சுயவேலை வாய்ப்பில் ஈடுபட, வங்கிக்கடன் பரிந்துரைக்கப்படுவதுடன், அக்கடன் தொகையில் 1/3 பங்கு அல்லது 1000 ரூபாய் அரசு மானியமாகவும் வழங்கப்படுகிறது. சிறிய கடை (பெட்டிக்கடை) வைக்க ரூ. 5000/- வரை அரசு மானியம் வழங்கப்படலுண்டு.

ஊனமுற்றோருக்கான இலவசக் கருவிகள், செயற்கை உறுப்புகள், மருத்துவம் என்பன வழங்குதல் மிகப்பெரும் திட்டமாகும். அரசுப் பள்ளிகளில் பயிலும் கடுமையான கை-கால் ஊனமுற்ற குழந்தைகளுக்குச் செயற்கை உறுப்புப் பொருத்துதல், அறுவை மருத்துவம், இயற்பியல் மருத்துவம் ஆகியன செய்யப் படுகின்றன. கிண்டியிலுள்ள அரசு உற்பத்திக் கூடத்தில் ஊன முற்றோருக்குத் தேவையான சக்கர நாற்காலிகள், மூன்று சக்கர வண்டிகள், மடக்குக் குச்சிகள் ஆகியன இலவசமாக வழங்கத் தயாரிக்கப்படுகின்றன. இவையும், காதொலிக் கருவி, கதிர்க்கலன் (சோலார் பேட்டரி), கறுப்புக் கண்ணாடி, பிரெய்ல் கைக்கடிகாரம், அக்குள் கட்டை, ஊன்றுகோல், கால் தாங்கி, செயற்கைக் குரல் வளையம், கால்வளைந்தோர்க்குச் சிறப்புக் காலணியும் மிதி வண்டியும் எனப் பிற பலவும் தேவையானவருக்கு வழங்கப் படுகின்றன.

எவ்வகையிலும் செயல்பட முடியாத கடுமையான ஊனமுற்றவரைப் பராமிப்பவருக்கும் அரசு உதவி அளிக்கிறது. ஆதரவற்ற முதியவரான உடல் ஊனமுற்றவருக்கு ஒய்வூதியத் திட்டமும் வேறு தொகுப்பில் உள்ளது.

உடல் ஊனமுற்றவருக்கு அரசு கழகப் பேருந்துகளில் அவரவர் மாவட்டத்திலும், கல்வி - தொழில் - மருத்துவம் - வேலை ஆகியனவற்றிற்குச் செல்கையிலும் இலவச பயண அனுமதி உளது. 100 கிமீ. வரை செல்லவும், ஆண்டிற்கு ஒருமுறை மாநிலத்தில் நீண்ட பயணம் செல்லவும் இத்திட்டம் அண்மையில் நீட்டிக்கப் பட்டுள்ளது. தொடக்கத்தில், பார்வையற்றோர்க்கு முழுச் சலுகையும் பிறருக்கு 50% சலுகையுமமைந்தது, பின்பு, அனைத்து ஊனமுற்றோருக்குமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றவரைத் திருமணம் செய்யும் சாதா நிலையினரை ஊக்குவிக்கும் அரசுத் திட்டமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். இத்தகையோர், பாராட்டுச் சான்றிதழுடன், திருமணச் செலவுக்குப் பணமும், எதிர்கால வளத்திற்குத் தேசிய சேமிப்புப் பத்திரமும் பெறுகின்றனர். தொடக்கத்தில் பார்வை யற்றோரை மணப்பவருக்குமட்டுமமைந்த இத்திட்டம் அண்மையில் பிற இயலாதோருக்கும் விரிவுசெய்யப்பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு வழங்கும் இத்தகு பல ஊன நலத் திட்டங்களாலும் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை மிகுந்து வருவது, இத்திட்டங்கள் தங்கள் குறிக்கோளை எட்டி, சாதனையை நிறைவு செய்வதை வலியுறுத்திக் காட்டுகின்றது.

பயன் நூல்கள் / கட்டுரைகள்

ஊனமுற்றோர், ஜான் முருக செல்வம், பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1992.

ஊனமுற்றோர் கல்வி, வாழ்வியல் களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987. தொகுதி 5, பக். 662-665.

கண் மருத்துவம், வே.இரா. மாதவன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982.

சமூகநலம் - கொள்கை விளக்கக் குறிப்பு, தமிழ்நாடு அரசு, 1997 - 2000.

செயல்முறைத் திட்டம், சமூகநலம், தமிழ்நாடு அரசு, 1998.

தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர், அன்னி தாமசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2002.

பேடி ஆடல், இரா. கலைக்கோவன், ஆய்வுக் கோவை, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், 1998, பக். 374-378.

மக்கள் சாசனம், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, தமிழ்நாடு அரசு, 2001.

Age and mental abilities, A longitudinal study, W.A. Owens, Genetic Psychological Monograph, 1953.

Disability and Society, Emerging Issues and Insights, (Ed.,) Len Barton, Longman, London, 1996.

Disablement in the Community, (Ed.,) D.L. Patrick, Oxford Medical Publications, 1989.

Gerontology and Geriatric Nursing, William Ferguson Anderson, et.al., Hodden and Stoughton, London, 1982.

Handicapped Children in the Community, Grace E. Woods, John wright and Sons Ltd., London, 1983.

Handicapping conditions in children (Ed.,) Bill Gillham, Croom Helm, London, 1986.

The Meaning of Disability, Mildred Blaxter, Heinemann Educational Books Ltd., London, 1976.

Performance Budget, Social Welfare, Govt. of Tamilnadu, 2001.

Punishment, An Illustrated History, Peter N. Walker, David and Charles Publishers Ltd., Newton Abbot, 1972.

Rehabilitation of the severely Disabled, 2 Management, P.J.R. Nichols, Butter worth & Co., London, 1971.

Social Service, Byrne, T., Made simple Books, 4th Ed., 1990.

Sociological Aspects of Crime and Delinquency, Michael Phillipson, Routhledge & Kegan Paul, London, 1971.

கருத்தரங்கக் கட்டுரைகள்

1. அறநூல்களில் ஊனர்/ம், வெள்ளிக் கிழமைக் கருத்தரங்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 24-4-98.
2. சிதடு, வெள்ளிக் கிழமைக் கருத்தரங்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 13-9-96.
3. முடம், வெள்ளிக் கிழமைக் கருத்தரங்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 21-2-1997.
4. மாவும் உறுப்பில் பிண்டமும், ஆய்வுக் கோவை, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், 2000, பக். 121-125.
5. ஊனக் குறியீடு, வெள்ளிக் கிழமைக் கருத்தரங்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 18-9-98.
6. ஊனத்தில் நோயும் முதுமையும், தமிழியல் ஆய்வு, ஞாலத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம், 1997, பக். 171-175.
7. தண்டனையாக ஊனம், ஆய்வுச் சிந்தனைகள், ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம், 1997, பக். 127-130.
8. ஊனமும் தானமும், ஆய்வுக்கோவை, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், 2001, பக். 104-108.
9. ஊன நலத்திட்டம், ஆய்வுக் கோவை, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், 2002, பக். 113-117.

சமுகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர்

இணைப்பு

தரவுக் களன் (தொல்காப்பியம் முதல் பெரியபுராணம் வரை)

ஊனக் குறிப்புகள்

களன் நூல்கள்

தொல்காப்பியம், சங்க இலக்கியம், கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சிந்தாமணி, நாலாயிரம், கம்பராமாயணம், முத்தொள்ளாயிரம் முதலியன, நீலகேசி, சூளாமணி, திருமுறைகள் (11), கல்லாடம், பெரியபுராணம், நிகண்டு, பழமொழி, விடுகதை

களன் நூல்களின் காலம்

(கால வரிசை மு. அருணாசலம்)

கி.மு. 300	தொல்காப்பியம்
கி.மு. 300 - கி.பி. 100	பத்துப்பாட்டு, எட்டுத் தொகை (கலி, பரிபாடல் தவிர)
கி.பி. 100 - 200	கலித்தொகை, பரிபாடல், திருக்குறள்
கி.பி. 200 - 300	சிலப்பதிகாரம்
கி.பி. 300 - 400	நான்மணிக் கடிகை, திரிகடுகம், முதுமொழிக் காஞ்சி
கி.பி. 400 - 500	இனியவை நாற்பது, இன்னா நாற்பது, களவழி நாற்பது; காரைக்காலம்மை, திருமூலர்
கி.பி. 500 - 600	ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணை மொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, கார் நாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி; மணிமேகலை, முதல் மூன்று ஆழ்வார்.
கி.பி. 600 - 700	நாலடியார், பழமொழி, ஆசாரக் கோவை, சம்பந்தர், அப்பர், ஐயடிகள் காடவர் கோன்; திருப்பாண் ஆழ்வார், திருமழிசை ஆழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார்; பாண்டிக் கோவை.

கி.பி. 700 - 800	பெருங்கதை; முத்தொள்ளாயிரம், இறையனார் அகப்பொருள், சுந்தரர், சேரமான் பெருமாள், அதிராவடிகள், இளம்பெருமானடிகள்; குலசேகரர், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார்.
கி.பி. 800 - 900	சிந்தாமணி, கம்பராமாயணம், வளையாபதி, பாரத வெண்பா, நந்திக்கலம்பகம், திவாகரம், தமிழ் நெறி விளக்கம், புறப்பொருள் வெண்பா மாலை; மாணிக்கவாசகர்; நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார்
கி.பி. 900 - 1000	குண்டலகேசி, நீலகேசி, சூளாமணி, பிங்கலம்; 9-ஆம்; 11-ஆம் திருமுறையின் பிறர் சிலர்.
கி.பி. 1000 - 1100	9-ஆம் திருமுறையின் கருவூர்த் தேவர், 11-ஆம் திருமுறையின் நம்பியாண்டார் நம்பி, கல்லாடம்
கி.பி. 1100 - 1200	சேக்கிழார் பெரியபுராணம்

தொல்காப்பியம்

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவியும் . . .
இவ்என அறியும் அந்தம் தமக்கு இலவே
உயர்திணை மருங்கின் பால்பிரிந்து இசைக்கும் (487)

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்றே (495)

. . . தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி . . .
உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்
அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும் (540)

உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன
வெறுப்ப வந்த வெகுளி நான்கே (1204)

சங்க இலக்கியம்

புலவர் பெயர்:

1. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

புறம், 13, 127, 128, 129, 130, 131, 132, 133, 134, 135, 241, 374, 375

2. ஐயூர் முடவனார்

அகம். 216
குறு. 123, 206, 322
நற். 206, 334
புறம். 51, 228, 314, 399

3. முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்

அகம். 30

4. முடத்தாமக் கண்ணியார்

பொருநராற்றுப்படை (பத்துப்பாட்டு)

5. முடத்திருமாறன்

நற். 105, 228

பத்துப் பாட்டு

திறவாக் கண்ண சாய்செவிக் குருளை (சிறுபாண். 130)

முடக் காஞ்சிச் செம்மருதின் (பொருநர். 189)

கூனிக் குயத்தின் வாய்நெல் அரிந்து (பொருநர். 242)

தண்டு காலாகத் தளர்தல் ஓம்பி
ஊன்றினிர் கழிமின் ஊறுதவப் பலவே (மலைபடு. 371-372)

ஊமை எண்கின் குடாவடிக் குருளை (மலைபடு. 501)

எட்டுத் தொகை

சுடர் முழுது எறிப்பத் திரங்கிச் செழுங்காய்
முடமுதிர் பலவின் அத்தம் (நற். 26. 5-6)

குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ (நற். 56.1)

உச்சிக் கட்டிய கூழை ஆவின் (நற். 109.8)

முடமுதிர் நாரை கடல்மீன் ஒய்யும் (நற். 263.7)

முடமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம் (நற். 353.4)

நீள்இடை அத்தம் நோக்கி வாள் அற்றுக்
கண்ணும் காட்சி தௌவின என் நீத்து
அறிவும் மயங்கிப் பிறிது ஆகின்றே (நற். 397. 2-4)

காலே பரிதப்பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாள் இழந்தனவே (குறு. 44. 1-2)

ஞாயிறு காயும் வெவ்அறை மருங்கில்
கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போல (குறு. 58. 3-5)

குறுந் தாள் கூதளி ஆடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட இருக்கை முடவன்
உட்கைச் சிறுகுடை கோலிக் கீழ்இருந்து
சுட்டுபு நக்கி யாங்கு . . . (குறு. 60.1-4)

கவை முடக் கள்ளிக் காய் விடு கடு நொடி (குறு. 174.2)

நெறிமுதல்
கடற்றில் கலித்த முடச் சினை வெட்சித்
தளை அவிழ் பல்போது கமழும் (குறு. 209.4-6)

கூவல்
குரால் ஆன் படுதுயர் இராவிற் கண்ட
உயர்திணை ஊமன் போலத்
துயர் பொறுக்கல்லேன் (குறு. 224. 3-6)

முடமுதிர் மருதத்துப் பெருந்துறை (ஐங். 31.3)

நெடும் பொறை மிசைய குறுங்காற் கொன்றை (ஐங். 430.1)

பாசவர், ஊனத்து அழித்த வால்நிணக் கொழுங்குறை
(பதிற். 21.9-10)

அலந்தலை உன்னத்து அம்கவடு பொருந்திச்
சிதடி கரையப் பெருவறம் கூர்ந்து
நிலம் பைதற்ற புலம்கெடு காலையும் (பதிற். 23.1-3)

அடைச் சேம்பு எழுந்த ஆடுறும் மடாவின்
எஃகு உறச் சிவந்த ஊனத்து (பதிற். 24.21-22)

கானத்துக்
கறங்கு இசைச் சிதடி பொரியரைப் பொருந்திய
சிறியிலை வேலம் பெரிய தோன்றும் (பதிற். 58. 12-14)

எஃகு ஆடு ஊனம் கடுப்ப மெய்சிதைந்து (பதிற். 67.18)

தீரத் தறைந்த தலையும் தன் கம்பலும்
காரக் குறைந்து கறைப்பட்டு வந்து நம்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பானை (கலி. 65. 2-4)

என் நோற்றனை கொல்லோ
நீர்உள் நிழல் போல் நுடங்கிய மென் சாயல்
ஈங்கு உருச் சுருங்கி
இயலுவாய், நின்னொடு உசாவுவேன் நின்றீத்தை;

அன்னையோ, காண்தகை இல்லாக் குறள் நாழிப்
போழ்தினான்
ஆண்தலைக்கு ஈன்ற பறழ் மகனே, நீ எம்மை
வேண்டுவல் என்று விலக்கினை நின்போல்வார்
தீண்டப் பெறுபவோ மற்று;

மாண்ட, எறிந்த படைபோல் முடங்கி மடங்கி
நெறித்து விட்டன்ன நிறையேரால் என்னைப்
பொறுக்கல்லா நோய்செய்தாய் பொறீஇ நிறுக்கல்லேன்
நீ நல்கின் உண்டு என் உயிர்;

குறிப்புக்காண், வல்லுப் பலகை எடுத்து நிறுத்தன்ன
கல்லாக் குறள கடும்பகல் வந்து எம்மை
இல்லத்து வா என மெய்கொளீஇ எல்லா நின்
பெண்டிர் உளர் மன்னோ கூறு;

நல்லாய் கேள், உக்கத்து மேலும் நடு உயர்ந்து வாள்வாய
கொக்கு உரித்தன்ன கொடுமடாய் நின்னை யான்
புக்கு அகலம் புல்லின் நெஞ்சு ஊன்றும் புறம் புல்லின்
அக்குளுத்துப் புல்லலும் ஆற்றேன் அருளீமோ
பக்கத்துப் புல்லச் சிறிது;

போ சீத்தை, மக்கள் முரியே நீ மாறு இனித் தொக்க
மரக்கோட்டம் சேர்ந்து எழுந்த பூங்கொடி போல
நிரப்பம்இல் யாக்கை தழீஇயினர் எம்மைப்
புரப்பேம் என்பாரும் பலரால் பரத்தை என்
பக்கத்துப் புல்லீயாய் என்னுமால் தொக்க
உழுந்தினும் துவ்வாக் குறுவட்டா நின்னின்
இழிந்ததோ கூனின் பிறப்புக் கழிந்துஆங்கே
யாம் வீழ்தும் என்று தன் பின்செலவு முற்றீயாக்
கூனி குழையும் குழைவு காண்;

யாமை எடுத்து நிறுத்தற்றால் தோள் இரண்டும் வீசி
யாம் வேண்டேம் என்று விலக்கவும் எம் வீழும்
காமர் நடக்கும் நடைகாண் கவர்கணைச்
சாமனார் தம்முன் செலவு காண்;

ஓஒ காண், நம்முள் நகுதல் தொடீஇயர் நம் உணா
உசாவவும் கோன் அடி தொட்டேன்;
ஆங்கு ஆக, சாயல் இன் மார்ப அடங்கினேன் ஏஎ
பேயும் பேயும் துள்ளல் உறும் எனக்
கோயிலுள் கண்டார் நகாமை வேண்டுவல்
தண்டாத் தகடுஉருவ வேறாகக் காவின் கீழ்ப்
போதர் அகடு ஆரப் புல்லி முயங்குவேம்
துகள் தபு காட்சி அவையத்தார் ஓலை
முகடு காப்பு யாத்து விட்டாங்கு (கலி. 94)

முடவுமுதிர் புன்னைத் தடவுநிலை மாச் சினை (அகம். 10.3)

முடம் முதிர் பலவின் கொழுநிழல் வதியும் (அகம். 91.16)

கூனல் எண்கின் குறுநடைத் தொழுதி (அகம். 112.1)

தொடுகலம், குறுகவாரல் - தந்தை
கண்கவின் அழித்த தன் தப்பல் தெறுவர
ஒன்றுமொழி கோசர்க் கொன்று முரண்போகிய
கடுந்தேர்த் திதியன் அழுந்தை, கொடுங்குழை
அன்னி மிஞிலியின் இயலும் . . . (அகம். 196. 8-12)

நல் மகிழ்
பேடிப் பெண் கொண்டு ஆடுகை கடுப்ப (அகம். 206. 1-2)

முதை படு பசுங் காட்டு அரில் பவர் மயக்கி
பகடு பல பூண்ட உழவுறு செஞ்செய்
இடுமுறை நிரம்பி ஆகு வினைக் கலித்து
பாசிலை அமன்று பயறு ஆ புக்கென
வாய் மொழித் தந்தையைக் கண் களைந்து அருளாது
ஊர் முது கோசர் நவைத்த சிறுமையின்
கலத்தும் உண்ணாள் வாலிதும் உடாஅள்
சினத்தின் கொண்ட படிவம் மாறாள்
மறம் கெழு தானைக் கொற்றக் குறும்பியன்
செரு இயல் நன் மான் திதியற்கு உரைத்து அவர்
இன்உயிர் செகுப்பக் கண்டு சினம் மாறிய
அன்னி மிஞிலி போல . . . (அகம். 262.1-12)

முடவு முதிர் பலவின் குடம் மருள் பெரும் பழம்
(அகம். 352.1)

சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்
கூனும் குறளும் ஊமும் செவிடும்

மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு
எண்பேர் எச்சம் என்று இவை எல்லாம்
பேதைமை அல்லது ஊதியம் இல்என
முன்னும் அறிந்தோர் கூறினர் (புறம். 281-6)

இந்நிலத்து
ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்றாது என்
உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதின்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே (புறம். 73. 4-8)

குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள் அன்று என்று வாளில் தப்பார் (புறம். 74. 1-2)

வாழும் நாளோடு யாண்டு பல உண்மையின்
தீர்தல் செல்லாது என்உயிர் எனப் பல புலந்து
கோல் காலாகக் குறும்பல ஒதுங்கி
நுதல் விரித்தன்ன கதுப்பினள் கண்துயின்று
முன்றில் போகா முதிர்வினள் யாயும் (புறம். 159. 1-5)

ஒளிறு வாள் மன்னர் ஒண் சுடர் நெடு நகர்
வெளிறு கண் போகப் பல்நாள் திரங்கிப்
பாடிப் பெற்ற பொன் அணி யானை (புறம். 177. 1-3)

ஆடு இயல் அழல் குட்டத்து
ஆர் இருள் அரை இரவில்
முடப் பனையத்து வேர் முதலாக்
கடைக் குளத்துக் கயம் காய . . . (புறம். 229. 1-4)

மாரி இரவின் மரம் கவிழ் பொழுதின்
ஆர் அஞர் உற்ற நெஞ்சமொடு ஓராங்குக்
கண்இல் ஊமன் கடல் பட்டாங்கு
வரை அளந்து அறியாத் திரை அருநீத்தத்து
அவல மறுசுழி மறுகவின்
தவலே நன்றுமன் தகுதியும் அதுவே (புறம். 238. 14-19)

கண்டனென் மன்ற சோர்க என் கண்ணே (புறம். 261.5)

புதுக்கண் மாக்கள் செதுக்கண் ஆரப்
பயந்தனை மன்னால் முன்னே (புறம். 261. 9-10)

நீரும் புல்லும் ஈயாது உமணர்
யாரும்இல் ஒருசிறை முடத்தொடு துறந்த
வாழா வன்பகடு ஏய்ப்ப . . . (புறம். 307. 7-9)

கீழ்க்கணக்கு

திருக்குறள்

கோள்இல் பொறியின் குணம்இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை (9)

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் (393)

கல்லாதான்சொல் காமுறுதல் முலை இரண்டும்
இல்லாதாள் பெண் காமுற்றற்று (402)

செவியின் சுவை உணரா வாய்உணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என் (420)

பண் என்னாம் பாடற்கு இயைபு இன்றேல் கண் என்ஆம்
கண்ணோட்டம் இல்லாத கண் (573)

உளபோல் முகத்துஎவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண் (574)

கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம் அஃதுஇன்றேல்
புண் என்று உரைப்படும் (575)

கண்ணோட்டம் இல்லவர் கண்இலர் கண்உடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல் (577)

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும் (614)

பொறிஇன்மை யார்க்கும்பழி அன்றுஅறிவுஅறிந்து
ஆள்வினை இன்மை பழி (618)

குறிப்பின் குறிப்பு உணர்வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல் (703)

குறிப்பின் குறிப்பு உணரா ஆயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண் (705)

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சும் அவன் கற்றநூல் (727)

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு (782)

பேதைமை என்பது ஒன்று யாதுஎனின் ஏதம்கொண்டு
ஊதியம் போக விடல் (831)

பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கை அல்லதன்கண் செயல் (832)

நாணாமை நாடாமை நாரின்மை யாதுஒன்றும்
பேணாமை பேதை தொழில் (833)

ஓதிஉணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல் (834)

ஒருமைச் செயல்ஆற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு (835)

பொய்படும் ஒன்றோ புனை பூணும் கைஅறியாப்
பேதை வினை மேற்கொளின் (836)

ஏதிலார் ஆரதமர் பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை (837)

மையல் ஒருவன் களித்தற்றால் பேதை தன்
கை ஒன்று உடைமை பெறின் (838)

பெரிது இனிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவது ஒன்றுஇல் (839)

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல் (840)

அறிவுஇன்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை
இன்மையா வையாது உலகு (841)

அறிவுஇலான் நெஞ்சு உவந்துஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம் (842)

அறிவுஇலார் தாம் தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது (843)

வெண்மை எனப்படுவது யாதுஎனின் ஒண்மை
உடையம் யாம்என்னும் செருக்கு (844)

கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடுஅற
வல்லதூஉம் ஐயம் தரும் (845)

அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி (846)

அருமறை சோரும் அறிவுஇலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு (847)

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்உயிர்
போஒம் அளவும் ஓர் நோய் (848)

காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டான்ஆம் தான்கண்ட ஆறு (849)

உலகத்தார் உண்டு என்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப்படும் (850)

ஊண் உடைஎச்சம் உயிர்க்கு எல்லாம் வேறஅல்ல
நாண் உடைமை மாந்தர் சிறப்பு (1012)

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறு உடைக்கும்
கூன்கையர் அல்லாதவர்க்கு (1077)

வாளற்றுப் புற்கென்ற கண்ணும் (1261)

எழுதுங்கால் கோல் காணாக் கண்ணே போல் (1285)

நாலடியார்

நரை வரும் என்று எண்ணிநல் அறிவாளர்
குழவியிடத்தே துறந்தார் புரைதீரா
மன்னா இளமை மகிழ்ந்தாரே கோல்ஊன்றி
இன்னாங்கு எழுந்திருப்பார் (11)

சொல்தளர்ந்து கோல்ஊன்றி சோர்ந்த நடையினர் ஆய்
பல்கழன்று பண்டம் பழிகாறும் இல்செறிந்து
காம நெறிபடரும் கண்ணினார்க்கு இல்லையே
ஏம நெறிபடரும் ஆறு (13)

தாழா தளரா தலைநடுங்கா தண்டு ஊன்றா
வீழா விறக்கும் இவள்மாட்டும் காழ்இலா
மம்மர்கொள் மாந்தர்க்கு அணங்கு ஆகும் தன்கைக்கோல்
அம்மனைக்கோல் ஆகிய ஞான்று (14)

பனிபடு சோலைப் பயன்மரம் எல்லாம்
கனி உதிர்ந்து வீழ்ந்தற்று இளமை நனிபெரிதும்
வேல் கண்ணள் என்று இவளை வெஃகன்மின் மற்று
இவளும்
கோல் கண்ணள் ஆகும் குனிந்து (17)

தெள்நீர் குவளை பொருகயல் வேள் என்று
கண்இல் புன்மாக்கள் கவற்ற விடுவெனோ
உள்நீர் களைந்தக்கால் நுங்கு சூன்றிட்டன்ன
கண்நீர்மை கண்டு ஒழுகுவேன் (44)

கோதை அருவிக் குளிர் வரை நல்நாட
பேதையோடு யாதும் உரையற்க பேதை
உரைக்கின் சிதைந்து உரைக்கும் ஒல்லும் வகையால்
வழுக்கிக் கழிதலே நன்று (17)

காணின் குடிப்பழிஆம் கையுறின் கால்குறையும்
ஆண்இன்மை செய்யுங்கால் அச்சம் ஆம் நீள் நிரயத்
துன்பம் பயக்குமால் துச்சாரி நீகண்ட
இன்பம் எனக்கு எனைத்தால் கூறு (84)

செம்மை ஒன்று இன்றி சிறியார் இனத்தர் ஆய்
கொம்மை வரி முலையாள் தோள் மரீஇ உம்மை
வலியால் பிறர் மனைமேல் சொன்றாரே இம்மை
அலிஆகி ஆடி உண்பார் (85)

அக்கே போல் அங்கை ஒழிய விரல் அழுகி
துக்கத் தொழுநோய் எழுபவே அக்கால்
அலவனைக் காதலித்துக் கால்முரித்துத் தின்ற
பழவினை வந்து அடைந்தக்கால் (123)

பிறர் மறையின்கண் செவிடராய்த் திறன் அறிந்து
ஏதிலார் இல்கண் குருடன் ஆய்த் தீய
புறங்கூற்றின் மூகைஆய் நிற்பானேல் யாதும்
அறம்கூற வேண்டா அவற்கு (158)

நுண்உணர்வு இன்மை வறுமை அஃது உடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம் எண்ணுங்கால்
பெண் அவாய் ஆண் இழந்த பேடி அணியாளோ
கண் அவாத் தக்க கலம் (251)

பெறுவது ஒன்று இன்றியும் பெற்றானே போலக்
கறுவுகொண்டு ஏலாதார் மாட்டும் கறுவினால்
கோத்து இன்னா கூறி உரையாக்கால் பேதைக்கு
நாத்தின்னும் நல்ல சுவைத்து (335)

கற்றவும் கண் அகன்ற சாயலும் இற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப்பாடு எய்தும் தான் உரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்தின் தணியாத
பித்தன் என்று எள்ளப்படும் (340)

பழமொழி

கண்இல் கயவர் கருத்து உணர்ந்து கைம்மிக
நண்ணி அவர்க்கு நலனுடைய செய்பவேல்
எண்ணி இடர்வரும் என்னார் புலி முகத்து
உண்ணி பறித்து விடல் (74)

இடையீடு உடையார் இவர் அவரோடு என்று
தலையாயார் ஆய்தந்தும் காணார் கடையாயார்
முன்நின்று கூறும் குறளை தெரிதலால்
பின்இன்னா பேதையார் நட்பு (113)

தோற்றம் அரிது ஆய மக்கட் பிறப்பினால்
ஆற்றும் துணையும் அறம் செய்க - மாற்று இன்றி
அஞ்சும் பிணிமூப்பு அருங்கூற்றுடன் இயைந்து
துஞ்ச வருமே துயக்கு (137)

கடுப்பத் தலைக்கீறி காலும் இழந்து
நடைத் தாரா என்பதூஉம் பட்டு முடத்தொடு
பேர் பிறிதாகப் பெறுதலால் போகாரே
நீர் குறிதாகப் புகல் (146)

பொருள் அல்லார் கூறிய பொய்க் குறளை வேந்தன்
தெருளும் திறம் தெரிதல் அல்லால் வெருள எழுந்து
ஆடுபவரோடே ஆடார் உணர்வு உடையார்
ஆடு மணைப் பொய்க்காலே போன்று (147)

முன்நலிந்து ஆற்ற முரண்கொண்டு எழுந்தாரைப்
பின்நலிதும் என்று உரைத்தல் பேதைமையே பின்நின்று
காம்பு அன்ன தோளி கலங்கக் கடித்து ஓடும்
பாம்பு பல் கொள்வாரோ இல் (148)

இம்மைப் பழியும் மறுமைக்குப் பாவமும்
தம்மைப் பிரியார் தமர்போல் அடைந்தாரின்
செம்மைப் பகைகொண்டு சேராதார் தீயரோ
மைம்மைப்பின் நன்று குருடு (188)

கற்று ஆற்றுவாரைக் கறுப்பித்து கல்லாதார்
சொல் தாற்றுக் கொண்டு சுனைத்து எழுதல் எற்று எனின்
தானும் நடவான் முடவன் பிடிப்பூணி
யானையொடு ஆடல் உறவு (192)

நாவின் இரந்தார்குறை அறிந்தும் தாம்உடைய
மாவினை மாணப் பொதிகிற்பார் தீவினை
அஞ்சில் என் அஞ்சாவிடில் என் குருட்டுக்கண்
துஞ்சில் என் துஞ்சாக்கால் என் (238)

தாக்குற்ற போழ்தில் தமரேபோல் நன்கு உரைத்து
போக்குற்ற போழ்தில் புறன்அழீஇ மேன்மைக்கண்
நோக்கு அற்றவரைப் பழித்தல்என் என்னானும்
மூக்கு அற்றதற்கு இல் பழி (250)

சிறப்புடை மன்னரைச் செவ்வியான் நோக்கி
திறத்தின் உரைப்பார்க்கு ஒன்று ஆகாதது இல்லை
விறற் புகழ் மன்னர்க்கு உயிர் அன்னரேனும்
புறத்து அமைச்சின் நன்று அகத்துக் கூன் (295)

உளைய உரைத்து விடினும் உறுதி
கிளைகள் வாய்க் கேட்பது நன்றே - விளைவயலுள்
பூமிதித்துப் புள் கலாம் பொய்கைப் புனல் ஊர
தாய்மிதித்து ஆகா முடம் (299)

உறாஅ வகையது செய்தாரை வேந்தன்
பொறாஅன் போல பொறுத்தால் பொறாஅமை
மேன்மேலும் செய்து விடுதல் அது அன்றோ
கூன்மேல் எழுந்த குரு (305)

கூர்அறிவினார் வாய்க் குணமுடைச் சொல் கொள்ளாது
கார் அறிவு கந்தா கடியன செய்வாரைப்
பேர் அறியார் ஆயின பேதைகள் யார் உளரோ
ஊர் அறியா மூரியோ இல் (351)

பூத்தாலும் காயா மரம் உள மூத்தாலும்
நன்கு அறியார் தாமும் நனி உளர் பாத்தி
விதைத்தாலும் நாறாத வித்துஉள பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு (399)

நான்மணிக் கடிகை

புகழ் செய்யும் பொய்யா விளக்கம் இகழ்ந்து ஒருவன்
பேணாமை செய்வது பேதைமை காணாக்
குருடராச் செய்வது மம்மர் இருள்தீர்ந்த
கண்ணராச் செய்வது கற்பு (22)

கற்பக் கழிமடம் அஃகும் மடம் அஃக
புற்கம் தீர்ந்து இவ்உலகில் கோள் உணரும் . . . (27)

கற்றான் தளரின் எழுந்திருக்கும் கல்லாத
பேதையான் வீழ்வானேல் கால்முரியும் எல்லாம்
ஒருமைத்தான் செய்த கருவி . . . (72)

நாஅன்றோ நட்பு அறுக்கும் தேற்றம் இல்பேதை
விடும் அன்றோ வீங்கப் பிணிப்பின் . . . (78)

கற்றான் ஒருவனும் பாடுஇலனே கல்லாதார்
பேதையார் முன்னர்ப் படின் (96)

திரிகடுகம்

வாளைமீன் உள்ளல் தலைப்படலும் ஆள்அல்லான்
செல்வக் குடியுள் பிறத்தலும் பல் சவையின்
அஞ்சுவான் கற்ற அருநூலும் இம்மூன்றும்
துஞ்சு ஊமன் கண்ட கனா (7)

இழுக்கல் இயல்பிற்று இளமை பழித்தவை
சொல்லுதல் வற்றாகும் பேதைமை யாண்டும்
செறுவோடு நிற்கும் சிறுமை இம்மூன்றும்
குறுகார் அறிவுடையார் (14)

குருடன் மனையாள் அழகும் இருள்தீரக்
கற்று அறிவில்லான் கதழ்ந்துரையும் பற்றிய
பண்ணின் தெரியாதான் யாழ்கேட்பும் இம்மூன்றும்
எண்ணின் தெரியாப் பொருள் (53)

. . . பெரியவர் புல்லுங்கால் தான் புல்லும் பேதையும் . . .
யாதும் கடைப்பிடியாதார் (74)

இருளாய்க் கழியும் உலகமும் யாதும்
தெருளாது உரைக்கும் வெகுள்வும் பொருள்அல்ல
காதற்படுக்கும் விழைவும் - இவைமூன்றும்
பேதைமை வாழும் உயர்க்கு (93)

. . . பெண்பாலைக் காப்பு இகழும் பேதையும் . . .
ஒழுக்கம் கடைப்பிடியாதார் (94)

கற்றாரைக் கைவிட்டு வாழ்தலும் காமுற்ற
பெட்டாங்கு செய்து ஒழுகும் பேதையும் . . .
. . . நல் உலகம் சேராதவர் (99)

சிறுபஞ்சமூலம்

கல்லாதான் தான் காணும் நுட்பமும் காதுஇரண்டும்
இல்லாதாள் ஏக்கழுத்தம் செய்தலும் . . .
நல்லார்கள் கேட்பின் நகை (3)

சிக்கர் சிதடர் சிதலைபோல் வாய் உடையார்
துக்கர் துருநாமர் தூக்குங்கால் தொக்கு
வருநோய்கள் முன்நாளில் தீர்த்தாரே இந்நாள்
ஒருநோயும் இன்றி வாழ்வார் (74)

புண்பட்டார் போற்றுவார் இல்லாதார் போகு உயிரார்
கண்கெட்டார் கால்இரண்டும் இல்லாதார்கண் கண்பட்டு
ஆழ்ந்து நெகிழ்ந்து அவர்க்கு ஈத்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து (76)

ஆசாரக்கோவை

சூதர் கழகம் அரவம் அறாக் களம்
பேதைகள் அல்லார் புகாஅர் புகுபவேல்
ஏதம் பலவும் தரும் (98)

ஏலாதி

கொல்லான் கொலை புரியான் பொய்யான்
பிறர்பொருள்மேல்
செல்லான் சிறியார் இனம் சேரான் சொல்லும்
மறையிற் செவிஇலன் தீச்சொற்கண் மூங்கை
இறையில் பெரியாற்கு இவை (19)

உரையான் குலன் குடிமை ஊனம் பிறரை
உரையான் . . . . ஈத்து உண்பான்
தேவாதி தேவனாத் தேறு (32)

கால்இல்லார் கண்இல்லார் நாஇல்லார் யாரையும்
பால் இல்லார் பற்றியநூல் இல்லார் சாலவும்
ஆழப்படும் ஊண் அமைத்தார் இமையவரால்
வீழப்படுவார் விரைந்து (36)

இல் இழந்தார் கண் இழந்தார் ஈண்டிய செல்வம் இழந்தார்
நெல் இழந்தார் ஆன்நிரை தான் இழந்தார்க்கு எல் உழந்து
பண்ணி ஊண் ஈய்ந்தவர் பல்யானை மன்னராய்
எண்ணி ஊண் ஆர்வார் இயைந்து (52)

கடம்பட்டார் காப்பு இல்லார் கைத்து இல்லார் தம்கால்
முடம்பட்டார் மூத்தார் மூப்பு இல்லார்க்கு உடம்பட்டு
உடையராய் இல்லுள் ஊண் ஈத்து உண்பார் மண்மேல்
படையராய் வாழ்வார் பயின்று (53)

ஆர்வமே செற்றம் கதமே அறையுங்கால்
ஓர்வமே செய்யும் உலோபமே சீர்சாலா
மானமே மாய உயிர்க்கு ஊனம் என்னுமே
ஊனமே தீர்ந்தவர் ஒத்து (61)

தாய் இழந்த பிள்ளை தலை இழந்த பெண்டாட்டி
வாய் இழந்த வாழ்வினார் வாணிகம் போய் இழந்தார்
கைத்து ஊண் பொருள் இழந்தார் கண்ணிலவர்க்கு ஈய்ந்தார்
வைத்து வழங்கி வாழ்வார் (78)

புலையாளர் புண்பட்டார் கண்கெட்டார் போக்குஇல்
நிலையாளர் நீர்மைஇழந்தார் தலையாளர்க்கு
ஊண்கொடுத்து ஊற்றாய் உதவினார் மன்னராய்க்
காண்கொடுத்து வாழ்வார் கலந்து (80)

இன்னா நாற்பது

. . . புலை உள்ளி வாழ்தல் உயிர்க்கு இன்னா இன்னா
முலை இல்லாள் பெண்மை விழைவு (12)

. . . கண்இல் ஒருவன் வனப்பு இன்னா ஆங்கு இன்னா
எண் இலான் செய்யும் கணக்கு (16)

ஆன்று அவிந்த சான்றோருள் பேதை புகல் இன்னா (17)

. . . குழவிகள் உற்றபிணி இன்னா இன்னா
அழகுடையான் பேதை எனல் (35)

இனியவை நாற்பது

மானம் அழிந்தபின் வாழாமை முன்இனிதே
தானம் அழியாமைத் தான் அடங்கி வாழ்வு இனிதே
ஊனம் ஒன்று இன்றி உயர்ந்த பொருள் உடைமை
மானிடவர்க்கு எல்லாம் இனிது (13)

தானம் கொடுப்பான் தகை ஆண்மை முன் இனிதே
மானம் படவரின் வாழாமை முன் இனிதே

ஊனம் கொண்டாடார் உறுதி உடையவை
கோள் முறையால் கோடல் இனிது (27)

முதுமொழிக் காஞ்சி

கழி தறுகண்மை பேடியின் துவ்வாது (4. 2)

செய்யாமை மேற்கோள் சிதடியின் துவ்வாது (4. 5)

திணைமாலை நூற்றைம்பது

மடங்கு இறவு போலும் யாழ்ப் பண்பு இலாப் பாண
தொடங்கு உறவுசொல் துணிக்க வேண்டா; முடங்கு இறவு
பூட்டுவில் ஏய்க்கும் பூம்பொய்கை ஊரன் பொய்
கேட்டு உற்ற கீழ்நாள் கிளர்ந்து (131)

ஐந்திணை எழுபது

மூத்தேம் இனியாம் வருமுலையார் சேரியுள்
நீத்து நீர் ஊன வாய்ப் பாண நீபோய் மொழி
கூத்தாடி உண்ணினும் உண் (45)

பேதை புகலை புதல்வன் துணைச் சான்றோன்
ஓதை மலி மகிழ்நற்கு யாஅம் எவன் செய்தும் (48)

முடம் முதிர் புன்னைப் படுகோட்டு இருந்த
மடமுடை நாரைக்கு உரைத்தேன் . . . (மிகை.)

கார் நாற்பது

. . . ஊதை உளரும் நறுந் தண்கா பேதை
பெருமடம் நம்மாட்டு உரைத்து (30)

கடல்நீர் முகந்த கமஞ்சூல் எழிலி
குடமலை ஆகத்துகொள் அப்பு இறைக்கும்
இடம் என ஆங்கே குறிசெய்தேம் பேதை
மடமொழி எவ்வம் கெட (33)

களவழி நாற்பது

நிரைகதிர் நீள் எஃகம் நீட்டி வயவர்
வரைபுரை யானைக் கைநூற வரைமேல்
உரும் எறி பாம்பின் புரளும் (13)

கவளம் கொள் யானையின் கைகள் துணிக்க
பவளம் சொரிதரு பைபோல் திவள் ஒளிய
ஒண் செங்குருதி உமிழும் (14)

இருநிலம் சேர்ந்த குடைக்கீழ் வரிநுதல்
ஆடு இயல் யானைத் தடக்கை ஒளிறுவாள்
ஓடா மறவர் துணிப்பத் துணிந்தவை
கோடு கொள் ஒண் மதியை நக்கும் பாம்பு ஒக்குமே ... (22)

எவ்வாயும் ஓடி வயவர் துணித்திட்ட
கைவாயில் கொண்டு எழுந்த செஞ்செவிப் புன் சேவல்
(26)

. . . கேடகத்தோடு அற்ற தடக்கை கொண்டு ஓடி
இகலன் வாய்த் துற்றிய தோற்றம் அயலார்க்குக்
கண்ணாடி காண்பாரின் தோன்றும் (28)

காப்பியம்

சிலப்பதிகாரம்

மான்அமர் நோக்கி ஓர் கூனிகைக் கொடுத்து
நகர நம்பியர் திரிதரு மறுகில்
பகர்வனர் போல்வதோர் பான்மையின் நிறுத்த
மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு
மணமனை புக்கு (3. 167-172)

கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழுகு மெய்யாளரும் முழுகினர் ஆடிப்
பழுதில் காட்சி நல்நிறம் பெற்று
வலம்செயாக் கழியும் இலஞ்சி மன்றமும் (5.118-121)

ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காமன் ஆடிய பேடி ஆடலும்
காய்சின அவுணர் கடுந்தொழில் பொறாஅள்
மாயவ ளாடிய மரக்கால் ஆடலும் (6.56-59)

பேதுறவு மொழிந்தனள் மூதறிவாட்டி (12.51)

மாயஞ்செய் வாளவுணர்வீழ நங்கை மரக்கால்மேல்
வாளமலை ஆடும் போலும்
மாயஞ்செய் வாளவுணர் வீழ நங்கை மரக்கால்மேல்
வாளமலை ஆடுமாயின் (12.12.3-4)

மெய்ப்பை புக்கு விலங்குநடைச் செலவின் . . . (16.108)

மடங்கலாய் மாறுஅட்டாய் மாயமோ மருட்கைத்தே
(17.34.4)

கூனுங்குறளும் ஊமுங் கூடிய
குறுந்தொழில் இளைஞர் செறிந்து சூழிதர (20.17)

வேற்றொருவன்
நீள்நோக்கம் கண்டு நிறைமதி வாண் முகத்தைத்
தானோர் குரக்குமுகம் ஆகென்று போன
கொழுநன் வரவே குரக்குமுகம் நீத்த
பழுமணி அல்குல் பூம்பாவை (21.19.23)

பெண் அறிவு என்பது பேதைமைத்தே என்று உரைத்த
நுண் அறிவினோர் (21.24.25)

இடமுலை கையால்திருகி . . . (21.43)

வச்சிரத் தடக்கை அமரர் கோமான்
உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்த கை
குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து (23.50-52)

கானவேங்கைக் கீழ் ஓர் காரிகை
தன்முலை இழந்து தனித்துயர் எய்தி (25. 57-58)

ஒருமுலை குறைத்த திருமா பத்தினி (27.129)

சுருளிடு தாடி மருள்படு பூங்குழல்
அரிபரந்து ஒழுகிய செழும்கயல் நெடும்கண்
விரிவெண் தோட்டு வெண் நகைத் துவர் வாய்ச்
சூடக வரிவளை ஆடு அமைப் பணைத் தோள்
வளர் இள வனமுலை தளிர் இயல்மின் இடை
பாடகச் சீறடி ஆரியப் பேடியொடு. . . (27. 181-186)

சிறுகுறுங் கூனும் குறளும் சென்று
பெறுக நின் செவ்வி பெருமகன் வந்தான் (27.214-215)

மான்மதச் சாந்தும் வரிவெண் சாந்தும்
கூனும் குறளும் கொண்டன ஒரு சார்
வண்ணமும் சுண்ணமும் மலர்பூம் பிணையலும்
பெண்அணிப் பேடியர் ஏந்தினர் ஒருசார் (28. 57-60)

மணிமேகலை

. . . பாவையை
ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ
பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின் . . . (3. 23-25)

சுரியல் தாடி மருள்படு பூங்குழல்
பவளச் செவ்வாய்த் தவள வாணகை
ஒள்ளரி நெடுங்கண் வெள்ளி வெண்தோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்கு வளை பிறைநுதல்
காந்தளம் செங்கை ஏந்திள வனமுலை
அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்
இகந்த வட்டுடை எழுதுவரிக் கோலத்து
வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி
நீணிலம் அளந்தோன் மகன் முன்ஆடிய
பேடிக் கோலத்துப் பேடு காண்குநரும் (3. 116-125)

விராடன் பேரூர் விசயனாம் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாக்களின் . . . (3. 146-147)

கண்தொட்டு உண்டு கவையடி பெயர்த்துத்
தண்டாக் களிப்பின் ஆடும் கூத்து . . . (6. 125-126)

பார்ப்பான் தன்னொடு கண் இழந்து இருந்த இத்
தீத்தொழிலாட்டி என் சிறுவன் தன்னை . . . (6. 132-133)

என்னுயிர் கொண்டு இவன் உயிர் தந்தருளில் என்
கண்ணில் கணவனை இவன் காத்து ஓம்பிடும் (6. 154-155)

புத்த ஞாயிறு தோன்றுங் காலை . . .
கூனும் குறளும் ஊமும் செவிடும்
மாவும் மருளும் மன்னுயிர் பெறாஅ (12. 86... 97-98)

ஐயக் கடிஞை கையின் ஏந்தி
மையறு சிறப்பின் மனைதொறும் மறுகிக்
காணார் கேளார் கால்முடப்பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணி நடுக்குற்றோர்
யாவரும் வருக என்று இசைத்து உடன் ஊட்டி (13. 109-113)

நெடியோன் குறள் உரு ஆகி நிமிர்ந்து தன்
அடியிற் படியை அடக்கிய அந்நாள் (19. 51-52)

பேதைமை என்பது யாது என வினவின்
ஓதிய இவற்றை உணராது மயங்கி

இயற்படு பொருளால் கண்டது மறந்து
முயல்கோடு உண்டு எனக் கேட்டது தெளிதல்
(23. 111-114; 30. 51-54)

பைத்தர வல்குல் பாவை தன் கிளவியின்
மொய்த்த மூஅறு பாடை மாக்களின்
காணார் கேளார் கால்முடம் ஆனோர்
பேணா மாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பியர் பசிநோயுற்றோர்
மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும் . . . (28. 220-225)

பேதைமை சார்வா செய்கை ஆகும் (30. 104)

பேதைமை மீளச் செய்கை மீளும் (30.119)

ஆதிக் கண்டம் ஆகும் என்ப
பேதைமை செய்கை என்று இவை இரண்டும் (30. 134-135)

மறந்த பேதைமை செய்கை ஆனவற்றை (30. 161)

அவாவே பற்றே பேதைமை என்று இவை (30. 170)

பேதைமை செய்கை அவாவே பற்று (30. 184)

பெருங்கதை

போகக் கலப்பையும் பொறுத்தனர் மயங்கிக்
கூனும் குறளும் மாண்இழை மகளிரும் (1.38. 177-178)

நானச் செப்பொடு கூன் பின் துளங்க (1.40.29)

குறிவயின் நின்ற குறள்வயின் நோக்கார் (1.44.37)

கன்மிசை மருங்கின் மின் மிளிர்ந்தது போல்
திடர்சேர் ஆகத்துச் சுடர் மணி பிறழ
முத்து உறழ் ஆலி தத்துறு கண்ணொடு
பனிப்புறு கிளவியின் பக்கம் நோக்கி
மங்கலச் செப்பின் மாண ஏந்திய
குங்குமம் கொண்ட கூன் வழுக்குறவும் (1.45. 251-256)

அருங்கலம் துதைஇப் பெருங்கலம் எல்லாம்
பேணி அணிந்த நாணுக் கோலத்துப்
பைஅரவு அல்குல் பவழப் பல்காசு
கைபுனை கலிங்கத்து ஐது கலந்து ஒன்றி

நீலத் தெண்ணீர் நீந்தும் ஆமையிற்
கோலக் குறுக்கைவாள் கூட்டுள் கழீஇப்
பாலிகை பற்றிய குறள் வழிப்படரவும் (1.45. 257-263)

. . . புளிஞர் தேறி
எவ்வழி ஆயினும் எரி அவித்து அவ்வழிக்
காணல் உறுதும் காட்டாய் ஆயின்
ஆண முன்கை அடுதும் யாம் (1.56. 107-110)

. . . நெறியில் தீர்ந்தவர்
வினைத் துகள் அறுக்கும் வேட்கை அல்லது
வேண்டுவ உரையா மூங்கைகளாம் எனும்
நீதியது நேர்மை உள்னாய்.. . (2.8. 137-140)

தான் அகம் தாங்கிய ஊனம் இல் செலவின் (2.8. 153)

நாற்கண்ணாக அமைத்து மற்று அவற்றுள்
மேற்கண் மழுகிய வினையிற்றாக . . . (2.10. 89-90)

பாகனை ஒழித்துக் கூன் மகள் கோல்கொள (3.5.97)

ஏந்துஇள வனமுலை எழில் வளைப் பணைத் தோள்
மாந் தளிர் மேனி மட மா நோக்கின்
ஆய்ந்த கோலத்து அயிராபதி எனும்
கூன் மடமகள் தனைக் கோமான் குறுகி. . . (3.6. 157-160)

ஆய்புகழ் அண்ணலை அறிந்தனள் ஆகிச்
சேயிழைக் கூன் மகள் சென்றனள் விரைந்தென்
(3.6. 199-200)

சேயிழைக் கூன்மகள் செவ்வனம் கூறிப்
போகிய பொழுதின் (3.7. 1-2)

இடுகிய கருங்கண் வீங்கிய கொழுங் கவுள்
குறுகிய நடுவில் சிறுகிய மென்முலை
நீண்ட குறங்கின் நிழல் மணிப் பல் கலம்
பூண்ட ஆகத்துப் பூந்துகில் அல்குல்
அயிராபதி எனும் செயிர் தீர் கூனியை (3.8. 51-55)

கண்ணினும் கையினும் கண்ணியது உணர்த்திப்
பெருந்தகை அண்ணல் திருந்து முகம் நோக்கி
நின்கைக் கொண்ட பூம்பந்து என்கை
ஆய்வளைத் தோளிக்கு ஈக்க என்ன

அங்கை எற்றிச் செங்கணிற் காட்டிய
கூன்மகள் குறிப்புத் தான் மனத்து அடக்கி (3.8. 82-87)

தன்வயின் திரியாக்
கோலக் கூன்மகட்கு அறியக் கூறி. . . (3.9. 46-47)

அல்க யாவிரும் அழலும் எனக்கு எனத்
திலகமுகத்தி திருந்துபடந் திறந்து
கூன் மகள் வீச . . . (3.14. 82-84)

சினத்தின் நீங்கி
ஊனம் கொள்ளாது தான்அவள் பெறுக என (3.17. 56-57)

ஊக்கமும் வலியும் வேட்கையும் விழைவும்
மூப்பு அடர்ந்து உழக்க முடங்கினீரும் . . .
நிறைப் பெருங் கோலத்து நெறிமையின் வழாஅ
உறுப்புக்குறைபட்டீர் உட்படப் பிறரும்
வந்தனர் குறுகி நும்குறை உரைத்துத்
துன்பம் நீங்க இன்பம் பயப்ப
வேண்டின கொள்ளப்பெறுதிர் நீர்என
மாண்ட வீதியொடு மன்றம் எல்லாம்
ஆர்குரல் முரசம் ஒவாது அதிர . . . (4.2. 26-27 35-41)

பெருமகன் பணித்த
பாவையும் மற்று அதன் கோயிலும் சுமக்கும்
கூனும் குறளும் மேல்நாம் கூறிய
நருமதை முதலா நாடக மகளிரும் (4. 10. 69-72)

செயிர்தீர் பதுமை தன் செவிலித் தாய்மகள்
அயிராபதி எனும் அம்பணைத் தோளி
மான்நேர் நோக்கிற் கூனி (4.12. 76-78)

கூன் மேல் புரட்டியும் குய நடு வொட்டியும் (4.12.85)

அச்சம் இல் காரிகை விச்சுவலேகை என்று
உற்ற நாமப் பொன்தொடிக் குறளி
யான்இவண் நிற்பக் கூனியைப் புகழ்தல்
ஏலாது என்று அவள் சேலம் திருத்தி . . . (4.12. 94-97)

சீவகசிந்தாமணி

தான் அமர்ந்து உழையின் நீங்காச் சண்பக மாலை என்னும்
கூனியது உருவம் கொண்டு ஓர் தெய்வதம் குறுகிற்றன்றே
(314)

குடங்கை போல் உண்கண் கூனியும் (342)

உறுதி சூழ்ந்து அவண் ஓடலின் ஆயிடை
மறுஇல் வெண்குடை மன்னவன் காதலஞ்
சிறுவன் தன்மையைச் சேர்ந்து அறிந்து இவ்வழிக்
குறுக வம் எனக் கூனியைப் போக்கினாள் (357)

வானத்தின் வழுக்கித் திங்கட் கொழுந்து மீன் குழாங்கள் சூழக்
கானத்தின் கிடந்ததே போல் கடலகம் உடைய நம்பி
தானத்து மணியும் தானும் இரட்டுறத் தோன்றினானே
ஊனத்தின் தீர்ந்த சீர்த்தி உத்தரட்டாதியானே (387)

தன்பால் மனையாள் அயலான்தலைக் கண்டு பின்னும்
இன்பால் அடிசிற்கு இவர்கின்ற கைப்பேடி போலாம்
நன்பால் பசுவே துறந்தார் பெண்டிர் பாலர் பார்ப்பார்
என்பாரை ஓம்பேன் எனின் யான் அவன் ஆக என்றான் (443)

தேனும் அமிழ்தும் திளைத்தாங்கு இனியன
ஊனம் இல் கட்டுரைக்கு உள்ளம் குளிர்ந்தான் (519)

ஆரம் துயல்வர அந்துகில் சோர்தர
வீரம்படக் கையை மெய்வழி வீசித்
தேரை நடப்பனபோல் குறள் சிந்தினொடு
ஒரும் நடந்தன ஒண்தொடி முன்னே (631)

தளை அவிழ் கோதை பாடித் தான் அமர்ந்திருப்பத் தோழி
விளை மதுக்கண்ணி வீணாபதி எனும் பேடி . . . (651)

வேயே திரள் மென்தோள் வில்லே கொடும் புருவம்
வாயே வளர் பவளம் மாந்தளிரே மா மேனி
நோயே முலை சுமப்பது என்றார்க்கு அருகு இருந்தார்
ஏயே இவளொருத்தி பேடியோ என்றார்
எரி மணிப்பூண் மேகலையாள் பேடியோ என்றார் (652)

பலி கொண்டு பேராத பாசம் இவள் கண்
ஒலி கொண்டு உயர் உண்ணும் கூற்றம் என்று எல்லே
கலி கொண்டு தேவர் முலை கரந்து வைத்தார் . . . (653)

கூன்களும் குறளும் அஞ்சிக் குடர் வெந்து கொழும் பொற் பேழை
தான் கொளப் பாய ஓடிச் சாந்துக்கோய் புகிய செல்வ

தேன்கொள் பூ மாலை சூடித் தாமமாய்த் திரண்டு நிற்ப
வான் பளிங்கு உருவத் தூணே மறைபவும் ஆய அன்றே
(764)

கையினால் சொலக் கண்களில் கேட்டிடும்
மொய் கொள் சிந்தையின் மூங்கையும் ஆயினேன்
செய் தவம் புரியாச் சிறியார்கள் போல்
உய்யலாவது ஓர் வாயில் உண்டாம் கொலோ (997)

சண்பகம் நறுமலர் மாலை நாறு சாந்து
ஒண் பழுக்காயினோடு உருவ மெல்இலை
உண்பதம் யாவர்க்கும் ஊனம் இல்லது
வண்புகழ் நாட்டது வண்ணம் இன்னதே (1441)

முயங்கினான் சொன்ன வண்டாய் முகிழ் முலைத் தெய்வம்
சேர
உயங்குவாள் உணர்ந்து கேள்வற்கு ஊனமும் பிரிவும் அஞ்சி
இயங்குவான் நின்ற ஆவி தாங்கினள் என்ப போலும்
வயங்கு பொன் ஈன்ற நீல மாமணி முலையினாளே (1530)

பால்நுண் தீம்சொல்லாள் ஓர் படுவி வண்டு ஆர்ப்ப வந்து
இறைஞ்சினாள் (1653)

நெடிய வாள்கண் வாயா இமைப்பு எனும் சொல்லின்
மற்றுஎம்
கொடியிற்கு ஒத்த இவை என்றாள் நம்பியும் கொள்க
என்றான் (1654)

கையில் தொழுதார் கழிய மூப்பிற் செவி கேளார்
மையலவர் போல மனம் பிறந்தவகை சொன்னார்
பைய நடக்க என்று பசிக்கு இரங்கியவர் விடுத்தார் (2013)

ஊனம் ஒன்றில்லார் உயர்குடிப் பிறந்தார் ஆயிரம்
அடுகளம் கண்டார் (2158)

கோலஞ் செய்பவர் கோல வெறிப்பினான்
மாலை வண்டின மாலைக்கண் கொண்டவே (2397)

காமம் பைப்பயக் கழியத் தம் கடைப்பிடி சுருங்கி
ஊமர் போலத் தம் உரை அவிந்து உறுப்பினில் உரையா
(2760)

கண் சூன்றிடப் பட்டும் கால்கை களைந்து ஆங்கே
அண்பல் இறக் கையால் ஆற்றத் தகர் பெற்றும்

நுண்சாந்து அரைப்பார் போல் நோவ முழங்கையால்
புண் செய்திடப் பெற்றும் புன்கண் உழப்பவே (2795)

கொட்டுப் பிடி போலும் கூனும் குறள் ஆமை
விட்டு நடப்பன போல் சிந்தும் விளைந்து சீ
அட்டும் உயவு நோய் அல்லாப் பிற நோயும்
பட்டார் உறுதுன்பம் பன்னிச் சொலலாமோ (2798)

நாடகம் நயந்து காண்பார் நலம் கிளர் கண்கள் சூன்றும்
ஆடகக் கலத்துள் ஆன்பால் அமிர்தினை நயந்து
உண்பாரை
நீடகம் வெகுண்டும் கையாற் பிடித்து நீறட்டியிட்டேம்
(2989)

பிளிறி வீழ் பேடி பெண்ணோய் அறுவகைத் துவர்ப்பும்
பேசின்
அளிபடு சிந்தை என்னும் ஆழிவாய் வீழ்ந்த அன்றே
(3076)

ஆழ்வார்

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

மாணிக் குறளனே தாலேலோ
வையம் அளந்தானே தாலேலோ (44) (பெரியாழ்.திரு. 1.4.1)

அன்னமும் மீன்உருவும் ஆள்அரியும் குறளும்
ஆமையும் ஆனவனே . . . (74) (பெரியாழ்.திரு. 1.6.11)

நாறிய சாந்தம் நமக்கு இறைநல்கு என்ன
தேறி அவளும் திருஉடம்பிற் பூச
ஊறிய கூனினை உள்ளே ஒடுங்க அன்று
ஏற உருவினாய் அச்சோ அச்சோ
(100) (பெரியாழ்.திரு. 1.9.4)

வாமனன் என்னைப் புறம் புல்குவான்
(112) (பெரியாழ்.திரு. 1.10.5)

கொங்கை வன்கூனி சொற்கொண்டு குவலயத்
துங்கக் கரியும் பரியும் இராச்சியமும்
எங்கும் பரதற்கு அருளி வன்கான் அடைஅம் கண்ணன்
(125) (பெரியாழ்.திரு. 2.2.8)

வாமன நம்பீ உன்காதுகள் தூரும்
(146) (பெரியாழ்.திரு. 2.4.8)

சிரீதரா உன்காது தூரும் (147) (பெரியாழ். திரு.2.4.9)

காரிகையார்க்கும் உனக்குக் குழுக்குற்று என்
காதுகள் வீங்கி எரியில் (148)(பெரியாழ்.திரு. 2.4.10)

பொன்திகழ் சித்திரகூடப் பொருப்பினில்
உற்ற வடிவில் ஒரு கண்ணும் கொண்ட அக்
கற்றைக் குழலன் கடியன் விரைந்து உன்னை
மற்றைக் கண் கொள்ளாமே கோல் கொண்டு வா
(178) (பெரியாழ்.திரு. 2.6.7)

கள்ள அரக்கியை மூக்கொடு
காவலனைத் தலை கொண்டாய்
(186) (பெரியாழ்.திரு. 2.8.5)

வருக வருக வருக இங்கே வாமன நம்பீ
(203) (பெரியாழ்.திரு. 2.9.2)

மாவலி வேள்வியில் மாணுருவாய்ச் சென்று
(219) (பெரியாழ்.திரு. 2.10.7)

கூனற் பிறை வேண்டி அண்ணாந்து நிற்கும்
(268) (பெரியாழ்.திரு. 3.5.5)

நுடங்கிடைச் சூர்ப்பணகாவைச் செவியொடு மூக்கு அவள்
ஆர்க்க அரிந்தானைப் பாடிப்பற (314) (பெரியாழ்.திரு. 3.9.8)

அத்திரமே அதன் கண்ணை அறுத்ததும் ஓர் அடையாளம்
(323) (பெரியாழ்.திரு. 3.10.6)

வல்லாளும் தோளும் வாளரக்கன் முடியும் தங்கை
பொல்லாத மூக்கும் போக்குவித்தான் பொருந்தும் மலை
(339) (பெரியாழ்.திரு. 4.2.2)

தங்கையை மூக்கும் தமையனைத் தலையும்
கடிந்த வெம் தாசரதி . . . (391) (பெரியாழ்.திரு. 4.7.1)

கூன் தொழுத்தை சிதகுரைப்பச்
கொடியவள் வாய்க் கடியசொல் கேட்டு
(405) (பெரியாழ்.திரு. 4.8.4)

குறள் பிரமசாரியாய் மாவலியைக்
குறும்பு அடக்கி அரசு வாங்கி
(418) (பெரியாழ்.திரு. 4.9.7)

தேவுடைய மீனமாய் யாமையாய்
ஏனமாய் அரியாய் குறளாய்
(420) (பெரியாழ்.திரு. 4.9.9)

விழிக்கும் கண்இலேன் நின்கண் மற்று அல்லால்
(434) (பெரியாழ்.திரு. 5.1.2)

வாமனன் என் மரகத வண்ணன் (442) (பெரியாழ்.திரு. 5.1.10)

மாணிக் குறள் உருவாய மாயனை என் மனத்துளே
(447) (பெரியாழ்.திரு. 5.2.5)

உன்மகள் தான்
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ . . .
(482) (திருப்பாவை. 9)

காட்டில் வேங்கடம் கண்ணபுர நகர்
வாட்டம் இன்றி மகிழ்ந்து உறை வாமனன்
(535) (நாச்சியார். திரு. 4.2)

கொண்ட கோலக் குறள் உருவாய்ச் சென்று
பண்டு மாவலி . . . (542) (நாச்சியார்.திரு. 4.9)

கொல்லை அரக்கியை மூக்கு அரிந்திட்ட குமரனார்
(600) (நாச்சியார்.திரு. 10.4)

மச்சுஅணி மாடமதிள் அரங்கர் வாமனனார்
பச்சைப் பசுந்தேவர் தாம் பண்டு நீர் ஏற்ற
பிச்சைக் குறைஆகி . . . (610) (நாச்சியார்.திரு. 11.4)

பொல்லாக் குறள் உருவாய் பொன் கையில் நீர்ஏற்று
(611) (நாச்சியார்.திரு. 11.5)

மற்று இருந்தீர்கட்கு அறியல் ஆகா
மாதவன் என்பது ஓர் அன்பு தன்னை
உற்று இருந்தேனுக்கு உரைப்பது எல்லாம்
ஊமையரோடு செவிடர் வார்த்தை
(617) (நாச்சியார்.திரு. 12.1)

மாணிஉருவாய் உலகு அளந்த
மாயனைக் காணில் தலைமறியும்
(618) (நாச்சியார்.திரு. 12.2)

கோல்ஆர்ந்த நெடும் சார்ங்கம் கூனல் சங்கம்
(654) (பெருமாள்.திரு. 1.8)

கூன்ஏறு சங்கம் இடத்தான் (677) (பெருமாள்.திரு. 4.1)

கூன்உருவில் கொடும் தொழுத்தை சொல்கேட்ட
கொடியவள் தன்சொல் கொண்டு
(739) (பெருமாள்.திரு. 9.10)

கலை வணக்கு நோக்கு அரக்கி மூக்கை நீக்கி
(745) (பெருமாள்.திரு. 10.5)

காணி பேணும் மாணி ஆய்க்
கரந்து சென்ற கள்வனே . . .
(777) (திருமழிசை.திருச்சந்த. 26)

எண் கடந்த யோகினோடு
இரந்து சென்று மாணி ஆய்
(778) (திருமழிசை.திருச்சந்த. 27)

தேன்அகம் செய் தண்நறும் மலர்த் துழாய் நல்மாலையாய்
கூன்அகம்புகத் தெறித்த கொற்ற வில்லி அல்லையே
(781) (திருமழிசை.திருச்சந்த. 30)

பேய்ச்சி பாலை உண்டு பண்டு ஓர் ஏனம் ஆன வாமனா
(788) (திருமழிசை. திருச்சந்த. 37)

கொண்டை கொண்ட கோதை மீதுதேன் உலாவு கூனி
கூன்
உண்டை கொண்டு அரங்க ஓட்டிஉள் மகிழ்ந்த நாதன்
ஊர்
(800) (திருமழிசை. திருச்சந்த. 49)

அறிந்து அறிந்து வாமனன் அடிஇணை வணங்கினாய்
(825) (திருமழிசை.திருச்சந்த. 74)

ஊனம் ஆயினகள் செய்யும் ஊன காரகர்களேனும்
போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதம் அன்றோ
(912) (தொண்டரடி.திருமாலை. 41)

ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய்
ஒழிந்தன கழிந்த அந்நாள்கள்
(950) (திருமங்கை.பெரியதிரு. 1.1.3)

முற்ற மூத்துக் கோல் துணையா முன்னடி நோக்கி
வளைந்து
இற்றகால் போல் தள்ளி மெள்ள இருந்து அங்கு இளையா
முன் (968)
(பெரியதிரு. 1.3.1)

முதுகு பற்றிக் கைத்தலத்தால் முன் ஒரு கோல் ஊன்றி
விதிர் விதிர்த்துக் கண் சுழன்று மேற்கிளை கொண்டு இருமி
இது என் அப்பர் மூத்தவாறு என்று இளையவர் ஏசா
முன். . . (969) (பெரியதிரு. 1.3.2.)

உறிகள் போல்மெய் நரம்பு எழுந்துஊன் தளர்ந்து உள்ளம்
எள்கி
நெறியை நோக்கிக் கண் சுழன்று நின்று நடுங்காமுன்
(970) (பெரியதிரு. 1.3.3)

பீளை சேரக் கண் இடுங்கி பித்தெழுமூத்திருமி
தாள்கள் நோவத் தம்மில் முட்டித் தள்ளி நடவாமுன்
(971) (பெரியதிரு. 1.3.4)

. . . இருமி, தண்டு காலா ஊன்றி ஊன்றி தள்ளி நடவாமுன்
(972) (பெரியதிரு. 1.3.5)

எய்த்த சொல்லோடு ஈளை ஏங்கி இருமி இளைத்து உடலம்
பித்தர் போலச் சித்தம் வேறாய்ப் பேசி அயராமுன்
(973) (பெரியதிரு. 1.3.6)

பப்பவப்பர் மூத்தவாறு பாழ்ப்பது சீத் திரளை
ஒப்ப ஐக்கள் பேதவுந்த உத்தமர் காண்மின் என்று
(974) (பெரியதிரு. 1.3.7)

ஈசிபோமின் ஈங்கு இரேன்மின் இருமி இளைத்தீர் உள்ளம்
கூசியிட்டீர் என்று பேசும் குவளையம் கண்ணியர் . . .
(975) (பெரியதிரு. 1.3.8)

புலன்கள் நைய மெய்யில் மூத்துப் போந்து இருந்து உள்ளம்
எள்கி
கலங்கவைக்கள் போதவுந்திக் கண்ட பிதற்றாமுன்
(976) (பெரியதிரு. 1.3.9)

தூய அரி உருவில் குறளாய்ச் சென்று மாவலியை
ஏயான் இரப்ப . . . (993) (பெரியதிரு. 1.5.6)

வண்கையான் அவுணர்க்கு நாயகன்
வேள்வியில் சென்று மாணியாய்
(1022) (பெரியதிரு. 1.8.5)

மாண் குறள் ஆன அந்தணற்கு இன்று அடிமைத் தொழில்
பூண்டாயே (1048) (பெரியதிரு. 2.1.1)

அந்தகன் சிறுவன் அரசர்தம் அரசற்கு
இளையவன் அணிஇழையைச் சென்று —
(1073) (பெரியதிரு. 2.3.6)

பரதனும் தம்பி சத்துருக்கனனும்
இலக்குமனோடு மைதிலியும்
இரவும் நன் பகலும்துதி செய்ய நின்ற
இராவணாந்தகனை எம்மானை
(1074) (பெரியதிரு. 2.3.7)

உகிரால் வகிராக முனிந்து அரியாய்
நீண்டான் குறள்ஆகி நிமிர்ந்தவனுக்கு
(1079) (பெரியதிரு. 2.4.2)

பஞ்சிச் சிறு கூழை உருவாகி மருவாத
வஞ்சப் பெண் நஞ்சு உண்ட அண்ணல்
(1104) (பெரியதிரு. 2.6.7)

வந்து குறள் உருவாய் நிமிர்ந்து
மாவலி வேள்வியில் மண் அளந்த
(1119) (பெரியதிரு. 2.8.2)

இலகிய நீள்முடி மாவலி தன்
பெரு வேள்வியில் மாண் உருவாய் முன்நாள்
(1134) (பெரியதிரு. 2.9.7)

கூன் உலாவிய மடந்தை தன்கொடும் சொலின் . . .
(1153) (பெரியதிரு. 3.1.6)

அருமா நிலம் அன்று அளப்பான் குறள்ஆய்
அவுணன் பெரு வேள்வியில் சென்று இரந்த . . .
(1161) (பெரியதிரு. 3.2.4)

ஒரு குறளாய் இருநிலம் மூஅடி மண் வேண்டி
(1178) (பெரியதிரு. 3.4.1)

அரக்கர் குலப் பாவை தன்னை வெம்சின
மூக்கு அரிந்த விறலோன் திறம் கேட்கில்
(1210) (பெரியதிரு. 3.7.3)

அரன் கொண்டு திரியும் முண்டம் அது நிறைத்து
அவன் கண் சாபம் அது நீக்கும் முதல்வன் அவன்
(1230) (பெரியதிரு. 3.9.3)

கலை இலங்கும் அகல் அல்குல் அரக்கர் குலக் கொடியைக்
காதொடு மூக்கு உடன் அரியக் கதறியவள் ஓடி . . .
(1231) (பெரியதிரு. 3.9.4)

கண்டவர் தம்மனம் மகிழ மாவலி தன் வேள்விக்
களவில் மிகுசிறுகுறள்ஆய் மூஅடி என்று இரந்திட்டு
(1242) (பெரியதிரு. 3.10.5)

வசைஅறு குறள்ஆய் மாவலி வேள்வி
மண் அளவிட்டவன் தன்னை
(1271) (பெரியதிரு. 4.3.4)

ஊனம்இல் பாடல் ஒன்பதோடு ஒன்றும்
(1277) (பெரியதிரு. 4.3.10)

பொங்கிலங்கு புரிநூலும் தோலும் தாழப்
பொல்லாத குறள்உருவாய்ப் பொருந்தா வாணன்
மங்கலம் சேர் மறை வேள்வி அதனுள் புக்கு . . .
(1284) (பெரியதிரு. 4.4.7)

கருமகள் இலங்கையாட்டி
பிலம்கொள் வாய் திறந்து தன்மேல்
வரும் அவள் செவியும் மூக்கும்
வாளினால் தடிந்த எந்தை . . .
(1292) (பெரியதிரு. 4.5.5)

கெண்டையும் குறளும் புள்ளும் கேழலும் . . .
(1293) (பெரியதிரு. 4.5.6)

தெள்ளிய குறள்ஆய் மூஅடி கொண்டு
திக்குஉற வளர்ந்தவன் கோயில் . . .
(1344) (பெரியதிரு. 4.10.7)

குறியமாணி உருவாய்க் கூத்தன் மன்னி அமரும்இடம்
(1348) (பெரியதிரு. 5.1.1)

கள்ளக் குறள்ஆய் மாவலியை
வஞ்சித்து உலகம் கைப்படுத்து . . .
(1349) (பெரியதிரு. 5.2.4)

கூற்றுஏர் உருவின் குறள்ஆய் நிலநீர்
ஏற்றான் எந்தை பெருமான் ஊர்போக . . .
(1361) (பெரியதிரு. 5.2.4)

வசைஇல் நான்மறை கொடுத்த அம்மலர் அயற்கு அருளி
முன் பரிமுகமாய்
இசைகொள் வேதநூல் என்று இவை பயந்தவனே
(1369) (பெரியதிரு. 5.3.2)

பண்டு இவ்வையம் அளப்பான் சென்று மாவலி கையில்
நீர்
கொண்ட ஆழித் தடக்கைக் குறளன் இடம் என்பரால்
(1380) (பெரியதிரு. 5.4.3)

ஏனம்மீன் ஆமையோடு அரியும் சிறுகுறளும் ஆய்
(1385) (பெரியதிரு. 5.4.8)

மான் கொண்ட தோல் மார்வில் மாணிஆய்
(1518) (பெரியதிரு. 6.8.1)

மீதுஓடி வாள் எயிறு மின் இலகமுன் விலகும்
உருவினாளை
காதோடு கொடிமூக்கு அன்று உடன் அறுத்த கைத்தலத்தா
(1580) (பெரியதிரு. 7.4.3)

உருவக் குறள் அடிகள் அடி உணர்மின் உணர்வீரே
(1580) (பெரியதிரு. 7.9.2)

தேமருவு பொழில் புடைசூழ் திருக்கண்ணபுரத்து உறையும்
வாமனனை . . . (1677) (பெரியதிரு. 8.3.10)

வாமனன் கற்கி மதுசூதன் மாதவன் . . .
(1684) (பெரியதிரு. 8.4.7)

சேம மதிள் சூழ்இலங்கைக் கோன்
சிரமும் கரமும் துணித்து (1702) (பெரியதிரு. 8.6.5)

தொழுநீர் வடிவில் குறள் உருவாய் வந்து . . .
(1722) (பெரியதிரு. 8.8.5)

மீனோடு ஆமை கேழல் அரி குறள்ஆய் . . .
(1727) (பெரியதிரு. 8.8.10)

மாண் ஆகி வையம் அளந்ததுவும் (1745) (பெரியதிரு. 8.10.8)

மன்னவன் பெரிய வேள்வியில் குறள்ஆய் . . .
(1752) (பெரியதிரு. 9.1.5)

முன்னம் குறள் உருவாய் மூஅடி மண் கொண்டு . . .
(1779) (பெரியதிரு. 9.4.2)

சிரம்முன் ஐந்தும் ஐந்தும் சிந்தச் சென்று அரக்கன்
உரமும் கரமும் துணித்த உரவோன் (1801) (பெரியதிரு. 9.6.4)

அணிவளர் குறள்ஆய் அகலிடம் முழுதும் அளந்த
(1820) (பெரியதிரு. 9.8.3)

தானவன் வேள்வி தன்னில் தனியே குறள்ஆய் நிமிர்ந்து
(1832) (பெரியதிரு. 9.9.5)

ஒருகால், நின்று உண்டை கொண்டு ஓட்டி
வன் கூன் நிமிர நினைத்த பெருமான். . .
(1899) (பெரியதிரு. 10.6.2)

விறல்மாவலியை, மண்கொள்ள வஞ்சித்து ஒரு மாண்
குறளாய்
அளந்திட்டவன் காண்பின்— (1901) (பெரியதிரு. 10.6.4)

நீண்டான் குறள்ஆய் நெடுவான் அளவும்
(1902) (பெரியதிரு. 10.6.5)

மலைபோல் உருவத்து ஒரு இராக்கதி மூக்கு
அரிந்திட்டவன் காண்மின்
(1906) (பெரியதிரு. 10.6.9)

மானம் உடைத்து உங்கள் ஆயர்குலம் அதனால்
பிறர்மக்கள் தம்மை
ஊனம் உடையன செய்யப்பெறாய் என்று இரப்ப . . .
(1908) (பெரியதிரு. 10.7.1)

கூன்ஆயது ஓர் கொற்ற வில் ஒன்று கைஏந்தி
(1927) (பெரியதிரு. 10.8.6)

வெம்திறல் வாணன் வேள்விஇடம் எய்தி அங்குஓர்
குறள் ஆகி மெய்மை உணர . . .
(1986) (பெரியதிரு. 11.4.5)

கண்டார் இரங்கக் கழியக் குறள் உருவாய்
வண்தாரன் வேள்வியில் மண் இரந்தான்
(2000) (பெரியதிரு. 11.5.9)

நீள்வான் குறள் உருவு ஆய் நின்று இரந்து
(2013) (பெரியதிரு. 11.7.2)

மதியினால் குறள் மாண்ஆய் உலகு இரந்த கள்வற்கு
(2117) (நம்.திருவாய். 1.4.3)

கூனே சிதைய உண்டை வில் நிறத்தில் தெறித்தாய்
(2130) (நம்.திருவாய். 1.5.5)

புலன் கொள் மாண்ஆய் நிலம் கொண்டானே
(2164) (நம்.திருவாய். 1.9.6)

ஒரு மாணிக் குறள் ஆய் நிமிர்ந்த . . .
(2181) (நம்.திருவாய். 1.10.1)

ஏத்த வல்லர்க்கு இல்லை ஓர் ஊனமே
(2213) (நம்.திருவாய். 2.2.11)

அறியா மைக் குறள்ஆய் நிலம் மாவலி மூவடி என்று
அறியாமை வஞ்சித்தாய் . . . (2216) (நம்.திருவாய். 2.3.3)

அரக்கியை, மூக்கு ஈர்ந்தாயை . . . (2219) (நம்.திருவாய். 2.3.6)

வாட்டம் இல் புகழ் வாமனனை (2235) (நம்.திருவாய். 2.4.11)

ஆண்அல்லன் பெண் அல்லனே (2244) (நம்.திருவாய். 2.5.9)

ஆண்அல்லன் பெண்அல்லன் அல்லா அலியும் அல்லன்
(2245) (நம்.திருவாய். 2.5.10)

வைகுந்தாமணி வண்ணனே என்
பொல்லா திருக்குறளா (2247) (நம்.திருவாய். 2.6.1)

மருவித் தொழும் மனமே தந்தாய்
வல்லை காண் என் வாமனனே
(2264) (நம்.திருவாய். 2.7.7)

வாமன் என் மரகத வண்ணன் (2265) (நம்.திருவாய். 2.7.8)

வன்மா வையம் அளந்த என்வாமனா
(2316) (நம்.திருவாய். 3.2.2)

ஊனம் இல் செல்வம் என்கோ
ஊனம்இல் சுவர்க்கம் என்கோ

ஊனம்இல் மோக்கம் என்கோ
ஒளிமணி வண்ணனையே . .
(2343) (நம்.திருவாய். 3.4.7)

பேர்பல சொல்லிப் பிதற்றிப் பித்தர் என்றே பிறர் கூற
(2355) (நம்.திருவாய். 3.5.8)

பிதற்றுமின் பேதைமை தீர்ந்தே *(2357) (நம்.திருவாய். 3.5.10)*

ஞாலம் கொள வான் குறள்ஆகிய வஞ்சனே
(2382) (நம்.திருவாய். 3.8.2)

மண் கொண்ட வாமனன். . . *(2385) (நம்.திருவாய். 3.8.5)*

மண்ணை இருந்து துழாவி
வாமனன் மண் இது என்னும்
(2447) (நம்.திருவாய். 4.4.1)

கூனல் சங்கத் தடக்கை அவனை
(2466) (நம்.திருவாய். 4.5.9)

வையம் கொண்ட வாமனாவோ *(2481) (நம்.திருவாய். 4.7.2)*

குறியமாண் உருவாகிக் கொடுங்கோளால் நிலம் கொண்ட
. . *(2496) (நம்.திருவாய். 4.8.6)*

குறியமாண் உருவாகிய நீள்குடக் கூத்தன்
(2522) (நம்.திருவாய். 4.10.10)

மீன்ஆய் ஆமையும் ஆய் நரசிங்கமும் ஆய்க் குறள்ஆய்
(2533) (நம்.திருவாய். 5.1.10)

மாண்குறள் கோலப் பிரான் மலர் தாமரைப் பாதங்களே
(2617) (நம்.திருவாய். 5.9.6)

மின்கொள்சேர் புரிநூல் குறளாய் அகல் ஞாலம் கொண்ட
(2644) (நம்.திருவாய். 6.1.11)

மாணிஆய் நிலம் கொண்ட மாயன் . . .
(2674) (நம்.திருவாய். 6.4.8)

மாண்பு அமை கோலத்து எம்மாயக் குறளற்கு
(2697) (நம்.திருவாய். 6.6.9)

மண்ணும் விண்ணும் மகிழக் குறளாய் வலங்காட்டி
(2723) (நம்.திருவாய். 6.9.2)

கோட்டங்கை வாமனனாய்ச் செய்த கூத்துக்கள் கண்டுமே
(2793) (நம்.திருவாய். 7.5.6)

மாயா வாமனனே மதுசூதனா (2821) (நம்.திருவாய். 7.8.1)

மயக்கா வாமனனே மதியாம் வண்ணம் ஒன்று அருளாய்
(2826) (நம்.திருவாய். 7.8.6)

மாண்குறள் கோல வடிவு காட்டி (2873) (நம்.திருவாய். 8.2.9)

பெரிய மூஉலகும் நிறையப் பேர் உருவாய் நிமிர்ந்த
குறிய மாண் எம்மான் . . . (2890) (நம்.திருவாய். 8.4.4)

மாயக் கூத்தா வாமனா . . . (2898) (நம்.திருவாய். 8.5.1)

அற்புதன் நாராயணன் அறி வாமனன்
(2918) (நம்.திருவாய். 8.6.10)

பொருத்தமுடை வாமனன் தான்புகுந்து
(2920) (நம்.திருவாய். 8.7.1)

உன்மத்தர்போல், பித்தே ஏறி அனுராகம் பொழியும் போது
(2938) (நம்.திருவாய். 8.8.8)

சிறுமாமேனி நிமிர்த்த என் செந்தாமரைக் கண்
திருக்குறளன் . . . (2955) (நம்.திருவாய். 8.10.3)

வாமனன் அடிக்கு என்று ஏத்த மாய்ந்து அறும்
வினைகள் தாமே (3093) (நம்.திருவாய். 10.2.9)

பெற்றார் தளை கழலப் போந்து ஓர் குறள்ஆய்
(3203) (இயற்.முதற். 20)

ஊனக் குரம்பையின் உள்புக்கு இருள் நீக்கி
(3274) (இயற்.முதற். 91)

கொண்டது உலகம் குறள் உருவாய்
(3301) (இயற்.இரண். 18)

அன்றுகரு மாணியாய் இரந்த கள்வனே
(3343) (இயற்.இரண். 61)

பண்டு ஒருகால் மாவலியை மாணியாய்க் கொண்
டிலையோ (3372) (இயற்.இரண். 89)

சேவடியான் செங்கண் நெடியான் குறள் உருவாய்
மாவடிவில் மண்கொண்டான் மால்
(3382) (இயற்.இரண். 99)

வாய்மொழிந்து வாமனனாய் மாவலிபால் மூவடிமண்
நீ அளந்து கொண்ட நெடுமாலே (3401) (இயற்.மூன். 18)

குறள் உருவாய், முன்நிலம் கைக்கொண்டான் முயன்று
(3435) (இயற்.மூன். 52)

ஓர் மாயையினால், ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்து
இமில் ஏற்று வன் கூன் கோட்டு இடை ஆடினை கூத்து .
(3600) (திருவிருத். 21)

மாவலி மாட்டு இரும்குறள் ஆகி இசைய ஓர் மூஅடி வேண்டி (3670) (திருவிருத். 91)

பேர் வாமனன் ஆகாக்கால் . . .(3702) (பெரிய.திருவந். 16)

மாணி உருவாகிக் கொண்டு உலகம் நீர்ஏற்ற சீரான்
(3706) (பெரிய.திருவந். 20)

தன் சீதைக்கு,
நேர்ஆவன் என்று ஓர் நிசாசரி தான்வந்தாளை
கூர் ஆர்ந்த வாளால் கொடி மூக்கும் காது இரண்டும்
ஈரா விடுத்த அவட்கு . . . (3775) (சிறி.மடல். 38-40)

அன்றியும்
பேர் வாமனன் ஆகிய காலத்து மூஅடி மண்
தாராய் எனக்கு என்று வேண்டி . . .
(3775) (சிறி.மடல். 44-45)

மற்று அன்றியும்
தன் உருவம் ஆரும் அறியாமல் தான் அங்கு ஓர்
மன்னும் குறள் உருவின் மாணி ஆய் மாவலிதன்
பொன் இயலும் வேள்விக்கண் புக்கு
(3815) (பெரி.மடல். 106-108)

துன்னு சுடு சினத்துச் சூர்ப்பணகாச் சோர்வு எய்தி
பொன் நிறம் கொண்டு புலர்ந்து எழுந்த காமத்தால்
தன்னை நயந்தாளைத் தான் முனிந்து மூக்குஅரிந்து
மன்னிய திண் எனவும் வாய்த்தமலை போலும்
(3815) (பெரிய.மடல். 145-146)

கம்பராமாயணம்

பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ (8)

ஊனம் இல் அறநெறி உற்றஎண் இலாக்
கோன் நிகர் குடிகள் (126)

ஒரு கலைமுகச் சிருங்க உயர்தவன் வருதல் வேண்டும் (211)

. . . மாந்தர்கள் விலங்கு என்று உன்னும் மனத்தான்
மாதவத்தான் (212)

. . . கலைக் கோட்டு முனிவரின் வான் பிலிற்றும் என்றார்
(215)

ஓத நெடுங்கடல் ஆடை உலகினில் வாழ் மனிதர் விலங்கு
எனவே உன்னும்
கோது இல் குணத்து அருந்தவன் (216)

கண் இலான் பெற்று இழந்தான் என உழந்தான்
கடுந்துயரம் கால வேலான் (325)

(வாயு) ஒடித்தனன் வெரிநை, வீழ்ந்தார் ஒளி வளை மகளிர்
எல்லாம்
சமிரணன் அகன்றதன்பின் தையலார் தவழ்ந்து சென்றே
திமிர்அறு பிரமதத்தற்கு அளித்தனன் திருஅனாரை
அவன் மலர்க் கைகள் நீவ கூன் நிமிர்ந்து அழகு வாய்த்தார்
(400-403)

ஊனம் இல் ஞாலம் ஒடுங்கும் எயிற்று ஆண்
ஏனம் எனும் திறம் மாவலி (410)

. . . ஓர், ஆல் அமர் வித்தின் அருங் குறள் ஆனான் (413)

கொண்டல் நிறக் குறள் என்பது கொள்ளேல் (418)

பயந்தவர்களும் இகழ் குறளன், பார்த்து எதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினான் (427)

அங்கு ஒருவனை அந்தக புரத்தின் உய்த்தே (444)

நோம், உறு நோய் நிலை நுவலகிற்றிலள்
ஊமரின் மனத்திடை உன்னி விம்முவாள் (521)

வாலதி பூமி தோய் பிடிசிந்தரும் போயினார்
காமர் தாமரை நாள்மலர்க் கானத்துள்
ஆமை மேல்வரும் தேரையின் ஆங்கரோ (770)

இரைத்த பேர் ஒலியால் இடை யாவரும்
உரைத்த உணர்ந்திலர் ஊமரின் ஏகினார் (775)

கூனொடு குறளும் சிந்தும் சிலதியர் குழாமும் (799)

ஊனமில் விலையின் ஆரம் உளம் குளிர்ந்து உதவுவாரும்
(936)

சிந்தொடு குறளும் கூனும் சிலதியர் குழாமும் தெற்றி
வந்து அடிவணங்குச் சுற்ற மணிஅணி விதான நீழல்
இந்துவின் கொழுந்து விண்மீன் இனத்தொடும் வருவது
என்ன
நந்தல்இல் விளக்கம் அன்ன நங்கையும் நடக்கலுற்றாள்
(1139)

ஊனவில் இறுத்த மொய்ம்பை நோக்குவது ஊக்கம்
அன்றால் (1294)

எனக் கலை மாமுகச் சிருங்கன் இவ்உரை தனைச் சொல
(மிகை. 55)

கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை இழைப்ப (1313)

ஒருதலைப் பரத்து ஒரு தலை பங்குவின் ஊர்தி
எருத்தின் ஈங்கு நின்று இயல்வரக் குழைந்து இடர் உழக்கும்
(1378)

துன்னருங் கொடு மனக்கூனி தோன்றினாள் (1445)

தோன்றிய கூனியும் . . . (1446)

சூழ்ந்த தீவினை நிகர் கூனி சொல்லுவாள் (1454)

அக் கொடிய கூனியே (1459)

வேதனைக் கூனிபின் வெகுண்டு நோக்கியே (1460)

வினை நிரம்பிய கூனியை விரும்பினாள் (1485)

உள்ளமும் கோடிய கொடியள் (1487)

உரைத்த கூனியை உவந்தனள் (1489)

கூனி போனபின் (1491)

கண்ணே வேண்டும் என்னினும் ஈயக் கடவேன் (1522)

கூனிமொழியால் (1676)

ஒருமாமுனிவன் மனையோடு ஒளி ஒன்றிலவாய் நயனம்
திருமா மகனே துணையாய் தவமே புரிபோழ்தின் வாய்
(1679)

கைக்கண் கணை சென்றது அலால் கண்ணின் தெரியக்
காணேன் (1680)

இரு கண்களும் இன்றிய தாய் தந்தைக்கும் (1682)

பொய்யா வாய்மைப் புதல்வன் புனல் மொண்டிடும்
ஓதையின் மேல்
கைஆர் கணை சென்றது அலால் கண்ணின் தெரியக்
காணேன் (1685)

அறுத்தாய் கணையால் எனவே அடியேன் தன்னை ஐயா
கறுத்தே அருளாய் யானோ கண்ணின் கண்டேன்
அல்லேன் (1687)

வீழ்ந்தார் அயர்ந்தார் புரண்டார் விழி போயிற்று இன்று
என்றார் (1688)

ஞானீயும் உய்கலான் என்னாதே நாயகனைக்
கான்ஈயும் என்று உரைத்த கைகேசியும் கொடிய
கூனீயும் அல்லால் கொடியர்பிறர் உளரோ (1704)

இருகையின் கரிநிகர் எண் இறந்தவர்
பெருகு ஐயில் பெயர்த்தனர் தலையைப் பேணலர்
ஒரு கையில் கொண்டனர் உருட்டுகின்றனர்
சுரிகையின் கண்மலர் சூன்று நீக்கினார் (1777)

பெண்கொடுவினை செயப்பெற்ற நாட்டினில்
கண்கொடு பிறத்தலும் கடை என்றார் சிலர் (1790)

நிறைமக உடையவர் நெறிசெல் ஐம்பொறி
குறைமக குறையினும் கொடுப்பராம் உயிர் (1796)

ஊனம்இல் பெருங்குணம் ஒருங்கு உடைய உன்னால்
மேல் நிகழ்வது உண்டு (1856)

பளிக்கு அறைச் சில பரிமுக மாக்களைப் பாராய் (2056)

ஆதலால் முனியும் என்று ஐயன் அந்தம் இல்
வேதனைக் கூனியை வெகுண்டும் என்னினும் (2299)

ஊனம் இல் மலராடை உடுத்தினார் (2383)

ஊனம் வேறு இலானுடன் உலகம் யாவையும்
கானமே புகும் . . . (மிகை. 219)

மூக்கும் காதும் வெம் முரண் முலைக் கண்களும்
முறையால்
போக்கி போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான் (2825)

வீர விரைந்தனை இவள் தன் விடுகாதும் கொடிமூக்கும்
ஈர நினைந்து இவள் இழைத்த பிழை என் என்று
இறைவினவ (2851)

பேடிப் போர் வல்அரக்கர் பெருங்குலத்தை ஒருங்கு
அவிப்பான் (2854)

குஞ்சரம் குதிரை பேய் குரங்கு கோள்அரி
வெஞ்சினக் கரடி நாய்வேங்கை யாளி என்று
அஞ்சுற கனல் புரை முகத்தர் . . . (2919)

நீஇடை இழைத்த குற்றம் என்னை கொல் நின்னை இன்னே
வாயிடை இதழும் மூக்கும் வலிந்து இவர் கொய்ய என்றான்
(3132)

குருடு ஈங்கு இது என்ன குறிக்கொண்டு கண்ணோட்டம்
குன்றி
அருள் தீர்ந்த நெஞ்சின் கரிது என்பது அவ்அந்தகாரம்
(3205)

நாசி, பொன் தாழ் குழை தன்னொடும் போக்கினள்
போய்ப்புகுந்தாள் (3213)

நின் மருகிக்கு நாசி இழக்கும் நிலை நேர்ந்தார் (3240)

அற்ற கரத்தோடு உன்தலை நீயே அனல்முன்னில்
பற்றினை உய்த்தாய். . . (3245)

எனக்கு இளைய நங்கை முகம் எங்கும் அகழ்ந்தவரை
ஒப்புற அமைத்தவரை (3256)

கூன்உகிர் மடங்கல் ஏற்றின் குழுவை
மான் கொல்லும் என்றான் (3373)

உங்கை கொங்கை மூக்கும் வாட்டினார் வனத்தில் உள்ளார்
மானிடர் (3400)

முட்டு அமைந்த நெடு முடக்கோனொடு
கட்டி, வாள் அரக்கன், கதிரோனையும்
இட்டனன் கொல் இருஞ்சிறை, என்னுமால் (3562)

பண்டையில் நாசி இழந்து பதைக்கும் திண் திறலாளொடு
(3590)

நின் இரு காதொடு நாசி துமிப்பதன் முன் அகல் (3597)

ஈர்ந்தான் அவள் நாசிபிடித்து இளையோன் (3618)

ஒருத்தி ஊறுபட்டு அரற்றிய குரல் (3619)

சிந்தின நயனம் வந்தனைய செய்கையான் (3623)

துளைபடு மூக்கொடு செவி துமித்து உக
வளை எயிறு இதழொடு அரிந்து மாற்றிய
அளவையில் பூசலிட்டு அரற்றினாள் (3631)

தொல்இருள் தனைக் கொலத் தொடர்கின்றாளையும்
கொல்லலை நாசியைக் கொய்து நீக்கினாய் (3632)

ஆற்றேன் ஆற்றேன் அதுகெட்டேன்
அறுத்தான் அறுத்தான் என்மூக்கை (மிகை. 273)

குடாமதி கோனைச் சேரும் கோமுகன் குறளி ஒத்தான்
(மிகை. 301)

சேயவானமும் திசைகளும் செவிடு உற . . . சிலையின் நாண்
எறிந்தான் (3876)

மா திசைகளும் செவிடுறக் குத்தினான் (3896)

. . . தெளிவது அன்று நாம்
ஊன் உடை மானிடம் ஆனது உண்மையால் (3930)

கூசினன் அந்தகன் குலைந்தது உம்பரே (3953)

உரையாய், என் வயின் ஊனம் யாவதோ (4102)

சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல், மற்றுஇந்
நெறி இகழ்ந்து யான் ஓர் தீமை இழைத்தலால், உணர்ச்சி
நீண்டு
குறியது ஆம்மேனி ஆயகூனியால், குவவுத் தோளாய்
வெறியன எய்தி நொய்தின் வெந்துயர்க் கடலில் வீழ்ந்தேன்
(4126)

குளித்தன மண்ணிடை கூனல் நந்து எலாம் (4268)

கூனல்மாக் குரங்கு ஐஇரண்டு ஆயிரகோடி (4408)

பலவின் கனிக் கூன் சுளை (4638)

தடாறு தாங்கிய கூன்இளந் தாழையின் (4640)

பிரிவுஇல் கான் அதுதனில் பெரிய சூர்ப்பணகை தன்
கரியமா நகிலொடும் காதொடும் நாசியை
அரியினார் . . . (மிகை. 319)

ஆர்உயிர் அந்தகற்கு அளிப்போன் (மிகை. 333)

கூன் சூல்முதிர் இப்பி குரைக்க நிரைத்த பாசி (4787)

அடங்கு அரிய தானை அயில் அந்தகனது ஆணைக்
கடுந் திசையின் வாய் அனைய வாயில் (4899)

கரிபரி வேங்கைமாக் கரடி யாளி பேய்
அரிநரி நாய் என அணி முகத்தினர் (5127)

உங்கை மூக்கும் உம்பியர் தோளும் தாளும்
சின்ன பின்னங்கள் செய்த அதனை நீ சிந்தியாயோ
(5202)

குழந்தையை உயிர்த்த மலடிக்கு உவமை கொண்டாள்
உழந்து விழி பெற்றது ஓர் உயிர்ப்பொறையும் ஒத்தாள்
(5292)

ஊனம் உற்றிட மண்ணின் உதித்தவர்
ஞானம் முற்றுபு நண்ணினர் வீடு என . . . (5451)

கூனல் வெண் பிறையின் தோன்றும் எயிற்றினர் (5495)

அலைகளை நகும் நெடுந் தோளர் அந்தகன்
கொலைகளை நகும் கொடுங் கொலையர் (5623)

வானரத்து உரு
கொண்டனன் அந்தகன் கொல் என்றார் பலர் (5817)

உறுப்பு உண்டாய் நடு ஓங்கிய நாசியை
அறுப்புண்டால் அது அழகு எனல் ஆகுமே (5905)

இளையவள் தன்னைக் கொல்லாது இருசெவி மூக்கு ஈர்ந்து
விளைவு உரை என்று விட்டார் (5920)

தொல்லை வாலை மூலம் அறச்சுட்டு நகரைச் சூழ்போக்கி
எல்லை கடக்க விடுமின்கள் (5921)

ஆயது அங்கு ஓர் குறள் உரு ஆய்அடித்
தாய் அளந்த உலகங்கள் தரக் கொள்வான்
மீ எழுந்த கரியவன் . . . (5949)

விரிகுழல் உங்கை மூக்கு அரிந்த வீரனை (6087)

கூனல் முதுகின் சிறுகுரங்கொடு வெல்வார் (6133)

கருத்துஇலன் கண்இலன் ஒருத்தன் கைக்கொடு
திருத்துவான் சித்திரம் அனைய செப்புவாய் (6136)

அந்தகன் முதலினோர் அமரரும் முனிவரும் பிறரும்
அஞ்சார் (6164)

பிச்சர் சொல்லுவ சொல்லினை (6171)

ஊனவில் இறுத்து ஓட்டை மாமரத்துள் அம்பு ஓட்டி
கூனி சூழ்ச்சியால் அரசு இழந்து (6179)

பெண்ணில் பேர்எழில் ஆணில் அலியினில் பிறிதும்
உள்நிற்கும் உயிர் உள்ளதில் இல்லதில் உலவான் (6202)

கூற்றையும் கண்பொறிகுறுகக் காண்பரேல்
ஊற்றுறு குருதியோடு உயிரும் உண்பரால் (6536)

விண்ணிடை விழித்தனர் நிற்கும் வெய்யவர்
கண்இலர் கரைஇலர் கரந்து போயினார் (6539)

எண்ணும் செய்கையான், அந்தகன் தன்பதம் இழந்தான்
(6572)

உணர்வுஇல் நெஞ்சினர் ஊமர் உரைப்பொருள்
புணரும் கேள்வியர் அல்லர் பொறிஇலர்
கொணரும் கூனர் குறளர் கொழுஞ்சுடர்
துணரும் நல்விளக்கு ஏந்தினர் சுற்றினார் (6786)

அங்கை வாள்கொடு அவள் ஆகம் விளங்கும்
கொங்கை நாசி செவி கொய்து குறைத்தான் (6880)

அறக்கண் அல்லது ஒரு கண்இலன் ஆகி (6881)

மானத்தான் ஊன்றப்பட்ட மருமத்தான் வதனம் எல்லாம்
கூனல் தாமரையின் தோன்ற . . . (6946)

. . . வனத்துள் வைகி
இருந்துழி வந்தநங்கை இருஞ்செவி முலையும் மூக்கும்
அரிந்துழி
வந்திலாதான் இனிச் செய்யும் ஆண்மை உண்டோ (7005)

ஊழியின் அந்தகன் நாவின் ஓங்கவே (7117)

ஒத்து இருசிறு குறட் பாதம் உய்த்த நாள் (7126)

எடுத்தான் வலத் தடக்கையினை இதுபோய் உலகு எல்லாம்
அடுத்தான் குறள் அளந்தான்திருவடியின் வரவு அன்னான்
(7178)

வலி என்பதும் உளதே அது நின்பாலது மறவோய்
அலி என்பவர் புறம் நின்றவர், உலகு ஏழினும் அடைத்தாய்
(7197)

மாணியாய் உலகு அளந்த நாள் அவனுடை வடிவை
(7235)

எறித்த போர் அரக்கர் ஆவி எண்இலா வெள்ளம் எஞ்சப்
. . . பொறித்த போது, அன்னான் அந்தக் கூனி கூன் போக உண்டை
தெறித்தபோது ஒத்தது அன்றி சினம் உண்மை தெரிந்தது இல்லை (7288)

மானுடர் இருவரை வணங்கி மற்றும் அக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு (7363)

சேண் எறிந்து எழு திசை செவிடு எறிந்தன (7480)

பெய் தவத்தினோர் பெண்கொடி எம்முடன் பிறந்தாள்
செய்த குற்றம் ஒன்று இல்லவள் நாசி வெஞ்சினத்தால்
கொய்த கொற்றவ . . (7506)

கண்டனன் நாயகன் தன்னை . . .
விண்டவன் நாசியும் செவியும் வேரொடும்
கொண்டனன் ., . . (7562)

வித்தகன் சரம் தொட மெலிவு தோன்றிய
சித்திரம் பெறுதலின் செவியும் மூக்கும் கொண்டு
அத்திசைப் போயினன் (7565)

. . மிக்கு உயர் நாசியும் செவியும் வேறுஇடம்
புக்கதும் உணர்ந்தனன் உதிரப் போர்வையான் (7566)

புண்ணுடைச் செவியொடு மூக்கும் பொன்றலால்
கண்ணுடைச் சுழிகளும் குருதி கால்வன (7568)

அந்தகன் ஆணையின்வழி நின்றாய் (7595)

. . . எங்களைப் பிரிந்து தன் பெருஞ்செவி மூக்கோடும்
அற்ற எங்கை போல் . . . (7596)

நோக்கு இழந்தனர் வானவர் எங்களால் . . .
. . . செவி தன்னொடு மாற்றாரால்
மூக்கு இழந்தபின் மீளல் என்றால் அது முடியுமோ (7597)

உங்கள் தோள் தலைவாள்கொடு துணித்து உயிர் குடித்து (7598)

அந்திவந்தென அகல்நெடு வாய் விரித்து அடிஒன்று கடிது ஓட்டி
குந்தி வந்தனன் நெடுநிலம் குழிபட (7617)

மாறுகால் இன்றி வானுற நிமிர்ந்து . . . தொடர்கின்ற தொழிலானை
. . . வேறு காலையும் துணித்தனன் . . . (7618)

கை இரண்டொடு கால்களும் துணிந்தன (7619)

. . . அந்தோ யான் கய்யும் கால்களும் இழந்தனென் . . . (7622)

மூக்குஇலா முகம் என்று முனிவர்களும் அமரர்களும் நோக்குவார் (7628)

முளைப் பிறை நெற்றி வான மடந்தையர் முன்னும் பின்னும்
வளைந்தனர் வந்துசூழ வந்திகர் வாழ்த்த வந்தான் (7637)

. . . மற்றை அந்தகன் அடியார் செய்கை ஆற்றுமால் (7684)

. . . என் பின் பிறந்தாள் மூக்கறவும் வாழ்ந்தேன் (7714)

கால்பிடித்து ஈர்த்துஇழி குருதிக் கண்ண கண்
சேல் பிடித்து எழுதிரை ஆற்றில் திண் நெடுங்
கோல் பிடித்து ஒழுகுறு குருடர் கூட்டம் போல்
வால்பிடித்து ஒழுகின கவியின் மாலையே (7825)

கூர்மருப்பு இணையன குறைந்த கையன
கார்மதக் கன வரை கவிழ்ந்து விழ்வன. . . (7834)

வய்வன முனிவர் சொல் அனைய வாளிகள்
கொய்வன தலைகள் தோள் குறைத் தலைக் குழாம் (7841)

. . . திரிந்தான் ஒரு தனியே நெடுந் தேவாந்தகன் சினத்தான் (7890)

பத்துத் திசையும் செவிடு எய்தின (7970)

மருந்தே நிகர் எம்பி தன் ஆர்உயிர் வவ்வினானை
விருந்தே என அந்தகற்கு ஈகிலென் . . . (8014)

அழுத்திய பெருஞ்சினத்து அரக்கர் ஆக்கைகள்
கழுத்து உள தலை இல களத்தின் ஆடுவ (8042)

சேண் எறிந்து நிமிர் திசைகளோடு மலை செவிடு எறிந்து
உடைய (8062)

சூலம் அந்தகன் எறிந்தது அன்னது (8084)

கைஅற்றார் கால்கள் அற்றார் கழுத்து அற்றார் கவசம்
அற்றார்
மெய்அற்றார் குடர்கள் சோர விசைஅற்றார் விளியும்
அற்றார் (8100)

செவிடு செல்லக் கிழிந்தன திசைகள் எல்லாம் (8105)

உணர்வு ஆய பெண்ணின் உருஆய்
ஆண்ஆகி மற்றும் அலி ஆகி, ஆர்இவ்
அதிரேக மாயை அறிவார் (8255)

ஏற்றம் இனிச் செயல் வேறு இலை ஈர்வீர்
நாற்றம் நுகர்ந்து உயர் நாசியை (8307)

அக்கணனே அயில் வாளினர் நேர
மிக்கு உயர் நாசியை ஈர விரைந்தார் (8308)

பூசல் முகத்து ஒரு கான்முளை போதா
நீசரை ஈருதியோ நெடு நாசி (8314)

ஏழு கடல் துணையோ இனி நாசி
ஊழி அறுத்திடினும் உலவாதால் (8315)

வெட்டுதி நாசியை . . . (8316)

நெடியன் குறியன் எனும் நீர்மையினான் (8391)

கீண்டன செவிகள் நெஞ்சம் கிழிந்தன (8455)

அவுணர் வேந்தன்
கொடுத்த நாள் அளந்து கொண்ட குறளனார் குறிய பாதம்
எடுத்த நாள் ஒத்தது அண்ணல் எழுந்த நாள் உலகுக்கு
எல்லாம் (8743)

கூனுடைக் குரங்கினோடு மனிதரைக் கொன்று (9016)

ஊனம் இனி இலது ஆகுக இளங்கோக்கு என உரைத்தார் (9065)

*சொல்வித்தும் பழித்தும் நுங்கை மூக்கினைத்
துணிவித்தோர் ஆர் (9101)*

நெடுந்திசை செவிடு எறிதர (9135)

அச்சேனை போயது அந்தகன் புரம்புக நின்றது போலாம் (9289)

*மற்றுஅப் பெரும்படை அரக்கர் தம் யாக்கை
அடங்கும் மாயவன் குறள் உருத் தன்மையின் அல்லால் (9303)*

உலகு செவிடு பட (9457)

*கூன் ஏறு சிலையும் தானும் குதிக்கின்ற கடுப்பின்
கொட்பால் (9514)*

*மானநாட்டு அந்த போகம் அமைத்திர் மற்று
ஊனம் நாட்டின் இழத்திர் உயிர் என்றான் (9618)*

தேர்க்குரல் ஓதை பொங்க செவி முற்றும் செவிடு செய்த (9708)

அச்சூர்ப்பணகை இழந்த மூக்கும் (9942)

மான் முகன் (9956)

கூனியின் கொடியர் அலரே இவர் (9986)

*பல்பகல் இறந்த பின்றை பாதக அரக்கி தோன்றி
மெல்விய இடையினாளை வெகுண்டுழி இளைய வீரன்
அல்கிய திருவைத் தேற்றி, அவளுடை செவியும் மூக்கும்
மல்கிய முலையும் கொய்தான் (10216)*

மான்மகன் முதலாய் உள்ள வானவர் தொழுது போற்ற (10231)

கரை செயல் அரிய வேதக் குறுமுனி கையும் ஒவ்வா (10288)

ஊனம் இல் பிடியும் ஒண்தார்ப் புரவியும் பிறவும் ஊர்ந்து (10296)

*துரகதப் புரவி எல்லாம் மூங்கையர் சொல் பெற்றென்ன
அரவப் போர் மேகம் என்ன ஆலித்த (10299)*

மான்முகத்து ஒருவன் . . . (10318)

வால்அறுந்து வயிறு துணிந்து இரு
கால்அறுந்து கழுத்து அறுந்து அங்கம் ஆம்
மேல் அறுந்து விளிந்தன வெஞ் சமர்
ஆலும் வானரச் சேனை அனேகமே (மிகை. 703)

எண்திசை செவிடு எறிதரச் சென்று உற்றதால் (மிகை. 751)

கடும் பிணக் குவையினூடே சிலவரைப் புதைக்கும், கண்ணைப்
பிடுங்குறும் சிலவர் தம்மை (மிகை. 762)

அறுந்தன தலை கழுத்து அறுந்த தாள் கரம்
அறுந்தன செவி முகம் அறுந்த வால் மருப்பு
அறுந்தன குடல் உடல் அறுந்தவாய் விழி
அறுந்தன கடகளிறு ஆய நாமமே (மிகை. 803)

வெப்பு உறுவன் கவி வீரர்கள் ஓதை
எப்புறமும் செவிடு உற்றதை எண்ணி (மிகை. 846)

வட்டமா மதிமுகத்து எம் மங்கையை மூக்கு அரிந்த
கட்ட மானிடவர் . . . (மிகை. 897)

அழிவுதான் எனக்கும் உண்டோ ஆண் அலாய் பேடி என்றான் (மிகை. 898)

ஆளிமா முகவர் சீறும் அடுபுலி முகவர் மிக்க
யாளிமா முகவர் யானை முகவர் மற்று எரியும் வெங்கண்
கூளி மாமுகவர் ஆதி அளப்பு இல கோடி உள்ளார்
ஊழி சென்றாலும் உட்கார் ஒருவர் ஓர் அண்டம் உண்பார்
(மிகை. 919)

மண்டிப் புக்கனன் மறலி தன் பெரும்பதம் நரகில்
தண்டிப்புண்டு அறுப்புண்டு எரிப்புண்டவர் தம்மைக்
கண்டு மாருதி கண்புதைத்து . . . (மிகை. 1065)

துளங்கி அந்தகன் வந்து அடி தொழுதலும் (மிகை. 1066)

முறையது மயங்கிவாழ்வோர், மூங்கை அந்தகர்க்குத் தீயோர்
(மிகை. 1122)

ஏது இத்தலம் எனக் குறுமுனிவனைக் கேட்ப . . .
(மிகை. 1137)

அகன்ற காரணம் குறுமுனி உரைசெய (மிகை. 1138)

கருத்து மற்று இனி உரை என குறுமுனி கழறும்
(மிகை. 1139)

வென்றிவால் அற்று மேதினி வீழ்ந்தனன் வீரன்
(மிகை. 1147)

முத்தொள்ளாயிரம்

உழுத உழுத்தம் செய் ஊர்க்கன்று மேயக்
கழுதை செவி அரிந்தற்றால் . . . (60)

இரியல் மகளிர் இலைஞெமலுள் ஈன்ற
வரி இளம் செங்கால் குழவி - அரை இரவின்
ஊமன் பாராட்ட உறங்கிற்றே செம்பியன் தன்
நாமம் பாராட்டாதார் நாடு (77)

வரக்கண்டு நாணாதே வல்லையா நெஞ்சே,
மரக்கண்ணோ மண்ணாள்வார் கண் என்று இரக்
கண்டாய் (101)

இறையனார் அகப்பொருளுரை (பாண்டிக் கோவையுடன்)

. . . அவரைச் சங்கம் இரீஇனார் வெண்தேர்ச் செழியன் முதலாக முடத் திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் (ப. 6).

. . அவர்களைச் சங்கம் இரீஇனார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத் திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் (ப.6).

இவ்வூர் உப்பூரிக் குடிக்கிழார் மகனாவார் உருத்திர சன்மன் என்பான்; பைங்கண்ணன், புன்மயிரான், ஐயாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப் பிள்ளை உளன் (ப. 8).

. . . ஒத்த கல்வியும் உடையராய்ப் பிறிதொன்றிற்கு ஊனம் இன்றிப் போகம் துய்ப்பர் என்று காட்டப்பட்டது (ப. 10).

(. . . கண்ணழித்து . . . கண்ணழித்தல் என்பது பதப்பொருள் சொல்லுதல், பக். 14,15).

. . . மற்று உலகத்துக் களவாயின எல்லாம் கை குறைப்பவும் கண்சூலவும் கழுவேற்றவும்பட்டுப் பழியும் பாவமும் ஆக்கி, நரகத் தொடக்கத்துத் தீக்கதிகளில் உய்க்கும் (ப. 25).

ஏதிலர் நோய் செய்வதோ நின்பெருமை என நெருங்கிக் காதலர் தம்மைக் கழறின் என் ஊனம் கருங்கடலே (பா.கோ. 213) (ப. 144).

வரவு மகிழ்ந்திலள் தையல் வெய்யோன் போய் மலை மறைந்த இரவும் வர என்ன ஊனமதாம் நினது இன்அருட்கே (பா.கோ. 229) (ப. 148)

பஞ்சார் அகல் அல்குல் பால் பகல் வந்தால் பழி பெரிதாம் மஞ்சார் சிலம்ப வர என்ன ஊனம் மயங்கு இருளே (பா.கோ. 231) (ப. 149).

. . நாட்டகத்து நின்றும் நகரத்துத் தமக்கு உற்றது உரைக்கலாத மூத்தார்களும் பெண்டிர்களும் இருக்கை முடவரும் கூனரும் குருடரும் பிணியுடையாரும் என இத்தொடக்கத்தார் தம் முறைக் கருமம் கேட்டுத் திருத்துதற் பொருட்டாகவும் . . பிரியும் என்பது (ப. 159).

ஊனம் கடந்த உயர்குடை வேந்தன் உசிதன் . . (பா.கோ. 265) (ப. 169)

மானக் கடும்சிலை மான் தேர் வரோதயன் வாள் முனைபோன்று ஊனப்பட நினைந்து ஊடல் பொன்னே உறு வெஞ்சுரத்து . . . (பா.கோ. 321) (ப. 202).

வளையாபதி

உயர்குடி நனியுள் தோன்றல் ஊனம்இல் யாக்கைஆதல்
மயர்வுஅறு கல்வி கேள்வித் தன்மையால் வல்லர் ஆதல்
பெரிது உணர் அறிவே ஆதல் பேர் அறம் கோடல் என்று ஆங்கு
அரிது இவை பெறுதல் ஏடா பெற்றவர் மக்கள் என்பார் (6)

அந்தகன் அந்தகற்கு ஆறுசொலல் ஒக்கும்
முந்துசெய் குற்றம் கெடுப்பான் முழுவதும்
நன்கு அறிவில்லான் அஃது அறியாதவற்கு
இன்புறு வீட்டின் நெறி சொல்லுமாறே (69)

பாரத வெண்பா

உற்று ஒன்று அறியேன் உனது ஒளி கண்ட கண்
மற்று ஒன்றும் காணாமல் வாங்கு என்னக் கொற்றவனும்

பாஒன்று நீண்ட பரஞ்சுடரோன் பார்த்து அருளி
வா என்று கொண்டான் மகிழ்ந்து (215)

. . . சிறு நாண்ஒலி திசைகள் செவிடுபடச் சிலம்பினை
(485, உரை)

தானமா மண் வேண்டும் வாமனன் ஆம் மாலை . . . (583)

. . . இருவரன்ன தேர் ஒலியாலும் இருவரன்ன அம்பு
படலங்களாலும் திசை அனைத்தும்
செவிடுபட்டது என்றவாறு (585, உரை)

திசைகளைச் செவிடுபடுத்தி விண்ணும் மண்ணும் தோன்றா
வகை கண மழை பொழிந்து . . .
(627, உரை)

மண்எல்லாம் மூஎழு கால் மன் களைகட்டு அரசாண்ட
மன்னர் கோவை
விண்உள்ளார் வியந்து ஏத்த மெய்விரதம் குன்றாமல்
வென்ற கோவே
எண்இல்லா வன் நெஞ்சத்து என்மகனும் தம்பியரும்
என்னைப்போலக்
கண் இல்லார் ஆக்குவித்தாய் என் செய்கேன் இனி நானும்
கடைப்பட்டேனே (670)

ஏடகப் பகழி தீண்டா யாக்கை எம் கோவே பேடி
சூடகச் செங்கை அம்பில் துயில்வது ஒன்று அறிந்திலேனே
(671)

என்னைப் போல் என் மக்களையும் கண் இல்லாதார்
ஆக்கிப்
போயினாய் என்று இவ்வகை அரற்றா நின்றானை
(671, உரை)

இவ்வகை தேவர்கோனால் சிறகு அறுப்புண்டு வீழ்ந்தது
ஓர் வியன் குன்று . . .(761, உரை)

என்மகனைக்
கொன்றுளனாய் நிற்க ஓர் கூனல் வில்வேள் போனமால்
இன்றுள்ளாய் என செய்கேன் யான் (797)

நந்திக்கலம்பகம்

கரியின் முகவனை . . . (க.வா.1)

கண் என்பதும் இலையே மொழிவாய் என்பதும் இலையே
காது என்பதும் இலையே இது காலம் தனின்
அடைவோ
நண்ணும் பனை ஓலைச் சுருள் அரசன் திருமுகமோ
நண்ணா வருதூதா உனை விண்நாட்டிடை
விடுவேன்
பண்ணும் புல எட்டுத்திசை ஏகம்பலவாணா
பாபத் திறலோன் நந்தி தன் மறவோர்களிடத்தே
பெண் என்பவன் வாயைக்கிழி, தூதன் செவி அறடா
பெண்ணும் கிடையாது இங்கு ஒரு மண்ணும்
கிடையாதே (மிகை.1)

புறப்பொருள் வெண்பாமாலை

- எந்தை
தவுதாரம் தாழ்ந்த தனிநிலைமை கேளாச்
செவிடாய் ஒழிகஎன் செவி (256)

சூளாமணி

மானம் கொண்ட மாரதர் போரேறு அனையாய் ஓர்
ஊனம் கண்டேன் ஒட்டினும் ஒட்டேன் உரைக்குற்றேன்
(309)

என் இது விளைந்தவாறு இத்தூதுவர் யாவர் என்று
கல் நவில் வயிரத் திண் தோள் கடல் வண்ணன் வினவ யாரும்
சொல் நவின்று உரைக்க மாட்டார் துட்கென்று துளங்க
ஆங்கு ஓர்
கொல் நவில் பூதம்போலும் குறள் மகன் இதனைச்
சொன்னான் (679)

மன்உயர் வருத்தம் கண்டும் வாழ்வதே வலிக்கும் ஆயின்
அன்னவன் ஆண்மை ஆவது அலி பெற்ற அழகு போலாம்
(775)

ஏனை மாடு வண்டு இருந்து இருண்ட கானம் இங்கு இதற்கு
ஊனமாய் இருட் பிழம்பு உறங்குகின்றது ஒக்குமே (792)

வானமீன் உச்சியுள் நின்ற மாற்றலர்
தானையுள் நடுவு வீழ்ந்து அதிரத் தங்களுக்கு
ஊனம் உண்டு என்பதை உணர்ந்து . . . (1224)

மான மாமணி வீழ்த்து உயிர்க்கு
ஊனமாம் என ஓடுவீர் (1357)

மூடிய புகழினாற்கு முகிழ்நகை பயந்து காட்டும்
கோடிய நிலையின் முன்னாற் குஞ்சித்த வடிவன் ஆகி . . . (1566)

யாதுஅதன் உரு என அலர் பொன் ஓலையும்
சோதி சூழ் சுடர் மணிக் குழையும் துன்னிய
காதொடு கண் பிறழ்ந்துளது கைகுறிது
ஊதிய வயிற்றது என்று உருவம் ஓதினான் (1598)

பேதைமை கலந்து பிறழ் கண்ணினொடு ஒடுங்கும்
மாதவனை நோக்கி மணி வாய்முறுவல் தோற்றி . . . (1615)

கரையார் வண்ணன் மாலைக் காற்படை உடைந்த போழ்தில்
தேரையாய்க் குறளும் சிந்தும் மிதந்தன சில்ல சிந்தி . . . (1678)

மலைபயில் களிநல் யானை மன்னரால் வவ்வல் இன்றாய்க்
கலைபயில் மகளிர் கண்போல் கள்வர் கைப்படாது நாளும்
நிலையின செல்வக்கு ஊனம் வருவன உரைமின் என்றான் (1854)

வாலும் நெடியர் வளைந்த எயிற்றினர்
காலும் ஒரோ ஒன்று உடையர், கலை இலர்
நாலும் செவியர் நவை செய்மருப்பினர்
சீலம் அடைவுஇலர் தீவினுள் வாழ்வார் (1975)

அண்ணை அலி குருடு ஆதியவர்களை
மண் உயர் ஞாலத்து மானிடராக வைத்து
எண்ணுநர் யாருளர் எல்லாம் அமையினும்
பெண்ணின் பிறவியும் பீடுடைத் தன்றே (1985)

தானும் அடங்கி அடங்கினர்க்கு ஏந்திய
ஊனம் உயிர்களுக்கு எல்லாம் உணர்வது
ஞான ஒழுக்கம் பெருகு நலத்ததை (1997)

ஊன்இலா உறுப்பு அமைய ஒளியமாய் உலகு எல்லாம்
பால்நிலா பரந்து எறிப்பப் பளிங்கினது படிவம் போல்
(2066)

புண்ணியம் உலந்தபின் பொருள் இலார்களைக்
கண்இலர் துறந்திடும் கணிகைமார்கள் . . . (2084)

ஈடுஇலர் வெகுளி உள்ளிட்ட எண்மரை எறியத் தீயுள்
பேடுவந்து ஒன்று பாய்ந்து முடிந்தது . . . (2118)

நீலகேசி

ஈமத் தூமமும் எரியினும் விளக்கா
ஊமைக் கூகையும் ஓரியும் உறழ்உறழ் கதிக்கும்
யாமத்து ஈண்டி வந்து ஆண்தலை மாண்பில அழைக்கும்
தீமைக்கே இடன் ஆயதுஓர் செம்மலை உடைத்தே
(29)

. . . கீழார் அலிகள் முழுச்செவி கிண்ணர்கள் எண்இகந்த
ஊழாம் பிறப்பு முவ்வாதம் அல்லாரும் ஒப்பினரே (76)

. . . ஞானத்தின் நான்மை நனி கேட்குவை ஆயின் நக்கால்
ஊனத்தை இன்றி உயிர் ஆதிய உள்பொருள்கள்
தான் நன்கு உணர்தல் இதுவாம் அதன் தத்துவமே (117)

விலங்கு வெம்நரகு ஆதிகள் தம்முள்
விளிந்து தோன்றி விழுநோயொடு முற்றுக்
கலங்கி எங்கும் கண்இல் ஆகிக்
கவலை வெள்ளக் கடலில் குளித்து ஆழும்
நலங்கள் இல்லா உயிர் . . . (147)

கண்ணொடு காது இவை இலள்; கரந்தன முலை இரண்டும்
உண்ணும் வாய் உதட்டோடு மூக்கு இலள்; உறு நோய்த்தி
பெண் அழகிற்கு இவள் பிறரால் பேசவும் படுவாளோ
எண்ணுங்கால் என்பேதை என உரைக்கும் அவன் ஒத்தாள்
(191)

கண் கொடுத்தான் தடி கொடுத்தான்
கயப்புலிக்குத் தன் கொடுத்தான் (205)

. . . கருதும் மாதனும் கண் முதலாயின
தருதல் அல்லது தம்குறை ஈது எனார் (213)

ஆரம்பிச்சி அலிவிலங்கு அவ்உருச்
சீரிற்கு ஒத்தாள் கணிகை தெருண்டாள் பெண்
ஒரும் இல்லாள் உயிர்இலி ஊமையும்
தாரமாக் கொஃடிர் என்றல் சலம்அதோ (249)

கூன் இறாக் கண்டாலும் கொள்ள முடியாதேல் துக்கம்
துக்கம் (256)

ஆங்கு அவள் அது உரைப்ப அதற்கு உரிய மறுமாற்றம்
தாங்களும் உரைக்கில்லார் தலைசாய்த்து அங்கு இருந்தார்
மூங்கைமையான் மொழிகொண்டேன் மொக்கல நல்தேர
யான்
பாங்கினால் வினவுவன் படிறு இன்றி உரை என்றாள் (271)

கடல்நிலம் ஆகாயமே அமையாவோ இவை இரண்டும்
உடன் இல்லை ஆயினும் ஊனம் இங்கு இல என்பாய்
மடன் உடையை நீ பெரிதும் . . . (295)

. . .நெறி என்னை, இந்திரன் தன் நெடு நகரக்கு அவன்
தேவி
குறியளோ நெடியளோ நூல் ஒழிப்பாய் கூறிக் காண் (300)

பிறன் சுமவான் தான்நடவான் பெருவினையும் உய்க்கில்லா
அறம் செய்தான் அமர் உலகில் செல்லும்வாய் அரிது
என்று (307)

பிள்ளை பெண் அலி ஆயினும் மாண் வயிற்று
உள்ளதே என்று ஒழுக்கம் கொடுத்தியாற்
பிள்ளை பெண் அலி அன்மையை யாதினால்
உள்ளம் கொண்டு இழஊசி உரைப்பதே (324)

மோனம் பொய் அஞ்சிக் கொண்டவன் மெய் உரைக்கு
ஊனம் தோன்றில் உரைத்தனன் என்றி . . . (325)

தானம் சீலமும் பொறை தக்கது ஆய வீரியம்
ஊனம் இல் தியானமே உணர்ச்சியோடு உபாயமும் (354)

ஊனத்தை இன்றி வழங்கா உழல்கின்ற போழ்து (417)

கொன்ற பாவம் உண்டாயின் குறள்கண்ணும்
ஒன்றுமே என்று உரைப்பன் ஒப்பாரி யார் (544)

ஓல குளவி குருட்டு எண்ணெய் வாணிச்சி
கோலம் சிதையும் என்று எண்ணெய் அட்டாள் என்னும்
பாலகர் பாட்டு உரை போன்றது மற்றுநின்
நூல்உரை எல்லாம் நுழைந்து உணர்வார்க்கே (635)

குருடனும் பங்குவும் கூட்டத்திற் கூடிப்
பொருள் தமது ஆக்கமும் போத்தந்து உரைப்பின்
தெருடல் இலை அவர் செய்கையிற் செய்கை
இருள் தன்னை இன்றி இவை எய்தும் என்றாள் (762)

பேடிகள் சாரினும் பிள்ளை பெறாமையை
நாடியும் காண், என்று நல்நுதல் நக்காள் (764)

தன்னை ஒழித்துத் தபுத்துஉடன் தின்றிடின்
பின்னை அவனை ஓர் பித்தன் என்னாமோ (769)

தன்கையில் தன்கண்ணைத் தானே பொதக்குத்தி
என் செயக் குத்தினை என்பார் பிறர் இல்லை
தன்கையில் தன் கண்ணைத் தான் பொதக் குத்துவது
என் செயவோ இதன் காரணம் சொல்லாய் (770)

திருமுறைகள்

தேவாரம்

ஞானசம்பந்தர்

குழலின் ஓசை குறள், பாரிடம் போற்றக்குனித்தார்
இடம் என்பர் . . புகலூரே . . . (பதி 2. பாடல். 6)

குறள் பூதச் செல்வன் குரை கழலே கைகள் கூப்பினோமே
(5.8)

தாறுடை வாழையிற் கூழை மந்தி தகு கனி உண்டு (8.7)

கூனல் பிறை சேரும் குளிர் சாரல் கொடும் குன்றம் (14.1)

கூனல் பிறை சடைமேல் மிக உடையான் . . .
. . . ஞானத்து உயர் சம்பந்தன் நலம் கொள் தமிழ் வல்லார்
ஊனத்தொடு துயர் தீர்ந்து உலகு ஏத்தும் எழிலோரே (14.11)

மனை குட வயிறு உடையன சில வரு குறள் படை
உடையவன் (19.4)

நரை ஆர்விடை ஒன்று ஊரும் நம்பனை
உரையாதவர் மேல் ஒழியா ஊனமே (25.3)

நீர்ஆர் நிமிர்புன் சடை எம் நிமலனை
ஓராதவர் மேல் ஒழியா ஊனமே (25.9)

தேனும் வண்டும் திளைக்கும் திருப்புத்தூர்
ஊனம் இன்றி உறைவார் அவர் போலும் (26.2)

அறுத்தான் அயன் தன் சிரம் ஐந்திலும் ஒன்றை (30.7)
நீறுஆர் திருமேனியர் ஊனம்இலார் பால்
ஊறார் சுவை ஆகிய உம்பர் பெருமான் (33.6)

ஊனத்து இருள் நீங்கிட வேண்டிடில் (38.3)

குண்டைக் குறள் பூதம் குழும அனல் ஏந்தி (46.1)

பல்நீர்மை குன்றிச் செவிகேட்பு இலா
படர் நோக்கில் கண் பவளம் நிறம்
நல்நீர்மை குன்றித் திசை தோலொடு
நரை தோன்றும் காலம் (59.6)

பல் வீழ்ந்து நாத் தளர்ந்து மெய்யில் வாடி (59.8)

ஞானத் திரளாய் நின்ற பெருமான் அல்ல அடியார் மேல்
ஊனத் திரளை நீக்கும் அதுவும் உண்மைப் பொருள்
போலும் (69.3)

நின்று உண் சமணர், இருந்து உண் தேரர், நீண்ட
போர்வையார்
ஒன்றும் உணரா ஊமர் வாயில் உரைகேட்டு உழல்வீர்காள்
(71.10)

உரையாதவர்கள் மேல் ஒழியா ஊனமே (83.3)

மறுமாண் உருஆய் மற்று இணை இன்றி வானோரைச்

செறு மாவலியால் சென்று உலகு எல்லாம் அளவுஇட்ட
குறு மாண் உருவன் . . . (101.5)

கேண வல்லான் கேழல் வெண் கொம்பு குறள் ஆமை
பூண வல்லான் . . . (103.2)

சேறு அணி மாமலர் மேல் பிரமன் சிரம் அரிந்த . . .
(105.7)

நம்மை ஊனம் அறுத்த பிரான் திருவூறலை உள்குதுமே (106.3)

. . . முந் தமக்கு ஊனம் அன்றே (115.11) (சிதைந்தது)

உய்வினை நாடாது இருப்பது உம் தமக்கு ஊனம் அன்றே (116.1)

நிறம் கிளர் செந்தாமரையோன் சிரம் ஐந்தின் ஒன்று
அறுத்த நிமலர் கோயில் (131.7)

கோனை நாள்தொறும் ஏத்திக் குணம் கொடு கூறுவார்
ஊனம் ஆனவை போய்அறும் உய்யும் வகைஅதே (146.6)

திருக் காறாயில் ஊரானே என்பவர் ஊனம் இலாதாரே (151.1)

நெடியாய் குறியாய் நிமிர்புன் சடையின் முடியாய் (157.3)

கோடலொடு கூன் மதி குலாய சடை தன் மேல் (165.9)

கொக்கு அரவர் கூன் மதியர் கோபர் திருமேனி (169.4)

ஊனம் இன்றி உரை செய்ய வல்லவர் தாம் போய்
வான நாடு இனிது ஆள்வர் இம்மாநிலத் தோரே (174.11)

ஆணாகம் காதல் செய் ஆமாத்தூர் அம்மானைக்
காணாத கண் எல்லாம் காணாத கண்களே (180.4)

கூறாத நா எல்லாம் கூறாத நாக்களே (180.7)

கேளாச் செவி எல்லாம் கேளாச் செவிகளே (180.8)

கூன் அமரும் வெண் பிறையும் புனலும் சூடும்
கொள்கையீர் (193.4)

கொங்கு ஆர்ந்த பைங் கமலத்து அயனும் குறள்ஆய்
நிமிர்ந்தானும் (194.8)

திருப்பாசூர்க் கானம் உறைவார் கழல் சேர் பாடல் இவை
வல்லார்
ஊனம் இலர்ஆய் உம்பர் வானத்து உறைவாரே (196.11)

கூன்இளம் பிறை சூடிக் கொடுவரித் தோல்உடை ஆடை (227.2)

குறிய மாண் உருவாகிக் குவலயம் அளந்தவன் தானும் (231.9)

தேன் அணிம் மலர் சேர்த்த முன்செய்த ஊனம் உள்ள
ஒழியுமே (248.6)

உள்ளம் மிக்கார் குதிரைம் முகத்தார் ஒரு காலர்கள்

எள்கல் இல்லா இமையோர்கள் சேரும் இடம் என்பரால்
(250.4) (திருக்கேதாரம்)

நேமியானும் முகம் நான்கு உடையந் நெறி அண்ணலும்
(251.9)

கூனல் திங்கள் குறுங்கண்ணி கான்ற நெடு வெண்நிலா
(252.1)

புத்தர் தேரர் பொறிஇல் சமணர் கருவீறிலாப்
பித்தர் சொன்னம் மொழி கேட்கிலாத பெருமானிடம்
(254.10)

நாகேச்சரம் கண்ணினால் காண வல்லார் அவர்
கண்உடையார்களே (255.2)

காளமேகந் நிறக் காலனோடு அந்தகன் கருடனும்
நீளமாய் நின்று எய்த காமனும் பட்டன நினைவுறின் . .
(255.6)

உண்பினாலே உரைப்பார் மொழி ஊனம் அது ஆக்கினான்
(256.10) (திருமூச்சீச்சரம்)

முன்னம் நின்ற முடக்கால் முயற்கு அருள் செய்து . . (257.1)

நாவினாள் மூக்கு அரிவித்த நம்பர்க்கு இடம் ஆவது . .
புகலியே (258.5)

பூமனும் திசைமுகன் தானும் பொற்பு அமர் வாமனன்
அறிகிலா வண்ணம் (279.9)

. . . ஞான சம்பந்தன் சொல்லிய ஊனம் இல்மொழி . . .
(279.11)

கரைதல் ஒன்றும் இலை கருதவல்லார் தமக்கு
உரையில் ஊனம்இலை உலகினில் மன்னுவார் (283.7)

ஊனம் ஆம் உடம்பினில் உறுபிணி கெட எண்ணில்
ஞானமா மலர்கொடு நணுகுதல் நன்மையே (284.7)

தாம்அலார் போலவே தக்கனார் வேள்வியை
ஊமனார் தம் கனா ஆக்கினான் ஒரு நொடி (291.3)

கான் அமர் வாழ்க்கையான் கார் அமணர் தேரர் சொல்
ஊனமாக் கொண்டு நீர் உரைமின் . . (291.11)

ஊனம் ஆயின பிணி அவை கெடுத்து உமையொடும்
தேன் அமர் பொழில் அணி திருமுதுகுன்றமே (292.6)

புயல்பொழிந்து இழி வான் உளோர்களுக்கு ஆக அன்று
அயன் பொய்ச் சிரம்
அயன் நக அது அரிந்து மற்று அதில் ஊண் உகந்து
அருத்தியே (296.6)

கூன்ஆர் திங்கள் சூடிஓர் ஆடல் மேய கொள்கையான்
(300.5)

உடையவன் ஊனம் இல்லி உடனாய் உமை நங்கை
என்னும் (314.2)

உடையவன் ஊனம் இல்லி உறையும் இடம் ஒற்றி ஊரே
(315.1)

கூன்இள வெண் பிறையும் குளிர் மத்தமும் சூடி (318.5)

. . . தரணி அளந்த வாமனனும் . . . (318.9)

ஊனம் இலர்ஆகி உயர் நற்றவம்மெய் கற்றவை
உணர்ந்த அடியார் (329.3)

நித்த நியமத் தொழிலன் ஆகிநெடுமால் குறளன் ஆகி
மிகவும்
சித்தமது ஒருக்கி வழிபாடு செயநின்ற சிவலோகன்
இடமாம் (335.4)

கூனல் வெண்பிறை தவழ் சடையினர் (350.5)

வானம் ஆள்வதற்கு ஊனம் ஒன்று இலை (370.11)

சுருதியான் தலையும் நாமகள் மூக்கும் சுடரவன் கரமும்
முன் இயங்கு
பரிதியான் பல்லும் இறுத்து அவர்க்கு அருளும் பரமனார்
(376.5)

ஞானசம்பந்தன் நல்தமிழ் மாலை நன்மையால் உரை செய்து
நவில்வார்
ஊன சம்பந்தத்து உறுபிணி நீங்கி உள்ளமும் ஒருவழிக்
கொண்டு

வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார் . . . (376.11)

அப்பர்

எழில் முளரித் தவிசின் மிசை இருந்தான் தன்
தலையில் ஒன்றை அறுத்தானை ஆரூரில் அம்மானை (5.10)

ஞாலமும் மேலை விண்ணோடு உலகு ஏழும் உண்டு குறள்ஆய்
ஓர் ஆலின் இலைமேல், பாலனும் ஆய் அவற்கு ஓர் பரம் ஆயமூர்த்தி (14.3)

ஆர்த்தார், உயிர் அடும் அந்தகன் தன் உடல் போர்த்தார் (16.5)

ஊனப் பேர் ஒழிய வைத்தார் ஓதியே உணர வைத்தார் (30.7)

கூன் இள மதியினானை . . (37.6)

ஞானத்தை விளக்கை ஏற்றி நாடியுள் விரவ வல்லார்
ஊனத்தை ஒழிப்பர் போலும் ஒற்றியூர்உடைய கோவே (45.3)

தழைத்தது ஓர் ஆத்தியின் கீழ் தாபரம் மணலால் கூப்பி
அழைத்து அங்கே ஆவின் பாலை கறந்துகொண்டு ஆட்டக் கண்டு
பிழைத்த தன் தாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்தது ஓர் அமுதம் ஈந்தார் குறுக்கை வீரட்டனாரே (49.3)

ஏறுடன் ஏழு அடர்த்தான் எண்ணி ஆயிரம் பூக்கொண்டு
ஆறுஉடை சடையினானை அர்ச்சித்தான் அடிஇணைக் கீழ்
வேறும் ஓர் பூக்குறைய மெய்ம்மலர்க் கண்ணை ஈண்டக்
கூறும் ஓர் ஆழி ஈந்தார் குறுக்கை வீரட்டனாரே (49.5)

காப்பது ஓர் வில்லும் அம்பும் கையது ஓர் இறைச்சிப் பாரம்
தோல் பெரும் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசம் ஆட்டித்

தீப்பெரும் கண்கள் செய்ய குருதிநீர் ஒழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக்கொண்டார் குறுக்கை வீரட்டனாரே
(49.7)

வக்கரன் உயிரை வவ்வக் கண்மலர் கொண்டு போற்றச்
சக்கரம் கொடுப்பர் போலும் தானவர் தலைவர் போலும்
(56.6)

ஆ மலி, பாலும் நெய்யும் ஆட்டி அர்ச்சனைகள் செய்து
பூமலி கொன்றை சூட்டப் பொறாத தன் தாதை தாளைக்
கூர்மழு ஒன்றால் ஓச்சக் குளிர்சடைக் கொன்றை மாலைத்
தாமம்நல் சண்டிக்கு ஈந்தார் சாய்க்காடு மேவினாரே (65.6)

குவப் பெரும் தடக் கை வேடன் கொடும் சிலை இறைச்சிப் பாரம்
துவர்ப் பெரும் செருப்பால் நீக்கித் தூயவாய்க் கலசம் ஆட்ட
உவப்பெரும் குருதி சோர ஒரு கணை இடந்து அங்கு அப்பத்
தவப் பெரும்தேவு செய்தார் சாய்க்காடு மேவினாரே (65.8)

நக்கு உலாம் மலர் பல்நூறு கொண்டு நல் ஞானத்தோடு
மிக்க பூசனைகள் செய்வான் மென்மலர் ஒன்று காணாது
ஒக்கும் என் மலர்க்கண் என்று அங்கு ஒரு கணை இடந்தும் அப்பச்
சக்கரம் கொடுப்பர் போலும் சாய்க்காடு மேவினாரே (65.9)

செய்ய போதில் திசைமுகன் சிரம் ஒன்று ஏந்தும் கையனை
(71.2)

பெண் ஒரு பாகர் போலும் பேடுஅலி ஆணர் போலும்
(72.1)

நிறைந்த மாமணலைக் கூப்பி நேசமோடுஆவின் பாலை
கறந்து கொண்டு ஆட்டக் கண்டு கறுத்த தன்தாதை தாளை
எறிந்த மாணிக்கு அப்போதே எழில்கொள் தண்டீசன் என்னச்
சிறந்த பேர்அளித்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே
(73.5)

ஊனத்தை நீக்கி உலகு அறிய என்னை ஆட்கொண்டவன்
(80.6)

ஒன்றி இருந்து நினைமின்கள் உமதமக்கு ஊனம் இல்லை
(81.2)

ஆர்த்தன கொட்டி அரித்தன பல குறள் பூத கணம் (81.6)

இன்று அரைக்கண் உடையார் எங்கும் இல்லை இமயம் என்னும்
குன்றரைக் கண்ணன் குலமகள் பாவைக்குக் கூறு இட்ட நாள்
அன்று அரைக் கண்ணும் கொடுத்து உமையாளையும் பாகம் வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீர் ஒற்றியூர் உறை உத்தமனே
(86.7)

பலிசேர் படுகடைப் பார்த்துப் பல்நாளும் பலர் இகழ
அலியா நிலைநிற்கும் ஐயன் ஐயாறன் அடித்தலமே (93.10)

கண்டியூர் இருந்த, ஊனம்இல் வேதம்உடையனை நாம் அடி உள்குவதே (94.2)

பண்தங்கு அறுத்தது ஓர் கை உடையான் படைத்தான் தலையை
உண்டு அங்கு அறுத்ததும் ஊரோடு நாடு அவை தான் அறியும் (94.3)

தோற்றம் கொண்டான் சிரம் ஒன்று கொண்டீர் (96.7)

எத்தைக் கொண்டு எத்தகை ஏழை அமணொடு இசைவித்து எனைக்
கொத்தைக்கு மூங்கர் வழி காட்டுவித்து என்னக் கோகு செய்தாய் (100.2)

குறிக்கொண்டு இருந்து செந்தாமரை ஆயிரம் வைகல் வைகல்
நெறிப்பட இண்டை புனைகின்ற மாலை நிறை அழிப்பான்
கறைக் கண்ட நீ ஒரு பூக்குறைவித்துக் கண் சூல்விப்பதே
பிறைத் துண்ட வார்சடையாய் பெருங்காஞ்சி எம்பிஞ்ஞகனே (100.4)

வீங்கிய தோள்களும் தாள்களுமாய் நின்று வெற்றரையே
மூங்கைகள் போல் உண்ணும் மூடர் முன்னே நமக்கு உண்டு கொல்லோ . . .

. . . பூங்கழலான் அடித் தொண்டர்க்குத் தொண்டர் ஆம்
புண்ணியமே (102.9)

. . . பெரும் செல்வம் எய்துவர் எய்தியும் ஊனம் இல்லா
அடிகளும் ஆரூர் அகத்தினர் ஆயினும் . . (103.6)

. . . தேன் உடை கொன்றைச் சடை உடைக் கங்கைத் திரை
தவழும்
கூன் உடைத் திங்கள் குழவி எப்போதும் குறிக்
கொண்மினே (105.4)

ஆன் திகழ் ஐந்து உகந்து ஆடும் பிரான் மலை ஆர்த்து
எடுத்த
கூன் திகழ் வாள் அரக்கன் முடி பத்தும் குலைந்து விழ
(108.10)

கருடத் தனிப்பாகன் காண்டற்கு அரியன, காதல் செய்யில்
குருடர்க்கு முன்னே, குடிகொண்டு இருப்பன . . . மலர்
அடியே (109.2)

. . குண்டிகை கொக்கரை கோணல் பிறை குறள் பூதப்படை
(112.9)

. . . வேலை நஞ்சு உண்டு ஊனம் ஒன்று இல்லா ஒருவனுக்கு
(113.8)

கோனைக் காவிக் குளிர்ந்த மனத்தராய்த்
தேனைக் காவி உண்ணார் சில தெண்ணர்கள்
ஆனைக்காவில் எம்மானை அணைகிலார்
ஊனைக் காவி உழிதர்வர் ஊமரே (145.1)

திருடு சிந்தையைத் தீர்த்து செம்மை செய்து
பருகி ஊறலைப் பற்றிப்பதம் அறிந்து
உருகி நைபவர்க்கு ஊனம் ஒன்று இன்றி . . . (145.2)

பேடும் ஆணும் பிறர் அறியாதது ஓர்
ஆடும் நாகம் அசைத்த அடிகளே (155.8)

வீறுதான் உடை வெற்பன் மடந்தை ஓர்
கூறன் ஆகிலும் கூன் பிறை சூடிலும் (169.1)

இளைய காலம் எம்மானை அடைகிலாத்
துளை இலாச் செவித் தொண்டர்காள் (180.3)

கொண்டு ஈச்சுரம் நினைந்து ஊறுவார் தமக்கு
ஊனம் ஒன்று இல்லையே (184.7)

உள் இடத்து உறைகின்ற உருத்திரன்
கிள்ளிடத் தலைஅற்றது அயனுக்கே (185.3)

கண் பல்உக்க கபாலம் கைக்கொண்டு (185.7)

வண்டு சேர் பொழில் சூழ் மங்கலக் குடி
விண்ட தாதையைத் தாள் அற வீசிய
சண்ட நாயகன் (187.8)

மாடு தேடி மயக்கினில் வீழ்ந்து நீர்
ஓடி எய்த்தும் பயன் இலை ஊமர்காள் . . .
ஆடலான் தன் அடி அடைந்து உய்ம்மினே (191.4)

கொல்லை ஏற்றினர் கோடிகா வா என்று அங்கு
ஒல்லை ஏத்து இவர்க்கு ஊனம் ஒன்று இல்லையே (192.3)

அள்ளல் ஆர்வயல் அன்பில் ஆலந்துறை
உள்ளவாறு அறியார்சிலர் ஊமரே (194.6)

பாதி பெண் உரு ஆய பரமன் 196.8)

இன்று உளார் நாளை இல்லை எனும் பொருள்
ஒன்றும் ஓராது உழிதரும் ஊமர்காள் (198.9)

வாட்போக்கியார் ஊனம் இல்லவர்க்கு உண்மையின் நிற்பரே
(200.9)

அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே (204.6)

காசனைக் கனலைக் கதிர்மா மணித்
தேசனைப் புகழார் சிலர் தெண்ணர்கள் (207.1)

குறள் பூதம் முன்பாட தான் ஆடும்மே (218.7)

ஆண்ஆகிப் பெண்ஆய வடிவு தோன்றும் (232.2)

ஊனம் அது எல்லாம் ஒழிந்தான் தன்னை (233.4)

ஒரு காலத்து ஒரு தேவர் கண் கொண்டானை . . .
— அரு வேள்வி தகர்த்து எச்சன் தலை கொண்டானை
(240.3)

அம்கமலத்து அயன் சிரங்கள் ஐந்தில் ஒன்றை அறுத்தவன்
காண் (244.6)

புரந்தரன் தன்தோள் துணித்த புனிதா என்னும் (245.2)

பிரமன் தன்சிரம் அரிந்த பெரியோய் போற்றி
பெண் உருவோடு ஆண்உருஆய் நின்றாய் போற்றி . .
(246.10)

பகலவன்தன் பல் உகுத்த படிறன் தன்னை (248.10)

கொள்ளைக் குழைக் காதில் குண்டைப் பூதம் (249.5)

குறள் பூதப் பல் படையாய் (251.1)

கண்ணப்பர்க்கு அருள் செய்த காளை கண்டாய் (253.9)

சிரம் ஏற்ற நான்முகன் தன் தலையும், மற்றைத்
திருமாறன் செழுந்தலையும் பொன்றச் சிந்தி
உரம் ஏற்ற இரவி பல் தகர்த்துச் சோமன்
ஒளி கலைகள் பட உழக்கி உயிரை நல்கி (254.5)

பொறிஇலியேன் தனைப் பொருளா ஆண்டுகொண்டு
(254.6)

ஊன்ஆர் முடி அறுத்தாய் நீயே (255.8)

எண்திசைக்கும் கண்ணானைச் சிரம்மேல் ஒன்றை
அறுத்தானை (257.10)

தக்கனையும் முனிந்து எச்சன் தலைக் கொண்டான் காண்
இந்திரனைத் தோள் முரிவித்து அருள் செய்தான் காண்
(266.9)

நமனை ஒரு கால் குறைத்த நாதர் போலும் (267.2)

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
திசைமுகன் தன் சிரம் ஒன்று சிதைத்தார் போலும்
மெய்வேள்வி மூர்த்தி தலை அறுத்தார் போலும் . . . (267.4)

ஏனத்தின் கூன்எயிறு பூண்டார் போலும் . . (267.10)

ஊனத்தை நீக்கும் உடலே போற்றி (269.4)

ஊனம் தவிர்க்கும் பிரானே போற்றி (270.8)

பரிதிதனைப் பல் பறித்த பாவ நாசா (275.8)

குறள் பூதம் கூத்தாட நீயும் ஆடி (276.10)

அறுத்தான் காண் அயன் சிரத்தை (278.11)

தந்தை காண் தண்கடமா முகத்தினாற்கு (279.9)

அறுமுகனோடு ஆனைமுகற்கு அப்பன் தன்னை (288.7)

அரிபிரமர் தொழுது ஏத்தும் அத்தன் தன்னை
அந்தகனுக்கு அந்தகனை . . . (288.8)

கூனல் இளம்பிறை தடவு கொடிகொள் மாடம் . . . (289.2)

ஆணொடு பெண் அலி அல்லர் ஆனார் போலும் (289.5)

அங்கு அரவத் திருஅடிக்கு ஆட்பிழைப்பத் தந்தை
அந்தணனை அற எறிந்தார்க்கு அருள் அப்போதே
கொங்கு அரவச் சடைக் கொன்றை கொடுத்தார் போலும்
(289.9)

வேதம் நான்கும் தெரிந்து முதல் படைத்தோனைச்
சிரம் கொண்டோன் காண் . . . (290.1)

உலகு சூழும் வரம் மதித்த கதிரவனைப் பல்கொண்டோன்
காண்

வானவர் கோன் புயம் நெரித்த வல்ஆளன் காண் (290.10)

கண்அப்ப விண்அப்புக் கொடுத்தான் கண்டாய் (295.6)

பெண் ஆண் உருஆகி நின்றார் போலும் (296.10)

அருக்கன் பல்லை எல்லாம் தகர்த்தவன் காண் தக்கன்தன்
தலையைச் செற்ற தலையவன் காண் . . (299.7)

உரிந்த உடையார் துவரால் உடம்பைமூடி
உழிதரும் அவ்ஊமர் அவர் உணரா வண்ணம்
பரிந்தவன் காண் . . . (299.8)

கமலத்தோன் தலை அரிந்த காபாலியை (300.1)

பெண்அவனை ஆண்அவனைப் பித்தன்தன்னை (304.4)

அங்கம் எல்லாம் குறைந்து அழுகு தொழுநோயர் ஆய் . .
(309.10)

தாமரையோன் சிரம் அரிந்து கையிற் கொண்டார் . . .
வாமனனார் மாகாயத்து உதிரம் கொண்டார் . . .
காமனையும் உடல் கொண்டார் கண்ணால் நோக்கி
கண்ணப்பர் பணியும் கொள் கபாலியாரே (310.1)

அந்தகனை அயில் சூலத்து அழுத்திக் கொண்டார் (310.5)

எச்சன் நிணத் தலைகொண்டார் பகன் கண்கொண்டார்
இரவிகளில் ஒருவன் பல் இறுத்துக் கொண்டார்
மெச்சன் வியாத்திரதன் தலையும் வேறாக் கொண்டார் . .
உச்ச நமன் தாள் அறுத்தார் . . . (3109)

கண் இலேன் மற்று ஓர் களைகண் இல்லேன்
கழல்அடியே கைதொழுது காணின் அல்லால்
(3131)

சுந்தரர்

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா . . . (1.1)

கடுகப் பிரமன் தலை ஐந்திலும் ஒன்று அறுத்தாய் (4.8)

அரு மலரோன் சிரம் ஒன்று அறுத்தீர் செறுத்தீர்
அழல் சூலத்தில் அந்தகனைத்
திருமகள் கோன் நெடுமால் பலநாள் சிறப்பாகிய
பூசனை செய் பொழுதில்
ஒருமலர் ஆயிரத்தில் குறைவா நிறைவாக
ஓர் கண்மலர் சூட்டலுமே . . . (9.2)

பழிக்கும் பெருந் தக்கன் எச்சம் அழியப்
பகலோன் முதலாப் பல தேவரையும்
தெழித்திட்டு அவர் அங்கம் சிதைத்து அருளும்
செய்கை என்னை கொலோ (9.7)

பறைக் கண் நெடும் பேய்க் கணம் பாடல் செய்யக்
குறள் பார்இடங்கள் பறை தாம் முழங்க . . . (9.8)

இருள்மேவும் அந்தகன் மேல் திரிசூலம் பாய்ச்சி
இந்திரனைத் தோள் முரித்த இறைவன் ஊர் (16.2)

இண்டை மலர் கொண்டு மணல் இலிங்கம் அது இயற்றி
இனத்து ஆவின் பால் ஆட்ட இடறிய தாதையைத்
தாள்
துண்டம்இடு சண்டிஅடி அண்டர் தொழுது ஏத்த . . .
(16.3)

பெற்றிமை ஒன்று அறியாத தக்கனது வேள்விப்
பெருந்தேவர் சிரம்தோள் பல்கரம் கண்பீடு அழியச்
செற்று மதிக்கலை சிதையத் திருவிரலால் தேய்வித்து . . .
(16.9)

படைஆர் வெண் மழுவால் பகலோன் பல் உகுத்தவனே .
(26.3)

கலை மலிந்த சீர்நம்பி கண்ணப்பற்கு அடியேன் . . (39.2)

மெய்ம்மையே திருமேனிவழிபடா நிற்க
வெகுண்டு எழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்
(39.3)

நாட்டம் மிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன் (39.5)

கை தடிந்த வரி சிலையான் கலிக்கம்பன் கலியன்
கழல் சத்தி விரிஞ்சையர் கோன் அடியார்க்கும் அடியேன்
(39.7)

நானும் இத்தனை வேண்டுவது அடியேன் உயிரொடும்
நரகத்து அழுந்தாமை
ஊனம் உள்ளன தீர்த்து அருள்செய்யாய் ஒற்றியூர் எனும்
ஊர் உறைவானே (54.6)

மகத்தில் புக்கது ஓர்சனி எனக்கு ஆனாய் மைந்தனே
மணியே மணவாளா
அகத்தில் பெண்டுகள் நான்ஒன்று சொன்னால், 'அழையேல்
போ குருடா' எனத் தரியேன்
முகத்தில் கண் இழந்து எங்ஙனம் வாழ்கேன் முக்கணா . .
(54.9)

கோ தனங்களில் பால் கறந்து ஆட்ட
கோல வெண்மணல் சிவன் தன்மேல் சென்ற
தாதை தாள் அற எறிந்த சண்டிக்கு உன்
சடைமிசை மலர் அருள்செயக் கண்டு (55.3)

. . கண்ணப்பன் . . . (55.4)

பித்த நீ செய்த சீலம் கண்டு நின் திருஅடி அடைந்தேன்
(55.5)

ஊனம் ஆயின தீர்க்க வல்லானை . . . (57.8)

. . . கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே (61.1)

. . . கற்றை வார்சடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்ற வாறே (61.2)

. . . பெரிய கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே (61.3)

. . . கண்டம் நஞ்சுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே (61.4)

. . . நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே (61.5)

. . . கங்கை யாளனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே (61.6)

. . . கண்ணும் மூன்றுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே (61.7)

. . . கந்த வார்சடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே (61.8)

. . . கரங்கள் எட்டுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே (61.9)

கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே (61.10)

. . . கற்றவர் பரவப் படுவானைக்
காணக் கண் அடியேன் பெற்றது என்று . . . (61.11)

அன்று அயன் சிரம் அரிந்து அதில் பலி கொண்டு (62.7)

. . . சிரக் கண்வாய் செவி மூக்கு உயர் காயம் ஆகித்
தீவினை தீர்த்த எம்மானை . . . (62.9)

கணைகொள் கண்ணப்பன் என்று இவர்பெற்ற காதல்
இன்னருள் (65.2)

திகழும் மாலவன் ஆயிரம் மலரால்
ஏத்துவான் ஒருநீள் மலர் குறையப்
புகழினால் அவன் கண் இடந்து இடலும்
புரிந்து சக்கரம் கொடுத்தல் கண்டு . . . (66.3)

ஊனம் கைத்து உயிர்ப்பாய் உலகெல்லாம்
ஓங்காரத்து உருஆகி நின்றானை (67.1)

தண்பொழில் ஒற்றி மாநகர் உடையாய் சங்கிலிக்கா
என்கண் கொண்ட
பண்ப நின்அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா
பரஞ்சுடரே (69.3)

கண்இலேன் உடம்பில் அடுநோயால்
கருத்து அழிந்து உனக்கே பொறையானேன் (70.2)

கூழை வானரம் தம்மில் . . . (76.9)

ஊனத்து உறுநோய்கள் அடியார் மேல் ஒழித்து அருளி
(80.7)

ஊனம் இல்லா அடியார் தம் மனத்தே உற . . . (81.7)

குறள் படை அதனோடும் கூடலை ஆற்றூரில் . . . (85.8)

பெண் ஆண் ஆய பிரானைப் பேசாதார் பேச்சென்னே
(86.3)

எறிந்த சண்டி, இடந்த கண்ணப்பன் . . . (88.6)

பிழை உளன பொறுத்திடுவர் என்று அடியேன்
பிழைத்தக்கால்
பழி அரனைப் பாராதே படலம் என் கண் மறைப்பித்தாய்
(89.1)

தெண் நிலவு செஞ்சடைமேல் தீ மலர்ந்த
கொன்றையினான்
கண் மணியை மறைப்பித்தாய் இங்கிருந்தாயோ . . . (89.6)

ஊன்றுவது ஓர்கோல் அருளியுளோம் போகீர் என்றானே
(89.10)

பூண் நாண் அரவா புக்கொளியூர் அவிநாசியே
காணாத கண்கள் காட்டவல்ல கறைக்கண்டனே (92.8)

விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றும் செய்ததில்லை கொத்தை ஆக்கினீர்
எற்றுக்கு அடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாராது ஒழிந்தால் வாழ்ந்து போதீரே
(95.2)

. . . என்றும் முட்டாப் பாடும் அடியார் தங்கண் காணாது
குன்றில் முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்து போதீரே
(95.3)

. . . சந்தம் பலவும் பாடும் அடியார் தங்கண் காணாது . .
(95.5)

. . தனத்தால் இன்றித் தாம்தாம் மெலிந்து தங்கண் காணாது
மனத்தால் வாடி அடியார் இருந்தால் . . . (95.6)

. . ஆரூர்த் திருமூலட்டானத்தே அடிப்பேர் ஆரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர் (95.11)

உறவுஇலி ஊனம் இலி உணரார் புரம் மூன்று எரிய . . .
(97.2)

ஊனம்இல் காழி தன்னுள் உயர்ஞான சம்பந்தர்க்கு அன்று
ஞானம் அருள் புரிந்தான் . . . (97.9)

திருவாசகம்

ஊனம் தன்னை ஒருங்குடன் அறுக்கும்
ஆனந்தம்மே ஆறா அருளியும் (கீர்த்தி. 105)

பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க
(திருவண்ட 57)

சொல்பதம் கடந்த தொல்லோன்
உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படாஅன்
கண்முதல் புலனால் காட்சியும் இல்லோன்
(திருவண்ட 111-113)

ஆண் எனத் தோன்றி அலி எனப் பெயர்ந்து
வாள் நுதல் பெண் என ஒளித்தும் (திருவண்ட 134-135)

யானை முதலா எறும்பு ஈறாய
ஊனம் இல்யோனியின் உள்வினை பிழைத்தும்
(போற்றி. 11-12)

அச்சன் ஆண் பெண் அலி ஆகாசம் ஆகி (திருச்சத. 29)

பெண்டிர் ஆண் அலி என்றறியொன்கிலை . . .
கண்டும் கண்டிலேன் என்னகண் மாயமே (திருச்சத. 42)

சீறடியார் நின்பாதம் சேரக் கண்டும் கண்கெட்ட
ஊரேறாய் இங்கு உழல்வேனோ . . . (திருச்சத. 53)

ஊர் ஆ மிலைக்கக் குருட்டுஆ மிலைத்தாங்கு
உன் தாள் இணை அன்புக்கு
ஆரா அடியேன் அயலே மயல்கொண்டு அழுகேனே
(திருச்சத. 87)

பெண்மையனே தொன்மை ஆண்மையனே
அலிப்பெற்றியனே (நீத்தல். 22)

வன் செவியோ நின்செவிதான் . . . (திருவெம். 1)

பெண்ஆகி ஆண்ஆய் அலிஆய் பிறங்கு ஒளிசேர் . . .
(திருவெம். 18)

சந்திரனைத் தேய்த்து அருளித் தக்கன் தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள் நெரித்திட்டு எச்சன் தலை அரிந்து
அந்தரமே செல்லும் அலர் கதிரோன் பல் தகர்த்து . . .
(திருஅம். 15)

அயன்தலை கொண்டு செண்டாடல் பாடி
அரக்கன் எயிறு பறித்தல் பாடி . . . (திருப்பொற். 18)

கண்ணப்பன் ஒப்பது ஓர் அன்பு இன்மை கண்டபின்
(திருக்கோத். 4)

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச் செய்தான் காணேடீ
(திருச்சாழ. 4)

தக்கனையும் எச்சனையும் தலையறுத்து . . .
எச்சனுக்கு மிகைத்தலை மற்று அருளினன் (திருச்சாழ. 5)

நலமுடைய நாரணன் தன் நயனம் இடந்து அரன் அடிக்கீழ்
அலராக இட ஆழி அருளினன் . . . (திருச்சாழ. 18)

எரி மூன்று தேவர்க்கு இரங்கி அருள் செய்து அருளிச்
சிரம் மூன்று அறத் தன் திருப்புருவம் நெரித்து அருளி
(திருப்பூ. 6)

அங்கி அருக்கன் இராவணன் அந்தகன் கூற்றன் . . .
. . . தம் பரிசு அரியப் பொங்கிய சீர் பாடி . . . (திருப்பூ. 15)

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தான் என்று உந்தீ பற (திருஉந். 7)

வெம் சினவேள்வி வியாத்திரனார் தலை
துஞ்சினவா பாடி உந்தீ பற (திருஉந். 10)

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டினவா பாடி உந்தீ பற (திருஉந். 11)

உண்ணப் புகுந்த பகன் ஒளித்து ஓடாமே
கண்ணைப் பறித்தவாறு உந்தீபற (திருஉந். 12)

நாமகள் நாசி சிரம் பிரமன் படச்
சோமன் முகம் நெரித்து உந்தீ பற . . . (திருஉந். 13)

சூரியனார் தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவாறு உந்தீ பற (திருஉந். 15)

தக்கனார் அன்றே தலை இழந்தார் . . . (திருஉந். 16)

நல்ல மலரின் மேல் நான்முகனார் தலை
ஒல்லை அரிந்தது என்று உந்தீ பற
உகிரால் அரிந்தது என்று உந்தீ பற (திருஉந். 18)

தேரை நிறுத்தி மலை எடுத்தான் சிரம்
ஈர்ஐந்தும் இற்றவாறு உந்தீ பற
இருபதும் இற்றதுஎன்று உந்தீ பற (திருஉந். 19)

தீதுஇல்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதை தாள் இரண்டும்
சேதிப்ப . . . (திருத்தோ. 7)

பங்கயம் ஆயிரம் பூவினில் ஓர் பூக்குறையத்
தம்கண் இடந்து அரன் சேவடி மேல் சார்த்தலுமே
(திருத்தோ. 10)

காமன்உடல் உயிர்காலன் பல்காய்கதிரோன்
நாமகள்நாசி சிரம்பிரமன் கரம் எரியைச்
சோமன் கலை தலை தக்கனையும் எச்சனையும்
தூய்மைகள் செய்தவா தோணோக்கம் ஆடாமோ
(திருத்தோ. 11)

ஆணோ அலியோ அரிவையோ . . . (பொன்னூ. 5)

வன்பராய் முருடொக்கும் என்சிந்தை
மரக்கண் என் செவி இரும்பினும் வலிது
(செத்திலா. 4)

மரக்கண்ணேனையும் வந்திடப் பணியாய் (செத்திலா. 9)

கண்ணிலி காலம் அனைத்தினும் வந்த கலக்கறுமாகாதே
. . பெண்ணலி ஆணென நாமென வந்த பிணக்கறும் . . .
(திருப்படை. 5)

செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரிவேனை . . .
(அச்சோ. 9)

திருக்கோவையார்

இகல் குன்ற வில்லில் செற்றோன் தில்லை ஈசன் எம்மான்
எதிர்ந்த
பகல் குன்ற பல் உகுத்தோன் பழனம் மன்ன பல்வளைக்கே
(4)

பல்இலன் ஆகப் பகலை வென்றோன் தில்லை பாடலர்
போல் (60)

கொடும் குன்றின் நீள் குடுமி மேல் தேன் விரும்பும்
முடவனைப் போல மெலியும் நெஞ்சே (150)

செம்மலர் ஆயிரம் தூய்க் கருமால் திருக் கண் அணியும்
(153)

பகன் தாமரைக் கண் கெடக் கடந்தோன் (184)

சீர் அருக்கன் குருட்டில் புகச் செற்ற கோன் (270)

கூற்று ஆயின சின ஆளி எண்ணீர்
கண்கள்கோள் இழித்தால்
போற்றான் செறி இருள் பொக்கம் எண்ணீர் . . . (382)

திருவிசைப்பா திருப்பல்லாண்டு

தக்கன் நல்தலையும் எச்சன் வன் தலையும்
தாமரை நான்முகன் தலையும்
ஒக்க விண்டு உருள ஒண்திருப் புருவம்
நெறித்து அருளிய உருத்திரனே (திருமாளிகை. 1.9)

பண்டு ஆய மலர்அயன் தக்கன் எச்சன்
பகலோன் தலைபல் பசுங்கண்
கொண்டாய் என்னும் . . . (திருமாளிகை. 3.6)

. . . குணங்களைக் கூறா வீறுஇல்
கோறை வாய்ப் பீறல் பிண்டப்
பிணங்களைக் காணா கண் வாய்
பேசாதுஅப் பேய்களோடே (திருமாளிகை. 4.1)

. . . தொழும்பரைப் பிழம்பு பேசும்
பிட்டரைக் காணா கண் வாய்
பேசாது அப்பேய்களோடே (திருமாளிகை. 4.2)

மழுக்கரைக் கழுக்கள் ஆய
பிட்டரைக் காணா கண் வாய்
பேசாதுஅப் பேய்களோடே (திருமாளிகை. 4.3)

சிணுக்கரைச் செத்தற் கொத்தைச்
சிதம்பரைச் சீத்தை ஊத்தைப்
பிணுக்கரைக் காணாகண் வாய்
பேசாதுஅப் பேய்களோடே (திருமாளிகை. 4.4)

பிசுக்கரைக் காணா கண் வாய்
பேசாதுஅப் பேய்களோடே (திருமாளிகை. 4.5)

. . .பேடரைக் காணா கண் வாய்
பேசாது அப் பேய்களோடே (திருமாளிகை. 4.6)

கள்ளரை அவியாப் பாவப்
பெருக்கரைக் காணா கண் வாய்
பேசாதுஅப் பேய்களோடே (திருமாளிகை. 4.7)

. . புத்தர் ஆதிப் பொக்கரைக் காணா கண் வாய்
பேசாது அப்பேய்களோடே (திருமாளிகை. 4.8)

எச்சனைத் தலையைக் கொண்டு . . .
. . . பிச்சரைக் காணா கண் வாய்
பேசாது அப்பேய்களோடே (திருமாளிகை. 4.9)

தெண்ணரைத் தெருளா உள்ளத்து
இருளரைத் திட்டை முட்டைப்
பெண்ணரைக் காணா கண் வாய்
பேசாது அப்பேய்களோடே (திருமாளிகை. 4.10)

. . . மீண்டும் மீண்டும் பிறப்பரைக் காணா கண் வாய்
பேசாது அப்பேய்களோடே (திருமாளிகை. 4.11)

தக்கன் வெங்கதிரோன் சலந்தரன் பிரமன்
சந்திரன் இந்திரன் எச்சன்
மிக்க நெஞ்சு அரக்கன் புரம் கரி கருடன்
மறலி வேள் இவர் மிகை செகுத்தோன்
(சேந்தன். 1.10)

கடியார் கணம்புல்லர் கண்ணப்பர் (பூந்துருத்தி. 2.2)

ஊனம் இலா என்கை ஒளி வளைகள் கொள்வாரோ
(புருடோத்தம. 2.1)

ஆஆ இவர்தம் திருஅடிகள் கொண்டு அந்தகன் தன்
மூவா உடல் அவியக் கொன்று உகந்த முக்கண்ணர்
(புருடோத்தம. 27)

அன்று அருக்கனைப் பல்இறுத்து ஆனையைக்
கொன்று காலனைக் கோள் இழைத்தீர் எனும்
(சேதிராயர். 19)

தாதையைத் தாள் அறவீசிய சண்டிக்கு இவ்
அண்டத்தொடும் உடனே
பூ தலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமும் அருளி . . . (திருப்பல். 10)

திருமந்திரம்

வானப் பெருங் கொண்டல் மால்அயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனை . . . (21)

ஊனம்இல் ஒன்பது கோடி யுகம் தன்உள் (82)

பொருத்தம் இலாத புளிமாங்கொம்பு ஏறிக்
கருத்து அறியாதவர் கால் அற்றவாறே (202)

கருத்து உறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத்து உயிர்களை எல்லாம்
வருத்தம் செய்தான் என்று வானவர் வேண்ட
குருத்து உயர் சூலம் கைக்கொண்டு கொன்றானே (339)

கொலையில் பிழைத்த பிரசாபதியைத்
தலையைத் தடிந்து இட்டுத் தான் அங்கிஇட்டு
நிலை உலகுக்கு இவன் வேண்டும் என்று எண்ணித்
தலையை அரிந்துஇட்டு சந்தி செய்தானே (340)

பொங்கும் சினத்துள் அயன் தலைமுன் அற
அங்கு அச்சுதனை உதிரம் கொண்டானே (341)

அரி பிரமன் தக்கன் அருக்கனுடனே
வருமதி வாலை வன்னி நல் இந்திரன்
சிரமுகநாசி சிறந்த கைதோள் தாள்
அரன் அருள் இன்றி அழிந்த நல்லோரே (358)

ஊனத்தின் உள்ளே உயிர்போல் உணர்கின்ற (377)

மாண்பதுவாக வளர்கின்ற வன்னியும்

காண்பது ஆண் பெண் அலி எனும் கற்பனை (477)

ஆண்மிகில் ஆண்ஆகும் பெண்மிகில் பெண்ஆகும்
பூண் இரண்டு ஒத்துப் பொருந்தில் அலி ஆகும் (478)

பாய்கின்ற வாயுக் குறையில் குறள் ஆகும்
பாய்கின்ற வாயு இளைக்கின் முடம் ஆகும்
பாய்கின்ற வாயு நடுப்படின் கூன் ஆகும்
பாய்கின்ற வாயு மாதர்க்கு இல்லை பார்க்கிலே (480)

மாதா உதரம் மலம் மிகில் மந்தன் ஆம்
மாதா உதரம் சலம் மிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டு ஒக்கில் கண் இல்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே (481)

குழவி அலிஆகும் கொண்ட கால் ஒக்கிலே (482)

கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணாத் தண்டூடே வெளியுறத்தான் நேக்கிக்
காணாக்கண் கேளாச்செவி என்று இருப்பார்க்கு
வாணாள் அடைக்கும் வழி அதுவாமே (588)

வீங்கும் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்கிய வாதமும் கூனும் முடமதாய்
வீங்கு வியாதிகள் கண்ணில் மருவியே (655)

ஒள்ளிய காயத்துக்கு ஊனம் இல்லை என்று (791)

தெளிதரும் இந்தச் சீவநீர் பருகில்
ஒளிதரும் ஓர் ஆண்டில் ஊனம் ஒன்று இல்லை (846)

ஊதியம் ஏதும் அறியார் உரைப்பினும்
ஓதியும் ஏதும் அறியாத ஊமர்கள் (870)

ஏனை உழுபடை ஏந்திய வெண்நகை
ஊனம் அற உணர்ந்தார் உளத்து ஓங்குமே (1072)

ஞானம் விளைந்து எழுகின்றது ஓர் சிந்தை உள்
ஏனம் விளைந்து எதிரே காண் வழிதொறும்
கூனல் மதி மண்டலத்து எதிர் நீர் கண்டு
ஊனம் அறுத்து நின் ஒண் சுடர் ஆகுமே (1472)

இருட்டு அறைமூலை இருந்த குழவி (பா.பே-குமரி)

குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்து
குருட்டினை நீக்கிக் குணம் பலகாட்டி
மருட்டி அவனை மணம் புரிந்தாளே (1514)

மருட்டிப் புணர்ந்து மயக்கமும் நீக்கி
வெருட்டி வினைஅறுத்து இன்பம் விளைத்துக்
குருட்டினை நீக்கிக் குணம் பல காட்டி
அருள் திகழ் ஞானம் அது புரிந்தாளே (1518)

கானம் கடந்த கடவுளை நாடுமின்
ஊனம் கடந்த உருஅது ஆமே (1545)

காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்
. . . காணாய் என வந்து காட்டினன் நந்தியே (1610)

. . மோனம் கைவந்து ஊமையாம் மொழி முற்றும் காண்
(1611)

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடும் குருடும் குருட்டு ஆட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழி விழுந்தமாறே (1680)

அருள்கண் இல்லாதார்க்கு அரும்பொருள் தோன்றா
அருள்கண் உளோர்க்கு எதிர் தோன்றும் அரனே
இருள் கண்ணினோர்க்கு அங்கு இரவியும் தோன்றாத்
தெருள் கண்ணினோர்க்கு எங்கும் சீர் ஒளியாமே (1808)

பெண் அல்ல ஆண்அல்ல பேடுஅல்ல மூடத்துள்
உள்நின்ற சோதி ஒருவர்க்கு அறியொணாக்
கண் இன்றிக் காணும் செவி இன்றிக் கேட்டிடும்
அண்ணல் பெருமையை ஆய்ந்தது மூப்பே (1872)

வாக்கும் மனமும் இரண்டும் மவுனமாம்
வாக்கு மவுனத்து வந்தாலும் மூங்கையாம் . . . (1896)

ஊனத்து ஓர் சித்தி வந்து ஓர் காயம் ஆகுமே (1904)

ஊனம்இல் ஞானி நல்யோகி உடல் விட்டால் . . .
ஊனம் இல் முத்தராய் மீளார் உணர்வுற்றே (1906)

குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லும் குருடர்
முரணும் பழம்குழி வீழ்வார்கள் முன் பின்

குருடரும் வீழ்வார்கள் முன்பின் அறவே
குருடரும் வீழ்வார் குருடரோடு ஆகியே (2048)

மலம் என்று உடம்பை மதியாத ஊமர்
தலம் என்று வேறு தரித்தமை கண்டீர் (2137)

அழிகின்ற ஓர் உடம்பாகும் செவி கண்
கழிகின்றகால் அவ்விரதங்கள் தானம் . . .
ஒழிகின்ற ஊனுக்கு உறுதுணை இல்லையே (2140)

கானத்து எழுந்த கருத்தின் தலையிலே
ஊனத்து அவித்தை விட்டு ஊமன் நின்றானே (2157)

ஊமை எழுத்தொடு பேசும் எழுத்து உறில்
ஆமை அகத்தினில் அஞ்சும் அடங்கும் (2158)

மேவிய அந்தகன் விழிகட் குருடனாம்
ஆவயின் முன்னடிக் காணும் அதுகண்டு
மேவும் தடிகொண்டு செல்லும் விழி பெற
மூவயின் ஆன்மா முயலும் கருமமே (2169)

ஊமைக் கிணற்றகத் துள்ளே உறைவதோர்
ஆமையின் உள்ளே அழுவைகள் ஐந்துள (2304)

ஈனம்இல் ஞானத்து இன்அருள் சக்தியை
ஊனம் இலாள் தன்னை ஊனிடைக் கண்டதே (2324)

ஆனபுகழும் அமைந்தது ஓர் ஞானமும்
தேனும் இருக்கும் சிறுவரை ஒன்று கண்டு
ஊனம் ஒன்று இன்றி உணர்வு செய்வார்கட்கு
வானகம் செய்யும் மறவனுமாமே (2523)

சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர் (2715)

உருவிலி ஊனிலி ஊனமொன்றில்லி (2941)

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம் (2944)

முதல் ஒன்றாம் ஆனை முதுகுடன் வாலும்
திதம் உறுகொம்பு செவி துதிக்கை கால்
மதியுடன் அந்தகர் வகைவகை பார்த்தே
அது கூறல் ஒக்கும் ஆறு சமயமே (3055)

கரடிகள் ஐந்தும் கடுங்கானம் வாழ்வன
திருடி இராப்பகல் தின்று திரிவன

கரடிகள் ஐந்தும் கடைத்தலைப்பட்டால்
குருடியர் குத்தினும் குண்டு உரலாமே (3089)

பதினோராம் திருமுறை

சிறு கூகை
உட்க விழிக்க ஊமன் வெருட்ட ஓரி கதித்து எங்கும்
(மூத்த. 3)

குந்தி நடந்து குனிந்து ஒருகை கோல் ஊன்றி
நொந்து இருமி ஏங்கி நுரைத்து ஏறி - வந்து உந்த . . .
(க்ஷேத்திர. 3)

கரம் ஊன்றிக் கண்இடுங்கிக் கால் குலைய மற்றோர்
மரம் ஊன்றி வாய் குதட்டா முன்னம் (க்ஷேத்திர. 21)

சோதியுட் சோதி தன் பேர்
செல்லாச் செவி மரம் (பொன்வண். 42)

(குழிகண் கொடு நடை கூன் பல்
கவட்டு அடி நெட்டுஇடை ஊன்
உழுவைத் தழை செவித் தோல் முலைச்
சூறை மயிர்ப் பகுவாய் . . . கழுது)
(பொன்வண். 75)

ஊனம் இல்சீர்
நந்தாவனம் மலரும் மந்தாகினி (திருக்கைலா. 12,13)

வானநீர் தாங்கி மறை ஓம்பி வான்பிறையோடு
ஊனம்இல் சூலம் உடையவாய் . . . (திருக்கைலா. 60)

கூனல், இறுக்கம் கதிர் வெதுப்பும் ஈங்கோயே (திருவீங். 14)

கூனல் பிறை அணிந்தான் குன்று (திருவீங்.63)

மலரோன் தன்னை வான்சிரம் அரிந்தும் (கோப. 5)

பல்கதிர் உரவோன் பல்கெடப் பாய்ந்து (கோப. 27)

தானவருக்கு, ஒட்டிக் குறளை உரைத்த அயன்சிரத்தை
வெட்டிச் சிரித்த விறல் போற்றி (போற்றி. 18-19)

மட்டித்து வாலுகத்தால் நல்இலிங்கமா வகுத்து மற்று
அதன்மேல்
பால் உகுப்பக் கண்டு பதைத்துஓடி - மேல் உதைத்து அங்கு

ஒட்டியவன் தாதை இருதாள் எறிந்து உயிரை
வீட்டிய சண்டிக்கு வேறாக . . . (போற்றி. 19-20-21)

சக்கரத்தால் ஈர்ந்து அரிதன் தாமரைக்கண் சாத்துதலும்
மிக்க அஃது ஈந்த விறல் போற்றி - அக்கணமே
நக்கிருந்த நாமகளை மூக்கு அரிந்து . . . (போற்றி. 24-25)

மேனாள், அதிர்ந்து எழுந்த அந்தகனை அண்டரண்டம் உய்யக்
கொதித்தெழுந்த சூலத்தால் கோத்து . . . (போற்றி. 32-33)

கண்இடந்த கண்ணப்பர் தம்கைமிகக் காதலித்து
விண்உலகம் ஈந்த விறல் போற்றி . . . (போற்றி. 43)

இத்தனை தரிக்கிலன் இதுதனைக் கண்ட என்
கண்தனை இடந்து கடவுள் தன் கண்ணுறு
புண்ணில் அப்பியும் காண்பன் என்று ஒரு கண் இடைக்
கணை அது மடுத்துக் கையில் வாங்கி
அணைதர அப்பினன் . . . (நக்கீ. திருக்கண். 140-144)

மற்றைக் கண்ணிலும் வடிக்கணை மடுத்தனன் மடுத்தலும்
நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப என்
அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப என்று . . .
(நக்கீ.திருக்கண். 146-148)

உழுவைக் கூன்உகிர் கேழல் வெண்மருப்பு
(கல்லா.திருக்கண். 7)

தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப
(கல்லா. திருக்கண். 29)

மழு வாள் அதனால்
அடல் தாதையை அன்று தாள் எறிந்தாற்கு அருள் செய்த
கொள்கை (சிவ.திருவிரட். 2)

கொடிறு முரித்தன்ன கூன் தாள் அலவன்
(சிவ.திருவிரட் 28)

பேச்சுப் பெருகுவதென் பெண் ஆண் அலி என்று
பேச்சுக் கடந்த பெருவளியை (சிவ.திருவந். 9)

சென்றுதன்
கண் இடந்து அன்று அப்பும் கருத்தற்குக் காட்டினான்
கண் இடந்து அன்று அப்பாமைப் பார்த்து
(சிவ.திருவந். 28)

மலர் அணைந்து கொண்டு மகிழ்வாய் உன்பாத
மலர் அணைந்து மால் நயனம் ஆகும் - மலர் அணைந்து
(சிவ.திருவந். 32)

தாதையை எறிந்தவேதியச் சிறுவற்குப்
பரிகலம் கொடுத்த திருவுளம் போற்றி
(கோயில்நான். 40. 27-28)

தன்சுடர் வடிவாள்
ஒக்கிற்றுத் தக்கன் தலை உருண்டு ஓட (திருவிடை 18)

செழுநீர் ஞாலம் செகுத்து உயிர் உண்ணும்
அழல் விழிக் குறளை அமுக்கினை என்னும்
(திருவிடை. 25. 17-18)

கரத்தினில் மாலவன் கண் கொண்டுநின்
கழல் போற்ற (திருவிடை. 30)

அரிதன் திருக்கண் இட நிரம்பு ஆயிரம் போது அணிய
அரிதன் திருஅடிக்கு அர்ச்சித்த கண்ணுக்கு அருளு கம்பர்
(திருவேகம். 18)

வானவர் முதலா மன்னுயிர் பரந்த
ஊனம்இல் ஞானத் தொகுதி நின் உணர்வே
(திருவொற்றி. 117-18)

அறியாது எண்ணில் ஊழ் பிறவியின்
மயங்கிக் கண்இலர் கண்பெற்றாங்கே
தாய் தலைப்பட நின் தாள் இணை வணக்கம்
(திருவொற்றி. 89-11)

அத்தி முகத்தன் . . . (விநாயக. 1)

முகத்தால் கரியன் என்றாலும் (விநாயக. 2)

களிறு முகத்தவனாய் (விநாயக. 5)

மகத்தினில் வானவர் பல் கண் சிரம் தோள் நெரித்து
அருளும் (விநாயக. 6)

வேத முதல்வன் தலையும் தலையாய வேள்வி தன்னுள்
நாதனவன் எச்சன் நல்தலையும் தக்கனார் தலையும்
காதிய தில்லைச் சிற்றம்பலத்தான் (கோயில்.திருப். 7)

மன்று ஆடவும் பின்னும் மற்று அவன் பாதம் வணங்கி
அங்கே

ஒன்றார் இரண்டில் விழுவார் அந்தோ சில ஊமர்களே
(கோயில்.திருப். 42)

நிலத்தில் திகழ்திரு காளத்தியார் திருநெற்றியின்மேல்
நலத்திற் பொழிதரு கண்ணில் குருதி கண்டு உண் நடுங்கி
வலத்திற் கடுங் கணையால் தன் மலர்க்கண் இடந்து
அப்பினான்
குலத்திற் கிராதன் நம் கண்ணப்பனாம் என்று கூறுவரே
(திருத்தொண். 11)

குலமேறிய சேய்ஞலூரில் குரிசில் குரைகடல்சூழ்
தலமேறிய விறற் சண்டி கண்டீர் தந்தை தாள் இரண்டும்
வலம் ஏறிய மழுவால் எறிந்து ஈசன் மணிமுடிமேல்
நலம் ஏறிய பால் சொரிந்து அலர் சூட்டிய நல்நிதியே
(திருத்தொண். 22)

முடி மன்னு கூனல் பிறையாளன் (திருத்தொண். 36)

கண்ணார் மணி ஒன்றும் இன்றிக் கயிறு பிடித்து அரற்குத்
தண்ணார் புனல் தடம் தொட்டலும் தன்னை நகும் சமணர்
கண் ஆங்கு இழப்ப அமணர் கலக்கம் கண்டு
அம்மலர்க்கண்
விண் நாயகனிடைப் பெற்றவன் ஆரூர் விறல் தண்டியே
(திருத்தொண். 37)

கூற்றுக்கு எவனோ புகல் திருஆரூரன் பொன்முடிமேல்
ஏற்றுத் தொடையலும் இன்அடைக்காயும் இடு தருமக்
கோல் தொத்து கூனனும் கூன்போய்க் குருடனும்
கண்பெற்றமை
சாற்றித் திரியும் பழமொழியாம் இத் தரணியிலே
(திருத்தொண். 48)

பொய்யைக் கடிந்து நம் புண்ணியர்க்கு ஆட்பட்டுத்
தன்அடியான்
சைவத் திருஉருவாய்வரத் தான் அவன் தாள்கழுவ
வையத்தவர் முன்பு வெள்கி நீர் வாராவிட மனைவி
கையைத் தடிந்தவன் பெண்ணாகடத்துக் கலிக்கம்பனே
(திருத்தொண். 53)

மாதவத்தோர் தங்கள் வைப்பினுக்கு ஆரூர் மணிக்கு வைத்த
போதினைத் தான் மோந்ததேவி தன்மூக்கை அரியப்
பொன்கை

காதிவைத்து அன்றோ அரிவது என்று ஆங்கு அவள் கை
தடிந்தான்
நாத மொய்த் தார் வண்டு கிண்டு பைங்கோதைக் கழற்சிங்கனே
(திருத்தொண். 64)

கழிநீள் கடல் நஞ்சு அயின்றார்க்கு இருந்த கடிமலரை
மொழி நீள்புகழ் கழற்சிங்கன் தன்தேவி முன் மோத்தலுமே
எழில்நீள் குமிழ் மலர் மூக்கு அரிந்தான் என்று இயம்புவரால்
செழுநீர் மருகல் நன்னாட்டு அமர் தஞ்சைச் செருத்
துணையே (திருத்தொண். 66)

மிக்கவர், ஊன சம்பந்தம் அறுத்து உயக் கொள வல்
ஞானசம்பந்தன் இஞ்ஞாலத்திடையே
(ஆளுடைதிருமும். 423-25)

மதியம் தவழ்மாட மாளிகைக் காழி என்றால் வணங்கார்
ஓதியம் பணை போல் விழுவார் அந்தோ சில ஊமர்களே
(ஆளுடைதிருமும். 6)

கூன் நந்து உருள் வயல் சூழ் காழி மேவிய கொற்றவனே
(ஆளுடைதிருமும். 12)

குருகும் பணிலமும் கூன் நந்தும் சேலும்
(ஆளுடைதிருமும். 26)

குருகு இரியக் கூன் இறவம் பாய . . .
(ஆளுடை திருவுலா. 3)

நீக்கு அரிய இன்பத்து இராகம் இருக்குக் குறள் . . .
(ஆளுடைதிருவுலா. 83)

கல்லாடம்

ஆம்பல்முக அரக்கன் கிளையொடு மறிய— (க.வா. 5.19)

அலமரு காலும் அலகைத் தேரும்
குறைதரு பிறவியின் நிறைதரு கலக்கமும்— (க.வா. 5.36-37)

முடங்கு உளை முகத்துப் பல்தோள் அவுணனொடு
(க.வா. 6.2)

குறுமுனி தேற நெடுமறை விரித்தோய் (க.வா. 6.49)

அமுதமும் தருவும் பணிவரப் படைத்த
உடலக் கண்ணன் உலகு கவர்ந்து உண்ட (1.1-2)

ஆரிய ஊமன் கனவு என ஆக்கிய
கூடல் பெருமான் (4.8)

முடஉடல் கைதை மடல் முறித்திட்டும் (9.25)

காமனை அயனை நாமக் காலனைக்
கண்ணால் உகிரால் மலர்கொள் காலால்
சுட்டும் கொய்தும் உதைத்தும் தணித்த (17.38-40)

வால்பெற முளைத்த கூன் கோள் தானும் (19.4)

கார்உடல் பெற்ற தீவிழிக் குறளினை (33.17)

மாதிரக் களிற்றினைச் செவிடுஉறக் கொடுக்கும் (39.15)

தில்லை கண்ட புலிக்கால் முனிவனும் . . . (41.5)

புகர்முகப் புழைக்கை துயில்தரு கனவில்
முடங்குஉளை கண்ட பெரும்துயர் போல . . (41.50-51)

சின்னக் குறளும், செழுங்கார் போலப்
பெரும் மறை முழக்கும் (52.24-25)

விண் உடைத்து உண்ணும் கண்ணிலி ஒருத்தன் (59.27)

(தேரான் தெளிவு எனும் திருக்குறள் புகுந்தும் 60.2)

ஐந்திணை வழுவாது அகப்பொருள் அமுதினைக்
குறுமுனி தேறவும் . . . (63.19-20)

தோன்றி நின்று அழியாத் துகள்அறு பெரும் தவம்
நிதி எனக் காட்டிய குறுமுனிக்கு அருளுடன் (65.10-11)

முடங்கு உளை அகழ்ந்த கொடுங் கரிக் கோடு (65.13)

குறுமுனி பெறும்மறை நெடும் மறை பெறா முதல் (73.8)

பார்முதல் படைத்தவன் நடுத்தலை அறுத்து (77.8)

இருள்குறள் ஊன்றி எம்அருள் களி ஆற்றி (85.24)

மார்பமும் இருத்தியது என்னக் கூன்புறத்து
ஏனக்கோடு வெண் பொடிப் புலத்து ஒளிர (85.36-37)

படர் காய்க்கு அணைந்த புன் கூழைஅம் குறுநரி (90.18)

வட வனத்து ஒருநாள் மாறுபட்டு எதிர்ந்து
வழிநடம் தனது மரக்கால் அன்றி
முதல் தொழில் பதுமன் முன்னா அவ்வுழி . . . (99. 1-3)

புதவு தொட்டெனத் தன் புயன் முதிர் கரத்தினை
வரன்முறைசெய்த கூன் மதிக் கோவும் . . . (100. 5-6)

பெரிய புராணம் (திருத்தொண்டர் புராணம்)

கோடி கோடி குறட் சிறு பூதங்கள்
பாடி யாடும் பரப்பது பாங்கெலாம் (திருமலை. 6)

ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரால் உயிர் தம்மால்
ஆன பயம் ஐந்தும் (திருநகர. 36)

மாவலிதன்
மங்கல வேள்வியிற் பண்டு வாமனனாய் மண்ணிரந்த
செங்கணவன் வழிபட்ட திருமணிக் குழி அணைந்தார்
(தடுத்தாட் 90)

ஊனமேல் ஒன்றும் இல்லார் (தடுத்தாட் 196; தில்லை. 7)

ஊனமில் தொண்டர் கும்பிட் டுடன்உறை பெருமை
பெற்றார் (இயற். 15)

உம்பர் பிரான் காளத்தி உத்தமர்க்குக் கண் அப்பும்
நம்பெருமான் . . . (ஏனாதி. 42)

திருக்காளத்திக் கண்ணப்பர் திருநாடென்பர் (கண்ணப். 1)

ஊனமில் பலிகள் நோக்கி உறுகடன் வெறியாட்டோடும்
(கண்ணப். 13)

இதற்கினி என் கண் அம்பால் இடந்தப்பின் எந்தையார்
கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும் அடுக்கும் என்று
மதர்த்தெழும் உள்ளத்தோடு மகிழ்ந்து முன் இருந்து
தங்கண்
முதர்ச் சர மடுத்து வாங்கி முதல்வர் தங்கண்ணில் அப்ப
(கண்ணப். 178)

ஒன்றிய களிப்பினாலே உன்மத்தர் போல மிக்கார்
(கண்ணப்ப. 179)

மருந்து கை கண்டேன் இன்னும்
உண்டொருகண் அக்கண்ணை இடந்து அப்பி ஒழிப்பேன்
(கண்ணப்ப. 181)

கண்ணுதல் கண்ணில் தங்கண் இடந்து அப்பிற . . .
ஒரு தனிப் பகழி கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவதேவர்
(கண்ணப்ப. 182)

கானவர் பெருமானார் தங்கண்ணிடந் தப்பும் போதும்
(கண்ணப்ப. 184)

பிரான் திருக்கண்ணில் வந்த
ஊறு கண்டஞ்சித் தங்கண் இடந்தப்ப உதவுங் கையை
(கண்ணப்ப. 185)

கூனல் தண் பிறையினார்க்கு (குங்கிலிய. 35)

ஊனமில் ஆயம் உலப்பல பல்க அளித்துள்ளார்
(ஆனாய. 10)

ஊனமின்றி நின்ற அன்பால் உருகு மனத்தர் முருகனார்
(முருக. 5)

ஊனமில் அறம் அநேகமும் உலகுய்ய வைத்த
(திருக்குறிப். 49)

சிந்தும் பொழுதில் அது நோக்குஞ் சிறுவர் இறையில் தீயோனைத்
தந்தை எனவே அறிந்தவன்தன் தாள்கள் சிந்தும் தகுதியினால்
முந்தை மருங்கு கிடந்தகோல் எடுத்தார்க் கதுவே முறைமையினால்
வந்து மழுவாயிட எறிந்தார் மண்மேல் வீழ்ந்தான் மறையோனும்
எறிந்த அதுவே அர்ச்சனையில் இடையூ றகற்றும் படையாக
மறிந்த தாதை இருதாளும் துணித்த மைந்தர் பூசனையில்
அறிந்த இடையூ றகற்றினராய் முன்போல் அருச்சித்திடப் புகலும் . . . (சண்டே. 51, 52)

வந்து மிகைசெய் தாதைதாள் மழுவால் துணித்த மறைச் சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனார் ஆயினார்
(சண்டே. 57)

ஊனந்தான் இலராகி உவந்திருந்தார் தனைக் கண்டே
(திருஞா. 101)

பங்கயம் புரைதாள் பரட்டளவும் பசைத் தசை தேயவும்
(திருநா. 357)

கைகளும் மணிபந் தசைந்துறவே கரைந்து சிதைந்த பின்
(திருநா. 358)

மார்பமுந் தசை நைந்து சிந்தி வரிந்த என்பு முரிந்திட
(திருநா. 359)

அங்கம் எங்கும் அரைந்திட . . .மெய்ப்புறத்தில் உறுப்பழிந்த
பின் (திருநா. 360)

தென்னவன் கூன் நிமிர்த்தருளித் திருநீற்றின் ஒளிகண்டு
(திருநா. 391)

வல் அமணர் தமை வாதில் வென்றதுவும் வழுதி பால்
புல்லிய கூன் நிமிர்த்ததுவும் . . . (திருநா. 399)

சீர்திகழும் பாண்டிமா தேவியார்திரு நீற்றின்
சார்வடைய கூன் நிமிர்ந்த தென்னவனார் தம்முடனே
(திருநாவுக். 405)

ஊனமில் சீர்ப் பெருவணிகர் குடி துவன்றி ஓங்கு பதி
கூனல் வளை திரை சுமந்து கொண்டேறி மண்டு கழி . . .
(காரைக். 1)

. . . மற்றிது செய்ததென் பொறியிலாய் என்ன . . .
(திருநீல. 13)

ஊனமில் இசையுடன் விளங்கிய திருப்பதிகம்
(திருஞான. 382)

ஞானசம்பந்தர் தம்பால் நன்மை யல்லாது செய்யும்
ஊனம் வந்தடையில் யாமும் உயிர்துறந்து ஒழிவது என்றார்
(திருஞான. 696)

ஊனமில் வேதவேள்வி என்றெடுத் துரையின்
(திருஞான. 739)

எம்பிரான் சிவனே எல்லாப் பொருளும் என்றெழுதும்
ஏட்டில்
தம்பிரான் அருளால் வேந்தன் தன்னை முன் ஓங்கப் பாட

அம்புய மலராள் மார்பன் அநபாயன் என்னும் சீர்த்திச்
செம்பியன் செங்கோலென்னத் தென்னன் கூன் நிமிர்ந்த
தன்றே (திருஞான. 847)

மிக்க, ஊமமாஞ் சமணை நீக்கி உலகெலாம் உய்யக்
கொண்ட
ஞான சம்பந்தர் . . . (திருஞான. 859)

முன்ன மாமுடக் கான்முயற் கருள் செய்த வண்ணமும்
மொழிந்தேத்தி (திருஞான. 963)

கோதிலா இசைகுலவு குண்டைக் குறட் பூதம்
என்றெடுத்தோதி (திருஞான. 965)

முன்னிறைந்த திருவாய் மஞ்சன நீராட்டும்
முதல் வேடர் கண்ணப்ப நாயனார் (திருஞான. 1013)

கானவர் தம் குலம் உலகு போற்ற வந்த கண்ணப்பர்
(திருஞான. 1017)

ஊனமில் புகழ் அடியார் பால் கேட்டு உவந்துளராய்
(திருஞான. 1037)

எண்ணிலாண் டெய்தும் வேதாப் படைத்தவள் எழிலின்
வெள்ளம்
நண்ணு நான்முகத்தால் கண்டான்; அவளினும் நல்லாள்
தன்பால்
புண்ணியப் பதினாறாண்டு பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிர முகத்தாற் கண்டார்
(திருஞான. 1109)

சதுர்முகனின் மேலாய சண்பைவரு மறையவரும்
(திருஞான. 1165)

ஊனமில் சீலத்து உம்பால் மகட் பேச வந்ததென . . .
(திருஞான. 1166)

குண்டையூர் நென்மலையைக் குறட் பூதம் படை கவர்ந்து
(ஏயர். 25)

அன்பாற் கண்ணப்பர் மணங்கொள் மலர்ச் சேவடி
(ஏயர். 197)

கூனல் இள வெண் பிறைச் சடையார் (ஏயர். 203)

ஒற்றிநகர்
தன்னை அகலப் புக்கார் தாம் செய்த சபதத்தால்
முன்னடிகள் தோன்றாது கண்மறைய மூர்ச்சித்தார்
(ஏயர். 274)

பொங்கு காதல் மீளா நிலைமையினாற் போதுவார்
வழிகாட்ட முன்போந்து
திங்கள் வேணியார் திருமுல்லை வாயில் சென்றிறைஞ்சி
நீடிய திருப்பதிகம்
சங்கிலிக்காக என் கணை மறைத்தீர் என்று சாற்றிய
தன்மையிற் பாடி (ஏயர். 277)
வணங்கி நீர் மகிழ் கோயிலுளீரே என்ற வன்றொண்டர்க்
கூன்றுகோல் அருளி (ஏயர். 279)

விண்ணாள்வார் அமுதுண்ண மிக்கபெரு விடமுண்ட
கண்ணாளா கச்சி ஏகம்பனே கடையானேன்
எண்ணாத பிழை பொறுத்து இங்கு யான் காண
எழிற்பவள
வண்ணா கண்ணளித் தருளாய் என வீழ்ந்து வணங்கினார்
(ஏயர். 286)

. . . மங்கை தழுவக் குழைந்தார் மறைந்த இடக்கண்
கொடுத்தார் (ஏயர். 287)

. . . மூலந்தான் அறிவரியார் கண்ணளித்து . . கோலந்தான்
காட்டுதலும் . . (ஏயர். 288)

கங்கை வாழ் சடையாய் ஓர் கண்ணிலேன் எனக் கவல்வார்
இங்கெனக்கார் உறவு என்னும் திருப்பதிகம்
எடுத்திசைத்தார் (ஏயர். 296)

பரவியே பணிந்தவர்க்குப் பரமர்திரு வருள்புரிவார்
விரவிய இப்பிணி அடையத் தவிர்ப்பதற்கு வேறாக
வரமலர் வண்டறை தீர்த்த வடகுளத்துக் குளி என்னக்
கரவில் திருத் தொண்டர்தங் கைதொழுது புறப்பட்டார்
மிக்க புனல் தீர்த்தத்தின் முன் அணைந்து வேதமெலாம்
தொக்கவடிவாயிருந்த துருத்தியார்தமைத் தொழுது
புக்கதனில் மூழ்குதலும் புதியபிணி அது நீங்கி
அக்கணமே மணியொளி சேர் திருமேனி ஆயினார்
(ஏயர். 298-299)

கண் நிறைந்த திருவாரூர் முன்தோன்றக் காண்கின்றார்
அன்றுதிரு நோக்கொன்றால் ஆரக்கண்டின்புறார் . . .
இங்கெமது துயர் களைந்து கண் காணக் காட்டாய் என்று
அங்கணர் தம் முன் நின்று பாடி அருந் தமிழ் புனைந்தார்
(ஏயர் 301, 302, 303)

வீழ்ந்தெழுந்து கைதொழுது முன்நின்று விம்மியே
வாழ்ந்த மலர்க் கண்ணொன்றால் ஆராமல் மனம் அழிவார்
ஆழ்ந்த துயர்க் கடலிடை நின்றடியேனை எடுத்தருளித்
தாழ்ந்த கருத்தினை நிரப்பிக் கண் தாரும் எனத் தாழ்ந்தார்
(ஏயர். 307)

திருநாவலூர் மன்னர் திருவாரூர் வீற்றிருந்த
பெருமானைத் திருமூலட்டானஞ் சேர் பிஞ்ஞகனைப்
பருகா இன்னமுதத்தைக் கண்ணாற் பருகுதற்கு
மருவார்வத்துடன் மற்றைக் கண் தாரீர் என வணங்கி
(ஏயர். 308)

பூதமுதல்வர் புற்றிடங்கொண்டிருந்த புனிதர்
வன்றொண்டர்
காதல் புரிய வேதனைக்கிரங்கிக் கருணைத் திருநோக்
களித்தருளிச்
சீத மலர்க்கண் கொடுத்தருளச் செவ்வே விழித்து
முகமலர்ந்து
பாத மலர்கள் மேற்பணிந்து வீழ்ந்தார் உள்ளம் பரவசமாய்
(ஏயர். 310)

கூனல் இளவெண் பிறைக் கண்ணியார் (ஏயர். 316)

ஊனவெஞ் சூலை நீங்கி உடன்இருப்பதனுக் கென்றார்
(ஏயர். 401)

கொற்றவனார் திருக்கயிலை மலைநின்றுங் குறுமுனிபால்
(திருமூல. 2)

தண்டியடிகள் திருவாரூர்ப் பிறக்கும் பெருமைத்
தவமுடையார்
அண்ட வாணர் மறைபாட ஆடுஞ் செம்பொற் கழல்
மனத்துக்
கொண்ட கருத்தின் அகநோக்குங் குறிப்பே அன்றிப்
புறநோக்கும்
கண்ட உணர்வு துறந்தார் போல் பிறந்த பொழுதே
கண்காணார் (தண்டி 1)

காணுங் கண்ணாற் காண்பது மெய்த் தொண்டே யான
கருத்துடையார்(தண்டி 2)

குழிவா யதனிற் குறிநட்டுக் கட்டுங் கயிறு குளக்குலையின்
இழிவாய்ப் புறத்து நடுத்தறியோ டிசையக் கட்டி
இடைதடவி
வழியால் வந்து மண்கல்லி எடுத்து மறித்துந் தடவிப் போய்
(தண்டி 5)

சிந்தித் திந்த அறங்கேளாய் செவியும் இழந்தாயோ என்ன
மந்த உணர்வும் விழிக்குருடும் கேளாச் செவியும்
மற்றுமக்கே
இந்த உலகத் துள்ளன என் றன்பர் பின்னும் இயம்புவார்
(தண்டி 8)

வில்லால் எயில் மூன்றெரித்த பிரான் விரையார் கமலச்
சேவடிகள்
அல்லால் வேறு காணேன் யான் அதுநீர் அறிதற்கார்
என்பார்
நில்லா நிலையீர் உணர்வின்றி நுங்கண் குருடாய் என்கண் உல
கெல்லாங் காண்பான் யான் கண்டால்
என் செய்வீர் என் றெடுத்துரைத்தார் (தண்டி 9)

அருகர் அதுகேட்டு உன் தெய்வத் தருளால் கண் நீ
பெற்றாயேல்
பெருகும் இவ்வூரினில் நாங்கள் பின்னை இருக்கிலோம்
(தண்டி 10)

நெஞ்சில் மருவுங் கவலையினை ஒழிநீ நின்கண் விழித் தந்த
வஞ்ச அமணர் தங்கண்கள் மறையு மாறு காண்கின்றாய்
(தண்டி 13)

அந்த னான உனக்கறிவும் இல்லை என்றார் யான் அதனுக்கு
எந்தை பெருமான் அருளால் யான்விழிக்கில் என் செய்வீர்
என்ன......
(தண்டி 17)

மருவுந்தொண்டர் முன்போக மன்னன் பின்போய் மலர்வாவி
அருகு நின்று விறல் தண்டி யடிகள் தம்மை முகநோக்கிப்
பெருகு தவத்தீர் கண் அருளாற் பெறுமா காட்டும் எனப்
பெரியோர் (தண்டி 18)

ஏய்ந்த அடிமை சிவனுக்கியான் என்னில் இன்றென்
கண்பெற்று
வேந்தன் எதிரே திருவாரூர் விரவுஞ் சமணர் கண்ணிழப்பர்
ஆய்ந்த பொருளுஞ் சிவபதமே ஆவதென்றே
அஞ்செழுத்தை
வாய்ந்த தொண்டர் எடுத்தோதி மணிநீர் வாவி மூழ்கினார்
(தண்டி 19)

தொழுதுபுனல்மேல் எழுந்தொண்டர் தூய மலர்க்கண்
பெற்றெழுந்தார்
பொழுது தெரியா வகை அமரர் பொழிந்தார் செழுந்தண்
பூமாரி
இழுதை அமணர் விழித்தே கண்ணிழந்து தடுமாறக் கண்டு
பழுது செய்த அமண் கெட்டதென்று மன்னர் பகர்கின்றார்
(தண்டி 20)

தண்டி யடிகள் தம்முடனே ஒட்டிக் கொண்ட சமண்
குண்டர்
அண்டர் போற்றுந் திருவாரூர் நின்றும் அகன்று
போய்க்கழியக்
கண்ட அயனர் தமை எங்குங் காணா வண்ணந் துரக்க
என
மண்டிவயவர் சாடுதலும் கண்கள் காணார் மனங் கலங்கி
குழியில் விழுவார் நிலை தளர்வார் கோலும் இல்லை என
உரைப்பார்
வழியீதென்று தூறடைவார் மாண்டோம் என்பர் மதி
கெட்டீர்
அழியும் பொருளை வட்டித்திங் கழிந்தோம் என்பார்
அரசனுக்குப்
பழியீதாமோ என்றுரைப்பார் பாய்கள் இழப்பார்
பறிதலையர்
பீலி தடவிக் காணாது பெயர்வார் நின்று பேதுறுவார்
காலினோடு கைமுறியக் கல்மேல் இடறி வீழ்வார்கள்
சால நெருங்கி எதிரெதிரே தம்மிற் றாமே முட்டிடுவார்
மாலும் மனமும் அழிந்தோடி வழிகள் அறியார்
மயங்குவார் (தண்டி 21-23)

கண்ணின் மணிக ளவையின்றிக் கயிறு தடவிக் குளந்
தொட்ட

எண்ணில் பெருமைத் திருத்தொண்டர் பாதம் இறைஞ்சி
(தண்டி. 26)

ஆன அருள்கொண் டஞ்சலிசெய் திறைஞ்சிப் புறம்போந்
தரசளித்தல்
ஊனம் ஆகுந் திருத்தொண்டுக்கு (கழறிற். 16)

கூனல் இளவெண் பிறைக் கண்ணி முடியார் (கழறிற். 39)

தேனுங் குழலும் பிழைத்த திருமொழியாள் புலவி தீர்க்க
மதி
தானும் பணியும் பகை தீர்க்குஞ் சடையார் தூது தருந்
திருநாள்
கூனங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றேன் எழு பிறப்பின் முடங்கு கூன்
(கூற்றுவ. 9)

மானநிலை அழி தன்மை வருங்காமக் குறி மலர்ந்த
ஊன நிகழ் மேனியராய் ஒருவர் நீறணிந் தணைந்தார்
(நரசிங். 5)

வெறித்த கொன்றை முடியார் தம் அடியார் இவர்முன்
மேவுநிலை
குறித்து வெள்கி நீர்வாரா தொழிந்தாள் என்று
மனங்கொண்டு
மறித்து நோக்கார் வடிவாளை வாங்கிக் கரகம் வாங்கிக்
கை
தறித்து கரக நீரெடுத்துத் தாமே அவர் தாள் விளக்கினார்
(கலிக்கம். 8)

ஓதமலிநீர் விடமுண்டார் அடியார் வேட மென்றுணரா
மாதரார்கை தடிந்த கலிக்கம்பர் மலர்ச் சேவடி வணங்கி
(கலிக்கம். 10)

புதுமலர் மோந்த போதிற் செருத்துணைப் புனிதத்
தொண்டர்
இதுமலர் திருமுற்றத்துள் எடுத்து மோந்தனளாம் என்று
கதுமென ஓடிச் சென்று கருவிகைக் கொண்டு பற்றி
மதுமலர்த் திருவொப்பாள் தன் மூக்கினைப் பிடித்து
வார்ந்தார் (கழற். 6)

வார்ந்திழி குருதி சோர மலர்க்கருங் குழலுஞ் சோரச்
சோர்ந்து வீழ்ந் தரற்றுந் தோகை மயிலெனத் துளங்கி
மண்ணில்

சேர்ந் தயர்ந் துரிமைத் தேவி புலம்பிட . . .
வந்தணை வுற்ற மன்னர் . . .
நெந்தழிந் தரற்றுவாளை நோக்கி இவ்வண்டத் துள்ளோர்
இந்தவெவ் வினை அஞ்சாதே யார் செய்தார் என்னும்
எல்லை.
. . . முன்னுறு நிலைமை அங்குப் புகுந்தது மொழிந்த போது
மன்னரும் அவரை நோக்கி மற்றிதற் குற்ற தண்டம்
தன்னைஅவ் வடைவே யன்றோ தடிந்திடத் தருவதென்று
(கழற். 7,8,9)

கட்டிய உடைவாள் தன்னை உருவி அக்கமழ் வாசப்பூத்
தொட்டு முன்னெடுத்த கையாம் முற்படத் துணிப்பதென்று
பட்டமும் அணிந்து காதல் பயில் பெருந்தேவியான
மட்டவிழ் குழலாள் செங்கை வளையொடும்
துணித்தாரன்றே (கழற். 10)

ஒரு தனித் தேவி செங்கை உடைவாளால் துணித்த போது
பெருகிய தொண்டர் ஆர்ப்பின் பிறங்கொலி புவிமேற்
பொங்க . . . (கழற். 11)

வையகு நிகழக் காதல் மாதேவி தனது செய்ய
கையினைத் தடிந்த சிங்கர் கழலிணை தொழுது போற்றி -
(கழற். 13)

கூனல் இள வெண்பிறை முடியார் (செருத். 3)

உலகு நிகழ்ந்த பல்லவர்கோச் சிங்கர் உரிமைப் பெருந்தேவி
நில்வு திருப்பூ மண்டபத்து மருங்கு நீங்கிக் கிடந்ததொரு
மலரை எடுத்து மோந்ததற்கு வந்து பொறாமை வழித்
தொண்டர்
இலகு சுடர்வாய்க் கருவி எடுத் தெழுந்த வேகத்தா லெய்தி
கடிது முற்றி மற்றவள்தன் கருமென் கூந்தல் பிடித்தீர்த்துப்
படியில் வீழ்த்தி மணிமூக்கைப் பற்றிப் பரமர் செய்யசடை
முடியில் ஏறுந் திருப்பூமண்டபத்து மலர் மோந்திடும்
மூக்கைத்
தடிவன் என்று கருவியினால் அரிந்தார் தலைமைத்
தனித்தொண்டர் (செருத். 4,5)

செங்கண் விடையார் திருமுன்றில் விழுந்த திருப்பள்ளித்
தாமம்

அங்கண் எடுத்து மோந்த அதற் கரசன் உரிமைப்
பெருந்தேவி
துங்க மணிமுக் கரிந்த செருத்துணையார் தூய
கழலிறைஞ்சி (செருத். 7)

நிகண்டு

திவாகரம்

செவிடர் வதியர்
முடவன் பங்கு
பேடர் பேடியர் பெண்டகர் பெண்டரென்
றாகிய நான்கும் அலிப்பெய ராகும்
மூகையும் மூங்கையும் ஊமையாகும்
ஆதர் அந்தர் அந்தகர் குருடர் (ப.33)

கூனே கோணல் ஆமெனக் கூறுவர்
சிந்தே குஞ்சம் குறளே வாமனம்
முழுமகன் சிதடன் இழுதை மூடன்
மண்ணை மடன் பேதை குதலை உஞ்ஞை
அஞரே யாதன் ஏழை அறிவிலான் (ப.34)

சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்
கூனுங் குறளும் ஊமையுஞ் செவிடும்
முடமும் உறுப்பு மருளும் மக்கட்கு
திண்சிறப்பில்லா எண்பே ரெச்சம் (ப.295)

பேடியிலக்கணம் பேசுங் காலை
நச்சுப் பேசலும் நல்லுரை யோதலும்
அச்சு மாறி ஆண்பெண் ணாகியும்
கைத்தல மொன்றைக் கடுக வீசியும்
மத்தகத் தொருகை மாண்புற வைத்தலும்
விலங்கி மிதித்தலும் வழிவே றாகியும்
துளங்கித் தூங்கி சுழன்று துணிந்தும்
நக்கும் நாணியும் நடம் பல பயின்றும்
பக்கம் பார்த்தும் பாங்கு திருத்தியும்
காரண மின்றிக் கடிபல கொண்டும்
வாரணி கொங்கையை வலிய நவிந்தும்
இரங்கியும் அழுதும் அயர்ந்தும் அருவருத்தும்
குரங்கியும் கோடியும் கோதுகள் செய்தும்

மருங்கிற் பாணியை வைத்தும் வாங்கியும்
இரங்கிப் பேசியும் எல்லே லென்றும்
இன்னவை யாவும் இயற்றுத லியல்பே *(ப.310)*

பிங்கலம்

சிறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமும்
கூனுங் குறளு மூமையுஞ் செவிடு
மாவு மருளு மென்ப மக்கட்
கேயுஞ் சிறப்பிலா வெண்பெய ரெச்சம் *(432, பக். 78, 79)*

அந்தகன் சிதடன் குருடனாகும்
பங்கு சூனியன் முடவ னாகும்
குஞ்சன் வாமனன் குறளன் பெயரே
சிந்த னென்றுஞ் செப்புவ ரதற்கே
வதிரன் செவிடன்
மூகையு மூங்கையு மூமை யாகும்
கோணன் கூன னாமெனக் கூறுவர்
பேட னபுஞ்சகன் பேதை பெண்டக
னாகுஞ் சண்ட னலிப்பெய ராகும் *(956-963, பக். 148, 149)*

யூபமுங் கவந்தமு மட்டையு முடற்குறை *(1087, ப.163)*

ஊனமு நிரப்பும் விகலமுந் தவலு
மீனமுங் குறைபாடென் றியம்பல் வேண்டும் *(2230, ப.304)*

சூடாமணி

குறளொடு செவிடு மூங்கை கூன்மருள் குருடு மாவே
உறுமுறுப் பில்லாப் பிண்ட மோதிய வெண்மை யெச்சம்
(12 94, ப. 26)

அந்தகன் சிதடனென்ப குருடனாங், கோணல் கூன் பேர்;
சிந்து வாமனமே குஞ்சங் குறள்; வதிர் செவிடென்றாகும்
முந்திய முடமே பங்கு குணி; யூமை மூகை மூங்கை
தந்த பெண்டகனே பேடி நபுஞ்சக னலியே சண்டன் *(2.43)*

பொருட்டொகை நிகண்டு

இடைப்படு தான மாதுலர் குருடர்
மாதர் முதற்பிறர் சிறுமையைப் பற்றி
மனம திரங்கியே வழங்க லென்ப *(123, ப.9)*

எச்ச மெட்டா மவை குறள் கூனூமை
செவிடு குருடு முடமுறுப்புமயக்க
முறுப்பில் பிண்ட மிவையே யெண்வகை
யுடற்குறை யென்ன வோதவும் படுமே *(672, ப. 52)*

ஆசிரிய நிகண்டு

சிந்து வாமனமொடு குஞ்சங் குறட்பெயர்
செவிடு வதிர் பங்கு முடமாஞ்
செறிவக்கிரங் கோணல் கூன் மூங்கை மூகையொடு
செப்பூமை மூடுவனுமாம்
அந்தகன் சிதடனுடன் தரிசன்முடன் குருட
னாம்பேடி பெண்டகனுட
னாண்பெண் ணலாதவன் சண்ட னபுஞ்சக
னலியைந்து பெயராகுமே *(26, ப. 181)*

...... குற்ற முட மூமை யலி மருள் செவிடு குருடு கூன்
குறளெனச் சொல்லு மெட்டாம் . . . *(37, ப. 214)*

பாரதி தீபம்

. . . செவிடர் பெய
ரெனிலோ வெதிரா முடவர் பங்கென்ன வியம்புவரே
பேடியர் பெண்டகரே பேடர் பெண்டலிப்பேர தென்பர்
கூடிய மூகையு மூங்கையு மூமையாங் கோணல் சிந்து
நீடிய குஞ்சங் குறளென்ப ராதுலர் நேர் வறியோர் . . .
(99,100)

. . தீதறு கூன்குறளூமை செவிடு சிதடென மாப்
பேத மருளுறுப்பில் பிண்ட மெண்வகைப் பேரெச்சமே
(633)

உரிச்சொல் நிகண்டு

பேடி கிலீவ மலி பெண்டகஞ் சண்டமே
நீடில் குறள் வாமனஞ் சிந்து - கோடிய
கூன் பெயராகு முடம் முடங்கல் கொள்கை யில்லா
வூன் பிண்டமில்லா வுறுப்பு *(5, ப. 17)*

குறள் செவிடு மூங்கை முடங் கூன் குருடு
துறுபிண்டம் பேடுடனே யெச்ச-முறு மெட்டாம் . . .
(27, ப. 107)

கயாதரம்

மூகை மூங்கையு மூமை யென்பர் . . .

வளந்தரு பேடியர் பேடுகள் பேடர்கள் பெண்டகர்மற்
றுளந்தரு சண்டங் கிலிய மலியென்ப ரோது சிந்து
தளர்ந்த குறள் வாமனங் கோணல் கூன் குஞ்சந்
தாழ்செவிடே
அளந்த வெதிர்முடம் பங்கென வோதின ராய்மயிலே
. . . அருளிலர் மூர்க்கர் (சு)மடர் தீயோர் பொறியற்றவரே
அற்றவன் போத(ஞ்) சிதடன் முழுமக னஞ்சிழுதை
மற்றுஞ் சளன் பேதை யாதனொ டண்ணை மடங்குதலை
முற்றிய வஞ்ஞையு மூடனு மாமாதுலர் முயற்சி
யற்றவ ரார்த்தர் துயருறுவோரென் றிசைப்பர்களே
(103-106, ப.16)

வடமலை நிகண்டு

குறளெனும் பெயரே குறளர் தம்பெயரும்
பாரிடப் பெயரும் குறுமையும் பகருவர் (550, ப. 100)

கோண லெனும் பெயர் கூனலும் வளைதலும்
மாறுபடு குணத்தின் பெயரும் வழங்கும் (617, ப.112)

சிந்தெனும் பெயரே நீருங் கடலும்
நதியுங் குறளும் யாப்பின் முச்சீரும்
ஓர்தேச முமென வுரைத்தனர் புலவர் (685, ப.124)

சிகண்டி யெனும்பெயர் பாலையாழ்த் திறத்தின்
ஓசையும் அலியு மயிலு மாமே (696, ப.126)

சிதட னெனும் பெயர் குருடனு மூடனும் (710, ப. 130)

வாம மென்பெய ரிடப்பாலு மழகும்
குறளு மோர் சமையப் பெயருங் கூறுவர் (1371, ப.252)

வெதிரெனும் பெயரே செவிடனும் மூங்கிலும்
(1421, ப.260)

நாமதீப நிகண்டு

. . . வீண்பேடு
நபுஞ்சகமே கண்ட நபுஞ்சங் கிலீப மலி
யஞ்சலுறும் பெண்டகமுமாம் (119, ப.34)

. . வாமனங் குஞ்சம் மெலித்த குறள்
சிந்தாங் கூன் கோணல் செவிடன் வெதிராஞ் சிதடன்
அந்த னந்தகன் குருடனாம்
பங்கு குணில் மொண்டி முடம் பற்றூமை மூகை மூங்கை
(174, 175, ப. 49)

பொதிகை நிகண்டு

. . . குருட னந்தராளனுடன் சிதடனு மந்தகன்பேர்
அலிபேடி நபுங்கிஷம் பெண்டகஞ் சண்டங் கிலீப
மாகுங் கூன் சினகோடி கோணலாங் குஞ்சம்
உலைவில் வாமனஞ் சிந்து குறளாகு மூங்கை
யூமை குணி மூகையுமாம் வெதிர் செவிடென்
றறியே
அறிவிலன் யாதன் பேதை மடனேழை மூகன்
அஞரிமுதை யண்ணை யஞ்ஞை சிதடன்
முழுமகனாஞ்
சிறியர் நலமிலர் கயவர் மூடர் கலர் சுமடர்
தீயர் நசிர் கனிட்டர் கள்வர் கலகர் புல்லர் மூர்க்கர்
பொறியிலர் சூனவர் சீத்தை நபண்டிதர் சிற்றினரே
புள்ளுவர் கீழ்மையர் முசுண்டர் பல்லுவரு லோபர்
நெறியிலர் கல்லார் பதகர் முறையிலரோ டதமர்
நீசர் கையர் தீக்குணரு மீனர் பேர்முடிவே
முடங்கு பங்கு குணி சிதைவு முடவர் பேராகும் . . .
(78-80, ப. 27)

அரும்பொருள் விளக்க நிகண்டு

ஊகமே கருங்குரங்கோ டுடற்குறை விலங்கின் கூட்டம்
வாகையே மோகமார் முடமே யென்று மொழிநாம
மீரெட்டாமே (56, 59, ப10)

பங்கென்ப முடமே யாகும் பாதியுஞ் சனியு மேற்கும்
(71, ப12)

குஞ்ச மீச்சோப்பி நாழி குறளைச் சொல் குறள் கூன் குன்றி
விஞ்சு தூய்க் கவரிக் குஞ்சி விளம்பிய நாம மேழாம்
(114, ப19)

..... கோணலே மாறுபாடே கூன் சிந்து வளைவே நாற்பேர்
(188, ப.31)

சிதட னந்தகன் மூடன் பேர் (238, ப.39)

வெதிர் செவிடுடன் கம்பித்தல் விளங்கு பைங்கழையே
முப்பேர் (246, ப.41)

. . . அந்தகன் குருடன் கூற்றாம்
சிந்து வாமனமே முச்சீர் தெண்கடல் நதி யோர்தேசம்
உந்துநீர் வெட்சி யென்றே யோதுறு நாம மேழாம்
(297, 298, ப.49)

வாமமே குறளிடப்பால் வயங்க லோர் சமய மூராம்
வாமனங் குறளே யோர்நூல் மாதிரக் களிறே முப்பேர்
(322, 328, ப.54)

ஊமையே கீரி மூகை (343, ப.57)

குருட னந்தகனே வெள்ளி (471, ப.78)

அலியென்ப நமனே பேடியடிசில் நறுவிலிப் பேர்
(482, ப.30)

. . . முழுமக னறிஞன் மூடன் . . . (575, ப.96)

வெளிறலே யறிவிலாமை விளர்த்தலும் விளம்பற் பாலாம்
(615, ப. 102)

குறளி பேயெட்டாண்டிற்பெண்; குறள் பூதம் வாமனப்
பேர் (629, ப.105)

கூனலே பணில மாந்தை கோண் பிறை பருந்தேயைம்பேர்
(675, ப.113)

கூனியே யெட்டாண்டிற்பெண் கோணல் கைதைக்கும்
பேரே (681, ப.114)

நிகண்டு - பட்டியல்

அரும்பொருள் விளக்க நிகண்டு, (பதி) எஸ். வையாபுரிப்பிள்ளை செந்தமிழ்ப் பிரசுரம், 1931

ஆசிரிய நிகண்டு, (பதி.) வீ. சொக்கலிங்கம், சரஸ்வதி மஹால், தஞ்சை, 1975.

உரிச்சொல் நிகண்டு, காங்கேயர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1971.

கயாதரம், (பதி.) எஸ். வையாபுரிப்பிள்ளை, சென்னை ஸர்வகலா சாலை, சென்னை, 1939.

சூடாமணி நிகண்டு, (பதி.) ஆறுமுக நாவலர், 11-ஆம் பதிப்பு, சென்னை, இராக்ஷச ஷு ஆவணி மீ (1915).

திவாகரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1980.

நாமதீப நிகண்டு, (பதி.) எஸ். வையாபுரிப்பிள்ளை, 1930, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1985.

பாரதி தீபம், திருவேங்கட பாரதி, (பதி.) மு. சண்முகம் பிள்ளை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1980.

பிங்கல நிகண்டு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1968.

பொதிகை நிகண்டு, (பதி.) எஸ். வையாபுரிப்பிள்ளை, 1934.

பொருட்டொகை நிகண்டு, சுப்பிரமணிய பாரதி, (பதி.), சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர், செந்தமிழ்ப் பிரசுரம் - 41, மதுரைத் தமிழ்ச் சங்கம், ஆ.இ.

வடமலை நிகண்டு, (பதி.), இரா. நாகசாமி, உ.வே.சா. நூலகம், சென்னை, 1983.

பழமொழிகள்

கண்ணைக் கெடுத்த தெய்வம் கோலைக் கொடுத்தது (26)*

உள்ளதையும் கெடுத்தாள் உதறுகாலி வந்து (113)

துடைகாலி வந்ததும் எல்லாம் துலைந்து போச்சு (117)

ஓரக் கண்ணனைப் பழிக்கிறான் ஒற்றைக் கண்ணன் (158)

மூக்கு அறுந்த மூளி காது அறுந்த மூளியைப் பழித்தாளாம் (162)

பேசினால் வாயாடி பேசாதிருந்தால் ஊமப் பயல் (183)

குட்டிச் சுவரில் முட்டிக் கொள்ள வெள்ளெழுத்தா (189)

கோல் இழந்த குருடனைப் போல (323)

முண்டைக்கண்ணிப் பிள்ளை இரண்டு கண்ணும் நொள்ளை (334)

மூக்கறையன் கதைபோல் பேசுகிறாள் (423)

காதை அறுத்தவன் கண்ணைக் குத்தினாலும் குத்துவான் (429)

கையை உடைத்துவிட்டவன் தலையை உடைத்தாலும் உடைப்பான் (430)

அவன் வால் அறுந்து போச்சு (498)

பல்லுப் பிடுங்கின பாம்பு போல் (508)

கையை அறுத்துவிட்டாலும் அகப்பை கட்டிக்கொண்டு திருடுவான் (524)

* Tamil Proverbs - a classified collection, Herman Jensen, A.E.S. NewDelhi, 1982

செவிடன் காதிலே சங்கு ஊதினாற் போல் (526)

அவன் சிறகு ஒடிந்த பறவை (536)

எதிரிக்குச் சகுனத்தடை என்று மூக்கை அறுத்துக் கொள்ளுகிறது (579)

கணக்கப் பிள்ளை பெஞ்சாதி கடுக்கன் போட்டுக்கொண்டாள்
என்று காரியக்காரன் பெஞ்சாதி காதை அறுத்துக்கொண்டாளாம் (581)

குழந்தை காய்ச்சலும் குண்டன்/குள்ளன் காய்ச்சலும் பொல்லாது (584)

மூக்கறையனுக்கு வாழ்க்கைப்பட்டால் முன்னும் போகவிடான்
பின்னும் போகவிடான் (589)

ஆனை கண்ட பிறவிக் குருடர்கள் அடித்துக் கொண்டது போல (610)

பேடி கையில் ரம்பை அகப்பட்டது போல (652)

பங்கறை சாவானுக்குப் பல் அழகைப் பார் (699)

அழகுக்கு மூக்கை அறுப்பான் உண்டா (716)

நரி/குள்ளப் பார்ப்பான் கிணற்றில் விழுந்தால் தண்டு எடு தடி எடு
என்பார்கள் (744)

இடையன் கெடுத்தது பாதி மடையன் கெடுத்தது பாதி (756)

கண்கட்டி வித்தை காட்ட வந்தாயா (764)

கம்மாளன் பசுவை காது அறுத்துக் கொள்ள வேண்டும் (765)

கம்மாளன் பசுவைக் காதறுத்துக் கொண்டாலும் உள்ளே
செவ்வரக்குப் பாய்ச்சியிருப்பான் (765-அ)

மேய்கிற கோழி மூக்கை ஒடித்தாற் போல (787)

கலம் போனதுமல்லாமல் கண்ணுக்கும் மூக்குக்கும் வந்தது கேடு (792)

கோபத்தில் அறுத்த மூக்கு சந்தோஷத்தில் வருமா (879)

எழுந்திருப்பாள் காவில்லை (908)

குருட்டுக் கோழி தவிட்டுக்கு வீங்கினது போல் (909)

முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல (912)

ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால்
நொண்டிக்குக் கோபம் (946)

குதிரை குருடானாலும் கொள்ளு தின்கிறதில் குறையா (1194)

உள்ளதையும் கெடுத்தான் நொள்ளைக் கண்ணன் (1241)

குருடும் செவிடும் கூத்துப் பார்த்தாற்போல் செய்கிறாய் 1250)

காசியில் இருந்தவன் கண்ணைக் குத்தக் காஞ்சிபுரத்திலிருந்து
கைநீட்டிக் கொண்டு போனான் (1271)

கண் கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம் செய்கிறது (1290)

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி (1399)

ஊமையன் பேச்சு பழகினபேருக்குத் தெரியும் (1466-அ)

கல்லாதவரே கண்ணில்லாதவர் (1495)

துள்ளாதே துள்ளாதே குள்ளா பக்கத்தில் பள்ளம் அடா (1577)

ஏழாயிரம் பொன்பெற்ற குதிரை இறைப்பைப் பிடுங்குகையில்
குருட்டுக் குதிரை கோதுமை ரொட்டிக்கு வீங்கினதாம் (1684)

பரியத்துக்கு அஞ்சி குருட்டுக் கன்னியைக் கொண்டாற் போல (1789)

நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு (1836)

பிள்ளை நல்லது தான், பொழுது போனால் கண் தெரியாது (1864)

கோழி முடத்துக்குக் கடா வெட்டிக் காவு கொடுக்கிறதா? (2002)

குள்ளனைக் கொண்டு கடல் ஆழம் பார்க்கிறான் (2024)

சிந்தி அறுந்து போகிற மூக்கு எந்த மட்டும் இருக்கும் (2062)

குருடனுக்குக் குருடன் கோல்பிடிக்க முடியுமா? (2134)

குருடனுக்குக் கண் வேண்டும் என்று தானே சொல்லுவான்;
வேண்டாம் என்று சொல்லுவானா? (2135)

பழைய குருடி கதவைத் திறடி (2195)

கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டது போல (2247)

தன் கண்ணைக் கெடுத்து வெங்கண்ணை வாங்க வேண்டுமா? (2251)

ஜென்மக்/பிறவிக் குருடனுக்குக் கண் கிடைத்தது போல (2304)

ஆனையைப் பார்க்க வெள்ளெழுத்தா (2414)

இருட்டு வேலையோ குருட்டு வேலையே (2425)

வந்தாற்போல் சிறுக்கி பந்து அடித்தாள் வரவரச் சிறுக்கி நொண்டி
போனாள் (2497)

பிறக்கிற பொழுதே முடமானால் தெய்வத்துக்குப் படைத்தால்
தீருமா? (2519)

கோணல் கோணல் கோவிந்தா (2537)

ஊமை பிரசங்கம் பண்ண செவிடன் கேட்டது போல (2560)

கைம்பெண்சாதி தாலியைக் கூழைக் கையன் அறுத்தானாம் (2565)

விடிந்தால் தெரியும் மாப்பிள்ளைக் குருடும் பெண் குருடும் (2594)

குருடி தண்ணீருக்குப் போனால் எட்டாள் மினக்கெடு (2641)

கூனியானாலும் கூடை சுமந்துதான் கூலி பெற வேண்டும் (2642)

ஊமை கண்ட கனவு/கனா போல் (2671)

காட்டுக் கிளாக்காயும் கண்கெட்ட தயவில்லாத ஓணானும்
கோர்த்துக் குலவுவது போல (2761)

கதைக்குக் காலுமில்லை தலையுமில்லை (2806)

கண்ணைப் பிடுங்கி முன்னே எறிந்தும் கண்கட்டி வித்தை என்கிறான் (2893)

காது அறுந்த ஊசியும் வாராது காண் (ஐயா) கடைவழிக்கே (2943)

குருட்டுக்கண் தூங்கி என்ன தூங்காது என்ன (3030)

ஊமைக்கு உளறுவாயன்/தெத்துவாயன் உற்பாத பிண்டம் (3070)

முடவனுக்கு/சப்பாணிக்கு நொண்டி சண்டப்பிரசண்டன்/ சடுகுடுப்பை (3074)

குத்தாத காதுக்கு ஊனமில்லை (3085)

உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணிக்கு நோப்பாளம் (3130)

உள்ளதைச் சொல்லி மெலிந்தேன், நொள்ளைக் கண்ணாச்சி பிச்சை போடு (3105)

ஒற்றைக் காலும் ஓரியுமாய்ச் சமுசாரஞ் செய்கிறான் (3166)

கோழி மிதித்து/மெரித்து குஞ்சு முடம் ஆகுமா (3267)

ஆம்புடையான் அழுதகுறை அந்தகன் வந்து வாய்த்தான் (3586)

சப்பாணி மாப்பிள்ளைக்குச் சந்து ஒடிந்த பெண்சாதி (3590)

மொட்டைச்சிக்குத் தகுந்த மூக்கறையன் (3591)

வயிற்றெரிச்சல் பெண்சாதிக்கு மாலைக்கண் ஆம்புடையான் (3592)

இடுப்பொடிந்த கோழிக்கு உரற்குழியே கைலாசம் (ப28)**

உள்ளதும் கெட்டதடா நொள்ளைக் கண்ணா (40)

உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணியம்மாளுக்கு நோப்பாளம் (40)

ஊமைக்கு உளறுவாயன் உற்பாத பிண்டம் (42)

ஊமைக்குத் தெத்துவாயன் உயர்ந்த வாய்ச் சாலகன் (42)

எண் இல்லாதவர் கண் இல்லாதவர், எழுத்து இல்லாதவர் கழுத்து இல்லாதவர் (45)

ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம் (50)

ஓரக் கண்ணனைப் பழிக்கிறான் ஒற்றைக் கண்ணன் (56)

கண்கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம் பண்ணுகிறது (60)

கண்ணைக் கெடுத்த தெய்வம் கோலைக் கொடுத்தது (61)

கல்லாதவரே கண் இல்லாதவர் (65)

கற்றும் கற்றறி மோழை கண்ணிருந்தும் குருடு (70)

காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே (73)

காது காது என்றால் செவிடு செவிடு என்றான் (73)

காதை அறுத்தவன் கண்ணைக் குத்தினாலும் குத்துவான் (73)

காமத்தில் கண் தெரியாது (73)

** இணைப்பழமொழிகள் (தொகு.) தி. செல்வகேசவராய முதலியார், கழகம், 1974 (பக்க எண்கள்)

குருடனுக்குக் குருடன் கோல் பிடிக்க முடியுமா? (81)

குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்கள் (81)

குருடனுக்கு வேண்டியது கண் (81)

குருடனுக்கு வேண்டியது கோல் (81)

குருடனுக்கு வேண்டுவது கண்பெறத் தானே (81)

குருடனை நோட்டம் பார்க்கச் சொன்னது போல (81)

குருடன் கூத்தைப் பழித்தான் (81)

குருடு குருடென்றால் செவிடு செவிடென்கிறாய் (81)

குருட்டுக் கண்ணுக்குக் குறுணி மையிட்டு ஆவதென்ன? (81)

குருட்டுப் பூனை விட்டத்திற் பாய்ந்தாற் போல (81)

கூனி வாயாற் கெட்டாற் போல (85)

கையைச் செட்டிமார் குறைத்தால், காலைக் கைக்கோளன் குறைப்பான் (90)

கோழி மிதித்துக் குஞ்சு முடமாகுமா? (93)

சண்டிக் குதிரைக்கு மொண்டிச் சாரதி (94)

சண்டிக்கேற்ற மிண்டன் (94)

சப்பாணிக்கு நொண்டி சண்டப் பிரசண்டன் (95)

சப்பாணி மாப்பிள்ளைக்குச் சந்தொடிந்த பெண்டாட்டி (95)

செட்டி பணத்தைக் குறைத்தான், சேணியன் காலைக் குறைத்தான் (104)

செத்தவன் கண் செந்தாமரைக் கண், இருந்தவன் கண் நொள்ளைக்கண் (104)

செவிடன் காதிலே சங்கூதினது போல (105)

திவட்டிக்காரனுக்குக் கண் தெரியாது (121)

பேசினால் வாயாடி பேசாதிருந்தால் ஊமைப்பயல் (157)

மலை இலக்கானால் குருடனும் செய்வான் (164)

முடவனுக்கு நொண்டி சண்டப்பிரசண்டன் (165)

முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டாற் கிட்டுமா? (169)

மூக்கறுபட்ட மூளி காதறுப்பட்ட மூளியைப் பழித்தாளாம் (172)

மூக்கறையன் கதை (172)

மேய்கிற கோழியை மூக்கை உடைத்தாற் போல் (173)

மொட்டைச்சிக்குத் தக்க மூக்கறையன் (174)

வாயிருந்தால் மகளே வாழ்ந்துவிட்டு வருவாய் வாயில்லாவிட்டால் நாய் கொண்டு போகும் (180)

அஞ்சனம் குருட்டு விழிக்கு என்ன செய்யும் (130)+

+ கழகப் பழமொழி அகர வரிசை, கழகம், 1970.

அடக்கமற்ற பெண் அவிந்துபோன கண் (164)

அந்தரத்தில் கோல் எறிந்த அந்தகனைப் போல (417)

அயலார் உடமையில் அந்தகன் போல் இரு (518)

அவன் சிறகில்லாப் (சிறகொடிந்த) பறவை (793)

அழகிற்கு மூக்கை அழிப்பார் உண்டா (822)

அற்பக் கோபத்தினால் அறுந்த மூக்கு ஆயிரம் இன்பம் வந்தாலும் வருமா (968)

ஆண்டு மாறின காரும் அன்று அறுத்த சம்பாவும் ஊன் கண்ணுக்கு அரிது (1285)

ஆமுடையானுக்கு அழுதகுறை அந்தகன் வந்து வாய்த்தான் (1346)

ஆயிரம் குருடர்கள் சேர்ந்தாலும் சூரியனைப் பார்க்க முடியுமா? (1398)

ஆன தெய்வம் ஊனஞ் செய்யாது (1645)

ஆனி அடியிடாதே கூனி குடிபோகாதே (1653)

ஆனை கண்ட பிறவிக் குருடர் கடித்துக் கொண்டது போல (1669)

ஆனைக்கு அறுபது முழம், அறக்குள்ளனுக்கு எழுபது முழம் (1684)

ஆனை பார்க்க வெள்ளெழுத்தா (1709)

இடுப்பு ஒடிந்த கோழிக்கு உரற்குழியே கைலாயம் (1793)

இருட்டு வீட்டிலே குருட்டுக் காக்காய் ஓட்டுகிறது (1969)

இருட்டு வேளையோ குருட்டு வேலையோ (1971)

ஈசெல் பொறுக்கி பேசவும் அறியான் (2159)

உழவுந் தரிசும் ஓர்இடத்திலே, ஊமையும் செவிடனும் ஒரு மடத்திலே (2481)

உள்ளதும் கெட்டதா நொள்ளைக் கண்ணா (2518)

உள்ளதைச் சொல்லி மெலிந்தேன் நொள்ளைக் கண்ணாச்சி பிச்சைபோடு (2523)

உள்ளதைச் சொன்னால் நொள்ளைக்கண்ணிக்கு நோப்பாளம் (2528)

உள்ளதை கெடுத்தான் (நொள்ளை) கொள்ளிக் கண்ணன் (2530)

உன் குதிரை குருடு; ஆனாலும் கொள்ளுத் தின்பது கொள்ளை (2593)

உன்னைக் கெடுப்பேனோ சென்னைக் கூனி நீ கூமை சுமந்தல்லவோ கூனிப் போனாய் (2614)

ஊமை ஊரைக் கெடுக்கும், ஆமை கிணற்றைக் கெடுக்கும் (2662)

ஊமை ஊரைக் கெடுக்கும்; பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும் (2663)

ஊமை கண்ட கனாப் போல் (2664)

ஊமை கண்ட கனாப் போல சீமை பட்டணம் ஆகுமா (2665)

ஊமைக்கு உளறுவாயன் உற்பாத பிண்டம் (2666)

ஊமைக்குத் தெத்துவாயன் உயர்ந்த வாய்ச் சாலகன் (2667)

ஊமை பிரசங்கம் பண்ணச் செவிடன் கேட்டது போல (2668)

ஊமையன் கனவு கண்டது போலச் சிரிக்கிறான் (2669)

ஊமையன் பாட, சப்பாணி ஆட, செவிடன் கேட்க, குருடன் பார்க்க (2670)

ஊமையன் பேச்சு பழகினபேருக்குத் தெரியும் (2671)

ஊமையாயிருந்தால் செவிடும் உண்டு (2672)

ஊமையுமல்ல செவிடுமல்ல (2673)

ஊமையும் ஊமையும் மூக்கைச் சொறிந்தாற் போல (2674)

ஊனமில்லான் மானமில்லான் (2756)

ஊனம் உடலுக்கு மானம் உயிருக்கு (2757)

எங்கே அடித்தாலும் நாய்க்குக் காலிலே முடம் (2768)

எடுக்கப்போன சிமாட்டி இடுப்பு ஒடிந்து விழுந்தாளாம் (2788)

எடுக்கு முன்னே கழுதை இடுப்பு ஒடிந்து விழுந்ததாம் (2793)

எண் இல்லாதவர் கண் இல்லாதவர், எழுத்து இல்லாதவர் கழுத்து இல்லாதவர் (2838)

எதிரிக்குச் சகுனத் தடையென்று மூக்கை அறுத்துக் கொள்ளுகிறதா (2873)

எழுந்திருப்பாள் கால் இல்லை (3048)

என்னுடைய நாட்களெல்லாம் ஊமை கண்ட கனாப்போல ஆயின (3104)

என்னடி அம்மா தெற்கத்தியாள், எந்நேரம் பார்த்தாலும் தொள்ளைக் காது (3139)

ஏழாயிரம் பொன் பெற்ற குதிரை இறப்பைப் பிடுங்குகையில் குருட்டுக் குதிரை கோதுமை ரொட்டிக்கு வீங்கினதாம் (3215)

ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம் (3229)

ஏறினால் எருதுக்கு கோபம் ஏறாவிட்டால் நொண்டிக்குக் கோபம் (3235)

ஓரக் கண்ணனைப் பழிக்கிறான் ஒற்றைக் கண்ணன் (3511)

கசடருக்கு யோகம் வந்தால் கண்ணுந் தெரியாது காதுங் கேளாது (3540)

கடல்தாண்ட மனமுண்டு கால்வாய் தாண்டக் கால் இல்லை (3568)

கடுஞ்செட்டு கண்ணைக் கெடுக்கும் (3638)

கண்குருடு ஆனாலும் நித்திரையில் குறையா?/தாழ்ச்சி இல்லை (3737)

கண் குருட்டுக்கு மருந்து இட்டால் தெரியுமா? (3738)

கண் கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம் செய்கிறது (3740)

கண்ணிழந்தவனுக்குக் கண்டவெல்லாங் கறுப்பு (3801)

கண்ணும் கருத்தும் உள்ளபோது இல்லாமல் கண் பஞ்சடைந்த பின்பு என்ன கிடைக்கும் (3821)

கண்ணூரனன் கைப்பொருள் இழப்பான் (3825)

கணணைக் கெடுத்த தெய்வம் கோலைக் கொடுத்தது (3830)

கண்ணைக் கெடுத்த தெய்வம் மதியைக் கொடுத்தது (3831)

கண்ணைப்பிடுங்கி முன்னே எறிந்தும் கண்கட்டி வித்தை என்கிறான்/என்பார் போல் (3833)

கண் பறிகொடுத்துக் கலங்கினாற் போல (3842)

கம்மாளன் பசுவைக் காதறுத்துக் கொள்ள வேண்டும் (3916)

கம்மாளன் பசுவைக் காதறுத்துக் கொண்டாலும் உள்ளே செவ்வரக்குப் பாய்ச்சியிருப்பான் (3917)

கர்த்தாவைக் குருடன் வேண்டுவது கண்பெறத் தானே (3986)

கல்லாதவரே கண்ணில்லாதவர் (4039)

களையெடாதவன் கபோதி (4145)

கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பலாகாது (4170)

கள்ளன் செய்த சகாயம், காதை அறுக்காமல் கடுக்கனைக் கழற்றிக் கொண்டான் (4176)

கற்றும் சற்றறி மோழை, அதுபோலக் கண்ணிருந்தும் குருடு (4250)

காசியில் இருந்தவன் கண்ணைக் குத்தக் காஞ்சீபுரத்திலிருந்து கையை நீட்டிக் கொண்டு போனானாம் (4335)

காட்டுக் கிளாக்காயும் கண்கெட்ட தயவில்லா ஓணானும் கோத்துக் குலவுவது போல (4371)

காணாது கண்ட கம்பங் கூழைச் சிந்தாது குடி அடி சில்லி மூக்கி (4395)

காணாமல் கண்டேனோ கம்பங் கதிரை, சிந்தாமல் குத்தடி சில்லி மூக்கி (4397)

காது அறுத்த கூலி கைமேலே (4420)

காது அறுத்தாலும் அறுக்கும் பேன் எடுத்தாலும் எடுக்கும் குரங்கு (4421)

காது இழந்தவர் கருத்து மிகுந்தவர் (4422)

காதுகாது என்றால் செவிடு செவிடு என்கிறான் (4423)

காதை அறுத்தவன் கண்ணைக் குத்தினாலும் குத்துவான் (4429)

காதை அறுத்தவன் கண்ணையும் குத்துவான் (4430)

காமத்துக்குக் கண் இல்லை (4438)

குங்குமக் கோதைக்கு அஞ்சு பணம், குருட்டுக் கண்ணிக்கும் அஞ்சு பணமா? (4681)

குசத்தி நாக்கைக் கூழையாய் அறுத்தாலும் குடம் இரண்டு காசென்பாள் (4684)

குட்டைத் தாதன் மகன் மொட்டைத் தாதன், குளத்திலே விழுந்து செத்தான் (4764)

குதிரை குருடானாலும் கொள்ளு தின்கிறதில் குறையா (4802)

குத்தாத காதுக்கு ஊனம் இல்லை (4823)

குந்தி நாக்கைக் கூழையாய் அறுத்தாலும் இடம் இரண்டு காசென்பாள் (4832)

குருடனுக்குக் கண் வேண்டுமென்று தான் சொல்லுவான் வேண்டாமென்று சொல்லுவானா (4896)

குருடனுக்குக் குருடன் கோல்பிடிக்கலாமா (4897)

குருடனுக்குப் பால் கொக்குப் போன்றது (4898)

குருடனுக்குப் பாற்சோறு இட்டது போல (4899)

குருடனுக்கு வேண்டியது கோல்/கண் (4900)

குருடனும் செவிடனும் கூத்துப் பார்க்கப் போய் குருடன் கூத்தைப் பழித்தான் செவிடன் பாட்டைப் பழித்தான் (4901)

குருடனை நோட்டம் பார்க்கச் சொன்னாற் போல் (4902)

குருடனைப் பார்த்து ராஜவிழி விழிக்கச் சொன்னால் விழிப்பானா (4903)

குருடன் ஆடுமேய்க்க எட்டாளுக்கு வேலையா (4904)

குருடன் கூத்துப் பார்க்கப் போனால் பலன் என்ன (4905)

குருடன் கைக்கோலைப் பிடுங்கினது போல (4906)

குருடன் கையில் விலாங்கு அகப்பட்டது போல (4907)

குருடன் தண்ணீர்க்குப் போக எட்டாள் மினக்கிடு (4908)

குருடன் பொண்டாட்டி கூனனோடு உறவாடினாள் (4909)

குருடன் பெண்டிரை அடித்தாற் போல (4910)

குருடன் ராசவிழி விழித்தாற் போல (4911)

குருடன் வேண்டுகிறது கண்பெறத் தானே (4912)

குருடானாலும் குதிரை சிமிட்டுகிறதில் தாழ்ச்சி இல்லை (4913)

குருடும் குருடும் குருட்டாட்டமாடி குழியில் விழுமாறே (4914)

குருடும் செவிடும் கூத்துப் பார்த்தாற் போல (4915)

குருட்டுக் கண்ணுக்குக் குறுஞ்ணி மையிட்டு ஆவதென்ன (4916)

குருட்டுக்கண் தூங்கி யென்ன தூங்காதென்ன (4917)

குருட்டுக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு (4918)

குருட்டுக் கொக்கிற்கு ஊர்க்குளமே சாட்சி (4919)

குருட்டுக் கோழி தவிட்டுக்கு வீங்கினது போல (4920)

குருட்டுப் பூனை விட்டத்திற் பாய்ந்தது போல (4921)

குருட்டை மாட்டை தெய்வம் காக்கிறது (4922)

குலமகன் குலத்துக்கு அழுவான், மூக்கறையன் மூக்குக்கு அழுவான் (4956)

குழந்தை காய்ச்சலுடன் குண்டன்/குள்ளன் காய்ச்சலும் பொல்லாது (4960)

குள்ளப் பார்ப்பான் பள்ளத்தில் விழுந்தான் தண்டு எடு தடி எடு (5004)

குள்ளனைக் கொண்டு கடல்ஆழம் பார்க்கிறான் (5005)

குள்ளன் குடிகெடுப்பான் குள்ளன் பெண்சாதி ஊரைக் கெடுப்பாள் (5006)

குறுணி மைதான் இட்டாலும் குருடு குருடே (5016)

கூகைக்குப் பகலில் கண் தெரியாது (5040)

கூனனைக் கொண்டு குழப்படி மாமி காணிக்குப் பிள்ளைபெற (5111)

கூனன் குறைதீர்ந்தான் கொடியோன் வினை பெயர்ந்தான் (5112)

கூனி ஆனாலும் கூடை சுமந்துதான் கூலி பெற வேண்டும் (5113)

கூனி வாயாற் கெட்டாற் போல (5114)

கை இல்லாதவன் கரணம் போடலாமா, கால் இல்லாதாவன் ஓடலாமா (5199)

கை உண்டாவது கற்றவர்க்கு ஆமே (5201)

கைம்பெண் சாதி/கைம்பெண்டாட்டி தாலியைக் கூழைக் கையன் அறுத்தானாம் (5229)

கையை அறுத்துவிட்டாலும் அகப்பை கட்டிக்கொண்டு திருடுவான் (5271)

கையை உடைத்துவிட்டவன் தலையை உடைத்தாலும் உடைப்பான் (5272)

கையைச் செட்டியார் குறைத்தால் காலைக் கைக்கோளன் குறைப்பான் (5273)

கைவைத்தால் கை இற்றுப்போம் (5280)

கொக்கு இளங்குஞ்சும் கேணாத தெங்கும் கண்டதில்லை (5285)

கொடுத்துக் கொடுத்து இரு கையும் கூழையாய்ப் போச்சுது (5334)

கொள்ளையிடப் போகிறவனுக்குக் குருடன் துணை ஆகுமா (5430)

கோபத்தில் அறுத்த மூக்கு சந்தோடத்தில் வருமா (5461)

கோல் இழந்த குருடனைப் போல (5486)

கோல் எடுத்த பிள்ளை, குருட்டுப் பிள்ளை (5487)

கோழிக் காய்ச்சலும் குண்டன் காய்ச்சலும் விடாது (5512)

கோழி மிதித்துக் குஞ்சு முடம் ஆகுமா (5519)

கோழி முட்டைத்துக்குக் கடாவெட்டிக் காவு கொடுக்கிறது (5520)

கோழி முட்டைத்துக்குக் கடாவெட்டிப் பலி இட்டது போல (5521)

சண்டிக் குதிரைக்கு நொண்டிச் சாரதி (5571)

சப்பாணிக்கு நொண்டி சண்டப் பிரசண்டன் (5638)

சப்பாணிக்கு விட்ட இடத்திலே கோபம் (5639)

சப்பாணி மாப்பிள்ளைக்குச் சந்தொடிந்த பெண்சாதி (5640)

சன்மக் குருடனுக்குக் கண்கிடைத்தது போல (5715)

சிந்தி அறுந்துபோகிற மூக்கு எந்த மட்டுக்கும் இருக்கும் (5861)

சினத்தால் அறுத்த மூக்குச் சிரித்தால் ஒட்டுமா/வருமா? (5930)

சீனிக் கிழங்கு தின்கிற பன்றியைச் செவி அறுத்தாலும் விடாது (5972)

சூதுக்காரன் கையை வெட்டிப் போட்டாலும் துடுப்பைக் கட்டிக் கொண்டு ஆடுவான் (6097)

செத்தவன் கண் செந்தாமரைக் கண்/கடாக்கண்; இருந்தவன் கண் நொள்ளைக் கண்/இல்லிக் கண் (6196)

செவிடனும் குருடனும் கூத்துப் பார்த்தாற் போல (6276)

செவிடன் காதில் சங்கு ஊதினது போல (6277)

செவிடன் பாட்டுக் கேட்ட சம்பந்தம் (6278)

செவிடு இருந்தால் ஊமை இல்லையா (6279)

செவிடு என்றால் தவிடு என்கிறான் (6280)

சென்மக் குருடனுக்குக் கண் கிடைத்தது போல (6283)

சோற்றுச் சுவையோடு தொத்தி வந்த நொள்ளை (6407)

தமக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழை வேண்டும் (6525)

தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழை வேண்டும் (6655)

தன் கண் இரண்டும் போனாலும் அயலான் கண் ஒன்றாவது போக வேண்டும் (6666)

தன் கண்ணைக் கொடுத்து வெங்கண்ணை வாங்க வேண்டும் (6667)

தானப்பனுக்கு மூக்கில்லையானால் சாட்சிசொல்ல நாக்குப் போதாதா (6842)

தான்பிடித்த முயலுக்கு மூன்றே கால் (6890)

தீவட்டிக்காரனுக்குக் கண் தெரியாது (7037)

துள்ளாதே துள்ளாதே குள்ளா, பக்கத்தில் பள்ளம் அடா (7111)

தேங்காய்க்கு மூன்று கண் எனக்கு ஒரு கண் (7203)

நபுஞ்சகன் கையில் அரம்பை அகப்பட்டது போல (7394)

நல்ல அமைச்சு இல்லாத அரசு விழியின்றி வழிச்செல்வோன் போலாம் (7445)

நாய் வாசலைக் காத்தென்ன கைஇல்லாதவன் பணக்காரனைக் காத்தென்ன (7618)

நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்/மூன்றே கால் (7708)

நிட்டூரன் கண்ணைத் தெய்வம் கெடுக்கும் நீதிமான் கண்ணைப் பரிதானம் கெடுக்கும் (7715)

நெடியார் குறியாரை ஆற்றிலே தெரியலாம் (7855)

நொண்டி ஆயக்காரன் கண்டு மிரட்டுகிறது போல (7924)

நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு (7925)

நொண்டி நொண்டி நடப்பானேன்? கண்டதற்கெல்லாம் படைப்பானேன் (7926)

பங்கறை/பதங்குறைந்த சாவானுக்குப் பல் அழகைப் பார் (7965)

பசுமாடு நொண்டியானால் பாலும் நொண்டியா (8008)

பட்டப்பகல் போல நிலவெறிக்க குட்டிச் சுவரிலே முட்டிக் கொள்ள வெள்ளெழுத்தா (8090)

பரிசத்துக்கு அஞ்சி குருட்டுக் கண்ணி/கன்னியைக் கொண்டது போல (8234)

பரிசத்துக்கு லோபி இழிகண்ணியைக் கொண்டானாம் (8235)

பழைய குருடி கதவைத் திறடி/திறவடி (8306)

பிள்ளை நல்லதுதன்/பிள்ளையாண்டான் கெட்டிக்காரன் பொழுது போனால் கண் தெரியாது (8653)

பிறக்கிற பொழுதே முடமானால் பேய்க்கு/தெய்வத்துக்குப் படைத்தால் தீருமா? (8681)

பிறவிக் குருடனுக்குக் கண்கிடைத்தது போல (8692)

பிறவிக் குருடனுக்குத் தெய்வம் கண் கொடுத்தாற் போல (8693)

பிறவிக் குருடன் நிரடு பலத்த முடிச்சாயிருக்கும் (8694)

பிறவிச் செவிடனுக்குப் பேசத் திறமுண்டா (8695)

பெண்ணுமல்லாமல் ஆணுமல்லாமல் பெருமரம் போல் வளருகிறது (8930)

பெண்ணை வேண்டும் என்றால் இளியற் கண்ணை நக்கு (8937)

பேசில் அபலம் பேசாக்கால் ஊமை (9008)

பேசினால் வாயாடி பேசாதிருந்தால் ஊமைப்பயல் (9009)

பேடிகையில் ஆயுதம் பிரகாசிக்குமா (9019)

பேடிகையில் ரம்பை அகப்பட்டது போல (9020)

பேடி கையில் வாள் போல (9021)

மகா புருடர் மகிமை பிறவிக் குருடனுக்குத் தெரியுமோ (9213)

மலைத்தேன் முடவனுக்கு வருமா? (9401)

மலை இலக்கு ஆனால் குருடனும் எய்வான் (9408)

முடப்பிள்ளை யானாலும் மூத்த பிள்ளை (9673)

முடப்புல் முக்கல நீரைத் தடுக்கும் (9674)

முடவனுக்குக் கோபம் விட்ட இடத்திலே (9675)

முடவனுக்கு/சப்பாணிக்கு நொண்டி சண்டப்பிரசண்டன் சடுகுடுப்பை (9676)

முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டாற் போல (9677)

முடவன் சண்டைக்குப் போனாற்போல (9678)

முண்டனுக்கு இரண்டாள் (9708)

முண்டைக் கண்ணி பிள்ளை இரண்டு கண்ணும் நொள்ளை (9709)

முதல் எழுத்திலே வெள்ளெழுத்தா (9724)

முப்பதிலே வாழ்ந்தவன் மூடன்; முன்னும் பின்னும் தெரியாதவன் குருடன் (9748)

மூக்கறைக்கு முகுரம் காட்டினால் கோபம் வரும் (9818)

மூக்கறையனுக்கு வாழ்க்கைப்பட்டால் முன்னும் போகவிடான் பின்னும் போகவிடான் (9819)

மூக்கறையன் கண்ணாடியைப் பகைத்தது போல (9820)

மூக்கறையன் கதைபோல் பேசுகிறான் (9821)

மூக்கிலிக்குக் கண்ணாடி காட்டினது போல (9822)

மூக்கு அறுந்த/அறுபட்ட மூளி, காது அறுந்த/அறுபட்ட மூளியைப் பழித்தாளாம் (9823)

மூக்கு அறுபட்ட கழுதை தூவானத்திற்கு அஞ்சாது (9824)

மூடரோடு ஆடிய நட்பு கடுவழியிற் கட்டை ஊடாடிய கால் (9840)

மூன்று மாதத்திற்கு முன்னே பல் போனவளுக்கு முறுக்குக் கடையில் என்ன வேலை (9877)

மேய்கிற கோழியின்/கோழியை மூக்கை ஒடித்தாற் போல (9916)

மொட்டைச்சிக்குத் தகுந்த மூக்கறையன் (9943)

மௌனி குடியைக் கெடுப்பாள் (9973)

யானைக்கு அறுபது அடி, அருங்குள்ளனுக்கு எழுபது அடி (9975)

யானை வந்தால் ஏறுவேன் சப்பாணி வந்தால் நகருவேன் (9988)

வயிற்றெரிச்சற் பெண்சாதிக்கு மாலைக்கண் ஆமுடையான் (10148)

வருவான் குருடன் விழுவான் கிணற்றிலே (10179)

விடிந்தால் தெரியும் மாப்பிள்ளை குருடும் பெண் குருடும் (10410)

வீடெல்லாம் குருடு வாசலெல்லாம் கிணறு (10591)

விடுகதைகள்

அக்காள் சப்பாணி தங்கை நர்த்தனப் பெண் இந்த இருவரும் இல்லாவிட்டால் குடித்தனப் பெண் சிணுங்குவாள் - அவள் யார்? (9)* *(உரல் உலக்கை)*

இடை இல்லாத பெண்ணொருவள் வாயில்லாத குடமெடுத்து கரையில்லாத ஏரிக்குத் தண்ணீருக்குப் போனாள்; அங்கு காலில்லாத மானொன்று வேரில்லாப் புல்லை மேய்ந்து கொண்டிருக்க அதைக் கண்ட வேடனொருவன் வானத்தை வில்லாய் வளைத்து ஆற்றுமணலை அம்பாய்ப் பூட்டி எய்தான்; அது மானின் மேல்படாமல் மான் வயிற்றுக்குள்ளிருந்த குட்டியின் மேல்பட்டது; அதைக் கொண்டு வந்து காலில்லாப் பந்தலில் கட்டி வைத்தான்; அதை முகமில்லா நாய் கொண்டுபோய்விட்டது - அது என்ன? (304) *(விடை இல்லை)*

இருட்டுக்காட்டில் குருட்டுப் பன்றி மேயுது - அது என்ன? (359) *(பேன்)*

இருட்டு வீட்டிலே குருட்டெருமை மேயுது - அது என்ன? (363) *(பெருச்சாளி)*

உச்சியிலே பூப்பூக்கும் சங்கத் தாரே
உம்மை உள்ளங்கை மூக்கனார் கொல்ல வரார்
கழுத்தில்லா குயவேர உமக்கு எப்படித் தெரியும்
பல்லில்லா நாக்கனார் சொல்லக் கேட்டேன் (412) *(தாழம்பூ, யானை, நண்டு, மணி)*

உச்சியிலே பூப்பூத்த சொக்க நாதா
உள்ளங்கை மூக்கனுன்னைத் தின்ன வாரான்
தலையில்லாச் செட்டிமகனே யுனக்கார் சொன்னார்?
குடலில்லாக் கோமுட்டி மகன் கூவிச் சொன்னான் - அவர்கள் யார்? (413) *(தாழம்பூ, யானை, நண்டு, மணி)*

உச்சியிலே பூப்பூத்தவரே உம்மைத் தின்ன வாரான்
சிரமில்லாதவரே உமக்கு யார் சொன்னது?
நாக்கிலே ஈரப்பசை இல்லாதவர் சொன்னார் - அது என்ன? (414) *(பூத்த நாணல், பூக்காத நாணல், மணி)*

உச்சியிலே பூவுடையானே உன்னைக் கொல்லத் தானே
உள்ளங்கை மூக்கழகன் வாரானே இப்போ
தலையில்லா ராசாவே உனக்கு யாரடா சொன்னது?

தசையில்லா நாக்கழகன் கத்தினான் இப்போது (416) *(கோரை, யானை, நண்டு, மணி)*

\+ தமிழில் விடுகதைகள், ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1975, எண், வரிசை எண், விடைகள், அடைப்புக் குறியுள்.

உடல் இல்லாதவன் ஊரெல்லாம் திரிவான் - அவன் யார்? (421) *(புகை)*

உடல் உண்டு தலை இல்லை கை உண்டு கால் இல்லை
தானாகவே ஓடும் - அது என்ன? (422) *(கடிகாரம்)*

உயிரில்லா உடலுள்ள ஊமையாம் தோழா
உயர்வான உண்மைகளை உரைத்திடுவான் தோழா
கையின்மேல் காசளித்தால் வந்திடுவான் தோழா - இது என்ன? (455) *(புத்தகம்)*

உயிரில்லாமல் ஓடித் திரிவான், மூக்கில்லாமல் மூச்சு விடுவான்
வாயில்லாமல் தண்ணீர் குடிப்பான்,
வயிறில்லாமல் கரியைத் தின்பான்
ஒளிக்கண்ணுண்டு, காதல் பார்வையுண்டு
காற்றிற்கும் அஞ்சான், மழைக்கும் அஞ்சான்
காட்டிலும் போவான், மேட்டிலும் போவான்
ஆற்றைக் கடப்பான், ஆயிரம் மைலும் கடப்பான், அலறித் திரிவான் - அவன் யார்? (457) *(புகை வண்டி)*

ஊசி எப்போது செவிடரை ஒக்கும்? (503) *(காது போன போது)*

ஊசி போட்ட வைத்தியர்
ஊமை போலப் போகிறார். அவர் யார்? (507) *(தேள்)*

எங்கள் தம்பி குள்ளத் தம்பி
பந்தடிப்பான் பயிரடிப்பான்
நூறுபேரை நொறுங்கடிப்பான் - அது என்ன (545) *(ஈர்க்கொல்லி)*

ஒத்தைக் கால் குள்ளனுக்கு எட்டுக்கை - அது என்ன? (683) *(குடை)*

ஒத்தைக்கண் உடையவராம் ஒல்லியாய் இருப்பாராம்
உடம்பிலே பட்டாலே உஸ் என்று கத்திடுவோம் - அது என்ன? (728) *(ஊசி)*

ஒல்லியான மனிதன் ஒரு காது மனிதன்
காதுபோனால் தொடமாட்டார்கள் - அவன் யார்? (729) *(ஊசி)*

ஒற்றைக் கால் குருவி உழக்கு முட்டை இடும் - அது என்ன? (735) *(சோளம்)*

ஒற்றைக்கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை - அது என்ன? (736) *(மிளகாய்)*

ஒற்றைக்கால் நாராயணன் ஓடையிலே மீன் பிடிக்கிறான் - அவன் யார்? (737) *(கொக்கு)*

ஒற்றைக்கால் மனிதனுக்கு ஒன்பது கை - அது என்ன? (738) *(மரம்)*

ஒற்றைக் காலில் ஆடுவான்
ஓய்ந்து போனால் படுப்பான் - அவன் யார்? (739) *(பம்பரம்)*

ஓடுமாம் சாடுமாம் ஒற்றைக் காலில் நிற்குமாம் - அது என்ன? (776) *(கதவு)*

கட்டையன் கட்டையன்
கருப்புக் கட்டையன்
கண்டவர்க்கு எல்லாம்
உருண்டைக் கட்டையன்
ஊருக்கு எல்லாம் உறைச்ச கட்டையன் - அவன் யார்? (796) *(மிளகு)*

கண் உண்டு பார்க்காது
கால் உண்டு நடக்காது - அது என்ன? (813) *(கட்டில்)*

கண்ட துண்டமாகக் கரியைத் தின்பேன்
கண்கள் இல்லாமல் காதம் நடப்பேன்
தாகம் இல்லாமல் தண்ணீர் குடிப்பேன்
குரல் இல்லாமல் கூச்சல் போடுவேன் - நான் யார்? (817) *(புகைவண்டி)*

கண் இல்லாத நான் குருடருக்கு வழி காட்டுகிறேன் - நான் யார்? (831) *(கைத்தடி)*

கண்ணுண்டு செவியில்லை
கண்டிடும் கேட்டிடும் - அது எது? (839) *(பாம்பு)*

கழுத்து உண்டு தலையில்லை
உடல் உண்டு, உயிர் இல்லை
கையுண்டு விரலில்லை - அது என்ன? (895) *(சட்டை)*

கழுத்துண்டு கையில்லை
நாக்குண்டு பேச்சில்லை
வாயுண்டு அசைவில்லை
தொப்பியுண்டு தலைமயிரில்லை - அது என்ன? (896) *(பேனா)*

காதில்லைக் கேட்பதற்கு - கண்களில்லை பார்ப்பதற்கு
வாயுமில்லை பேசுதற்கு
வந்தவர்க்கு நீதியுண்டு என்னிடத்தில் - நான் யார்? (986) *(தராசு)*

கால் இல்லாத கள்வன் கால் உள்ளவனைப் பிடித்தான்
தலை இல்லாதவன் அதைப் பார்த்துக்
கலகலவென்று சிரித்தான் - அவர்கள் யார்? (1011) *(பாம்பு, தவளை, நண்டு)*

கால் இல்லாத மனிதன்
ஐந்து நிமிடத்தில் மறைகிறான் - அவன் யார்? (1012) *(பாம்பு)*

கால் இல்லாத மான்
வேர் இல்லாத புல்லைத் தின்னும் - அது என்ன? (1013) *(மீன், பாசி)*

காலில்லா மாடொன்று கட்டுண்டிருப்பதைக்
கண்ணில்லான் காவல் காத்துக் கொண்டிருக்கக்
கையில்லான் பாலைக் கறந்து கொடுக்க
வாயில்லான் வாங்கி வயிறு நிறைய உண்டானே (1034) (விடை இல்லை)

காலில்லாதவன் காலுள்ளவனைப் பிடித்தான்
அதைப் பார்த்துத் தலையில்லாதவன் சிரித்தான் - அவை என்ன? (1035) (பாம்பு, தவளை, நண்டு)

காலில்லை கையில்லை கண்களுண்டு
வாலுண்டு சிறகுண்டு வலிமையாக - அது என்ன? (1036) (மீன்)

காலு இல்லாத கையில்லாத சீவனக்கனம் செத்துனக்கனம் கிடக்குது
நாலு காலு சீவனக்கனம் மோந்து நக்கனம் பார்க்குது
இரண்டு காலு சீவனக்கனம் தூக்க நக்கனம் பார்க்குது - அது என்ன? (1037) (பாம்பு, நாய், கருடன்)

காலுமிரண்டுண் டெழுந்து நடக்க மாட்டான்
கண்ணிரண்டும் மேல் சிமிட்டி விழிக்க மாட்டான்
கோலுண்டு தானறுப்பான் கத்தியன்று
கூன் வளர்ந்த முதுகுண்டு நிமிர மாட்டான்
பாலு வந்து வடித்தறியான் பாக்குத் தின்பான்
பகரு மனல் மூட்டியலை வடித்தே வாழ்வான்
பரிவாய் இக்கதை விவரம் பகருவாயே (1041) (பாக்கு வெட்டி)

காலுமில்லை இறகுமில்லை
கணப்பொழுதில் கோடி காதமோடும்
ஆறுக்கு அஞ்சாது மலைக்கு மயங்காது
எதற்குஞ் சலிக்காது இதென்ன உரைப்பீரே (1042) (காற்று)

காலுமில்லை கைகளுமில்லையே
சாலு போன்ற வயிறு தழைக்குமே
கோலக் கண்ணிற் சோறுண்டு குத்திடும்
ஓலம் செய்யும் ஒருவர் தனைத் தொட - அது என்ன? (1043) (மத்தளம்)

காலுமில்லை வாலுமில்லை காதவழி ஓடுவேன்
ஓடி நின்ற இடங்களெல்லாம் தொட்டி நீர் அருந்துவேன்
காற்று மழை வெயில் பனி ஒன்றுக்குமே அஞ்சிடேன்
கட்டைக் கரி இரண்டினையும் கணக்கில்லாமல் உண்குவேன்
பேச்சு உயிரும் இல்லை யெனினும் பெரிய சத்தம் போடுவேன்
எப்படி நீ சொன்னாலும் அப்படி நான் செய்குவேன் - நான் யார்? (1044) (இரயில் வண்டி)

காலே இரண்டுண்டு நடக்கறியாள் இரு கண்ணும் உண்டு
மேலே சிமிட்ட வகையறியாளந்த மெல்லி நல்லாள்
பாலே குடிக்க வகையறியாள் சில பாக்குத் தின்பாள்

ஆலே அறிந்திதைச் சொன்னவர்க்கு செம்பொன் ஆயிரமே (1045) *(பாக்கு வெட்டி)*

கானகம் சென்றிரண்டு
கன்னிகைகள் கொண்டு வந்தேன்
ஒருமகள் உழைப்பாளி
ஒருமகள் சப்பாணி - அவர்கள் யார்? (1063) *(திருகை)*

குட்டப் பிள்ளைக்கு குறுணி நகை - அது என்ன? (1086) *(கோழி மயிர்)*

குட்டைக் குட்டைப் பாப்பாத்தி
குளித்துக் குளித்துக் கரையேறுகிறாள் - அது என்ன? (1088) *(கடகால்)*

குட்டைச் சிறுக்கிக்குப் பெட்டிப் புடவைகள் - அது என்ன? (1089) *(உள்ளிப்பூண்டு)*

குட்டைப்பயல் குழியில் விழுந்தான்
நெட்டைப் பயல் எடுத்துவிட்டான் - அவன் யார்? (1091) *(பணியாரம்)*

குட்டைப் பனையிலே எட்டுமுட்டி - அது என்ன? (1092) *(கத்திரிக்காய்)*

குட்டைப் பொண்ணுக்கு எட்டுமுழச் சேலை - அது என்ன? (1093) *(நீர் இறைக்கும் வாளி)*

குட்டை மரத்தில் கொட்டாப்புளி - அது என்ன? (1094) *(கத்திரிக்காய்)*

குட்டையான அழகிக்கு நெட்டையான சடை - அவள் யார்? (1095) *(கத்திரிக்காய்)*

குண்டன் குழியிலே விழுந்தான் - அவன் யார்? (1103) *(குழிப்பணியாரம்)*

குண்டன் வாயில் குள்ளன் புகுந்தால்
குபேர பட்டிணத்திற்கு வழி தெரியும் - அது என்ன? (1104) *(பூட்டு-சாவி)*

குண்டுக் குள்ளனுக்குக் குடுமி நிமிர்ந்து நிற்கும் - அது என்ன? (1107) *(தேங்காய்)*

குண்டோதரன் வாயில் குள்ளன் நுழைந்தால்
குபேர பட்டிணத்திற்கு வழி தெரியும் - அது என்ன? (1112) *(பூட்டு-சாவி)*

குத்தவைத்துக் கொண்டிருக்குமாம் கூழப் பய பிள்ளை - அது என்ன? (1113) *(செம்பு)*

குயவனோ கன்னனோ என்னைப் பெற்றான்
பெண்களோ என் கழுத்தைக் கட்டிக் கொள்வர்
ஆண்களோ தோளின்மேல் வைத்துக் கொள்வர்
கால் கை யில்லாப் பாவிக்கு இரங்கா ருண்டோ? நான் யார்? (1124) *(குடம்)*

குள்ள அக்காள் குள்ள அக்காள்
கூடை சுந்தை கட்டி இருப்பாள் - அவள் யார்? (1129) *(வாத்து)*

குள்ளப்பெண் குலுங்கி நடந்தால்
கூடக்கூடப் போக வேணும் - அது என்ன? (1130) *(துடைப்பம்)*

குள்ளமான கோழிக்குக் குடலுக்குள் சதங்கை - அது என்ன? (1131) *(வேர்க்கடலை)*

குனிந்த கிழவிக்குக் கூனெல்லாம் பல்லு - அது என்ன? (1140) *(கருக்கரிவாள்)*

கூனற் கிழவனுக்குக் குதிகால் வரைப் பற்கள் - அது என்ன? (1148) *(கருக்கரிவாள்)*

கை இல்லாமல் நீந்துவான்
கால் இல்லாமல் ஓடுவான் - அவன் யார்? (1150) *(படகு)*

கைகளுண்டு கால்களில்லை
உடலுண்டு தலையில்லை
கையை விட்டுக் கழற்றினால்
அது சுருங்கிப் போகும் - அது என்ன? (1154) *(சட்டை)*

கையில்லாதவன் கடிதமெழுதினான்
பார்வை யில்லான் படித்துப் பார்த்தான்
செவியில்லாதான் செவ்வையாய்க் கேட்டான் - அது என்ன? (1158) *(தந்தி அடிக்கும் கருவி)*

கையில்லாமல் நீந்துவேன்
கொம்பிருந்தும் குத்த மாட்டேன் - நான் யார்? (1159) *(படகு)*

கையுண்டு காலில்லை
கழுத்துண்டு தலையில்லை - அது என்ன? (1162) *(சட்டை)*

கையும் இல்லை காலும் இல்லை கட்டப் பெண்டாட்டி
கை எடுக்கும் நேரம் எல்லாம் காரியக்காரி - அவள்யார்? (1163) *(படி)*

கொங்கையுண்டு தாளுமுண்டு பெண்ணுமன்று
கொவ்வையைப் போல் சிவந்திருக்கும் உதடுமன்று
தெங்கின் சுவையுண்டு, சர்க்கரையு மன்று
செங்கையினா லுரைபடும் சந்தனமு மன்று
கங்கு வைத்து அடிதடிகள் சண்டையாகும்
கல்யாணம் போவதில்லை நொண்டி தானே
எங்களுக்கும் ஒரு சமயம் உண்டு கண்டாய்
இராசாக்கள் மெச்சுமிதை இயம்புவாயே (1167) *(கேழ்வரகு)*

சித்தூர் மாரியாத்தாள் சின்னப் பொம்பிளை
சித்தாடை செய்து உடுத்தாக் கட்டப் பொம்பிள
காலுமில்லை கையுமில்லை குட்டப் பொம்பிள்ளை
அவள் கணக்கெடுத்த நாள்முதலாய்க் காரியக்காரி - அவள் யார்? (1277) *(உழக்கு)*

செவி இல்லாத செவிடன்
செகம் பூராவும் திரிகிறான்
கால் இல்லாத கபடன்
கண்ட இடமெல்லாம் போகிறான் - அவன் யார்? (1400) *(பாம்பு)*

தலையில்லா ராசா வெட்டிய குளத்துக்குக் கரை இல்லை
கரை இல்லாத குளத்திலே முளைத்த கோரைக்கு வேர் இல்லை
வேர் இல்லாத கோரையைத் தின்ன வந்த மானுக்குக் கால் இல்லை
கால் இல்லாத மானை எய்ய வந்த வேடனுக்கு அம்பு இல்லை - அவை என்ன? (1482) *(சூரியன், கடல், பாசி, மீன், வலை)*

தலையில்லை இடையில்லை
கையுண்டு விரலில்லை அது என்ன? (1483) *(சட்டை)*

தலையில்லை உடலுண்டு கையில்லை காலுண்டு - அது என்ன? (1484) *(விடை இல்லை)*

தலையில்லை கண்ணுண்டு, மார்பில்லை முதுகுண்டு
வயிறில்லை இடுப்புண்டு, விரலில்லை கையுண்டு
அடியில்லை காலுண்டு, உயிரில்லை உடலுண்டு
உருவிதனைக் கண்டுரைப்பீர் உண்மைத் தோழர்களே (1485) *(நாற்காலி)*

தாது மாதுளை கோவை கனி பழம்
தண்டில் லாததோர் தாமரை பூத்ததும்
நீரில் லாததோர் பொய்கைக் கரைதனில்
ஆளில் லாதஈ ரன்னங்கள் சென்றதும்
காலில் லாதவன் ஓடித் தடுத்ததும்
கையில் லாதவன் கட்டி யணைத்ததும்
வாயில் லாதவன் தின்ற கனிபழம்
கண்ணில் லாதவன் கண்டு மகிழ்ந்ததும் - அது என்ன? (1501) *(சொக்கட்டான்)*

தாய்சாப்பாணி மகள் இழுப்பாணி - அவர்கள் யார்? (1507) *(அம்மி-குழவி)*

தாய் சப்பாணி மகள் குந்தாணி - அது என்ன? (1508) *(ஆட்டுக்கல் - குழவி)*

நடக்கத் தெரியாதவன்
நட்டுவனாருக்கு வழி காட்டுகிறான் - அவன் யார்? (1582) *(கைகாட்டி)*

நடக்கமாட்டாதவன் வீட்டுக்கு
உட்கார மாட்டாதவன் போகிறான் - அவர்கள் யார்? (1583) *(மரம்-வௌவால்)*

நடக்க முடியாது ஆனால் நகராமல் இருக்காது - அது என்ன? (1584) *(கடிகாரம்)*

நெட்டை அக்காள் தாக்குகிறாள்
குட்டை அக்காள் தாங்குகிறாள் - அது என்ன? (1719) *(உரல்-உலக்கை)*

நெட்டை குட்டை
பட்டப்பகல் எனக்குப் பகை
அடித்தால் போகேன்
நின்றால் நிற்பேன்
நடந்தால் நடப்பேன் - நான் யார்? (1720) *(மனித நிழல்)*

பச்சைக் கிளி பறக்க முடியாத கிளி
கொம்பிலே இருக்கும் குள்ளக்கிளி - அது என்ன? (1761) *(மாங்காய்)*

மண் அளைந்து மேல் துளைக்கும் குயவனன்று
மதித்து வயல் போல் காக்கும் மனிதனன்று
கண்ணிரண்டு குழிந்து நிற்கும் குருடனன்று
கற்கோட்டை யுள்ளிருக்கும் வேந்தனன்று
எண்ணமுடன் பகைஞர் பசி நோயைத் தீர்ப்பான்
ஈரைந்து கரமுடையோன் பரமனன்று
பண்புடனே இக்கதையின் பயனைச் சொல்லிப்
பக்குவமாய் ஆயிரம் பொன் பறித்திடாயே (2037) *(நண்டு)*

மண் பிசைந்து வேலை செய்வான் குயவனல்ல
வங்காளம் போய் வருவான் செட்டி அல்ல
கண்ணுண்டு மூக்கில்லை தேங்காய் அல்ல
காலுண்டு தலையில்லை கபந்த மல்ல
இன்னுண்டு சிலபேர்க்கு இச்சை யாவான்
ஈசனுக்கும் மாயனுக்கும் பெரியோன் தானே - அது என்ன? (2054) *(நண்டு)*

மலைக்குப் போய் இரண்டு மாடு பிடிச்சிக்கிட்டு வந்தா
ஒன்று சப்பாணி ஒன்று இழுப்பாணி - அது என்ன? (2081) *(திருகை)*

முகம் இருக்கிறது கைகள் இருக்கிறது
கால்கள் இல்லை நடக்கிறேன் - நான் யார்? (2132) *(கடிகாரம்)*

முதுகெல்லாம் கூனல் வயிறெல்லாம் பல் - அது என்ன? (2165) *(கருக்கரிவாள்)*

வாய் இல்லை வார்த்தைகள் சொல்வேன்
உயிர் இல்லை ஊருக்குப் போவேன்
கால் இல்லை வீட்டிற்கு வருவேன் - நான் யார்? (2346) *(கடிதம்)*

வாயில்லாத பறவை ஊர் ஊராய்ப் பறக்கிறது - அது என்ன? (2356) *(வானவூர்தி)*

வாயில்லை பாடும்; ஊசியுண்டு நூலில்லை; ஊசி
வைத்தால் பாடும்; சுற்றிச் சுற்றிப் பாடும்; தட்டு
வைத்தால் பாடும் - அது என்ன? (2357) *(கிராமபோன்)*

வால் நீண்ட குருவிக்கு
வாயுண்டு வயிறில்லை - அது என்ன? (2368) *(அகப்பை)*

வாலுண்டு தோலுண்டு மிருகமன்று
வயிற்றிலே நீருண்டு குடலுமில்லை
தலையுண்டு கண்ணில்லை காலுமில்லை
தரிக்காது சீரணிக்கும் சக்தியுண்டு
தலைவாலும் கட்டுண்டு தொங்குவார்கள்
தயவுடனே இவர் பேரைச் சாற்றுவோர்க்கு
விலையில்லா மாணிக்கம் தருவோமையா
விளம்புவீர் விரைவுடனே விளம்புவீரே (2372) *(கமலை)*

வையகத்தில் பலவுருவம் பூண்ட நங்கை
வயிறுண்டு காலில்லை சடையோ குட்டை
கையில்லை வாயுண்டு பேசமாட்டாள்
காசினியில் வெகுபேரைக் கெடுத்த நீலி
ஐயமின்றி வாரிதனில் விசயஞ்செய்து
அகிலமெலாந் தரிசனஞ்செய் தானந்திப்பாள்
மெய்வேந்தர் வீணருக்கும் விருந்துக் கேற்பாள்
மேதினியி லிவளாரென் றியம்புவீரே (2501) *(மீன்)*

❄ ❄ ❄

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

பாரதியின் சமுதாயச் சிந்தனைகள்	25.00
இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும்	40.00
பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும்	80.00
சங்கத் தமிழர் வாழ்வியல்	100.00
தமிழெனப்படுவது	115.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியியல்	105.00
வலங்கைமாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்	70.00
சங்கரநமச்சிவாயர்	60.00
Agreement in Dravidian Languages	100.00
சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்	30.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கியம்	100.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
கருவூரார் பல திரட்டு	70.00
தமிழ் மொழியின் வரலாறு	30.00
சங்ககாலக் காசு இயல்	30.00
பாரதி இந்தியா	40.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00
மபொசியின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு	30.00
தணிகைமணி வ.சு.செங்கல்வராய பிள்ளை	50.00
அருந்தமிழ் நூற் காவலர் அடிகளார்	50.00
விவிலியத் தமிழ்	40.00
ஆராய்ச்சிப் பேரறிஞர் திவை. சதாசிவ பண்டாரத்தார்	45.00
பாரத வெண்பா	80.00
நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்	50.00
அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா	50.00
தட்சிணாமூர்த்தி குருமுகம் 100	50.00
Studies in Manimekalai	70.00
தமிழெழுத்தின் வரிவடிவம்	30.00
திராவிடமொழி இலக்கியங்கள்	180.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	40.00
நாவல் கலையியல்	50.00
நாடகவியல்	70.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் - 3 தொகுதிகள்	260.00
குமரமலைப் பிள்ளைத் தமிழ்	75.00
தென்னிந்திய மருத்துவ வரலாறு	115.00

522 சமுகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர் 80.00